அன்னையின் அன்னம்

ரா. கணபதி



வானதி பதிப்பகம்

Kovilloor Digital Library

ACC. NO: 2338
R.65

Koviloor Digital Library

Koviloor Digital Library

5-6

அன்னையின் அன்னம்

2338

ரா. கணபதி

கோவிலூர் ஆதீனம்
ACC NO: 2338
R65
கோவிலூர்-630 307

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை-17.

1986
20/00

Koviloor Digital Library

முதற்பதிப்பு : டிசம்பர் 1986

உரிமை ஆசிரியருக்கே

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 20-00

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை - 600 014

Koviloor Digital Library

ஸ்ரீ ராமகிருஷ்ணரும் ரஸிக்கும் : என். ஸி. தாஸின் ஓவியம்
(பக்கம் 194)

Koviloor Digital Library

பாவ ஸமாதியில் ஸ்ரீ பரமஹம்ஸர்
(பக்கம் 196)

Koviloor Digital Library

அன்னைக்கும்

அன்னத்துக்கும்

அன்னை - அன்ன அன்பு தழுவும் அகிலத்துக்கும்

ஆன்ம பூர்வமாக அர்ப்பணம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

முகவுரை

பறவைகளுக்குள் உச்ச ஸ்தானத்தில் வைத்துப் போற்றப் படுவது அன்னம். வெள்ளியங்கிரியின் உச்சியில், மானுடர் அணுக முடியாத உயரத்திலுள்ள மானஸ வாவியில் மட்டுமே வாழ்கிற பக்ஷி அல்லவா? சாமானியமான நீரைப் பாலிலிருந்து பிரித்து ஒதுக்கிப் பாலை மட்டுமே பருகும் பக்ஷி அல்லவா? அதனால்தான் ஹம்ஸ பக்ஷியை உச்ச ஸ்தானத்தில் வைப்பது.

அதன் பரிசுத்த வெண்மையைக் கருதி அதை சுத்த ஸத்வ ஞானத்துக்கும் சாந்திக்கும் உருவகமாகச் சொல்வார்கள். இதனால் துறவிகளில் உச்ச நிலை எய்திய ஞானிக்கு அது உருவகமாகிறது. ஞானிக்கு ஹம்ஸன் என்றும் பரமஹம்ஸன் என்றும் பெயர். நீரிலிருந்து பாலைப் பிரித்து ஹம்ஸம் பருகுவதுபோலவே, ஞானியானவன் அநாத்ம மாயையான உலகியலிலிருந்து ஆத்ம ஞானத்தைப் பிரித்துத் தன்னுள் கிரஹித்துக் கொள்கிறான். "நான் (பரம்பொருளான) அவனே: (அ)ஹம் ஸ:" என்று உணர்ந்ததால் அவன் ஹம்ஸமாகிறான். சுவாஸத்தின் உள் மூச்சும் வெளிமூச்சும் தன்னியல்பாகவே ஹம்ஸ சப்தத்தை எழுப்புவதையும் மந்திர - யோக நூல்களில் பரக்கச் சொல்லியிருக்கிறது.

வெண்மையிலிருந்தே ஒளிச் சிதறலில் ஏழு வர்ணங்களும் பிறக்கின்றன. அதனால் தான், சாந்தமான ஏகப் பிரம்மத்திலிருந்து நானா ஸ்ருஷ்டியை உண்டாக்கிய பிரம்மாவுக்கு வாஹனமாக வெள்ளை வெளேரென்ற அன்னத்தைச் சொல்வது. அதைவிட விசேஷமாக, மானுட ஜீவனுக்குள்ளிருந்து கொண்டு நானா ரஸபேதமுள்ள கலைச் சிருஷ்டிகளைச் செய்யும் சாந்த தத்வமான சாரதைக்கும் அதை வாஹனமாகச் சொல்வது.

Koviloor Digital Library

பொதுவாக அன்னத்துக்கு உள்ள இந்த உச்ச ஸ்தான உயர்வுகளெல்லாம் இருக்கட்டும். அன்னை காளியின் அன்பான அணைப்பில் களித்துச் சொக்கிக் கொண்டிருந்த அன்னமான பகவான் ஸ்ரீராமகிருஷ்ண குரு மஹராஜ் எப்படி யிருந்தார்?

பகவான் அல்லது டாகுர் என்றும், குருமஹராஜ் என்றும் போற்றி உச்சியில் வைக்கும் பரம ஹம்ஸ ஞானியாக அவர் இருந்தார் என்பதில் ஐயமில்லை.

ஆனால் அப்படி உச்ச ஸ்தானக்காரராக மட்டும்தான் அவர் இருந்தாரா? இல்லை. நம்மில் ஒருவராக இனிக்க ஒட்டி இழைய வாழும் சாமானிய நிலையினராகவும் இருந்தார்.

இங்குதான் அவர் பரம ஹம்ஸ ஞானியரின் கூட்டத்தி லிருந்து விலகி பகவானின் அவதாரங்களுக்கிடையே இடம் கொள்வது.

அதிசயமான விதத்தில் மகிமையோடு எளிமையும் கூடிக் குலவும் கலவையாகவே அவதாரங்களை சாஸ்திரங்கள் அடையாளம் காட்டிக் கொடுக்கின்றன. "பரத்வ"மும் "ஸௌலப்ய"மும் அருமையாகக் கலந்து காண்பதே அவதாரம் என்பது சாஸ்திர இலக்கணம். பரத்வம் என்பது தெய்விக மேன்மை—நாம் மதிப்பு மரியாதை செய்யும் மஹிமை; நெருங்கிச் சென்று புரிந்து கொள்ள முடியாத உயர்வு. ஸௌலப்யம் என்பது மானுட எளிமை—நாமும் உறவு கொண்டாடக் கூடிய இனிமை; நெருங்கி அன்பு புரிகிற சாமானியப் பான்மை.

பரமஹம்ஸ ஞானியருங்கூட ஸௌலப்ய எளிமை காட்டுவதுண்டுதான். உச்சத்தில் மானதப் பொய்கையில் வாழ்ந்தாலும் ஒரு அன்னமானது மயில், பஞ்சவர்ணக்கிளி முதலியனபோல் வண்ண வண்ணப் பெருமை காட்டாமல் எளிய வெள்ளையாய், லேசாய் அதுபாட்டுக்கு இருப்பது போலவே உயரநுபவத்தில் திளைக்கும் ஹம்ஸர்களும்

Koviloor Digital Library

இருப்பார்கள். நீரை உள்ளே விழுங்காது ஒதுக்கினாலும், வெளியே நீரிலேயே நீந்திக் களிக்கும் ஹம்ஸம் போலவே அவர்கள் உலக மாயையைத் தங்களுள் இறக்கிக் கொள்ளாமல் ஒதுக்கினாலும், மாய உலகிலேயே, உலகினரிடையிலேயே விளையாடிக் கொண்டு மகிழ்வாக வாழ்வார்கள். அவர்களைவிடவும் அவதாரர்களிடம் எளிமை மிகுந்து காணப்படும். ஏனெனில் ஞானியரின் இலக்கு ஆத்ம மோக்ஷம்; உலகுக்கு வழிகாட்டுவதல்ல. அவர்கள் மூலமும் இறைவன் ஓரளவு உலகுக்கு முன்னுதாரணம் காட்டுகையில் அந்த அளவுக்கு, அந்த அளவுக்கு மட்டுமே, அவர்களிடம் ஸௌலப்யம் காணப்படும். அவதாரம்தான் முற்றிலும் உலகுக்கு வழி காட்டுவதற்காக ஏற்பட்டது. அதனால்தான் அவதாரர்களே ஒருபுறம் ஞானியரை விடவும் அதிகமாக தெய்விக மஹிமையைக் காட்டிய போதிலும், இன்னொரு புறம் தாங்கள் நல்வழி நடத்த வேண்டிய மானுடனின் கையைக் கோத்துக் கொண்டு நடக்கிற பரம எளிமையையும் காட்டுவார்கள். இந்த அவதாரர்களிலும் நம்முடைய அருமை ராமகிருஷ்ணரைப் போல அதி எளிமையாயிருந்தவர் எவருமில்லை.

ஹம்ஸத் துறவியாய் பரஞானம் பெருக்கிய மஹிமையும், சாரதையின் ஹம்ஸ வாஹனமாக இலக்கிய நயமிக்க உபதேசமளித்த பெருமையும் அவருக்கு நிச்சயம் உண்டு. தெய்விக சக்தி, தெய்வ பக்தி இரண்டையுமே அதீத கனத்தோடு பொழியவிட்ட மா மகிமையும் அவருக்கு உண்டு மானுடத்வம் எங்கு முடிகிறது, தெய்வத்வம் எங்கு தொடங்குகிறது என்று பிரித்துச் சொல்ல முடியாத உயர்வு பொருந்திய உத்தம மனித சீலங்களைப் பெருக்கிட்ட ஆதரிச புருஷர் என்ற சிறப்பும் பெற்றவர் அவர். ஆனால் இவையெல்லாம் சேர்த்துத் தராசின் ஒரு தட்டு என்றால் அதற்குச் சம நிறையான மறுதட்டாக இருந்தது, அவரது சாமானிய மானுட எளிமை. தெய்விக மலையாய் அவர் இருந்தாரெனில், அந்த மலையை அப்படியே போர்த்து மூடியிருந்தது மானுடப் பச்சைக் கொடிகள். அக் கொடியிலே மென்மையும், மணமும்,

Koviloor Digital Library

தேனும் மிக்க மலர்கள் மட்டும்தான் இருந்தனவென்றில்லை. இலைகளும் இருந்தன—அவற்றில் பசுமை மட்டுமின்றிப் பின்புறம் கொஞ்சம் வெளிறியும் இருந்தன; முன்புறமழமழப். பின்றி பின்புறம் கொஞ்சம் சொரசொரப்பாகவுமிருந்தது. ரஸிக உள்ளத்துக்கு அந்த வெளிறலும் சொரசொரப்பும்கூட அழகு சிந்தின. காரணம், அம் மானுடக் கொடியானது அருகம்புல்லைப் போல அடிக்கு அடி வேர் கொண்ட மலை தெய்விகமானது என்பதுதான். அதனால்தான் கொடியில் சற்றே வெளிறலான, சொரசொரப்பான இலைகள் இருந்தாலும் முள் என்பது அடியோடு இல்லை.

வெள்ளை சாரதையின் வாஹன அன்னமே கருங்காளி மார்புற அணைக்கும் குழந்தை அன்னமாகியிருப்பதால் மகிமை - எளிமை புதிர்க் கலவை மேலும் விநோதச் சுவை பெற்றிருக்கிறது. அன்னை: எவளைவிட மஹா பயங்கரம் உலகில் இல்லையோ அந்தக் கன்னங்கரியவள்! அந்த அன்னை யின் ஆருயிர் மகவு: எவரைவிட மா மதுரத்தைக் கற்பனை செய்தும் பார்க்க முடியாதவரோ அப்படிப்பட்ட வெள்ளை வெளேர் அன்னம்! எப்படி விநோதம்! விச்வம் அனைத்தை யும், விச்வநாதனான தன் நாதனையுமே துவைத்துப் பிளந்து தாண்டவமாடும் மஹாமாயையின் விந்தைத் திறம்தான்! த்ரிலோகத்தையும் நடுங்கச் செய்த நரஹரியை அணுகி அன்பு செய்து அவனது வாத்ஸல்ய வெள்ளத்தைப் பெற ஒரு ப்ரஹ்லாதப் பிள்ளைபோலக் காளியாயிக்கு நம் காவிய நாயகப் பிள்ளை! காளியன்னை புதிர் மயமானவள். கருங்கடல் நீரைக் கையில் எடுத்தால் நிறமற்றிருப்பதே போல, தமோ ரூபிணியான அக் கரியாளை அணுகிச் சென்று அள்ளி எடுத்தால் நிர்குணப் பரம்பொருளாயிருப்பாளென அந்த அன்னப் பிள்ளை சொல்லியிருக்கிறதல்லவா? கடை நிலையான தமஸிலிருந்து உத்தமோத்தமமான நிர்குணம் வரை அவள் யாவுமே ஆனதால் தன் அன்னப் பிள்ளையையும் பல எதிரெதிர் நிலைகள் இசைந்த புதிராகப் படைத்தாள். தெய்விகத்தில் ஊறி தெய்வமாகவே இருந்தது ஒருபுறம்;

Koviloor Digital Library

வெகு வெகு மானுடமாக மறுபுறம். ஒரு புறம் படு சாதுர்யம்; மறுபுறம் அப்பாவித்தனம். ஒருபுறம் உலகினரின் போக்குகளில் அதி நுணுக்கமான அறிவு; மறுபுறம் உலகியலே அறியாத பேதைமை. ஒருபுறம் சிக்கலான தத்வங்களைக் கோதற்ற சுளையாக்கி எளிதில் உபதேசிக்கும் ஆற்றல்; மறுபுறம் தத்வம் அறிந்த பண்டிதர் என்றாலே பயப் படும் நிரக்ஷரகுக்ஷித்தன்மை. ஒரு புறம் பரம வைராக்யத் துறவு; மறுபுறம் உலகின் குற்றமற்ற இன்பங்களை எல்லாம் குழந்தையாக ருசிக்கும் ரஸிக்யம். ஒரு புறம் உடலுணர்வு அற்றே போன ஸமாதி நிலை; மறுபுறம் கால் சற்று வீங்கினால் கூட அதுவே கவலையாக விசாரப்படும் குணம். இன்னம் இப்படி எதிரெதிராகப் பல சொல்லிக்கொண்டே போகலாம். இப்படிப் புதிராக எதிரெதிர் நிலைகள் பல அவரிடம் கூடியிருந் தாலும் காளியம்மாவுக்கே உரிய பயங்கர - பீபத்ஸங்கள் மட்டும் அவரிடம் லவ லேசமும் இல்லாமல் அவள் படைத் திருந்தது பெரும் புதிர்! கடைசியில் பார்த்தால், புதிர் மனிதர் என்ற எண்ணமே நமக்கு எழாதபடி அவரது மற்ற தன்மைகளையெல்லாம் அடக்கி விஞ்சியெழும் எளிமையில் அவரை ஊறப் போட்டிருந்தாள்!

மனம் கடந்த நிர்குண சாந்த சிவம் விச்வப் பெருமன மென்ற சக்தியாயிருக்கும்போது அன்னையாகிறது. மா மனஸாகிய அம் மானஸ வாவியில் நீந்தும் அன்னமே ஸ்ரீ ராமக்ருஷ்ணர். 'நான் அலையற்ற, நிறமற்ற நீராக உள்ள சிவ சாந்த நிலையில் அன்னப் பிள்ளை முழுகியிருந்தால் மட்டும் போதாது. மாயை மாருதம் என்னில் அலைகளை எழுப்ப, பிரேமைக் கதிரவனின் ஒளியில் என் நீர் ஸகல வண்ணங்களை யும் சிதறவிட, உலக விளையாட்டு என்ற ஒன்றைப் புனைகிறேன் அல்லவா? அன்னக் குழந்தை இந்த அலைகளில் அளைந்தாடட்டும். தன் வெண்மேனியில் வண்ணச் சிதறலின் பிரதிபலிப்புப் படிய லோக லீலையில் நீந்தி மகிழட்டும். லோகத்தை என்னிடமிருந்து துண்டித்துத் தனியாகப் பாராமல், அதன் வியாபாரம் என் விளையாட்டே என்று

Koviloor Digital Library

பூர்ணமாகப் புரிந்துகொண்டு பார்த்துத் தானும் ஆனந்தமாய் விளையாடட்டும். நிர்மாநுஷ்யமான இமய உச்சத்திலுள்ள மானஸ வாவியே ஜீவநதிகளாகி மானுடர் வாழும் உலகுக்கும் இறங்கி வந்து பாய்வதுபோல நான் விளையாடுகிறேன். என்னோடு குதித்து என் செல்லப் பிள்ளையும் உலகில் கொண்டாட்டம் போடட்டும்; இதன் ருசி கூடுவதற்காகவே கொஞ்சம் கொஞ்சம் திண்டாட்டமும் படட்டும்' என்று அம்மா ஸங்கற்பம் செய்தாள். அதுவே நமது பாக்கிய வசமாக ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் என்ற நித்ய நூதனமான கதம்ப மாலையைப் பூத்திருக்கிறது.

மாலையின் சில மலர்களே இந்நூல். இன்னும் அதிலிருந்து எடுத்துத் தர எத்தனை எத்தனை எத்தனையோ மலர்கள் உள்ளன. இப்போதைக்கு இம்மட்டும் கொடுக்க முடிந்ததே அருளின் எதிர்பாராத இயக்கத்தினால்தான்.

ஆம், முன்னமே ஒப்புக்கொண்ட எழுத்துப் பணிகள் பல இருந்தபோது, அவற்றையெல்லாம் ஒதுக்கிவிட்டுத் திடுமென இந்நூலை ஆக்கியது எதிர்பாரா அருளியக்கத்தால்தான். 1836-ல் அவதரித்து 1886-ல் (உடலளவில்) மறைந்த குரு மஹராஜுடைய நூற்றைம்பதாவது ஜயந்தி ஆண்டும் நூறுவது மஹா ஸமாதி ஆண்டுமான 1986-ல் ஏற்கெனவே "ஸ்ரீ ராமகிருஷ்ண விஜய"த்திலும் "கல்கி"யிலும் அவர் குறித்து வெளியான சில கட்டுரைகளை ஒரு சிறு நூலாகத் தொகுத்து வெளியிடவே முதலில் எண்ணினேன். பிறகு எப்படி இக் காரியத்தில் பிரவேசித்தேன் என்று எனக்கே வகை தொகையாகப் புரியாமல், புதிதாகவும் நீண்ட நீண்ட கட்டுரைகள் எழுதிச் சேர்த்ததில் இது முன்னூறு பக்க நூலாக விரிந்துவிட்டது. (குருமஹராஜ், விவேகாநந்தர், சாரதாமணி தேவி ஆகியோர் பற்றி முன்னமே நான் எழுதியுள்ள "அறிவுக் கனலே, அருட்புனலே!" "ஸ்வாமி விவேகாநந்தர்", "அம்மா" ஆகியவற்றில் கூறப்பட்ட விஷயங்களை இந்நூலில் முடிந்த அளவுக்குத் தவிர்த்திருக்கிறேன்.)

Koviloor Digital Library

லேசாக உள்ள அன்னம் மற்ற பணிகளை அநாயாஸ மாகத் தொலைவில் தள்ளி இதை எழுதுவித்திருப்பதில் தான் லேசுப்பட்ட வஸ்துவல்ல என்று காட்டிவிட்டது! தான் 'அன்ன நடை' என்றே பெயர் பெற்றுவிட்ட மந்த கமனம் செய்தாலும் செயல் சூரமுள்ள வானதி பதிப்பகத்தை யும், மாருதி அச்சகத்தையும் அதி விரைவு நடை போட வைத்துச் சுமார் ஒன்றரை மாத அளவில் இப்புத்தகத்தை முடித்துக் கொடுத்துவிட்டது!

தீவிரம் என்ற கனம் தெரியாமலே சக்தி மயமாய் செய லாற்றும் அந்தப் பரம ஹிதமான அருள் உங்களையெல்லாம் அன்னத்தின் இறகுகளாக வருடிக் கொடுக்கட்டும்!

ரா. கணபதி

நன்றி : புத்தகங்களும் புகைப்படங்களும் கொடுத்துதவிய சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தினருக்கு.

Koviloor Digital Library

பொருளடக்கம்

பைம்பொன் காணுது ஐம்பதும் நூறும்	1
மன்மதனே எரிக்காத மஹாதேவர்!	2
''கல்லைக் கனிவிக்கும் சித்தனவன்''	16
ராமகிருஷ்ணரின் மேரி	40
என்றும் குழந்தை!	74
"அதி" மானுடர் செய்த அதிமானுட அற்புதங்கள்	150
ராமகிருஷ்ணரின் நந்தனுர்!	186
குருமஹராஜ் செய்த 'ஸாமர்த்தியம்'	206
பதித பாவன ராம; மான ரக்ஷண கிருஷ்ண	224
அவதாரரும் ஆசார மரபும்	231
பரமஹம்ஸர் பரமஹாஸ்யரும்தான்!	255
சறில்லா இறையன்பே, நூறில்லை நீ மறைந்தே!	293

Koviloor Digital Library

பைம்பொன் காணுது ஐம்பதும் நூறும்!

போற்றி உன்பதம்! புகழ்ந்து வாழ்த்திஞேம்;
பொங்கும் உன்னதப் புனித பூரணு!

ஏற்று எம்மையும் இம்மை நீக்குவை,
எளிமை எழிலதன் முழுமை மூர்த்தியே!

சாற்றி உன்னருள் சாந்தி சார்ந்தனம்,
சரத இன்பனே, சாரதா பதீ!

நூற்றி ஐம்பது காணு நாதனே!
நிமல னே! நிஜ ரூப போதனே!

★

அன்னே காளியின் அன்பலை தனில்
அளேந்து களிக்குமெல் லன்னமே!

தன்னேத் தானறப் பெற்ற தாபத!
தாபம் தீர்க்குமெந் தெய்வமே!

முன்னே யாம்வினே மூலஇருளே நிர்
மூலம் செய்யொளி மின்னலே!

உன்னே உன்னுமிக் கள்ள உள்ளமும்
உவகை வெள்ளம தாழுதே!

★

கன்றறை குரலுக்குக் கனியுங்கா ராம்பசுவாய்
நன்றுசெய் நின்றனுக்கு நன்றிகூ றிடப்போமோ?
ஒன்றுபரம் ஆனபின்னும் ஒன்றிஎம்மோ டினிதிருந்தாய்!
ஒன்ருெடறை நூறென்ன? என்றுமுள வாழ்வானுய்!

Koviloor Digital Library

மன்மதனை எரிக்காத மஹாதேவர்!

நம் அம்மா சாரதாமணி தன்னை துர்க்கா தேவி என்று வெளிப்படச் சொல்லிக்கொள்ளவே மாட்டாள்.

ஆனாலும்......

துர்க்கா தேவிக்கு இணைபிரியாப் பாங்கியராக இருவர் உண்டு. ஜயா, விஜயா என்பது அவர்களுடைய பெயர்.

நம் அம்மா சாரதையும் தனக்கு இப்படி ஜயை - விஜயைகள் இருவர் இருப்பதாகச் சொல்லிக் கொள்வாள். அம்மாவின் அத்யந்தத் தோழியராக இருக்கும் இப் பாக்கியத்தைப் பெற்ற அவ்விருவர் யோகின் - மாவும் கோலாப் - மாவுமே ஆவர்.

இந்த ஜயை விஜயைகளிலும் முதலாமவளான ஜயையாக அம்மாவால் குறிப்பிடப்படும் மஹா பாக்கியம் பெற்றவள் யோகின் - மா. "யோகேன்" என்று அம்மாவால் அருமையாய் அழைக்கப்பட்டவள், யோகீந்திர மோஹினி தேவி என்ற முழுப்பெயர் கொண்ட யோகின்மா.

யோகேச்வரி ஆயினும், தனது யோக மகிமையைத் துறந்தும் மறைத்தும் எளிய தியாகேச்வரியாக மானுடம் வளர்த்த சாரதாமணியம்மாவுக்கு இரு கண்மணிகளாக "யோகேன்"கள் இருவர் உண்டு. ஒருவர் அவளுடைய ஆருயிர் மகனே போல் ஆன யோகாநந்தர். தக்ஷிணேச்வர நாட்களிலிருந்து தமது இறுதிவரை அம்மாவுக்கு அரிய கைங்கர்யம் செய்தவர் அவர். மாதாவை மந்த்ரகுருவாக மிளிர்த்தியவரும் அவர்தான்—சாரதைத் தாய் ஞானதாயகியாகி முதல் தீக்ஷை தந்தது அவருக்குத்தான். அவரைப் "பிள்ளை யோகேன்" என்றழைத்த அம்மா, அதற்கு நிகரான ஸ்தானம் கொடுத்துப் "பொண்ணு யோகேன்" என்று

Koviloor Digital Library

யோகின்மாவைத்தான் அழைத்தாளென்றால், அப்படி அழைக்கப்பட்டவளின் பெருமையைப் புரிந்துகொள்ளலாம் அல்லவா?

"அம்மா"வின் உயிர்த்தோழியான யோகீந்த்ர மோஹினி தேவி "ஐயா" ராமகிருஷ்ணர் உயிர் வாழ்ந்தவரையில் அவரது பெண்ணடியார்களிடையே சிறப்பிடம் கொண்டிருந் தாள். அக்காலக் கதையொன்றுக்குத்தான் இப்போது நாம் போகிறோம்.

சிறுமையும் பெருமையோடு கலந்து வருவதுதானே மாய வாழ்வின் மகா நியதி? பிற்காலத்தில் உட்பெருமை பல பெற்ற யோகின் - மா செல்வப் பெருக்கும் கல்விப் பெருமையும் மிக்க ஓர் அந்தஸ்துக் குடும்பத்தில் பிறந்து சீரும் சிறப்புமாக வளர்ந்தவள்தான். தெய்வ பக்திக்கும் தான தர்மத்துக்கும் பெயரெடுத்த ஒரு ஜமீன்தார் குடியைச் சேர்ந்த கட்டழகு வாரிசான அம்பிகா சரண் விச்வாஸைக் கைப் பிடித்தாள். ஆனால் மானுட வாழ்வின் மாயப் பெருமையை என்ன சொல்ல? அந்தப் பெருங்குடிமகனைக் கைப் பிடித்ததிலிருந்து யோகீந்திர மோஹினி சிறுமையில் சிதைய வேண்டிய இடைக்காலம் பிறந்தது. காரணம், அவளுடைய கணவன் இன்னோர் அர்த்தத்தில் "பெருங்குடி மக"னாக மது அரக்கனுக்கு அடிமைப்பட்டுக் குடித்துக் குடித்தே கெட்டதுதான். மதுப் பழக்கம் மற்ற பல தீமை களிலும் அவனை ஆழ்த்தியது. நீண்ட பல்லாண்டுகள் அவளும் பொறுத்துக் கொண்டு அவனோடு காலம் தள்ளினாள். பிள்ளை பிறந்து, ஆறு மாதத்தில் குழிக்குப் போயிற்று. கனு என்ற பெண் பிறந்து வளர்ந்து அந்நாள் வழக்கப்படி பாலியத்திலேயே திருமணமும் முடிக்கப் பெற்று புக்ககம் புகுந்தாள். அதோடு யோகீந்திர மோஹினி, 'இல்லாளாகத் தன் கடமை தீர்ந்தது, இனியும் நெறிகெட்ட கணவனிடம் நெரிபட வேண்டியதில்லை' எனக் கருதித் தாய் வீட்டுக்குத் திரும்பிவிட்டாள். விதவைத் தாயிடம் விதவை போலான மகள் வந்து சேர்ந்தாள். இவளுடைய விதி இவளுடைய

Koviloor Digital Library

பெண் கணுவையும் தொடர்ந்தது. அவளும் இன்பமில்லாத இல்வாழ்வே கண்டாள். இவள் தாயைப் புகல்கொண்டா ளெனில் அங்கும் இவளைத் தேடி வந்து புகல் கொண்டாள் மகள்.

உலக வாழ்வு வெறிச்சிட்டுப் போயிற்று, யோகீந்திர மோஹினிக்கு. தெய்விக வாழ்வே நிறைவு தரும் என உணர்ந்து அதற்குத் தவித்தாள்.

தவிப்பு நீக்கும் தென்றலாய் அவதரித்திருந்த தக்ஷிணேச்வர முனிவர் ஸ்ரீ பரமஹம்ஸ ராமகிருஷ்ணரைப் பற்றிக் கேள்வியுற்றாள்.

உலகுகளின், உயிரினங்களின் ஒரே தாயைப் புகல் கொண்டு அவள் சரணத்திலே விச்வாஸம் வைத்த நிஜமான அம்பிகா சரண விச்வாஸரான அவரிடம் சரண் புகுந்தாள்.

உலகத் தாய்க்கு அவர் நித்திய பாலர். உலகில் உலைப்புறும் மக்களுக்கோ தாமே "தாயிற் சிறந்த தயாவான தத்துவர்." வெந்த இதயங்களில் சந்தனம் பூசும் வேந்தர் ராமகிருஷ்ணர் தவித்து வந்தவளைத் தன்னவளாக, தனயை யாக ஏற்றார். தயை மழை பொழிந்தார்.

ஆனால் இங்கும் வந்தது இடையூறு! யோகீந்திர மோஹினியின் தாய் வீட்டில் உடன் வாழ்ந்த அவளுடைய அண்ணனுக்கு நமது அண்ணலின் அருட்காப்புத் துணையில் சிறிதும் நம்பிக்கை இல்லை. அவரைப் "பைத்தியக்காரப் பூசாரி" எனக் கருதிய "புத்திமான்"களில் ஒருவராக அந்த அண்ணன்காரர் இருந்தார். ஹீராலால் என்பது அவர் பெயர். 'ஹீரம்' என்றால் வைரம். எதனாலோ ஹீராலால் நம்முடைய குரு மஹராஜரிடம் 'வைரம்' பாராட்டினார்! அவருடைய கட்டுத் திட்டங்களை மீறியே யோகின்-மா தக்ஷிணேச்வரத்துக்குச் சென்று வந்தாள். கட்டறுத்துச் சென்ற கன்றாக அங்கு ஓடி முட்ட முட்ட திவ்யமான அன்புப் பாலைப் பருகி வந்தாள்.

Koviloor Digital Library

தான் தக்ஷிணேச்வரம் சென்று வந்ததோடு நின்றுவில்லே. குரு மஹராஜர் தனது இல்லத்தில் பொன்னடி சாத்த வேண்டுமென்றும் ஆர்வம் கொண்டாள். அவரை அழைத்தாள்.

குழந்தை கூப்பிட தாய் மறுப்பளா? "ஆஹா, வருகிறேன்" என்று ஸ்ரீராமகிருஷ்ணர் இணக்கம் தெரிவித்தார்.

"கங்கா! நீயும் வா" என்று சிஷ்ப்பிள்ளை கங்காதர் கடக்கையும் கூப்பிட்டார். (இவர்தான் பிற்காலத்தில் ஸ்வாமி அகண்டாநந்தரானது.)

அவதார புருஷர் தம் வீடு வருகிறார் என்னும் போது ஹீராலாலோ சோபத்தில் கொதித்தார். அந்த ஸாதுப் பூசாரியை விரட்டுவதற்குத் தம்முடைய கோபம் போதாது என்றும் நினைத்தார். எனவே ரௌடிகளின் தலைவன் என்றே பெயரெடுத்த ரௌத்ர கோபக்காரனான மன்மத் என்பவனிடம் உதவி கோரினார்.

"என் உடன் பிறந்தாள் அதிகப் பிரஸங்கித்தனமாக அந்த தக்ஷிணேச்வரத்துப் பிச்சுப் பூசாரியை வீட்டுக்கு அழைத்திருக்கிறாள். அந்த அசட்டு மத்ஸ்யமும் அழைப்பை ஏற்றுக்கொண்டு வரப் போகிறது. மன்மத்! அது வீட்டில் நுழையாமல் தடுத்து விரட்ட வேண்டியது உன் பொறுப்பு. அது வரும்போது நீயும் நம் வீட்டில் இரு. மிரட்டி உருட்டி வெருட்ட உனக்கு நானா சொல்லித்தர வேண்டும்? வெறுமே நீ உன் மீசையை முறுக்கி, முண்டாவைத் தட்டி, செங்கண்ணால் ஒரு முறை முறைத்தால் போதுமே, அசட்டுப் பிச்சு அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி விடும்!" என்று முரடர் தலைவனிடம் முறையிட்டார் ஹீராலால்.

மன்மதுக்குப் பரம ஸந்தோஷம் ஒரு ஸாதுப் பிரகிருதியை விலவிலக்கச் செய்து விரட்டி ஓட்டுவதில், "ஆஹா" என்று இணக்கம் தெரிவித்தான்.

Koviloor Digital Library

இப்படியாகத் தானே,

ஹம்ஸத்தைத் தங்கை வரவழைத்திருந்த அதே வேளையில், அதே இடத்தில்,

வரிப்புலியை வரவழைத்து விட்டார் தமையனார்!

"பாகவத—பக்த—பகவான்" என்று திக்கித் திக்கிச் சொன்னவாறு தத்தித் தத்தி வந்தது அந்தப் பரம ஹம்ஸம்!

அதிசய ஹம்ஸம்! அதன் எளிமைக்குள்ளே எத்தனை வலிமை!

வலிமை மிக்க வரிப்புலி அந்த எளிமையில் அணில் குஞ்சாகி விட்டது!

"பாகவத—பக்த—பகவான்" என்று அவர் மொழிந்தாலும், பக்தி ஹீனனான மன்மதிடமும் அவர் பகவானின் மாயா விலாஸத்தையே பார்த்திருக்க வேண்டும். அவனது பூர்வ ஸுக்ருதமோ, அவரது காரணமற்ற காருண்யமோ, அவரை, 'ரே! ரே! பகவன்! இந்தக் குழந்தையிடம் நீ இப்படியா உன் அவித்யா மாயையின் வீச்சை ஒரேயடியாகக் கட்டவிழ்த்துவிட வேண்டும்? கொஞ்சம் வித்யா மாயையையும்* இவனுக்குள் தூவுவாய் அப்பனே!' என்று வேண்ட வைத்திருக்க வேண்டும். பக்தாவதாரம் கொண்ட பகவானே இப்படி வேண்டினால், மூலமான பகவானாகவே

---

* பரம்பொருளாகவே ஒரு ஜீவன் தன்னை உணரும் ஆன்ம விடுதலைதான் வித்யா என்றும் ஞானம் என்றும் கூறப்படும் நிலை. அது மாயை முற்றிலும் அடிபட்டுப்போன நிலை. பரம்பொருளை இறைவனென்றும் தன்னை பக்தனென்றும் பிரித்துணர்வதுங்கூட மாயைதான். ஆயினும் பக்தியும், மற்றும் உயிர்க்குல அன்பு, தர்ம ஒழுக்கம், தியாக சீலம் போன்ற உயர்பண்புகளும் மாயையைச் சேர்ந்தவையாயினும், இவையே காலக் கிரமத்தில் ஜீவனை வித்யாநிலையான ஆன்ம விடுதலையில் சேர்க்க உதவும். எனவே இவற்றை வித்யா மாயை என்பர். மாறாக, காம—க்ரோத—லோபாதிகளோ ஆன்ம விடுதலைக்கு ஒரு போதும் உதவாமல், மீள மீளப் பிறவிச் சுழலில் அழுத்தும் அஞ்ஞான அவித்யையிலேயே கொண்டு தள்ளும். இவற்றையே அவித்யா மாயை என்பது. ஆன்ம விடுதலை முக்குணமும் கடந்த நிலை. வித்யாமாயை ஸத்வ குணத்தைச் சார்ந்தது. அவித்யா மாயை ரஜோ, தமோ குணங்களைச் சார்ந்தவை. பரம்பொருளோடு அத்வைதமாக ஐக்ய உணர்வு கண்ட மஹான்களிலும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் போன்ற சிலர் மாயா லீலையை ரஸிப்பதற்காகவும், மாயா மானுடர்களை உயர்நெறி சேர்ப்பதற்காகவும் வித்யாமாயையை விரும்பி ஏற்பதுண்டு.

Koviloor Digital Library

இருக்கப்பட்டவன் அவ்வேண்டுதலுக்குச் செவி சாய்க்காமலும் இருக்க முடியுமா?

அந்த விசேஷத்தால்தான் ஹம்ஸத்தின் முன்னே வரிப்புலி அணில் குஞ்சாக உருமாற்றம் பெற்றது!

ஸித்தர் குளிகை சில உண்டு. கடுகு ப்ரமாணமே இருக்கும். காலோடு தலை எரியக் கடுங்காய்ச்சலுற்றோரின் நாநுனியில் அந்தக் கடுகளவு குளிகை பட்டால் போதும். அவர்கள் அதை விழுங்க வேண்டுமென்பதுகூட இல்லை. உடல் முழுதும் குளிரருவி பாய்கிறாற் போலாகிக் கடுங்காய்ச்சல் நொடியில் பறந்துவிடும். ஸித்த ஸித்தர் ஸ்ரீராமகிருஷ்ணரின் கடுகளவுக் கடாக்ஷம் கோபக் கொதிகலனான மன்மத் மேல் பட்டதுதான் தாமதம், அவன் உள்ளம் முழுதும் குளிர் வெள்ளம் பரவியது; க்ரோதக் கனல் அணைந்தது.

கயிலை மஹாதேவன் க்ரோதத்தை ஸ்தூலமாகவே கனலாக்கி ஒரு மன்மதனை எரித்தான். நம் குருதேவ மஹாதேவரோ க்ரோத உருவான இன்னொரு மன்மதனை அன்பிலே குளிரக் குளிப்பாட்டி அவனுடைய க்ரோதக் கனலை அணைத்தார்! அவனையோ அன்னையாக அணைத்தார்!

கனல் பயங்கர வெப்பத்துடன் அச்சுறுத்துகிறது; அட்டஹாஸமாகத் தலைவிரித்துக் கொழுந்துகளை ஆட்டுகிறது. அதற்காகப் பனி நீரும் பயங்கர ரூபம் கொள்ள வேண்டுமா என்ன? எளிமையான தனது குளுமையையும் இனிமையையும் விடாமலே அது இழிந்து வந்தால் போதாதோ? இனிய புனலில் பயங்கரக் கனலும் தணிந்து அணைந்து விடுமே! தன் இனிமையாலேயே மன்மதின் தணலைத் தணித்தார் தயாநிதி.

மெல்லென வீசிய ராமகிருஷ்ண மலய மாருதத்தில் காட்டுப்புயல் மன்மதும் கட்டுப்பட்டான். மலய மாருதத்தின் சந்தன மணம் அவன் மனத்திலும் சற்று படிந்தது!

Koviloor Digital Library

இதுதான் ஐயா, அருள் வேகம் என்பது! வேகம் என்றே தெரியாத லளித ஸௌக்கியத்துடன் அந்த அருள் வேகத்தை வீசுவதுதான் எங்கள் எளிய டாகுர் கைதேர்ந்திருந்த மஹா மஹா ஸித்தி!

மன்மத் மீசையை முறுக்கவில்லை; மனத்தை முறுக்கிப் பிழிந்து உருக்கிக் கொண்டான். முண்டாவைத் தட்டவில்லை; தன் முரட்டு முண்டத்தனத்தையே தட்டி உதறினன். செங்கண்ணல் முறைக்கவில்லை; கோபத்தாலன்றி, அழுகையில் கலங்கிச் செம்மை படர்ந்த கண்களால் ரக்ஷணை கோரி முறையிடவே செய்தான்.

தடாலென டாகுரின் பாதத்தில் தண்டனிட்டான் மன்மத். விம்மியழுதான். விம்மலுக்கிடையே, "என் ஆண்டையே! நான் கொடுங் குற்றவாளி! தயை காட்டுங்கள், மன்னித்தருளுங்கள்!" என்ருன்.

கிராமப் பாதிரியாரைக் கேலி செய்ய வந்த அறிவிலிகள் பிரார்த்தனை செய்துவிட்டுத் திரும்பிய அதிசயத்தை ஆங்கிலக் கவி பாடினன். இங்கோ தாக்க வந்த புலி தஞ்சம் புகுந்த புழுவானதைப் பார்க்கிருேம்!

கோர பயங்கரியில் கௌரி மநோஹரியைக் காணும் கோமள குருதேவர் மன்மத் பெறத் தொடங்கிய மறுமலர்ச்சியில் மனம் நிரம்பி மகிழ்ந்தார் கழிவிரக்கம் கொண்ட அப் பிள்ளையிடம் கருணையில் குழைந்தார்.

"பயலே! எல்லாம் நல்லதாகும். பயப்படாதே, வருத்தப் படாதே! தக்ஷிணேச்வரத்துக்கு வா" என்று அழைத்தார்.

பிரேம கங்கையாடிய மன்மத் டாகுருடன் வந்த கங்காதர் கடக்கை அர்த்த புஷ்டியுடன் பார்த்தான். கங்காவை அவனுக்கு ஏற்கெனவே தெரியும். தன்னை அவருடன் ஒருநாள் தக்ஷிணேச்வரத்துக்கு அழைத்துச் செல்லுமாறுதான் இப்போது பார்வையால் தெரிவித்தான். விரட்ட வந்தவனைத் தன்னிடம் வருவதற்கு விழைய வைத்த டாகுரின் வித்தகம்தான் என்ன?

Koviloor Digital Library

அஸம்பாவிதம் எதுவும் நிகழாமல், ஸம்பிரமமாக யோகின் - மாவின் உபசரணையைப் பெற்று அவளை உச்சி குளிரவைத்துத் திரும்பினார் குரு மஹராஜ்.

★

அதன் பின் கங்காதரைக் கண்டபோது புது பக்தன் மன்மத் வேண்டுகோளைப் புதுப்பித்தான். "மஹான் 'வா' என்று அத்தனை கருணையுடன் வாயாரக் கூப்பிட்டாரே! என்னை அவ்விடம் அழைத்துச் செல்லப்பா" என வேண்டினான்.

கங்கா ஒப்புக் கொண்டு ஒருநாள் குறிப்பிட்டார்.

அந்த நன்னாளில் ரஸகுல்லாவும் கையுமாக வந்தான் மன்மத். தக்ஷிணேச்வரம் செல்லக் குதிரை வண்டி பிடித்துக் கொண்டு வந்திருந்தான். கங்கா அவனோடு புறப்பட்டார்.

சர்க்கரைச் சாற்றில் ஊறிய பாலுருண்டைகளுடன் பாவனரை அடைந்தான் முன்னாள் பாதகன்—இந்நாள் பாகவதன்!

காளியாம் களிப்புச் சாற்றில் ஊறிய பாலுருண்டைப் பாலர் அவனை இயல்பான இனிப்போடு வரவேற்றார்.

மன்மதை குரு மஹராஜுக்கு அறிமுகம் செய்தார் கங்காதர். குரு மஹராஜுக்கு ஏற்ற சீடராக, தாம் அவனை எப்படி அறிந்திருந்தாரோ அதை ஒளிக்காமல் அறிமுகம் செய்தார்! "டாகுர்! இவர் ஒரு பேர் போன முரடர். இவரைக் கண்டாலே பசங்களுக்கு பயம். கலாட்டா, கலவரம் செய்யும் குண்டர் கோஷ்டிக்கு இவரே 'வாத்தியார்'" என்றார்.

இந்த 'திவ்யமான' அறிமுகத்தால் டாகுர் மனம் சுணங்கவில்லை. நகை சுழியிடும் திருமுகத்துடனே மன்மதைப் பார்த்தார்.

பார்த்ததோடன்றி அவனைத் தொடவும் செய்தார்,

Koviloor Digital Library

கட்டுமஸ்து உடம்பைத் தொட்டதில், "எத்தனை உறுதி" என்று வியக்க வேறு செய்தார்!

ஆனால் அந்த உறுதி முண்டாவும் பூஞ்சையான இவரிடம் வேலைத்தனம் காட்ட மறுக்கத்தானே செய்தது?

'ஈசன் காந்தம். ஜீவன் ஊசி. காந்தத்தால் இழுபட்டுக் காந்தமே ஆகவேண்டியதுதான் ஊசி. ஆனால் ஊசியை மண் மூடியிருந்தால் காந்தம் எப்படி இழுக்கும்? பெருவாரி ஜீவ ஊசிகளைப் பூர்வ ஸம்ஸ்காரம் மண்ணாக மூடியிருக்கிறது. அழுதழுது பக்திக் கண்ணீரால் மண்ணைக் கழுவி அகற்றினால் தான் ஜீவ ஊசி ஈசக்காந்தத்தில் இழுபட்டு ஒட்டிக் கொள்ளும்' என்று டாகுர் கூறுவது வழக்கம். மண்ணாக இன்றிப் பாறையாகவே உறுதிப்பட்டு விட்டது மன்மதின் முன் வாஸனை. ஆனால் இவன் விஷயத்திலோ, இவன் அதிகம் கண்ணீர் விடக் காத்திராமல் அந்த டாகுரே அமுதைப் பொழிந்து பாறையைக் கரைக்கும்படியாகத் திருவருளின் ஸங்கல்பம் இருந்து விட்டது!

அந்தக் கரைப்புக்கு உபாயமாகத்தான் அவனது பாறை உடம்பை அவருடைய பன்னீர்ப்பூ விரல் தொட்டது!

அக்னிமுகிக் கல்லைத் தொட்டுவிட்டது அமுத நிலாக் கிரணம். மேற்பரப்பில் தொட்டதோடு நில்லாமல், அமுத மானது பாறைக்கே தெரியாமல் மெல்ல மெல்ல அதனுள்ளே இறங்கப் போகிறது! அதை ராமகிருஷ்ணச் சாற்றில் ஊறிய ரஸகுல்லாவாக்கப் போகிறது!

அந்த ரஸவாதத்தின் சுவட்டையும் வெளிப்படுத்தாமல் ஸாதாரணமாகவே பேசிக்கொண்டு போனார் டாகுர். அதிலும் அவரது அஸாதாரண அன்பின் மென்மணம் கமழத் தான் செய்தது.

அவனுடைய உடம்பைத் தடவியவாறே, "ஏனப்பா, நீ பிராமணன் என்று தெரிகிறது, ஆனால் பூணூலைக் காணோமே!" என்று விசாரித்தார்.

Koviloor Digital Library

அடிபிடியே வாழ்வான அந்த "அஸுர"ப் பிராமணனுக்குப் பூணூல் இல்லாததுதான் ஒரு குறையா என்று தோன்றாமல் வெள்ளையாக விசாரித்தார்.

மன்மதும் வெள்ளையாய் பதில் சொன்னான்; "ஸ்வாமி! எனக்கு வியர்வை தேகம். எப்போதும் உடம்பில் ஒரு கசகசப்பு. அதனால் பூணூல் தோலோடு ஒட்டிக் கொண்டு விடுகிறது. நாள் பட்டாலோ அழுக்கேறி ஸதா அரிப்பும் எடுக்கிறது. அதனால்தான் கழற்றிப் போட்டு விட்டேன்."

"அது சரியில்லை" என்று கண்டித்துக் கூறினார் குருதேவர். "பூணூல் பிரம்மண்யத்துக்குச் சின்னம். நீ அதைப் போட்டுக் கொள்ள வேண்டும்" என்றார்.

எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அன்பான அந்தணத் தன்மையை குண்டர்களின் "வாத்யாருக்கு" இந்த மஹா வாத்தியார் ஊட்டப் போகிறாரென்பது உட்பொருள் போலும்.

"வா என்னோடு நம்ம அம்மா கோவிலுக்கு" என்று கூறினார்.

பவதாரிணி ஆலயத்துக்கு அவதாரரே அவவாழ்வு வாழ்ந்த மன்மதை அழைத்துச் சென்றார். ஆஹா! என்ன தான் அவரது அருள் வண்மை! துஷ்டர் சிஷ்டர் இருவரையும் ஸோதரராக்கும் 'நம்ம அம்மா'வுடன் ஒட்டி அவர் வாழ்ந்த அருமையின் பெருமை!

தம்மோடு சேர்ந்து மன்மதும் தக்ஷிணேச்வரியைப் பிரதக்ஷிணம் செய்ய வைத்தார்.

அங்கே எவருமில்லாத ஒரு மூலையில் அவனை நிறுத்தினார். எவருமறியாத ஏதோ ஒரு பேரநுக்கிரஹத்தை அவனுக்குச் செய்தார். தம் எளிமையைத் தெள்ளத் தெளிய வெளிக் காட்டுபவர் மகிமையைக் கள்ளத்தனமாய் மறைத்து விட்டார்!

Koviloor Digital Library

"இன்னெரு ஞாயிற்றுக் கிழமை வா" என்று கூறி விடையளித்தார்.

அவ்வாறே கங்காதருடன் மீண்டும் ஒரு முறை மன்மத் வந்தான். எவரும் அறியாமல், ஒருக்கால் அவனுமே அறியாமல், அருள் சூறையாடித் திரும்பினுன்.

யோகின் - மா வீட்டில் முதல் சந்திப்பு. தக்ஷிணேச் வரத்தில் இரு தர்சனங்கள். மொத்தம் மூன்றே முறைதான் மன்மத் டாகுரிடம் வெளித் தொடர்பு கொண்டது. ஆயினும் அவருடனேயே சேர்ந்து வஸித்தோரில் சிலரும் கூடப் பெற்றிராத எத்தகு உள்தொடர்பை அவன் பெற்று உருமாற்றம் பெற்று விட்டான்! நினைத்தாலே அருவருப்பாக உள்ள கம்பளிப்புழு வனப்பே வடிவான வண்ணத்துப் பூச்சி யாய் உருமாறும் அதிசயம்!

சில காலத்துக்குப் பிறகு குருபாயி தாரக் (பிற்கால சிவாநந்தர்) இந்த அதிசயத்தை கங்காவிடம் வியந்து கொண்டார்; "இப்போதெல்லாம் பாக் பாஜாரில் மன்மத் வீட்டுப் பக்கமாகப் போகும் போது உள்ளேயிருந்து என்ன சப்தம் வருகிறது தெரியுமோ? அவன் 'அம்மா, தேவீ!' என்று பிரார்த்திக்கிற சப்தமாக்கும் வருகிறது! ஆளே எப்படி மாறிவிட்டான் தெரியுமோ? பழைய உருட்சி திரட்சி எல்லாம் போய் விட்டது. கேசத்தையும் நீள வளர்த்துக் கொண்டிருக்கிறுன். பார்த்தால் ஆச்சர்யப்பட்டுப் போய் விடுவாய்!"

பாறை உடம்பு, பாறை மனம் இரண்டுமே மெழுகாகி வந்திருக்கிறது! எளிய பன்னீர்ப் பூ செய்த மாய மந்திரம் தான்!

★

1890 - ம் ஆண்டு. டாகுர் மறைந்து நாலாண்டுகள் ஆகிவிட்டன. குருபாயிக்கள் துறவிகளாகப் பரிணமித்து வராநகரத்தில் மடம் அமைத்து வாழ்ந்து வருகிறுர்கள்.

Koviloor Digital Library

அங்கு ஒரு நாள் வருகிறுன் மன்மத். மரியாதை அறியாது 'தாட்பூட்' செய்த அந்நாள் மன்மதுக்கும் இந்நாள் மன்மதுக்கும் எத்தனை மாறுபாடு? மடாலயத்துக்கு வருகிறேும் என்பதால் காலணி இல்லை. இடுப்பில் ஒரு சாதாரணத் துண்டு மட்டுமே.

எளிமையும் பக்தியும் நிரம்பிக் காண்கிறுன். கூப்பிய கை கூப்பியவண்ணம் இருக்கிறது. ஹிம்ஸையே வாழ்வாயிருந்த தன்னையும் அன்பு வழிப் படுத்திய ஹம்ஸ குருநாதனின் அஸ்திக் கலசத்தைக் கண்சோரப் பார்க்கிறுன். அக் குருநாதனை, "ப்ரியநாத்! ப்ரியநாத்!" என நெஞ்சார அழைத்தவாறு பணிகிறுன்.

கங்காதரை அவ்வப்போது பார்த்து நன்றி நனி தோய நகைக்கிறுன்.

அதைப் புரிந்துகொண்டு ரஸித்த நரேந்திர விவேகாநந்தர் கங்காவைக் கனிவுடன் பார்க்கிறுர். "குரு மஹராஜின் அருள் வண்மையை இந்த மன்மத் பெற்று உருமாற நீயாக்கும் கருவியாயிருந்தாய்" என்கிறுர்.

★

மேலும் சில வருஷம் ஓடிற்று. அகண்டாநந்தராகிவிட்ட கங்காதர் மன்மதைப் பார்ப்பதற்கு வீடு சென்றுர். ஆனுல் இவரைப் பாராமல், இவர் வந்திருப்பதையும் அறியாமல் அவன் தியானத்தில் ஆழ்ந்திருந்தான்.

'அவன்' என்பதா? பன்மையில் குறிக்க வேண்டிய ஸாது ச்ரேஷ்டராக அல்லவோ மன்மத் காண்கிறுர்?

எல்லார் மனத்தையும் காமத்தால் கடைவதால் மன்மதனுக்கு அப்படிப் பெயர். இங்கோ இந்த மன்மதின் பாறை மனம், பாறை உடம்பு இரண்டையுமே பூஞ்சை உடலும் பூ மனமும் படைத்த டாகுர் கடைந்து கடைந்து

Koviloor Digital Library

மெத்துப் பண்ணியிருக்கிருர். வஜ்ர சரீரம் நாணலாய் நலிந்திருக்கிறது. அதைச் சுற்றிக் காவி வஸ்திரம். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் அருள் விசேஷம்!

கண் மூடிய தியானத்தை விடக் கடினமான கண் திறந்த தியானத்தில் மன்மத் ஆழ ஈடுபட்டிருக்கிருர். புற உணர்வு அற்ற லயத்தோடு இமை கொட்டாமல் கதிரவனைப் பார்த்த படிப் பரஞ்ஜோதியை தியானித்துக் கொண்டிருக்கிருர்.

திவ்ய போதையில் கிறங்கிக் கிடந்த மன்மதைக் காணக் காளிக் கங்கா தரின் உள்ளம் உருகிற்று. காட்டிலும் மலையிலும் காலகாலம் கடுந்தவம் புரிந்தாலும் பெறற்கரிய பேரநுபவத்தைத் தங்களுடைய டாகுரின் கிருபை எப்படி இருந்த இடத்திலேயே லேசாய்ப் புரட்டிவந்து ஒரு காட்டாளுக்கும் கொட்டி விடுகிறது என்பதைக் கண்கூடாகக் கண்டு, கண் குளமாகத் திரும்பினுர்.

சில நாட்களில் மன்மத் காலமான செய்தி அவர் காதை எட்டியது. காலமான செய்தி அல்ல; காலாதீத தத்வமான செய்தி!

அன்று யோகீந்த்ர மோஹினியின் வீட்டில் நம் யோகீந்த்ரர் டாகுர் முதன் முறையாக மன்மதைப் பார்த்தபோது அந்தக் குழந்தையுள் கொஞ்சமேனும் வித்யா மாயையைத் தூவுமாறு பகவானை வேண்டியிருக்க வேண்டும் என்ருேம். பின்னுல் நடந்ததோ? அவித்யா மாயையில் ஆழ்ந்து உழன்ற மன்மத் வித்யா மாயைக்கு வந்தது மட்டுமல்ல; மாயையே அடிபட்ட வித்யா நிலையில் தன்னை மறந்து தியானத்தில் அமிழும் நிலைவரை அவர் சென்று விட்டார். அப்படியானவரின் உடல் விழுந்தபின் உயிர் காலாதீதமான விடுதலையே கண்டிருக்குமல்லவா?

★

காம உருவான மன்மதனிடம் தக்ஷிணுமூர்த்தி கோபம் கொண்டார். அவனை பஸ்மமாக்கினுர். பஸ்மத்துக்கு

Koviloor Digital Library

புத்துயிர் பெய்தாள் லலிதை. மன்மதனுக்கு மறுவாழ்வளித்தாள். ஆனால் அவன் பழையபடி காமவடிவனாகத் தானிருந்தான். கோப உருவான இன்னொரு மன்தனையோ நம் தக்ஷிணேச்வர மூர்த்தி கோபித்து எரிக்கவில்லை. குளிரருள் மழையே கொட்டினார். அவனுடைய உள்ளுருவே அதனால் மாறித் தழைத்தது. மாறாத பெரு வாழ்வில் அவ்வுயிர் நிலைகொண்டது.

Koviloor Digital Library

"கல்லைக் கனிவிக்கும் சித்தனவன்"

மன்மத் போல முரடு அல்ல அவர். வேறொரு விதத்தில் முரடு! மன்மத் உடற் கொழுப்பால் முரடனாக இருந்தான். இவர் புத்திக் கொழுப்பால் முரடராக இருந்தவர். மன்மதினுடைய உடற்கொழுப்பைப் போக்கி உள்ளச் செழிப்பு தந்த நம் ரஸவாதி நாயகர் இந்த புத்திக் கொழுப்புக்காரரை என்ன செய்தார்? எந்த வைத்தியத்துக்கும் மசியாத தாயிற்றே புத்திக் கொழுப்பு?

அவர், இவர் என்பதற்கு மேல் அந்த புத்திக் கொழுப்பரின் பெயர் சொல்லத் தெரியவில்லை. "ஸாதகர்" என்று மட்டுமே அவரை "Gospel of Sri Ramakrishna"-*ல் குறிப்பிட்டிருக்கிறது. அறிவுத் திமிர், வரட்டு வாதம், வணக்கமின்மை ஆகியவையே இந்த ஸாதகர் சாதித்தவை போலும்!

1884 ஸெப்டம்பர் பதிநான்காம் நாளன்று கொன்னகர் என்ற வங்காள ஊரிலிருந்து ஸ்ரீ பரம ஹம்ஸரைக் காண ஒரு கோஷ்டி தக்ஷிணேச்வரத்துக்கு வந்தது. கோஷ்டியில் "ஸாதகரும்" ஒருவர். அவருக்கு ஐம்பது வயது இருக்கலாம். இதற்கதிகமாக அவரைப்பற்றி விவரம் தெரியவில்லை.

அவர் உள்ளே என்னவோ அதைச் சில நிமிஷங்களிலேயே நன்றாக வெளிக் காட்டி விட்டார். சாஸ்திரங்கள் பல படித்தவர். அதனால் செருக்கு அடைந்தவர். அதோடு தம் குதர்க்க புத்தியால் எந்த சாஸ்திரத்தையும், எந்தப் பெரியவரையும் குறுக்குக் கேள்வி கேட்பவர்; எனவே ஸாதனா மார்க்கத்தின் தொடக்கப் படியிலேயே இருப்பவர், அல்லது தொடக்கப்படிக்கும் கீழே குழிக்குள் போய்க்

---

*"ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள்" என்பது தமிழாக்கம்.

Koviloor Digital Library

கொண்டிருப்பவர் என்பதெல்லாம் சில நிமிஷங்களில் வெளிப்பட்டு விட்டது.

கொன்னகர் கோஷ்டி வந்தபோது—அது ஒரு பிற்பகல் வேளை—டாகுர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அறையில் இல்லை. சவுக்கந்தோப்புக்குச் சென்றிருந்தார். அதுதான் அவரது கழிப்பிடம். அறையிலிருந்த ஏனைய பக்தர்கள் "ஸாதக" ரிடம் மாட்டிக் கொண்டார்கள்!

அவரது விதண்டாவாதத்துக்கு ஓர் உதாரணம்: "பாற்கடல் கடைந்தபின் சந்திரன் வந்ததென்றால் அதற்கு முன் உலகம் இரவெல்லாம் இருட்டில்தான் இருந்ததா?"

சாஸ்திரங்களில் தத்வங்கள், யதார்த்தங்கள் ஆகிய இரண்டுமே கதையாகக் கலப்பவை. வெற்றறிவால் அதை விளங்கிக்கொள்ள முடியுமா? பணிவும் பக்தியும் கொண்ட இதயத்தாலேயே அல்லவோ விளக்கம் பெறவேண்டும்?

குரு மஹராஜ் சவுக்கந்தோப்பிலிருந்து தமது தர்பாரான அந்த அறைக்குத் திரும்பி வந்தார். பெரியதும் சிறியதுமாகப் போடப்பட்டுள்ள இரு கட்டில்களில் வழக்கம் போலச் சிறியதில் அமர்ந்து தமது ஆஸ்தானம் நடத்தத் தொடங்கினார். ஸ்தானமே தெரியாத எளிய ஆஸ்தானம். பவிசான அரசு கட்டில் அல்ல; பதவிசான அன்புக் கட்டில். தாட்பூட் தெரியாத தர்பாரை அந்த மஹராஜ் தமது மஹிமை காட்டாது நடத்துவார்!

கொன்னகர் கோஷ்டியில் ஒருவர் விதண்டாவாதியை டாகுருக்கு அறிமுகம் செய்தார். "ஐயா, இவர் ஒரு ஸாதகர். உங்களிடம் சந்தேகங்கள் கேட்டுக் கொள்ள வந்திருக்கிறார்."

இப்படித் தம்மைப் பற்றிச் சொல்லப்பட்டவுடன் "ஸாதகர்" ராஜரீக தாட்பூட்டுடன் தம் உடலைச் சொடுக்கி, தலையை நிமிர்த்தி விரைத்து அமர்ந்தார்.

Koviloor Digital Library

"எது சரியான மார்க்கம்?" என்று அவர் குருதேவரைக் கேட்டார். அவர் கேட்கும் பாவனையிலேயே தாம் தெரிந்து கொள்ளக் கேட்கவில்லை, ராமகிருஷ்ணருக்குத் தெரியுமா என்று பரீக்ஷித்து வாதிடவே கேட்கிறுரென்று புரிந்தது.

விரைப்பும் வீறுப்பும் தெரியாத கோமள குருநாதர் மதுரமாய் பதில் சொன்னுர். "குருவின் வார்த்தையில் நம்பிக்கை வைத்துவிட்டால் எந்த மார்க்கமும் சரியே. கட்டு முளையிலே ஒரு நூலின் ஒரு முனையைக் கட்டி மறுமுனையை அப்படியே நீளவிட்டிருக்கிறதென்று வைத்துக் கொள். நம் கைக்கு அகப்படுவது இந்த மறுமுனைதான். அதுதான் குருவின் வார்த்தை. அதைப் பிடித்துக்கொண்டு நூலைத் தடவியபடி கண்ணை மூடிக்கொண்டு போனுலே போதும். நம் லக்ஷ்ய வஸ்துவான கட்டுமுளையை அடைந்து விடலாம்."

அவநம்பிக்கைப் பிரகிருதி இதை எவ்வளவு தூரம் ஒப்பியதோ? ஆனுலும் எதனுலோ எதிர்வாதம் கிளப்பாமல் அடுத்த கேள்விக்குப் போனுர்.

"கடவுளை மெய்யாலுமே காணமுடியுமா?"

"உலக போகங்களில் ஈடுபட்டுள்ளமட்டும் காண முடியாதுதான். காமினி காஞ்சன* ஆசை லவலேசம் இருந்தாலும் கடவுளை அடைய முடியாது. ஆனுல் பற்றுக் களில்லாத சுத்த புத்தியால், சுத்த மனத்தால் அவனை அறியலாம்".

எதிர்க் கேள்வி நிபுணரான ஸாதகர் வாதித்தார். "சுத்த மனத்தால் அறியவாவது? அவனை அடையமுடியாமல் வாக்கானது மனத்தோடுகூடத் திரும்பிவிடுகிறது என்பதல்லவா சாஸ்திரம்? யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ".

---

* காமினி—பெண்; காஞ்சனம்— பொன். அடியோடு ஒதுக்க வேண்டியதாகக் "காமினி—காஞ்சன"ங்களை ஸ்ரீராமகிருஷ்ணர் அடிக்கடிக் குறிப்பிடுவது வழக்கம்.

Koviloor Digital Library

வெறும் வாசாஞானியின் கடபுடா ராமகிருஷ்ணருக்கு சகிக்கவில்லை. கனிவு மயமான அவரும் முனிவுடன் கண்டித்துக் குறுக்கிட்டார். "நிறுத்து நிறுத்து! சாஸ்திரம் என்று சொல்லிவிட்டால் போதுமா? சாஸ்திரத்தின் அபிப்பிராயம் உண்மையாகப் புரியவேண்டாம்? சரியாக ஸாதனை செய்தாலன்றி அது எப்படிப் புரியும்? 'ஸித்தி' என்று ஒரு போதைப் பொருள் இருக்கிறதே, அதன் பெயரை மட்டும் 'ஸித்தி, ஸித்தி' என்று சொல்லிக் கொண்டே யிருப்பதால் போதை உண்டாகிவிடுமா என்ன? ஸித்தியை அரைத்துப் பூசிக்கொண்டால்கூட போதை உண்டாகாதே! அதை உட்கொண்டால்தானே போதை உண்டாகும்?

"பாலிலே 'வெண்ணெய் இருக்கு, இருக்கு' என்று சும்மாச் சொல்லிக் கொண்டேயிருப்பதில் என்ன பிரயோ ஜனம்? பாலைக் காய்ச்சணும், புரை குத்தணும், தயிராக் கணும், கடையணும். அப்புறமல்லவா வெண்ணெய் கிடைக்கும்? அந்த மாதிரி ஸாதனையெல்லாம் பண்ணித்தான் லக்ஷ்யத்தை அடையணுமே தவிர, சாஸ்த்ரத்தில், 'அப்படி யிருக்கு, இப்படியிருக்கு' என்று சும்மாப் பேசி என்ன பிரயோஜனம்?"

இப்படி எளிமையிலேயே அற்புதமாய் அவர் உபதேசிக்க, அந்த வீணரோ சற்றும் பவ்யமில்லாமல், "சாஸ்திர மேற்கோளைச் சொல்லி பயமுறுத்தக்கூடாது என்கிறீர்கள், ஆனால் நீங்கள் சொல்லும் இந்த வெண்ணெய் உபமானம்கூட ஏதோ புஸ்தக மேற்கோள் மாதிரிதானே தெரிகிறது?" என்றார்.

தம்மை அவர் 'குத்தியதாகவே' ராமகிருஷ்ணர் கருதவில்லை. "யார் மேற்கோள் காட்டினாலும் சரி, சும்மாவுக் காக சாஸ்திரத்தில் இருக்கிறதென்று ஒன்றைச் சொல்வ தாலோ, 'சாஸ்திரம் கேட்டுக் கொள்கிறேன்' என்று வெறுமனே அதைக் கேட்பதாலோ ஒரு புண்ணியமும்

Koviloor Digital Library

இல்லை. ஒரு வருஷத்தில் இத்தனை மழைபெய்யும் என்று பஞ்சாங்கத்தில் போட்டிருப்பதைப் பார்த்து அந்தப் பஞ்சாங்கததையே பிழிந்தால் என்ன பிரயோஜனம்? சொட்டு ஜலம் வருமா?'' என்றூர்.

இப்போது இன்னொரு முனையில் வீண்வாதம் ஆரம்பித்தார் "ஸாதகர்'' எனப்பட்ட வீம்பர். "சரி, அப்படியானல் நீங்கள் வெண்ணெய் கடைந்து எடுத்து விட்டவரா?''

"நான் என்ன செய்தேன், செய்யவில்லை என்பதால் உங்களுக்கு என்ன பிரயோஜனம்? அந்த சமாசாரம் உங்களுக்குத் தேவையில்லை'' என்ற குரு மஹராஜர் தொடர்ந்தார். "இம் மாதிரி சொந்த ஸமாசாரங்களை எடுத்துச் சொல்லி பிறத்தியாருக்குப் புரியவைப்பது கஷ்டம். நெய் ருசி தெரியாதவர் அது எப்படி இருக்கும் என்று கேட்டால் தெரிந்தவர் என்ன சொல்லிப் புரியவைக்க முடியும்? தெரிந்தவர்களோடேயே இருந்து கொண்டு, அவர்கள் அநுபவிப்பதைத் தாங்களும் அநுபவித்தால்தான் தெரியும். வாதம், பித்தம், கபத்துக்கான நாடிகள் என்ன வென்று தெரியவேண்டுமானல் வைத்தியருடன் சேர்ந்து பழகி வசித்தால்தானே முடியும்?''

சேர்ந்து பழகி வசிப்பதற்கு இயலாத தான்தோன்றிக் குண "ஸாதகர்'' சட்டென இடைமறித்து, "ஆனல் சிலருக்கு ஸ்வபாவமாகவே மற்றவர்களோடு கலந்திருக்க முடிவதில்லையே'' என்றூர்.

பொறுமையாகப் பதிலுரைத்தார் பரமஹம்ஸர். "ஞானம் வந்த பின், ஈச்வரானுபவம் வந்தபின் ஒரு நிலையில் எவருடைய சங்கமும் பிடிக்காமல் ஏகாந்தமாயிருக்கத் தோன்றுவதுண்டு. ஆனல் அந்த நிலை அடைவதற்கு முன் ஸத்ஸங்கமில்லாமல் எப்படி முடியும்?''

"ஸாதகர்'' ஒன்றும் சொல்லத் தோன்றூமல் சிறிது போது 'உம்'மென்று உட்கார்ந்திருந்தார். மறுபடி அவர் பேசத் தொடங்கியபோது அவரிடம் சற்று எரிச்சலே

Koviloor Digital Library

தெரிந்தது. "நீர் நேராகவோ, உள்ளுணர்ச்சியாகவோ ஈச்வராநுபவம் பெற்றிருக்கிறீரா என்று சொல்லுமையா!" என்று பணிவில்லாமல் பரமஹம்ஸரைக் கேட்டார். தெய்வ ஸாந்நித்யத்தை ஸதாவும் கொட்டிக் கொண்டிருக்கும் குருதேவரிடம் 'வாக்கு மூலம்' கேட்கிறார்!

இந்த அபத்தக் கோரிக்கையை டாகுர் ஏற்றுப் பதில் சொல்லமாட்டாரென்றும் "ஸாதக"ருக்கே தெரிந்தது. எனவே மேலும் அபத்தமாக, "சக்தியிருந்தால் நீர் பதில் சொல்லலாம், அல்லது மௌனம் சாதிப்பதுதான் உம் இஷ்டம் என்றால் அப்படியே பண்ணலாம்."

ஸ்ரீ ராமக்ருஷ்ணர் இதனால் எரிச்சலடைந்து விடவில்லை. குளிர்ந்தே இருந்தார். 'அட அசடே!' என்கிற பரிதாப பரிஹாஸம் அவரது இதழில் புன்னகையை மொட்டிட்டது.

"நான் என்னவென்று அப்பா சொல்லுவேன்? இம்மாதிரி விஷயங்களைக் குறிப்பால்தான் புரிந்து கொள்ளணும்" என்றார் தயாளு.

தயா தாக்ஷிண்யமில்லாமல் நுண்ணியதான ஆத்மாநுபவத்தைப் பிய்த்துச் சோதிக்க விரும்பிய "ஸாதக"ரோ கூச்சமில்லாமல், "சரி, அப்படியானால் குறிப்பாகவாவது சொல்லும்" என்று நெருக்கினார்.

நரேந்திரர் இந்த அபத்தத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்பினார். எவரையும் வாதத்தில் வாயடைக்க வைக்கும் திறமை நரேந்திரருக்கிருந்த போதிலும் இந்த வீணரிடம் வாதித்துப் பயனில்லை எனக் கண்டார். எனவே எல்லா வாதத்துக்கும் பேதத்துக்கும் முடிவுகட்டும் நாதத்தில் பிரவேசிப்பதே தீர்வு எனக் கண்டார்.

தம்புராவை மீட்டார். அற்புதமான தம் குரலை ச்ருதி பார்த்துக் கொண்டார்.

சுற்று முற்றும் பார்த்தவருக்குச் சற்றே ஏமாற்றமாயிருந்தது. "பாரும் பகோவாஜ் கொண்டு வரக்காணோமே!"

Koviloor Digital Library

என்றார். பகோவாஜ் என்பது தபேலா போன்ற பக்கவாத்தியம்.

தாள இசை இல்லாமல் பாட நரேனுக்கு மனமில்லை. தயங்கினார்.

பக்கவாத்தியமில்லாமல் பாட நரேன் தயங்கினாலும், ச்ருதி கூட்டி விட்டதனால் அங்கே ஸங்கீதத்துக்கான சூழலை ஓரளவு ஏற்படுத்தியிருந்தார். எனவே இப்போது கொன்னகர் கோஷ்டியிலிருந்த ஒருவர் சட்டென்று பாடத் தொடங்கினார்.

குரு மஹராஜ் ரஸித்துக் கேட்டார். ஆயினும் இசையிலேயே தம்மை மறந்து சொக்கிவிடவில்லை. வாதத்தின் நடுவே பாட்டு குறுக்கிட்டு விட்டதே என்பதில் "ஸாதகர்" படும் பாட்டையும் கவனித்து ரஸித்தார்! மஹாமாயை தான் எத்தனைவித மன இயல்புகளை உண்டாக்கியிருக்கிறாள் என்ற வியப்போடு, மாயைக்கு ஆளானவரிடம் பரிதாபமும் கலந்தே ரஸித்தார்!

மஹாமாயை மேலும் விளையாடினாள்! வாதத்துக்கு முடிவுகட்ட நாதம் என்று சற்று முன் தான் சொன்னோம். ஆனால் இப்போது அந்த நாத சம்பந்தமாகவே, அதுவும் ஸாக்ஷாத் நரேந்திரரே வாதம் தொடங்கினார்!

கொன்னகர் பாடகரின் ஸங்கீத பாணி சரியானதல்ல என்று நரேனுக்கு ஆக்ஷேபம். பாட்டில் குறுக்கிட்டு வாதம் தொடங்கினார். எதிராளியும் விட்டுக் கொடுப்பவராக இல்லை.

விளைவு: வாதக் கசப்பை நாத மதுரம் போக்குவதற்குப் பதில் இசை சாஸ்திரம் பற்றியே காரசாரமான சர்ச்சையில் நரேனும் கொன்னகர் பாடகரும் மோதிக் கொண்டனர்.

"ஸாதகர்" தம் ஊர்க்காரரான கொன்னகர் நபரிடம் எரிந்து விழுந்தார். விட்டுக் கொடுக்காமல் வீண்வாதம்

Koviloor Digital Library

செய்வதே தொழிலாகக் கொண்டிருந்த அந்தப் புண்ணிய வானே இப்போது அந்தப் பாடகரிடம், "நீயும் தானாகட்டும், விட்டுக் கொடுக்கக் கூடாதா? இம்மாதிரி வாதத்தால் என்ன பிரயோஜனம்?" என்று கடிந்து கொண்டார்.

அவர் அப்படிச் சொல்லி வாய்மூடுவதற்குள் கொன்னகர் காரர்களில் இன்னொருவரும் நரேனிடம் வாதிக்கத் தொடங்கினார்.

இவற்றில் பட்டுக்கொள்ளாமல் பட்டுப் போல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த டாகுர்—மஹாமாயையின் மஹாஞானக் குழந்தையான டாகுர்—'ஸாதக'ரிடம், "இவனையுந்தான் கொஞ்சம் கடிந்து கொள்ளேன்" என்றார். மேலும் வேடிக்கை வேண்டியிருந்தது போலும் அவருக்கு! கொன்னகர்காரர்களின் வாயையும் கிளறினார்—"இவரோடு (ஸாதகரோடு) உங்களுக்கெல்லாம் ஒத்துப் போகாதோ?" என்று கேட்டார்.

தன் மஹாஞானக் குழந்தை தர்க்க வாதத்தில் பிரியப்பட்டு ஈடுபடாமலும், அதே போதில் அப்பிரியப்பட்டு அதை ஒதுக்காமலும், அதையும் தன் விளையாடலாக ரஸித்ததை மஹாமாயையும் ரஸித்துத்தானிருக்க வேண்டும். ஆயினும் விளையாட்டுக் காணும் ஆர்வத்தில் அவர் வீண்வாதக்காரர்களின் வாயை மேலும் கிளறுவது அவருக்கென்றே தான் அளித்திருந்த அருள்பாங்குக்கு உகாதது என எண்ணினாள் போலும்! கருணையைச் சட்டென முன்னுக்குத் தள்ளி மாய விளையாட்டைப் பின்வாங்கிக் கொண்டாள். அதன் விளைவாக நரேந்திரர் வாதத்தைப் பட்டென்று நிறுத்தி விட்டு, உள்ளுருக்கும் பூரித்து நிற்கப் பாட ஆரம்பித்து விட்டார், பக்கவாத்தியமில்லாமலே.

"வீணாய் இவ்வித மேஎன் இறைவா
வாணாள் முழுதும் செலப்போமோ?
பேதை சந்தத மும்நம் பிக்கைப்
பாதையில் பார்வை கொள்ளேனோ?"

Koviloor Digital Library

வாதம் செய்யாததை நாதம் மெய்யாலுமே செய்து விட்டது. உருக்கமுடன் நரேன் இசைத்த கீதம் வாணுள் முழுதும் வீணுய் செலவிட்ட "ஸாதக"ரின் உள்ளே துளைத்துப் பாய்ந்து தொட்டது.

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு அவரிடமுண்டான கருணைதான் நரேனின் கண்டத்தில் கறகண்டு கானமாகி அந்தக் கற்குண்டு மனத்தையும் துளைத்துத் தொட்டது என்பதில் சற்றும் ஐயமில்லை.

மன்மதின் உடலைத் தொட்டு உள்ளே புகுந்து நிரந்தர மாற்றத்துக்கு வித்திட்டதுபோலச் செய்தாரோ, அல்லது தாற்காலிகமாக ஒரு தெளிவுதான் தந்தாரோ நாம் அறியோம். எவ்வாருயினும் நரேன் பாடத் தொடங்கியது தான் தாமதம், "ஸாதக"ரின் குழப்ப மனம் ஒரு திடீர்த் தெளிவு கண்டது. சஞ்சல உள்ளம் சாந்தி கண்டது. வீண் வாத நாவு மவுனம் கண்டது.

அனைவருக்கும் ஆச்சர்யக் காட்சியாக அந்த வெற்றுத் தம்பட்ட ஆசாமி கான ரஸத்தில் ஈர்ப்புண்டு கண் மூடித் தியானத்தில் உட்கார்ந்து விட்டார்!

அக் காட்சியை எல்லோருக்கும் பளிச்சிட்டுக் காட்டுவது போலப் பிற்பகல் சூரிய ஒளி கதவு வழியே பாய்ந்துவந்து நேராக "ஸாதகர்" மீது திண்ணென விழுந்தது.

அப்போது ஒரு பரம அற்புதக் கருணைக் காட்சி அங்கு கூடியிருந்தோருக்கு லபித்தது. ஸூர்யனின் வெப்ப வெள்ளத்தை வெல்வதான பரமஹம்ஸரின் தண்ணருள் வெள்ளம்தான்!

கட்டிலிலிருந்து ஒரு தாவில் குதித்தது பரம ஹம்ஸம். ஒரு குடையை எடுத்து அதை வெயில் பாயும் வழியில் கதவண்டை விசுக்கென விரித்து வைத்தது. "ஸாதகர்" மேல் வெயில் படாமலிருப்பதற்குத்தான்!

Koviloor Digital Library

பாரதி கண்ணனை "மழைக்குக் குடை" என்றார். வெயிலுக்கும் குடை நம் ராமக்கண்ணனார். 'படபடப்புக் கார ஸாதகரும் சற்று பதைப்பற உட்கார்ந்திருக்கிறாரே! இச்சமயம் பார்த்து வெயில் அவர்மேல் சுரீலென்று வீசுவதில் அவருக்கு அதிசய அநுபவமாகக் கிட்டியிருக்கும் அமைதி குலைந்து விடப்போகிறதே!' என்ற எல்லையிலாப் பரிவில், அன்னக்குஞ்சுக்குத் தாய் ஹம்ஸம் இறகணைப்பினால் நிழல் தருவதேபோல ஸாதகருக்குக் குடை விரித்தது பரம ஹம்ஸம். மட்டு மரியாதையின்றி வாதச் சூட்டுச் சொற் பொறிகளைத் தெறித்தவர்மீது குடை விரித்தே அருள் மழை யும் பொழிகிறார், மழை, குடை இரண்டுமேயாகிய நம் ராமகிருஷ்ணர்.

ஒரு குடையை விரிப்பது சின்னஞ்சிறிய செயல்தான். ஆனால் எவர், எவருக்கு, எந்த சந்தர்ப்பத்தில், எப்படி அதைச் செய்தாரென்று பார்க்கையில் மகா பெரிய மதுரமா கிறது! அடடா, சுரீல் வெயில் "ஸாதக"ரைத் தீண்டிய க்ஷணத்திலேயே "உடுக்கை இழந்தவன் கை போல" எத்தனை ஜீவீர்ப் பரிவோடு ஸ்ரீ ராமகிருஷ்ணர் குதித்துக் குடை விரித்தார்! இங்கேதான் டாகுரின் இதய ஸாரத் தையே காண்கிறோம்.

நரேந்திரர் நெஞ்சுருகப் பாடிக் கொண்டிருந்தார்:

"உலகா யதக்கறை படிந்த உளத்தினேன்
    உலக நாத, உனை அழைப்பதெப் படியோ?
தீக்குழி விழுந்த துரும்புதப் பிடுமோ?
    தீதில் தீநீ, துரும்பனை யேன்நான்
தீ உனைத் துரும்பன் தொழுதலெப் படியோ?
    ஆயு ளெலாம் படு பாபத் தடிமை
மாயும் இவ்வேளை தூய சன் மார்க்கம்
    சார்ந்து அடைக்கலம் காண்வகை உண்டோ?
நீயே நின்னது நின்மல அன்பின்
    நீள்வலி யால்இந் நீசனைக் காப்பாய்!

கோவிலூர் ஆதீனம் Acc.No: 2238 R65

Koviloor Digital Library

முடியைப் பிடித்திழுத் தேளனை நின்றன்
அடிநிழ லதனில் அழுத்திடு வாயே!"

அதிலேசாக வெளியில் தோன்றிய குருதேவர் உள்ளே கொண்டிருந்த அருளாவேசம் நரேனிடமிருந்து மேலும் மேலும் இசையாகப் பொங்கிக் கொண்டிருந்தது.

"எளியரின் புகலே! இனிக்குதுன் நாமம்
அளி அமு தாயது பாயுது காதில்.
ஆருயி ரே! எமக் காறுதல் கூறுது
மதுரநல் நாமம் மதிக்கவொண் ஞநிதி
அதுவே அமரப தம், அதை நவில்வோன்,
உய்யிர்க்குயி ரே! அமு தாகஉய் வானே!"

நாமத்தை நவில்பவன் அமுதமாக உய்கிருனெனக் கேட்ட மாத்திரத்தில் டாகுர் ஸமாதியில் ஆழ்ந்துவிட்டார்.

வானில் எழும்புவது நமக்குப் பரம கடினமானது. ஆனுல் பறவைக்கு எவ்வளவு ஸுலபம்? அவ்வளவு சுலபம் இவருக்கு உலக நினைப்பற தெய்வ நினைப்பில் ஆழ்ந்து விடும் ஸமாதி நிலை! நமக்கோ அது என்னவென்று புரிந்து கொள்வதே கடினம்.

ஸமாதியிலேயே சிறிது சிறிது உலக நினைப்புக்கு, புற உணர்வுக்கு அவர் வந்து அதையும் இதையும் இணைக்கும் அநேக அற்புத நிலைகளும் உண்டு. ஸமாதியில் அவர் நுகரும் அநுபவங்களுக்கேற்ப அவரது சரீரத்திலும் பலவித சலனங்கள், மெய்ப்பாடுகள் காணப்படும். நிச்சலனத்தில் நீச்சலிடும் சலனங்கள்! உலகப்பாடு இல்லாமல் மெய்ப் பொருளை மொய்ப்பதன் மெய்ப்பாடுகள்!

அப்படித்தான் இப்போது அவருடைய கை விரல்கள் நடுங்கின. குறிப்பாகக் கட்டைவிரல் விசையாக நடுங்கிற்று. பிறகு அவர் கட்டையாய் அமர்ந்து விட்டார்,

Koviloor Digital Library

என்னவோ ஏதோ என்று புரியாத கொன்னகர் கோஷ்டியினர் உடனே அங்கிருந்து புறப்பட ஆயத்தமாயினர். இந்தச் சலசலப்பில், நம் "ஸாதகர்" முதல் முதலாகச் செய்த உண்மை ஸாதனையான தியானம் அறுபட்டது.

பவநாத் என்று டாகுரின் அன்புச் சீஷப்பிள்ளைகளில் ஒருவர். நரேனுக்கு மிக மிக அன்பானவர். அவர் இப்போது கொன்னகர் கோஷ்டியாரிடம் இதுவே டாகுரின் ஸமாதி நிலை என்று எடுத்துச் சொல்லி சாந்தப்படுத்தி அவர்களை மறுபடி உட்கார வைத்தார்.

இந்தச் சலசலப்பு எதுவும் அறியாமல் நரேன் நாத வெள்ளம் பெருக்கிக் கொண்டே போக ஸ்ரீராமக்ருஷ்ணரோ அதில் அப்படியே முழுகிக் கிடந்தார்.

"இரவும் பகலும் உழைத்தே நினக்கே
இருதயத் தேமணி யாசனம மைத்தேன்
இருக்கைய தில்இனி தெழுந்தருள் செயவே
இருநிலத் திறைவா! இரங்கிவ ராயோ?"

பரவச பாவத்திலேயே லேசான புறவுணர்வோடு பரமஹம்ஸர் இருக்கையிலிருந்து இனிதெழுந்து வந்து ஆருயிர் நரேனின் அருகே தரையில் அமர்ந்தார். ஆருயிர் சீடர் பின்னும் ஆர்த்துப் பாடினர்.

"எழும்புது காண்அன்பு முழுமதியாய்,
எழிலுற ஞானநல் வானதிலே!
அம்புலி காணும் அம்பு ராசியாய்
பொங்கு(து)இ தயஅலை எங்கிலுமே!
அத்தனை இன்பத்து முழுமையு நீ!
அத்தனே! ஜய, அருள் வடிவோனே!"

'அத்தனே! ஜய, அருள் வடிவோனே!' என்று நரேந்திரர் பாடக்கேட்ட டாகுர் ஸமாதி குலையாமலே நீள எழுந்து நிலையாய், சிலையாய் நின்றார்.

Koviloor Digital Library

நெடுநேரம் பின்னரே அவருக்கு அரையுணர்வாய் வெளி ப்ரக்ஞை வந்தது. மீளவும் அமர்ந்தார். நரேன் பாட்டை முடித்துவிட்டுத் தம்புராவை அதனிடத்தில் கொண்டு வைத்தார்.

இந்த லோகத்துக்கும், தமது சொந்த லோகமான தாய் வீட்டுக்குமாக ராமகிருஷ்ணர் மெல்ல ஊஞ்சலாடிக் கொண்டே அந்த மஹா தாயிடம் குழறிக் குழறிப் பேசலானார். "ஸாதக"ரின் போக்கில் அவர் கருணையால் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறாரென்பதைக் காட்டியது அப்பேச்சு. அறிவு வாதத்துக்கு இடமற்ற இதய ஸமர்ப்பணத்தை விட்டுத் தாம் வாதத்தை ரஸித்ததும் தவறு என்ற பச்சாத்தாபத்துடனும் அம்பாளிடம் முறையிட்டார்.

"அம்மா! இதெல்லாம் என்ன சொல்லு. தாங்களாக எதுவும் செய்ய மாட்டாங்களாம். இவங்களுக்காக வேறே யாராவது வெண்ணெய் கடைஞ்சு எடுத்துண்டு வந்து வாயிலே ஊட்டணுமாம்! 'தூண்டில் புழுவை தண்ணியிலே வீச மாட்டோம்; தூண்டிலைப் பிடிச்சுண்டு நிற்கவும் மாட்டோம். யாராவது மீன் பிடிச்சுண்டு வந்து எங்க கையிலே போடணும்'னு இருக்காங்க! என்ன ஹிம்ஸை! அம்மா, இந்த மாதிரி வாதம் பண்றதுன்னு வரவங்களுக்கு இனிமேலே நான் காது கொடுக்கமாட்டேன். தடிப்பசங்க, என் மேலே இதை வலிஞ்சு திணிக்கிறானுக! ஐயோ ஹிம்ஸையே! இதையெல்லாம் உதறிப்பிடறேன். வேதங்க, அதனோடெ விதி வாதங்க, இதுங்களுக்கெல்லாம்கூட பிடிபடாதவள்—னு நீ! வேதம், வேதாந்தம், சாஸ்த்ரம்—னு படிச்சுப் படிச்சு உன்னைப் பிடிச்சுட முடியுமா என்ன?"

நரேனை அவரது அரைப் பார்வை தீண்டியது.

"புரியறதாடா பயலே? வேதமும் ஏதோ துளி அடையாளந்தான் காட்டும்" என்றார்.

Koviloor Digital Library

வாதம் வேண்டாம் என்பதே ஒரு வாதமாகிவிடப் போகிறதே என்று நினைத்தார் நரேன். மறுபடி நாதம் பெருக்க எண்ணித் தம்புராவைக் கேட்டார்.

தம்பிரான் அப்போது, "எனக்கே பாடணும் போலிருக்கு" என்றார். குரு—சிஷ்ய மனோபாவங்கள் அப்படி ஒருமித்து விட்டன!

ஆழ்ந்த குரலினிமை நெஞ்சாழ உணர்வில் தோய்ந்து ஸ்ரீராமக்ருஷ்ணர் கானம் செய்யும் அருமையைக் கேட்ட யாவரும் போற்றி எழுதியிருக்கிறார்கள். அவரையே வேண்டி அகச் செவியால் அதை நாமும் சிறிது பருகலாம்.

பரவசராகப் பாடினார் பரமஹம்ஸர், பாரோர் அனைவரிடமும் பரிதாபத்தில் ஒருமித்தவராக.

என்னித யந்தனைப் புண்ணெனத் துளைக்கும்
துன்பம் புகல்வேன். தாய்,கேளாய்!
உனையே என்றன் அனையாய்ப் பெற்றும்
உறக்கம் கொளாமல் உன்னித் திருந்தும்
திடுமென என்னகம் திருடர் புகுந்தே
பறிமுதல் செய்தனர் பரிசங்களே!

ஆத்மிக தனங்களைப் பறிகொடுத்துவிட்டு வெற்றறிவில் முட்டிக் கொள்வதிலேயே பாட்டும் முட்டிக் கொணடதால் மீண்டும் வசன நடைக்கு வந்தார் ஸ்ரீராமகிருஷ்ணர். மாளாத் துயர அயர்ச்சியோடு, "என்னை ஏண்டியம்மா வாதத்திலே கொண்டு விடறே?" என்று தேவியிடம் குறைப் பட்டுக் கொண்டார்.

அந்த அன்புக் குழந்தை இப்படித் துன்புற்றுத் தன்னிடம் குறைப்பட்டுக் கொண்டவுடன் அம்பிகைக்கு அருள் பொங்கி வந்திருக்க வேண்டும். "இனி தமக்கும் வாதத்துக்கும் சம்பந்தமில்லை. அதற்காக, அத்வைத மௌனத்திலும் தாம் கரைந்துவிடப் போவதில்லை. அத்வைத அடிப்பீடத்தில் காலூன்றி நின்றாலும் சாந்த மௌனத்தில் கரையாமல்

Koviloor Digital Library

சக்தியின் மோஹன லீலையை உத்தம த்வைத பக்தியான பாவமுகம் (அல்லது பாவம்) எனும் ஸமாதி நிலையிலேயே ருசித்துக் கொண்டிருக்கப் போகிறோம்'' என்ற திடமான உணர்வை அவருக்கு அவள் ஊட்டியிருக்க வேண்டும். அதனால் ஆனந்தமயமாக கானம் செய்யலானார்:

''இந்நாள் அறிந்துவிட்டேன்
இனியெதும் மீதமில்லை!
எந்நாளும் அழியா(து)
இப்பெரும் போகமதே!
முழுவது மேஅறிந்த
ஒருகுரு புகட்டிடவே
பழுதறக் கற்றுவிட்டேன்
பாவத்தின் மர்மமதே''

பின்னரும் பேரின்ப கீதமிசைத்தார். போதம் என்றது போதையாகவே அவரைக் கிறங்க வைக்க, போதை தந்த அந்த மதுவைப் பற்றி மதுரமாய்ப் பாடினார்.

சாதா ரணமது அருந்தேன் நான்
சதா நந்தமது மாந்து வனே
மாதா காளிதன் மாநாமம்
மதாந்த மாய்மதி மயக்கி டவே
''மாந்தினன் மது''வென மாந்தர்சொன்னார்;
மந்திர மதுவென அறிந்திலரே!

சிரிப்புச் சுழியிடும் திருமுகத்தோடு ஸ்ரீராமகிருஷ்ணர் பரதேவியை முகமுகமாகக் கண்டு பேசினார். ''அடி அம்மா! என்னைப் பைத்தியமாக ஆக்கிவிடு. அறிவாலும், ஆராய்ச்சியாலும், சாஸ்த்ர வாதங்களாலும் உன்னை அநுபவிக்க முடியாதோல்லியோ? அதனாலே அறிவில்லாத பைத்தியமாகப் பண்ணிவிடு'' என்றார்.

ஸங்கீத சாஸ்திர வாதத்தால் அந்த நாத ரூபிணியை அநுபவிக்க முடியாது என்பதும் இதன் ஓர் உட்கிடைதான். இவ்வுண்மை டாகுரின் மனத்தில் பட்டதோ என்னவோ?

Koviloor Digital Library

கொன்னகர் பாடகரிடம் நரேன் சங்கீத சாஸ்திரப்படித் தப்புக் கண்டதும் இப்போது அவருக்கு ஏற்கவில்லை. அருமை நரேனிடமும் மனமொத்துப் போகாமல் எளிய ஸத்தியத் திலேயே டாகுரின் மனம் ஒத்துப் போயிற்று. நாத வித்தை வாதங்களைத் தள்ளிவிட்டுச் கொன்னகர்காரரின் பாட்டை அவர் இப்போது நினைவு கூர்ந்து பார்க்க அது அவருக்கு மிகவும் ரம்யமாகவே பட்டது. எனவே பிரிய நரேன் சண்டையில் மோதிய அப்பாடகரிடமே அந்த நரேனின் குருமஹராஜ் மிக்க விநயமுடன், அன்பு ததும்பும் குரலில், "அப்பா குழந்தே! அம்மா ஆனந்தமயீ மேல் ஒரு பாட்டு பாடுவியா?" என்றார். அதுதான் சொன்னேமே, ராஜரீக தாட்பூட்டே அறியாத குருராஜர் அவர் என்று! அதோடு அன்பின், உண்மை நாட்டத்தின் விநயமும் குடிகொண்டவர். கருணையோ கேட்க வேண்டாம். வேண்டாத வாதத்தினால் நரேன் அந்தப் பாடகரைத் தாக்கிவிட்டானே என்ற கருணையிலேயே இப்போது அப்பாடகரைத் தாங்கவந்தார். ஆயினும் தாங்கும் சக்திமானாகத் தம்மைக் காட்டிக் கொள்ளாமல் தழைந்து கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ ராமக்ருஷ்ண இலக்கியங்களை இதயம் ஊன்றிப் படித்தால், இப்படிச் சின்னச் சின்னதாக எத்தனை விஷயங் களில் அவரது ஸாரபூதமான பெருமைகளைப் பார்க்கிறோம்?

'தான்' அற்ற மஹான் ராமகிருஷ்ணரால் தழைய முடியும். சாமானிய மனிதரால் முடியுமா? நரேனின் தாக்கு தலை மறக்கக் கொன்னகர் பாடகரை அவருடைய "தான்" விடவில்லை! 'தேன் வெள்ளமாக நரேன் பாடி விட்டிருக்கும் சூழலில் நம் பாட்டு எடுபடுமா? அவனிடம் இப்படியும் ஒரு தோல்வி அடைய வேண்டுமா?' என்றும் "தான்" அவரை நுந்தியிருக்கவேண்டும். அதே போதில் டாகுரின் விநயமும் அவரைத் தொடாமலில்லை. எனவே டாகுர் அவரை அம்பாள் பாட்டுப் பாடச் சொன்னதும் அவர், "ஐயா, என்னை மன்னிக்க வேண்டும்" என்று பணிவாகவே மறுதலித்து விட்டார்.

Koviloor Digital Library

பின்னரும் தாழ்ந்து வேர் பாய்ச்சியது டாகுர் எனும் எளிமைத்தரு. அவதாரராகக் கருதப்பட்ட அவர் அந்த அநாமதேயப் பாடகருக்குக் கரமெடுத்துக் கும்பிட்டு, விண்ணப்பக் குறியுடன் பார்த்தார்.

அப்போதும் பாடகரின் தன்மானம் அவரை வாய்திறக்க விடவில்லை. தன்மான பாரமின்றி சுகமாகத் தாழ்ந்திருப்பது அழகு. பாடகரோ நரேனிடம் தோல்வி மனப்பான்மை கொண்டு அதனுல் அவலமாகத் தாழ்வுணர்ச்சி கொண்டிருந்தார். அவரது மனஓட்டம் பளிங்கான டாகுரின் பார்வைக்குப் பளிச்சென்று புலனுயிற்று. உடனே எல்லையிலா அநுதாபப் பரிவு பிறந்தது. அந்த மன ஒட்டுதலில் வினயப் பான்மை மறைந்து ஸ்வாதீன அன்பு பிறந்தது.

டாகுரின் கை விநயத்தில் கும்பிடும்போதே, க்ஷணத்தில் அவரது மனம் அன்புரிமையில் மலர, கும்பிட்ட கையோடேயே ஸ்வாதீன அழுத்தத்துடன் பேசினுர். "அப்பாடா! நீ பாடித்தான் ஆகணும் என்று நான் பலவந்தம் கூட பண்ணலாமாக்கும்" என்ருர்.

அதுவும் எப்படிப்பட்ட பலவந்த ஸ்வாதீனமாம்? கண்ணனிடம் ராதைக்கு இருந்ததே, அதைப் போன்றதாம்! இப்படி எவரோ ஒரு அநாமதேயக்காரரிடம் அவதார புருஷருக்கு உண்டாகும் ஸ்வாதீன விசேஷத்தை ஸர்வ ஸாமானியமான வசன நடையில் போட்டு உடைக்க முடியுமா? அதனுல் ராதை—கண்ணன் பாட்டு ஒன்றை டாகுர் பாட்டாகப் பாடி விஷயத்தை நயமாக வெளியிட்டார். ஆய்மகள் ஒருத்தி போல உடலை நெளித்து, குரலை வளைத்துப் பாடினுர்.

"கடிந்து கூறவும் ராதைக்கே
கண்டிப் பாய்உரி மைஉண்டே!
காலகாலமாய் கண்ணனுக் கேயவள்
காத்திருந் தவள் அலவோ?

Koviloor Digital Library

எத்தனை இரவு ஏந்திழை யாளவள்
நித்திரை நீத்தனளே!
எனவே அவனை எதுவும் சொல்லிச்
சினமே கொளவும் உரிமையளாம்!''

அன்புரிமையில் சிருங்கார உறவாகச் சிரித்துப் பாடிய ஸ்ரீராமகிருஷ்ணர் சோதர உறவோடு பாடகரிடம் கூறினார்: ''அப்பா குழந்தே! அதெப்படி உரிமை உண்டு என்றால் அந்த ஒரே பிரம்ம மயீதானே எனக்கும் அம்மா, உனக்கும் அம்மா?''

ஸோதர உறவுக்கு மேலேயும் போனார். ''அவள் எல்லாருக்கும் அம்மா மட்டுமில்லை. அவள்தானே ஒவ்வொருத்தருக்கு உள்ளேயும் இருக்கிறவள்?''

இப்படி ஒரே மூலப் பொருளால் ஆன வஸ்துக்களில் ஒன்றுக்கு மற்றதிடம் ஸகல உரிமையும் உண்டுதானே?

கொன்னகர் பாடகரிடம் பொன்னகையோடு பேசிக் கொண்டு போனார் டாகுர். ''கதை தெரியுமா தம்பி? சாதாப் பேர்வழியாக ஒரு குடியானவன் இருந்தானும். அவனுக்கு தீக்ஷை வாங்கிக் கொள்ளணும் என்று ஆசை வந்து ஒரு ஆசாரியரிடம் போனானும். இந்த ஆசாமிக்கா தீக்ஷை கொடுப்பது என்று அவர் மறுத்துவிட்டாராம். அப்போ அவனுக்கு ஸ்வாதீனத்திலே கனகோபம் வந்துடுத்தாம். 'ஏ சாமி! உம்மைக் கட்டிவெச்சு உதைச்சாவது மந்திரம் வாங்கிட்டுச் சிஷ்யனா ஆறேனா இல்லையா பாரும்' என்றானும்!

இந்த அன்பு நெருக்கத்தில் பாடகரால் இளகாமலிருக்க முடியுமா? 'குருமஹராஜ்' எனப்பட்டவர் உதைக்கும் உரிமைக்கார சிஷ்யனாகி நகைச்சுவை ததும்பப் பேச, பாடகரும் சிரித்துவிட்டார். பதிலுக்கு அதே உரிமையின் ஹாஸ்யத்தோடு, ''அது சரி, வெறுங்காலால் உதை கிடைக்குமா? செருப்புக் காலால் கிடைக்குமா?'' என்றார்.

மோஹன முறுவல் நீங்காத டாகுர், ''அவ்வளவுக்குப் போக மாட்டேனப்பா!'' என்றார்.

Koviloor Digital Library

இப்படிச் சிரித்தும் பேசியவர், பக்ஷி பறப்பது போல, சடுதியில் பாவநிலைக்குப் பறந்தார். போன நிமிஷம் வரை விளையாட்டாகப் பேசிய அந்தக் குரலா எனுமாறு அடர்த்தி கண்ட குரலோடு, அந்தப் பாடகரிடம், "ப்ரவர்த்தகன், ஸாதகன், ஸித்தன், ஸித்தஸித்தன் என்கிற நாலு வர்க்கத்தில்* நீ எதைச் சேர்ந்தவன்?" என்றார்.

நல்லவேளை. இந்த பாவ ஸமாதியால் அவரது நட்புறவு கலையாதபடி மீண்டும் அவர் நடைமுறை உலக உணர்வுக்கு வந்தார். "அதெல்லாம் கிடக்கட்டும். நீ பாட்டை ஆரம்பி" என்றார் கொன்னகர் பாடகரிடம்.

பாடகரின் தயக்கம், பிகு ஆகியன தளர்ந்தன. தளர்ந்தனவே அன்றி முழுதும் போய்விடவில்லை. நரேந்திரரும், ராமகிருஷ்ணரும் பொருளில் ஊறிப் பாடி உணர்ச்சியைப் பெருக்கிட்ட இடத்தில் தாம் கீர்த்தனம் பாடினால் எடுபடாது என்ற எண்ணம் அவருக்குப் போகவில்லை. எனவே பாட்டாகப் பாடாமல் ராக ஆலாபனை மட்டும் செய்தார்.

"குழந்தே! இதுவும் எனக்கு ஸந்தோஷமாகவே இருக்கிறது" என்றார் பண்புமூர்த்தியான பரமஹம்ஸர்.

"இதுவும்" என்று அவர் சொன்னதே பாடகருள் தளராமலிருந்த இறுக்கப் பகுதியையும் நன்றாகத் தளர்த்தி ஓட்டிவிட்டது.

ஒரு கிருதியும் பாடினார் அவர்.

---

* இவை 'கர்த்தாபஜா' என்ற வைஷ்ணவ மரபினர் கூறும் நான்கு பிரிவுகளாகும். சாதனை மார்க்கத்தில் அப்போதுதான் பிரவேசித்தவன் 'பிரவர்த்தகன்'. அதில் போராடியபடி முன்னேறிக் கொண்டிருப்பவன் 'ஸாதகன்'. லக்ஷ்யத்தை அவ்வப்போது பிடிப்பவன் 'ஸித்தன்'. எப்போதுமே அந்த லக்ஷ்யத்தில் நிலைத்து, பிறரையும் அதில் அடைவிப்பவன் 'ஸித்த ஸித்தன்'.

Koviloor Digital Library

இறுகிய மனப்போக்குகளை இளக்குவதில் ஸித்த ஸித்தர் தான் நம் குரு மஹராஜர்.

பாட்டு முடிந்தபோது அங்கு வாதப் பிரதிவாதங்கள், அபிமான - அவமானச் செருக்குகள் எதுவும் இருந்த இடம் தெரியவில்லை. அன்பு ஒன்றுதான் இதமாக நிறைந்திருந்தது.

மாலை நெருங்கியதால் கொன்னகர் கோஷ்டியினர் புறப்பட ஆயத்தமாயினர். ஒவ்வொருவராக டாகுரை வணங்கி வெளியேறினர்.

தப்புத்தாளத் தம்பட்டம் ஒய்ந்து மென்மையான உள் ச்ருதியில் லயிப்பை அறிந்துவிட்ட "ஸாதக"ருக்கு இச் சந்நிதானத்திலிருந்து விடைகொள்ள மனம் வரவில்லை. கோஷ்டியில் கடைசி மனிதராக டாகுரிடம் வந்தார். விரைப்பும் வீருய்ப்பும் அறவே விலகியவராக எத்தனை பணிவோடு வருகிறுர்? அவர் கைமெடுத்து வணக்கம் செய்யும் பான்மையில் அவரது மன இணக்கமும் இளக்கமும் நன்கு வெளியாகின்றன. பரம பவ்வியமாக, "ஸ்வாமீ, உத்தரவு வாங்கிக் கொள்கிறேன்" என்று சொல்லி நமஸ் கரித்து விடை பெறுகிறுர்.

இவ்வற்புத மாற்றம் விளைவித்த ஸித்த ஸித்தர் பாவத் தில் தோய்ந்து பவதாரிணியிடம் பேசலானுர். அற்புதம் மட்டுமல்ல, தம்மால் ஆவதாகத் தெரியும் அனைத்துமே அவள் செயல்தான் எனக் கண்டு பேசினுர். "அம்மா! நீயா, நானு? நான் என்று ஏதாவது பண்ணுகிறேனு என்ன? இல்லவே இல்லை. நீதான்! இத்தனை நேரம் வாதங்கள் கேட்டது நீயா, நானு? நானில்லை, இல்லை, நீதான்!"

அவளேதான் அவரது ஸந்நிதி விசேஷத்தில் மாய வாதங்களைக் கிளறி வெளிப்படுத்தினுள். அப்புறம் அவரது அருளால் வாத மனப்பான்மையை வெளியேற்றினுள். வெற்றறிவின் சுமையோடு வந்தவருக்கு பாரத்தை இறக்கி

Koviloor Digital Library

விச்ராந்தி தந்தாள். ஆம், தன் அருளற்புதங்களை ஆற்றும் உத்தமமான—ஆயினும் எளிய—கருவியாகவே அவள் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் படைத்திருந்தாள்.

மன்மத் சாச்வதமாகச் சாந்தநிலை எய்ததுபோல இல்லாமல் கொன்னகர் "ஸாதகர்" அப்போதைக்கு மட்டுமே மனமாற்றம் கண்டிருப்பாரோ என்னவோ? அவரது பின்கதை நமக்குத் தெரியவில்லை. ஆயினும் தாற்காலிகமாகவே இருந்தாலும்கூட அவரது புத்திக் கொழுப்பை மசித்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் செய்த வைத்தியம் அதிசயமானதுதான். நித்திய உபாதி உள்ள ஒரு நோயாளிக்கு சாச்வத நிவாரணமாயின்றி. ஒரு நாளைக்கு மாத்திரம் உபாதை நீக்கினுல்கூட அந்தமட்டும் விசேஷந் தானே? அதிலும் உபாதையாகத் தெரியாமல் பெருமைக் குரியதாகவே ஒருவர் கருதும் மூளைச் செருக்கை அவர் க்ஷணகாலம் விடச் செய்தாலும் மிக விசேஷந்தான். வெறிப் பசி பிடித்து எந்த விஷயத்தையும் விழுந்து பிடுங்கும் வேட்டை நாயாக வந்த "ஸாதக"ரின் புத்தியை அன்று —அன்று ஒரு நாளுக்கு மட்டுமேயானுலும்கூட—ஸ்ரீ ராம கிருஷ்ணர் நிறைந்த வயிற்றுடன் நித்திரை செய்யும் மான்பேடாக நிம்மதியுற மாற்றியது அருட்சக்தியின் அரிய விசேஷந்தான். இதிலே மேலும் பெரிய விசேஷம், அந்த அருளானது தன்னை சக்தி வாய்ந்த ஒன்ருகவோ, விசேஷத்தன்மை படைத்த ஒன்ருகவோ காட்டிக்கொள்ளா மல் மறைமுகமாகவே இந்த மனமாற்ற அற்புதத்தைச் செய்து விட்டதுதான்!

"Gospel" புத்தகத்திலுள்ள நூற்றுக்கணக்கான அன்ருட நடப்புக்களில் ஒன்றுதான் இது. இது விசேஷமாகப் பலரது கவனத்தைக் கவர்ந்திருக்காது. அத்தனை எளியதாய் மாபெரும் அருட்சக்தியும் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் மாற்றம் கண்டிருக்கிறது! ஆம், அகிலாண்டங்களை ஆண்டு நிர்வஹிக் கும் ஆதி பராசக்தி யாரோ ஒரு ஜீவன் மனமாற்றம் பெறுவ

Koviloor Digital Library

தற்கு மட்டுமின்றி, வலிதினும் வலிதான தனது அருள் வலியையுமே பார்வைக்குத் தெரியாமல் அத்தனை எளிதாக மாற்றுவதற்கும் தன்னுடைய இந்தக் குழந்தையைத்தான் கருவியாகக் கொண்டாள்!

★

அம்பாளின் அருமந்தக் குமாரரான ஸ்ரீ ராமக்ருஷ்ணரின் மற்றோர் அருங்குணம் கொன்னகர் கோஷ்டியினர் சென்ற பின் வெளியாயிற்று. ஏற்புத்திறன் என்பதுதான் அது. அதாவது ஸ்வய விருப்பு வெறுப்புக்களின் மீது ஒன்றைக் கொள்ளுவது அல்லது தள்ளுவது என்றில்லாமல், ஏற்று அங்கீகரிக்கும் தன்மை. இதில் இரு நிலைகள். பக்தியில் விளையும் அத்வைதமாக, எல்லாவற்றையும் அம்பிகையின் லீலை எனக் காண்கையில் எதையும் தள்ளாது ஏற்பது ஒரு நிலை. நல்லது, பொல்லாதது என்று பிரித்தறிய வேண்டிய வியவகார உலகினருக்காக அவர்களது ஆன்ம வளர்ச்சிக்கு எதெல்லாம் நல்லதோ அவற்றை மட்டும் ஏற்று, அதற்குக் குந்தகமானவற்றை ஒதுக்குவது இன்னொரு நிலை. இப்படி உலகினருக்கு எது நல்லதோ அது ஒரு மஹானைப் பொறுத்த வரையில் அவருக்கு ஏற்காததாக இருக்கவும் இடம் உண்டு. அப்படியிருப்பினும் தமது விருப்பையும் வெறுப்பையும் கவனியாது அவர் உலகின் கண்ணோட்டத்தில் விஷயங்களை ஏற்பதும் ஒதுக்குவதுந்தான் அவரை உண்மை மஹானாக ஆக்குவது. துறப்பதுதான் தியாகம் என்றில்லை. ஏற்பது அதனினும் பெரிய தியாகமாகின்ற ஸந்தர்ப்பங்களும் உண்டு.

கொன்னகர் கோஷ்டியினர் சென்றபின் டாகுர் தம்முடைய அன்புப் பாரிஷதர்களான நரேன், பவநாத், "ம" முதலியோருடன் பேசுகையில் இந்த அற்புதமான ஏற்புத் திறனின் இரு நிலைகளும் வெளியாயின. அவையும் பார்வைக்குப் பளிச்செனப் படாமலே இலையிடை மலர்களாக மறைந்து எளிமையாகத்தான் வெளியாயின!

Koviloor Digital Library

கொன்னகர் பாடகருக்கும் நரேனுக்கும் தர்க்கம் நடந்தபோது டாகுர் எப்படி அந்த வாதத்தில் பட்டுக் கொள்ளாமல் வேடிக்கை பார்த்தாரென்றும், பிறகு இம் மாதிரி வாதத்தில் வேடிக்கையான ஸம்பந்தம் வைத்துக் கொண்டதற்கும்கூட வருந்தி அன்னையிடம் முறையிட்டா ரென்றும், நரேனுல் மனச் சுணக்கம் கொண்ட கொன்னகர் பாடகரை எப்படி அன்புக்கிட்டு ஊக்கி உத்ஸாஹப்படுத்தி உரிமையோடு பாடவைத்தாரென்றும் கண்டோம். ஆனுல் இப்போது அவரே, நரேன் விட்டுக் கொடுக்காமல் வாதித் ததுதான் ஸரி என்ருர்! நல்லதான ஒன்றை நிலைநாட்டுவதற் காகக் கடுமையாக நடக்கவேண்டியதும் உலகினருக்கான நீதி என்ற முறையில் இப்படி ஆமோதித்துச் சொன்னுர். நல்லதை நாட்டும் நோக்கம்தான் ஸத்வம். அந்த ஸத்வத் திலேயே, ஸத்வத்துக்காகவே விடாப்பிடி வாதம் போன்ற தமஸையும் கைக்கொள்ளலாம் என்று அங்கீகரித்துப் பேசி னுர். "ஸாத்விகமாக நடக்கவேண்டுமென்பதற்காக யார் எது சொன்னுலும் தலையாட்டி விடுவதா?" என்று கூறி நரேனை சிலாகித்தார்.

தம்மளவில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றை, நரேனும் அந்தக் கொன்னகர் பாடகரும் இருந்த நிலைகளை யொட்டி ஏற்றுக் கொள்ளும் டாகுரின் அநுதாப அநுசரிப்புக் களை என்ன சொல்வது?

இது உலகினர் பார்வையில் ஸத்வத்தின் பொருட்டு தமஸையும் ஏற்று அங்கீகரித்த பெருமையாகும்.

உலகமெல்லாம் லீலை என்ற அத்வைத பக்திப் பார்வை யில் தமஸையும் அதன்பொருட்டே ஏற்று அங்கிகரித்தும் பேசினுர். "கொன்னகர் ஸாதகர் எப்படிப்பட்டவர்?" என்று பவநாத் கேட்டார். "அவன் தமோகுண பக்தன்" என்று பதில் சொன்ன பரமஹம்ஸர் தொடர்ந்து பேசும் போது சொல்வார்: "நான் எல்லா குண பக்தர்களையும் மதிப்பவன். ஒரே பரமாத்மாதான் உலகிலே வித்யை,

Koviloor Digital Library

அவித்யை இரண்டாகவும் விளையாடல் புரிவது. அதனல் இரு தன்மைக்காரர்களையும் நான் நமஸ்காரம் செய்கிறேன்."

இந்த நமஸ்காரந்தான் அருளாசியாகி, விரைப்புடன் வந்த தமோகுண "ஸாதக"ரை விடை கொள்ளும்போது ஸத்வமாகத் துவண்டு நமஸ்கரிக்க வைத்தது.

மன்மத், கொன்னகர் 'ஸாதகர்' போன்ற கரடுமுரடு களிடமே கனிவு பிறப்பித்த டாகுரின் அருளானது குழந்தைக் குணமுள்ள ஓர் எளியாளை எப்படிக் குழைவிக்கும்? அடுத்து அப்படியொன்று பார்ப்போம்,

Koviloor Digital Library

ராமகிருஷ்ணரின் மேரி

குழந்தைக் குணம் படைத்த அந்த எளியாள் யார்?

மன்மத் பற்றிய கட்டுரையில் அம்மா சாரதை தன்னுடைய ஜ்யை - விஜயைகளாக யோகின் - மாவையும் கோலாப் - மாவையும் சொல்லிக் கொண்டாளென்று பார்த்தோம். இவ்விருவரில் ஜயையான யோகின் மா பற்றியும் சிறிது பார்த்தோம். மற்றவளான விஜயைதான், அதாவது கோலாப் மாதான் இங்கே நாம் பார்க்கப் போகும் குழந்தைக் குண எளியாள்.

இவளுக்கும் யோகினம்மைக்கும் இடையே அனேக ஒற்றுமைகளும் உண்டு, வேற்றுமைகளும் உண்டு. யோகினம்மை போல கோலாபம்மை கல்வி - செல்வச் சிறப்புமிக்க குடியில் பிறந்தவளல்ல. இவள் எளிய அந்தணக் குடும்பம் ஒன்றில் பிறந்தவள். அதனால் இவளைப் பெயர் குறிப்பிடாமல் ப்ராம்மணி என்று மட்டுமே "ம" தமது மஹா கிரந்தத்தில் குறிப்பிடுவார். மன்மத் வாழ்ந்த பாக்பாஜாரில் தான் இவளும் வசித்ததால் 'பாக்பாஜார் ப்ராம்மணி' என்பார். அதாவது அநாமதேயையாகக் குறிப்பிடப்படுமளவுக்கு அத்தனை சாமானியமானவள் கோலாப் ஸுந்தரி தேவி என்ற இவள். பிற்காலத்தில் ஜப அநுஷ்டானம் நிறையச் செய்வதிலும் சாரதையின் அன்பு மாளிகையான இல்லத்தின் பெரும் பொறுப்புக்களை வகிப்பதிலும் யோகின், கோலாப் இருவரும் ஸம ஸ்தானம் பெற்றிருந்தார்களெளினும், அப்போதுங்கூட யோகினிடம் பெருமை சற்று தூக்கலாகவும், கோலாப்பிடம் எளிமை சற்றே எடுப்பாகவும் விளங்கின. யோகினம்மையின் அளவுக்கு இவள் மதநூல்களில் புகமாட்டாள். தத்வங்களில் பிரவேசிக்க மாட்டாள். யோகினைப் போல இவள் துறவறம் பூணவில்லை. "நாம

Koviloor Digital Library

ஜபத்தால் ஒளி கண்டவள் கோலாப்'', ''பொம்மனுட்டிகளிலே யோகின் ஒரு ஞானி'' என்று அம்மா சாரதை நயம்பட எடைபோட்டுச் சொன்னதிலிருந்து இவர்களது எளிமை—பெருமை வித்தியாஸங்களை உணரலாம். யோகினிடம் அம்மா தன்னுடைய இதயத்தையே திறந்து கொட்டுவாளாயினும், வெளியே எங்காகிலும் நடந்து போகும் போது கோலாப்பின் முந்தானையைப் பிடித்துக்கொண்டே போவாள் என்பது அவள் வார்த்தையில் எடைபோட்டதை வாழ்க்கையில் நடத்திக் காட்டியதே எனலாம். இனம் இனத்தோடு! எளிய குழந்தையான டாகுருக்கு ஏற்ற பத்தினி எளிய குழந்தைபோல ஒருத்தியின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு போக வேண்டுமென்றால் அந்த ஒருத்தியும் குழந்தையின் எளிமையோடுதானே இருந்திருக்க வேண்டும்? பிற்காலத்தில் இவளுடைய முந்தானையை அம்மா பிடித்துக்கொண்டு பின் தொடர்ந்தாலும் இவளைப் பற்றித்தான் பரமஹம்ஸ ராமகிருஷ்ணர் ஆரம்பக்காலத்தில் அந்த அம்மாவிடமே, ''அந்த விதவைப் பிராம்மணியை நீ குறிப்பாகப் பார்த்துக்கோ! பிற்பாடு அவ உன் வாழ்நாள் முழுதும் உன்னை நிழல் மாதிரி அநுசரிச்சு வருவா!'' என்று சொல்லியிருக்கிறார்.

குழந்தைக் குணத்தின் ஓர் இயல்பாக கோலாப்ஸுந்தரி எதையும் மனத்தில் ஒளிக்கத் தெரியாமல் பட்டென்று சொல்லிவிடுவாள். அம்மாவிடமேகூட கருத்து வேற்றுமை தோன்றும்போது, தூக்கிவாரிப் போடுகிற போலச் சொல்லி விடுவாள். இம்மாதிரி விஷயங்களில் யோகின் நாகரிக நகாசு அறிந்தவள்.

துன்மார்க்கக் கணவனால் யோகினம்மையின் இல்வாழ்க்கை நாசமாயிற்றென்றால்* கோலாபம்மையின் கணவனே இளமையிலேயே கண்மூடிப் போய்விட,

---

* யோகினம்மையின் கணவன் அந்திமத்தில் அவதியுற்ற போது ஸ்ரீராமகிருஷ்ணர் அவளுக்கு பதிவிரதா தர்மத்தை அழுத்தமாக போதித்து அவனை அவள் பேணிப் பராமரிக்கச் செய்தார்.

Koviloor Digital Library

அவளுடைய இல்வாழ்க்கை நாசமாயிற்று. யோகினைப் போலவே கோலாப்பும் பிள்ளைக் குழந்தையைப் பறிகொடுத்தவள். யோகினின் மகள் வாழாவெட்டியாகி அவளிடம் திரும்பினுள். கோலாப்பின் மகளோ பேரதிருஷ்டவசமாக அவர்களது அந்தஸ்துக்கு எட்டாத மிகப் பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டு, பிறகு பரம துரதிருஷ்டமாகச் சிறுவயதிலேயே மாண்டுபோனுள்.

சண்டி என்ற அந்தப் பெண் "ராஜா"ப் பட்டம் பெற்ற கணவனுடைய வீட்டிலிருந்து ஏழைத் தாயின் எளிய வீட்டுக்கு வந்த சமயங்களில் ஜமீன் சிப்பாய்கள் முன்னும் பின்னும் காவல் வருவார்கள். அதில் பூரித்த தாய் குழந்தை மனம் கொண்டவளாயிருந்ததால் தன்னுடைய பூரிப்பை அக்கம்பக்கத்தாருக்கெல்லாம் வெளியிடுவாள். 'ஐயே! என்ன பெருமை அடித்துக் கொள்கிருள்!' என்று அவர்கள் உள்ளூரக் கடுத்துக் கொள்வதையும் அறியாத குழந்தை மனத்தினள்!

அந்தப் பூரிப்பைச் சப்பென்று அடக்கி அடித்துப் போட்டுவிட்டது இடியாக வந்த சண்டியின் மரணம். பேதைத் தாய் புத்தி பேதலித்த பைத்தியம் போலானுள்.

வாழாவெட்டி மகள் கனு தன்னிடம் வந்த பின்னர் யோகினம்மை பெருவாழ்வுக்கு வழி திறந்துவிட்ட குருபாதம் சேர்ந்தது நினைவிருக்கிறதல்லவா? அவள் வீட்டுக்கு அருகிலேதான் கோலாப் வசித்தாள். மகள் சண்டியின் மரணத்தினுல் பித்துப் போலான கோலாப்புக்கும் பித்தம் தெளிவிக்கும் மருந்தாக அந்த குருவையே காட்டினுள் யோகின். அதாவது அம்மாவின் பிற்கால ஜயைதான் அவளுடைய பிற்கால விஜயையை ஐயாவிடம் கொண்டு சேர்த்தாள்—அதன்மூலமே அம்மாவிடமும் கொண்டு சேர்த்து விஜயையாக்கினுள்.

ஜய, விஜய என்ற பெயர்கள் வெற்றியைக் குறிப்பவை' மகத்தான துயரத்தை யோகினும் கோலாப்பும் வென்று

Koviloor Digital Library

நிஜமாகவே ஜயை விஜயைகளாவதற்கு ஐயாவின் அருளும் அம்மாவின் அநுக்கிரஹமும் வழிகோலின.

பித்தம் தெளிவிக்கும் ஆன்ம வைத்தியரான டாகுர் ஒருவருக்கே அவர் யார் யாருக்கு என்ன என்ன சிகித்ஸை முறைகளைக் கையாண்டார் என்ற "மெடிகல் ஸீக்ரட்" தெரியும். அல்லது அவருக்குமேகூட தெரியாத "ஸீக்ரட்" டாக அதை மஹா காளியம்மா வைத்திருந்து அவரைத் தன் கருவி மாத்திரமாகக் கொண்டாளோ, என்னவோ? எப்படி யானுலும் இது ஜடக் கருவியாயில்லாமல் உயிர்ச்செழிப்பு ஓடும் சைதன்யக் கருவியாயிருந்தது! தேர்ந்த ஸைகியாட் ரிஸ்டுக்கும் தெரியாத மன நுட்பமறிந்து செய்யப்பட்ட இந்த வைத்தியத்தின் முறை நமக்குப் புரியாது. அத்தனை மனங்களையும் ஆக்கியுள்ள மாமனத்தில் ஒன்றி ஒவ்வொரு மனத்துக்கும் அவர் செய்த மருத்துவம் நமக்குச் சில சமயங் களில் ஒவ்வாததாகத் தோன்றினுலும் கடைசியில் அதுதான் அந்த 'நோயாளி'க்குக் குணமளித்தது.

இப்படித்தான் குழந்தையைப் பறிகொடுத்து வந்திருந்த அந்தக் குழந்தைக் குணமுள்ள எளிய தாயிடம், ஒருங்கே குழந்தையாயும் தாயாயும் இருந்த ஸ்ரீ ராமக்ருஷ்ணர் குழந்தையாகவோ தாயாகவோ குழையாமல், நாம் சற்றும் எதிர்பாராதபடி வரட்சி குருமார்களின் ரீதியில் தத்வோப தேசம் செய்தார். ஆம், பெண்ணை இழந்து புத்தி பேதலித் தாற்போல் வந்த பேதை கோலாப்பிடம் டாகுர் அநுதாப அன்பைப் பெருமழையாகப் பொழிந்துவிடவில்லை. ஏன், சிறு தூறலாகக்கூட விசிறியதாக அதிகம் காட்டிக்கொள்ள வில்லை. புத்ர சோகத்தில் அவள் பைத்தியமாயிருக்க, அவரோ புத்ர பாசமே பைத்தியக்காரத்தனம்தான் என்கிற ரீதியிலேயே வரட்சியாகத் தத்துவம் பேசுவார்.

"புருஷன் போனுன், பிள்ளை போச்சு, ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு-ன்னு மீந்த பொண்ணும் இப்ப போயிட்டாளா? நீ ரொம்ப ரொம்ப அதிருஷ்டக்காரி! நிஜத்திலே ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுக சாச்வதமா

Koviloor Digital Library

யிருக்கிறது பகவான் ஒத்தன்தான். அந்த ஒத்தன் கிட்டேயே மனசு குவியாம சிதறப் பண்ணறது பதி புத்ராதி பாசங்களும், அவாளுக்காகப் பண்ண வேண்டிய கடமைகளுந்தான். அத்ருஷ்டவசமா உனக்கு இப்ப அந்தக் கடமை முழுக்க எடுபட்டுப் போயிடுத்து. பாசம் காட்டி உன்னை இழுக்கிற தற்கு பந்து என்ற பந்தம் எதுவும் இல்லாம ஆச்சு. நிச்சிந்தையா, ஒருமுகப்பட்டு, சாச்வத உறவான ஆண்டவன் கிட்டே கவனத்தைத் திருப்பவே இது பெரிய வாய்ப்புன்னு புரிஞ்சுக்கோ'' என்பார்.

பேராச்சரியமாக, அவர் குழைந்து பேசாவிட்டாலும் அந்த எளியாளின் உள்மன மட்டத்தில் எங்கோயிருந்த தத்வ - ஞான - வைராக்யங்களை இந்தப் பேச்சே தொட்டது. அதே போதில் அவளை அவரிடம் எளிய அன்பிலும் குழைத்தது!

டாகுரது அந்த வரட்சியினுள்ளிருந்தே அவள் தன் இதயக் குருத்துக்குள் அன்பு மழை பொழிவதாகக் கண்டாள். தூறல் அல்ல! அன்பின் கன மழையே! சிறிது சிறிதாக அது அவள் மனத்தில் கனன்று எரிந்த சோகாக்னி நோயை அணைத்து வந்தது. வெளி வரட்சித் தத்வம், உட்கருணையாக அவளை அணைத்துப் பிடித்து ஆற்றி, அவர்பால் அன்பில் மேன்மேலும் ஆற்றுப்படுத்தியது.

உதாரணமாக ஒரு நாள் பாருங்கள்.

பிற்பகல் வேளை. அறையினுள் ஸ்ரீ ராமக்ருஷ்ணர் ஆண் அடியார்களுடன் உரையாடிக் கொண்டிருக்கிறார். பக்தி, தத்வம், உலகியல் எல்லாம் ஆனந்தமாக, ஹாஸ்யமாக, ஆழமாகவும் அலசப்படுகிறது. அந்த உரையாடல் முறையில் அடியார்களுடன் அவர் கொண்டிருந்த அந்தரங்க நெருக்கம் தெரிகிறது.

அந்த அறையின் வடவண்டை வாசற்கதவின் பக்கத்தில் நம் கோலாப் அம்மை நெடுநேரமாக நின்று கொண்டிருக்கிறாள். ஏனோ அவளை மட்டும் அந்த அந்தரங்க நெருக்கம்

Koviloor Digital Library

தொட்டதாகத் தெரியவில்லை. அதாவது நமக்குத் தெரிய வில்லை. அவளுக்கு அது தெரிந்தேயிருக்க வேண்டும். இல்லாவிடில் அத்தனை நேரம் அங்கு அயர்வின்றி நின்றிருப் பாளா? அது மட்டுமில்லை. அவளது அறிவைப் பைத்திய மாக, பேயாகப் பிடித்து அயர்ச்சி கொள்ள வைக்கும் புத்ர சோகமும் இப்போது அவளைத் தொடாமல், அவரது உரையாடலைக் கேட்டபடி இருக்கிறாள்.

பிள்ளை - பெண்ணிடம் பாசம் என்பது அடிமுட்டாள் தனம் என்பது போலத் தூக்கி எறிந்தே பேசுகிறார் குரு மஹராஜ்.

அவருக்குப் பதினறு, பதினேழு வயதிருக்கையில் அவரது பிறந்த ஊரான காமார்புகுரில் ஸதாகாலமும் ராம் மல்லிக் என்ற நண்பனுடனேயே இணைபிரியாமல் இருந்து வந்தாராம். அவர்களில் மட்டும் ஒருத்தர் பெண்ணயிருந் தால் அவர்கள் சதிபதிகளாகியிருப்பார்கள் என்று ஊரே வேடிக்கை பேசியதாம். இன்றைக்கு அவனையே தவறிப் போய் தீண்டிவிட்டால்கூட அவரால் தாங்க முடியவில்லை யாம்.

இப்படி அவர் ராம் மல்லிக்கிடம் அத்தியந்த பாசத்தை அறுத்து அருவருப்பே கொண்டதற்குக் காரணம் ராமின் புத்ர பாசம்தானும்!

ராமுக்குப் புத்திர பாக்கியம் (அல்லது அபாக்கியம்) வாய்க்கவில்லை. சும்மா இருக்கப்படாதோ? தன் உடன் பிறந்தானின் மகனை தத்து எடுத்துக் கொண்டார். அந்த மகன் அப்புறம் மாண்டு போனுன். ராமின் மனைவிக்கு அந்தப் பிள்ளை மீது உயிராம். பிள்ளை போனதும் சோகத்தில் முழுகினுள். அவள் அப்படியிருப்பது பைத்தியக்காரத்தனம்; வேண்டுமானுல் அவள் காசியாத்திரை செய்து துக்கத்தை மறக்கலாம் என்று ராம் அவளுக்குப் புத்தி சொன்னுராம். ஆனுல் இதையெல்லாம் அவர் ராமகிருஷ்ணரிடம் சொல்லும்போதோ தாமே பெருமூச்சு விடுவதும், கண்ணீர் சிந்துவதுமாக இருந்தாராம்.

Koviloor Digital Library

இந்தக் கதையெல்லாம் மனக்கசிவு இல்லாமலே (அல்லது இருப்பதாகக் காட்டாமலே) இன்று சொன்ன ராமக்ருஷ்ணர், "இவன் ஸம்ஸாரத்தைப் பைத்தியம் என்கிறுன். ஆனுல் இவனே பிள்ளை போய்விட்ட துக்கத்திலே அப்படியே கரைஞ்சு கிடக்கிறுன். ஆளு உள்ளுக்குள்ளே ஸமாசாரமே இல்லாதவன்னு தெரிஞ்சுண்டேன். அப்புறம் அவன் ஸ்பரிசமே எனக்குத் தாங்கலே" என்று முடித்தார்.

இந்த அநுதாபமின்மை போதாதென்று நேரே கோலாப்பைப் பார்த்து, "இங்கே ஒருத்தன் ஒரு நாள் வந்திருந்தான். கொஞ்சம் நாழிக்கு அப்புறம் அவனுலே பொருந்தியிருக்க முடியலே. 'என் அருமைப் பிள்ளையோட பால் வடியும் முகம் நினைவு வந்துடுத்து'ன்னு சொல்லிண்டு எழுந்திருந்தான். எனக்குக் கட்டுக்கடங்காம கோபம் வந்துடுத்து. 'டேய், முட்டாள்! போ வெளியிலே! பகவானுடைய பூர்ண சந்திர முகத்தைவிட உன் பிள்ளை மூஞ்சி அவ்வளவு பெரிசா?'ன்னு திட்டினேன் என்ருர்.

அதாவது, 'அந்தத் திட்டு உனக்கும்தான்' என்று அவளிடம் சொல்லாமல் சொல்கிருர்.

ஆச்சர்யம் என்னவென்ருல் திட்டுப் பெற்றவளுக்கு அது அன்பாசியாகத் தெரிகிறது.

ஆச்சர்யம் என்ன? இருட்டின் குளுமையில் ஒரு தொட்டிச் செடி இருக்கிறது. செடி வளர்ப்பவர் ஜன்னலைத் திறந்துவிடுகிருர். பளீர் என்று செடியின் மேல் வெயில் பாய்கிறது. "ஐயோ, இளஞ்செடியை வதக்குகிருரே!" என்று நமக்குத் தோன்றுகிறது. ஆனுல் செடியோ அந்த வெயிலை ஆஹா என வரவேற்கிறது. அந்த வெயிலினுலேயே வளமும் வளர்ச்சியும் காண்கிறது.

அதற்காக பொசுக்கும் அளவுக்கு வெயில் போய்விடக் கூடாதே! வெயிலைத் தடுக்கும் ஹித முகிலாகப் பரமஹம்ஸர் தொடர்ந்தார்: "பகவான் மஹா ஸமுத்திரம் போல. அத்தனை ஜீவர்களும் அதில் குமிழிகள்தான் அம்மா! குமிழி

Koviloor Digital Library

ஸமுத்திரத்தில் தோன்றி அதிலேயே மறையவேண்டியது தான். இதில் அம்மா—அப்பா பெரிய குமிழிகள், அதுகளைச் சுற்றி எழும்புகிற சின்ன குமிழிதான் பிள்ளையும் குட்டியும். அவன் ஒருத்தன்தான் உண்மை. அதனுலே உன் எண்ணமெல்லாம் அவன் கிட்டே எப்படிப் பிரியம் வைக்கிறது, எப்படி பக்தி பண்ணறது - ன்னே ஆக்கிக்கோ. வேறே விசாரப்பட்டு என்ன பிரயோஜனம்?''

அவர் இப்படிப் பேசிக்கொண்டு போக அனைவரையும் ஒரு சாந்தம் கவ்வியது.

கோலாப் சுந்தரியின் சோகப் புயல், வாஞ்சைச் சூறுவளி, அதுவும் அடங்கியது. 'வந்த காரியம் ஆச்சு' என்ற நிறைவு பெற்ருள். "நான் போய் வருகிறேன், ஸ்வாமி" என்றுவிடை கேட்டாள்.

எல்லோருக்கும் தெரியும் அமுதத் தூறலாக ராமகிருஷ்ணர் அவளிடம், "ஏன் இப்பவே போகணும்? வெயில் ஜாஸ்தியா இருக்கே! வெயில் சாய்ஞ்ச அப்புறம் இவாள்ளாம் வண்டியிலே போவா. அவாளோடு போம்மா" என்ருர்.

எப்போது வெயில் வேண்டும்,எப்போது மழை வேண்டும் என்று பார்த்துப் பார்த்து ஆறுதல் வைத்யம் செய்த டாகுரைத் தன் இல்லத்துக்கு வருமாறு கோலாபம்மை வேண்டினுள்.

"வருகிறேன்" என்று வாக்களித்தார் வரதர்.

★

ஒன்றரை மாதங்களுக்குப் பிறகு கல்கத்தாவுக்கு விஜயம் செய்த ஸ்ரீராமகிருஷ்ணர் "பாக்பாஜார் பிராம்மணி"க்குக் கொடுத்த வாக்கை மறக்கவில்லை. அந்த பாக்பாஜார் பகுதியிலேயே இருந்த நந்தபோஸ் வீட்டுக்கு அன்று பிற்பகல் செல்வதாகவும், அதன்பின் முன்மாலையில் ப்ராம்மணியின் இல்லத்துக்குப் போவதாகவும் தீர்மானித்தார்.

Koviloor Digital Library

சேதி கேட்ட கோலாப்புக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. பெண்ணின் சாவில் சாம்பலான அவளா இப்படித் துளிர்த் திருக்கிறாள் என்று வியக்கும்படியானதொரு மாற்றத்தை அவள் பெற்றுவிட்டாள்! அன்று காலையிலிருந்தே வீட்டை மெழுகுவதும், கோலம் போடுவதும், தனது பகவானுக்கும் அவரது அடியார்களுக்கும் உண்டிகள் தயாரிப்பதுமாகச் சிட்டெனப் பறந்தாள். இத்தனையிலும் உள்மனமோ பறப்புக்களைவிட்டு அந்த பகவானின் பாதக் கூண்டிலேயே ஒன்றிக்கிடந்தது.

மூன்றரை மணியளவில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் நந்த போஸின் வீட்டுக்கு வந்ததாக அவளுக்குத் தெரிந்தது. அதிலிருந்து, ஒரே பரபரப்பும் படபடப்புமாக மனப் பக்ஷி பறக்க ஆரம்பித்துவிட்டது. இதுதான் ஸ்தூல தர்சனத்தின் மோஹன சக்தி! 'பன்னக சயனனின் சொகஸை எத்தனை தான் மானஸிகமாக அநுபவித்தாலும் முழுதும் வராதே! முழுக்க (ஸ்தூலமாகக்) காணாத கண்ணும் கண்ணா?' என்று தியாகையர் பாடிய ஸமாசாரம்தான்!

நாலு, நாலரை என்று மணி ஓடியும் ராமகிருஷ்ணரானல் நந்தபோஸின் வீட்டிலேயே காலம் கடத்திக் கொண்டிருந் தார். அன்றைக்கே அவர் யோகின்மாவின் வீட்டுக்கு வேறு வருவதாக வாக்களித்திருந்தார். நடுவாந்தரத்தில் கோலாப் பின் வீட்டை விட்டுவிடுவாரோ?

நிழலருமை தெரிவதற்காகவே வெயிலை விஸ்தரிப்பது போலத்தான் அவர் நந்தபோஸின் வீட்டில் அதிகம் தங்கினார் போலும்! செல்வச் செழிப்பு மிக்க நந்தபோஸ் தமது மாளிகையில் பெரிய பெரிய தெய்வத் திருப்படங்கள் நிறைய வைத்திருந்தாரென்பதற்காகவே ராமகிருஷ்ணர் அங்கு சென்றார். படங்கள் பரமாத்புதமாகத்தான் இருந் தன. ஆனால் போஸ்தான் அரைவேக்காட்டு மனிதராக இருந்தார். ஆராத் துயரில் வந்த கோலாப்புக்கு ஆறுதலாய் அநுதாபம் காட்டாத பரமஹம்ஸர் இந்த அரைவேக்காட்டு நபரை அநுசரித்தாற்போலவே பேசினார். அவர் தெய்வ

Koviloor Digital Library

நம்பிக்கையில் குறைந்தவராகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட போதிலும் இவராஞல், "நீதான் உண்மையான ஹிந்து" என்று அவருக்குச் சான்றிதழ் தந்தார். துர்க்கந்த ஆட்டு உரத்தைப் போட்டு ரோஜாவைப் பூத்துக் குலுங்க வைக்கிறேம்; நறுமண வாஸனைப் பொடி போட்டு பாச்சையை, கரப்பானை விரட்டுகிறேம். இப்படித்தான் ராமகிருஷ்ணர் செய்தாரா?

குருதேவருக்கு என்று குழந்தை "ப்ராம்மணி" அங்கே வித வித நிவேதனங்கள் தயாரித்து வைத்துக் கொண்டு காத்திருக்கிறுள். தெரு வாசலுக்கு ஓடி வந்து நந்தபோஸ் மாளிகையிலிருந்து அவர் புறப்பட்டு விட்டாரா என்று பார்த்தபடி இருக்கிறுள். இங்கோ தனிகர் அந்த அதிதி ச்ரேஷ்டருக்கு ஏதும் விருந்துபசாரம் செய்யவேண்டும் என்ற எண்ணமே இல்லாமல், பக்தி ஹீனராக அவருக்குப் பதில்கள் சொல்லி வருகிறுர். அத்தனை தெய்வப் படங்கள் வைத்திருந்தும் தெய்வ சக்தி, தெய்வமாக் கருணை ஆகிய வற்றைப் பற்றிக் குதர்க்கமாகப் பேசி வருகிறுர்.

ராமகிருஷ்ணர் அவரிடம் வெள்ளையாகப் பேசுகிறுர். அவரது வீடு வந்துள்ள தம்மை அவர் உண்பிக்காமலிருக்கக் கூடாது என்றே வெளிப்படக் கூறுகிறுர். அப்போதுதான் அந்தப் 'புண்ய புருஷர்' ஏதோ இனிப்புத் தருவித்து ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு அளித்தார். அதில் சிறிதை ராமக்ருஷ்ணரும் உண்கிறுர்—மெய்யாலுமே அந்த மனிதருக் குப் புண்ய பாங்கில் அக்கவுன்ட் ஆரம்பித்து வைப்பதற்குப் போலும்!

அவருக்காகத் தவித்துத் துடிக்கும் பக்தையைக் காக்க வைத்து, தவிக்காத துடிக்காத செல்வச் சீமான் வீட்டில் நெடுநேரம் செலவிட்ட விசித்ர குருநாதர் முடிவாக மாலை மயங்குகையில் புறப்பட்டார். அப்போது ஒரு டன் எடை யுள்ள ஒரு புகழ்மாலையை நந்த போஸுக்குச் சூட்டிஞர். "யாரிடம் என்ன சிறப்பு காணப்பட்டாலும் அது பகவத்

Koviloor Digital Library

விபூதியே என்று கீதையில் இருக்கிறது. உன்னிடம் அது இருக்கிறதப்பா!''

ரோஜா ஒரு டன்னுனல் என்ன? பாச்சையை மேலும் வேகப்படுத்தித்தான் விரட்டும்!

ஒருவழியாக பக்தியற்ற செல்வந்தரின் வீட்டிலிருந்து பக்திச் செல்வத்தைக் குறைவறப்பெற்ற ஸாமானியப் பெண் மணியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அது மாட மாளிகை; இதுவோ உள் செங்கல்லை எல்லாம் இளித்துக்காட்டும் காரை உதிர்ந்த பழங்காலச் சிறுவீடு. அகங்களின் தன்மை இப்படி யானுலும் அந்த அகங்களுக்கு உரியவர்களின் அகத்தையும் புறத்தையும் பார்த்தாலோ?

சோதனைபோல, அவளது பகவன் அவளுடைய இல்லம் வந்தபோது அவள் அங்கு இல்லை! எங்கே போனுள்? அவரைத் தேடிக்கொண்டுதான் போனுள். 'நேரமானுல் ஏறிக்கொண்டே போகிறது. டாகுர் வரக்காணேமே? பொழுதில்லை என்று நந்த போஸின் வீட்டிலிருந்தே யோகினின் வீட்டுக்கோ, அல்லது தக்ஷிணேச் வரத்துக்கேவோ போய்விடப் போகிருர்! அப்படிப் போகாமல் மறித்தாவது இங்கு அழைத்து வருவோம்' என்றே கோலாப் நந்தபோஸின் வீட்டுக்கு ஓடினுள். அந்தச் சமயம் பார்த்து அவர் அடியார் புடை சூழ வேறு வழியில் அவள் வீட்டுக்கு வந்துவிட்டார்.

தாம் அவளைக் காக்க வைத்ததற்கு ப்ரதியாகத் தாம் அவளுக்காகக் காத்திருக்க வேண்டுமென்றே அவள் இல்லாத போது வந்தார் போலிருக்கிறது!

நுழைந்ததும் மாட்டுக் கொட்டில். வீட்டின் கீழ்க் கட்டில் கோலாப்பின் உறவினர்கள் சமையல் முதலியவற்றுக் கான ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தனர். மாடியில்தான் ராமகிருஷ்ணர் பரிஜனங்களோடு எழுந்தருள வசதி செய் திருந்தது. அங்கே சாமானிய ஜனங்கள் பலர் பக்தி மரியாதைகளுடன் டாகுரை எதிர்பார்த்துக் கூடியிருந்தனர்.

Koviloor Digital Library

அவர்களது அளவுக்கு கோலாப்பின் வீட்டினர் பக்தி கொண்டிருந்தனர் என்று சொல்வதற்கில்லை. 'வீட்டினர்' என்ருல் அவளுடைய ஒரு விதவைத் தங்கை, ஸஹோதரர் கள், அவர்களது பெண்டு பிள்ளைகள் ஆகியோர். ஒரு ஸஹோதரன் அறிவிலியே ஆவான். எப்படியோ இந்தக் குடும்பத்தில் இந்த கோலாப் ஒருத்திக்கு, குப்பையில் குருக்கத்தியாக குரு மஹராஜ் பக்தி பூத்தது, மகளின் மரணத்தை வியாஜமாகக் கொண்டு.

குரு மஹராஜ் பேசாமல் மாடிக்குச் சென்று, அங்கே "ப்ராம்மணி" அழகுற அலங்கரித்து வைத்திருந்த ஆதனத்தில் அமர்ந்தார். சுற்றிலும் அவரது பரிவாரம் அமர, அவர்களைச் சுற்றி அந்தப் பேட்டையின் பக்த ஜனங்கள் நின்றிருந்தனர்.

இதயக் கதவத்தை ஹோவெனத் திறந்து வரவேற்கக் கூடியவள் அங்கில்லாததில் எவருக்கும் என்ன பேசுவதென்று தெரியவில்லை.

குடுகுடுவென்று கோலாப்பின் விதவைத் தங்கை மட்டும் மாடிக்கு வந்து குரு மஹராஜை நமஸ்கரித்தாள். "நீங்கள் வரக்காணுேமே என்றுதான் அக்கா நந்தபோஸ் வீட்டுக்கு ஓடினுள். இதோ வந்து விடுவாள்" என்ருள்.

அப்புறம் எவரும் எதுவும் பேசவில்லை.

"ம்ருது பூர்வ பாஷி"யான ஸ்ரீராமனைப் போலத் தாமே மெல்லென பேச்சைத் தொடங்கி எந்த இடத்திலும் ஒரு சகஜ நிலையை உண்டாக்கிவிடும் ராமகிருஷ்ணரும் இன்றென்னவோ இங்கு பேசாமலே அமர்ந்திருந்தார். பிற்பாடு புற்று நோய் என்று கண்டுபிடிக்கப்பட்ட தொண்டைப் புண் அவருக்கு இப்போதே தொந்தரவு தொடங்கிவிட்டது உண்மைதான். ஆனுல் அதனுல்தான் அவர் பேசவில்லை என்று எப்படிச் சொல்லமுடியும்? சற்றுமுன் வரையில் நந்தபோஸ் வீட்டில் சக்கைப்போடாகப் பேச வில்லையா என்ன?

Koviloor Digital Library

அங்கே அவரது வாய் சக்கை போடாகப் பேசிற்று. இங்கே அவருடைய இதயம் சக்கை போடாக அருள்மழை பொழியப் போகிறது. முதலில் மேகங்களைத் திரட்டிக் கொண்டால்தானே அப்புறம் சக்கையாக அடித்துப் பெய்ய முடியும்? அதனால்தான் பேசாதிருக்கிறாரா?

அல்லது, கேவலம் உடலைக் கருதிய நேசத்திலேயே, "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல" எனில், ஆன்மாவைக் குறித்த அன்பில் ஆண்டையின் உள்ளத்தோடு அடியாளின் உள்ளம் ஒக்க நோக்கும்போது பேச்சு எப்படி எழும்? அடியாள் எதிரில் இல்லாவிடினும் ஆண்டைக்கு அவள் உள்ளம் தெரியாதா என்ன?

மௌனமும் நன்றாகத்தானிருந்தது.

கீழே ஏதோ சந்தடி கேட்டது. "அக்கா வந்துவிட்டாள்" என்று சொல்லிக்கொண்டே தங்கை கீழே போனாள்.

ஆனால் அக்கா வரவில்லை.

பொன்னாகப் புன்னகைத்துக் கொண்டு பரமஹம்ஸம் பாட்டுக்கு உட்கார்ந்திருந்தது அன்பின் அமைதிப் பொய்கையில். சுற்றிலும் அன்னக் குஞ்சுகளாக அடியார்கள்.

தனிகர் நந்தபோஸின் மாளிகை எப்படிப் பாலையாக இருந்தது? சாதாரண மக்கள் கூடியுள்ள இந்தக் குடில் எப்படிக் குளிர் பூம் புனலாக இருக்கிறது? இதை டாகுருடன் வந்திருந்த மஹேந்திர நாத் குப்தாவும், தேவேந்திரரும் தங்களுக்குள் வியந்து கொண்டனர். டாகுரிடமும் தெரிவித்தார்கள்.

புன்னகை விரிநகையாக அலர்ந்து புஷ்பித்தது!

"அக்கா வந்தாச்சு!" என்று தங்கைக்காரி கத்திக் கொண்டே வர, கோலாப் வந்தேவிட்டாள்!

வேக வேகமாக வந்தவள் குருபெருமானின் திருவடிகளில் விழுந்தாள்.

Koviloor Digital Library

அவளை வெந்து வேகவைத்த புத்திர சோகம் அதோடு சொட்டுகூடப்பாக்கியின்றி வற்றிச் சுவறி விட்டது!

அன்பு மேகம் அடித்துப் பெய்த சக்கை மழை ஆனந்த வெள்ளமாக அவளைப் புரட்டி ஆட்டியது.

ஆம், மெய்யாலுமே ஆனந்த அலை மோதலில் என்ன செய்வது, சொல்வது என்று தெரியாமல் அவள் தவியாகத் தவித்தாள்.

டாகுர் அப்போதும் பேசவில்லை. வெளியே சாந்தப் பனிமலையாயிருந்த அவருள் எத்தனை அன்புக் கங்கைகளின் ஆதார ஊற்றுக்கள் குமுகுமுத்துக் கொண்டிருந்தனவோ?

ஒருவாறு சிறிது போதுக்குப்பின் கோலாப்புக்குப் பேச்சு வந்தது. நெகிழ, நெகிழக் குழந்தைப்போலச் சொல்வாள்: "எவ்வளவு ஸந்தோஷம்? எப்படித் தாங்கிப்பேன்? உயிர் தாளுமா? பாகவதர்களே, சொல்லுங்கோ, இந்த உடம்பிலே உயிர் நிற்கிறதற்கு என்ன பண்ணணும் சொல்லுங்கோ.

"முந்தி எவ்வளவோ ஸந்தோஷம் நானும் பார்த்திருக்கேன். புக்காத்திலிருந்து சண்டி வருவாளே, அப்போ முன்னேயும் பின்னேயும் ஜவான்கள் வருவாங்களே, அவ வீட்டுக்குள்ளே வந்த அப்புறம் அவங்க தெருவிலே ரெண்டு பக்கமும் காவல் நிப்பாங்களே—அப்பவெல்லாம் கொஞ்சமாகவா ஸந்தோஷப்பட்டிருக்கேன்? அதெல்லாம் ஒண்ணுமேயில்லை என்கிறமாதிரி, இதென்ன இன்னிக்கு உடம்பே வெடிக்கிறுப்போல ஸந்தோஷம்?"

மகள் சண்டி மாயை உறவு. அது நார்ப்பட்டில் நெய்த உறவு, அதன் பளபளப்பு முதலில் கண்ணைப் பறித்தாலும் நாளாவட்டத்தில் அது மங்கி மங்கிச் சுருணையாக நைந்து போக வேண்டியதே. அவளுடைய சிப்பாய்ப் பரிவாரம் நார்ப்பட்டில் மாயையின் ஜிகினு வேலை. அது எத்தனை மினுமினுத்தாலும் சிறிது காலத்தில் பித்தளையாக இளித்துக் கறுத்துப் போக வேண்டியதுதான். இன்று மாதா சண்டியின்

Koviloor Digital Library

மாதுர்ய மகன் வந்திருக்கிறுன். இது ஸத்ய உறவு. என்றும் நைந்து போகாத அதிசயப் பட்டில் நெய்தது. இதில் பொன்னுக்கும் மேலான அதிசய உலோகத்தால் நெய்துள்ள ஜரிகைவேலேதான் இவனுடன் வந்துள்ள அடியார் பரிவாரம். அந்தப் பரிவாரத்தில் கோலாப்பும் கரைந்து பட்டிழையோடு இழைந்தாயிற்று. இழக்க முடியாத இழைப்பு. மகள் சண்டியின் கதை மஹாசண்டியின் மகன் விஷயத்தில் நடவாது.

எந்த மகளைப் பற்றி நினைத்தாலே உடம்பு வெடிக்கிறது போல கோலாப் அழுவாளோ அவளைப்பற்றி இன்று அழாமல், உடம்பு வெடிக்கும் ஆனந்தத்திலாக்கும் பேசு கிறுள்! மகள் ஜவான்கள் புடைசூழ வந்ததைச் சொன்னதோடு நில்லாமல் அவளுடைய சாவையுமே சகஜ மாசக் குறிப்பிட்டு மேலே தொடர்ந்தாள். "சண்டி செத்துப்போன துக்கத்தின் நிழல்கூட இப்போது எனக்கு இல்லே"

ஒரு மரத்தின் நிழலின் கீழ் வந்துவிட்டால் இன்னெரு மரத்தின் நிழல் அங்கு படிய முடியாதல்லவா? விஷவிருக்ஷ மாயா நிழலிலிருந்து அம்ருதத் திருவடி நீழலுக்கு அவள் வந்துவிட்டாளே!

ராமக்ருஷ்ணர் அவளிடம் அதிகமாக இனிக்கப் பேசா விட்டாலென்ன? அவளுக்கு ஆன்ம வைத்தியம் செவ்வை யாகச் செய்து முடித்துவிட்டார். அவளுடைய புத்ர சோக நோய் இருந்த இடம் தெரியாமல் பறந்து போகச் செய்து விட்டார்.

இன்னமும் அவர் இனிக்கப் பேசவில்லே. அதனுலென்ன? இனிப்பேயாக அமர்ந்திருந்தார்!

குழந்தை "ப்ராம்மணி" பொரிந்துகொட்டிக் கொண்டு போனுள். "இன்னிக்கு மட்டும் இவர் இங்கே வராமல் போயிருந்தால், நான் பண்ணினதையெல்லாம் கங்கையி

Koviloor Digital Library

லேயே விட்டெறிஞ்சிருப்பேன். இவர்கிட்டே இனி பேச்சு வார்த்தை வேண்டாம் என்று நிறுத்தியிருப்பேன்.''

பேசாவிட்டால் பரவாயில்லை. இப்போதுகூடத்தான் இத்தனைக்கும் அவர் பேசாமலேயே உட்கார்ந்திருந்தும் ஒரு நிறைவைத் த ரு கி ரு ே ர ! ஆனால் இந்த திவ்ய மங்கள ரூபத்தைப் பார்க்காமலிருக்க முடியுமா? அவர் வராமலே தான் போயிருக்கட்டும்; வேறு என்ன சோதனைதான் செய்யட்டும், அதற்காக அவரோடு பேச்சு வார்த்தையை வேண்டுமானால் நிறுத்தலாமே தவிர அவரை தர்சிப்பதை நிறுத்தமுடியுமா? இப்படி அவள் நினைத்தாள் போலிருக்கிறது. ''பேச்சு வார்த்தை வேண்டாமென்று நிறுத்தியிருப்பேன்'' என்று சொன்ன அதே மூச்சிலே, ''இவர் எங்கே இருக்காரோ, எங்கே வந்திருக்காரோ அங்கே போய் தூர நின்னு ஒரு பார்வை பார்த்துவிட்டு ஓடி வந்துடணும்—அதுக்கு மேலே வைச்சுக்கப்படாது—என்றெல்லாம் நினைச்சுட்டேன். ஆனால் நல்லவேளை, ஏமாத்தாமல் வந்துட்டார். என் ஸந்தோஷத்தை ஊர் முழுக்க ஒவ்வொருத்தருக்கும் தண்டோராப் போடணும் போல இருக்கு. என் அதிருஷ்டத்தை யோகின்மா கிட்டே போய்ச் சொல்லிப் பெருமை அடிச்சுக்கணும் போல இருக்கு''.

குழந்தையாய் எக்களித்த ''பிராம்மணி'' சொல்லிக் கொண்டே போனாள்: ''லாட்டரியிலே ஒரு கூலியாள் ஒரு ரூபாய்க்குச் சீட்டு வாங்கினான். அவனுக்கே லக்ஷ ரூபாய்ப் பரிசு விழுந்தது. இது தெரிஞ்சவுடனே அவனுக்கு உயிரே போயிடுத்து. ஆமாம், உயிரே போயிடுத்து. எனக்கும் அப்படித்தான் ஆகும்போல இருக்கு, பாகவதாளா நீங்க எல்லாம் வந்திருக்கேளே, எனக்கு ப்ராணன் போகாமலிருக்கணுமென்று ஆசீர்வாதம் பண்ணுங்கோ!''

உயிர் போய்விட்டால் அப்புறம் எப்படி டாகுரிடம் இந்த ஸ்தூல பக்தியுறவு கொண்டாட முடியும்? அதற்கு மேல் ஸூக்ஷ்ம பக்தி, அதற்கும் மேல் அத்வைதம் ஆகியவை நம் எளிய பிராம்மணிக்குத் தெரியாது. அந்த எளிமையால்

Koviloor Digital Library

தான் விலைமதிப்பற்ற தன் அன்பைக் கூலியாள் வாங்கிய ஒரே ரூபாய் லாட்டரிச் சீட்டாகப் பேசினுள்.

ஆனல் அந்த எளியவளைக் கண்டு வியந்து போனர் மஹேந்த்ரநாத குப்தர். அவர்தான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மொழியமுதைத் திரட்டித் தந்துள்ள "ம", பிராம்மணியின் பக்தியானந்தத்தில் பிரமித்த "ம" அவளுடைய பாதத்தைத் தொட்டு நமஸ்கரிக்கச் சென்ருர்.

அவளோ சரேலனப் பின்வாங்கிக் கொண்டு, "என்ன காரியம் பண்ணுகிருயப்பா?" என்று சொல்லி அவரை வணங்கினுள்.

அவரையும் மற்ற பக்தர்களையும் பார்த்து, அவர்கள் யாவரும் தன் வீடு வந்திருப்பது தனக்கு எத்தனை பூரிப்புத் தருகிறதென்று கூறினுள்.

பிற்காலத்தில் விவேகாநந்தரான நரேனைத்தவிர அவரைவிட வயதில் சிறிய இன்னெருு நரேனும் உண்டு. 'சின்ன நரேன்' என்று அவனைச் சொல்வார்கள். ராம கிருஷ்ணரின் பிரியப் பசங்களில் அவனும் ஒருவன். பார்க்கக் கறுப்பாயிருப்பான். மனஸு வெள்ளை. சிரிக்கப் பேசுவான். எளிதே ஸமாதி நிலைக்கு நழுவி விடும் ஆழமுள்ளவனுயினும், அதைக் காட்டாமல் சிரிக்கப் பேசுவதில் குரு மஹராஜின் சரியான சிஷ்யன்தான்! இனம் இனத்தோடே என்று முன்னமே சொன்னபடி இவனிடமும் இருந்த எளிமையே இவனை கோலாப்புடன் சேர்த்து வைத்தது.

இப்போது கோலாப் ஞாபகமாக அவனுக்குச் சொல்லி யனுப்பி அவனை வரவழைத்திருந்தாள். ராமகிருஷ்ண ஸங்கம் "ஸீரியஸ்" பக்திக்கானதல்ல, அதில் சிரிப்பின்பம் கூடினலே அது தெய்வக் குழந்தைகளின் ஸங்கமாகும் என்பதை உள்ளுணர்வால் புரிந்து கொண்டு சின்ன நரேனை வரவழைத்திருந்தாள்.

தனது புத்திசாலித்தனத்தைத் தானே மெச்சிக் கொள்ளும் குழந்தைபோல, "எல்லாரும் டாகுரோடே,

Koviloor Digital Library

வந்திருக்கேள். நானும் சின்ன நரேனைத் தருவிச்சுட்டேன். அவன் இல்லாவிட்டால் நம்மையெல்லாம் யார் சிரிக்க வைக்கிறது?'' என்றாள்.

டாகுரும் சிரிக்கச் சிரிக்கப் பேசுபவர்தான். அவருடைய நகைச்சுவை பற்றியே தனிக்கட்டுரை பார்ப்போம். அப்படிப் பட்டவர் இங்கே பேச்செழாமலே உட்கார்ந்திருப்பார் என்று கோலாப் உள்ளுணர்வில் முன்கூட்டியே கண்டு விட்டாளா? அன்புக்கு அடைக்கும் தாழ் இல்லையெனில், அந்த அன்பே முட்டி வரும்போது வாய்க்கு அடைக்கும் தாழாகி விடுமென்று முன்னதாகவே அறிந்திருந்தாளா?

அவள் சோனுமாரியாய் ஏதேதோ பேசிக் கொண்டிருக்க தங்கைக்காரி விருவிருத்து அவளிடம் வந்தாள். "கீழே கொள்ளைக் காரியம் கிடக்கிறது. நீ பாட்டுக்கு இங்கே பிரஸங்கம் பண்ணிக் கொண்டிருந்தால் நான் எப்படிச் சமாளிப்பது? வா கீழே'' என்றாள்.

ஆனந்தத்தில் ஊறிக் கிடந்த கோலாப்ஸுந்தரியாலோ அந்த ஸத்ஸங்கத்தை விட்டு நகரவே முடியவில்லை.

அது ஒரு மகா பெரிய உணர்வு நிலை. இறைவனைப் பூஜிக்க வேண்டும் என்பதும் இடைஞ்சலாக நிற்கும் அன்புச் சமாதிநிலை. வாழ்த்துவது, உபசரிப்பது என்ற செயல்களுக்கும் இடமின்றி இதயத்தைப் பறிகொடுத்து அலையொழாத தடாகமாக நிற்கும் ப்ரேம ஸமாதி நிலை.

ஆனாலும் தங்கை இப்போது ஒரு கல்லை அதில் எறிந்து விட்டாளே, அதனால் அதில் அலை எழும்பிவிட்டது. 'இந்த ஸத்ஸங்கத்துக்கான விருந்தோம்பலுக்கே அல்லவா தங்கை அழைக்கிறாள்?' என்ற எண்ண அலை சமாதியைக் குலைத்தது.

அன்பு மட்டுமே இருந்த இடத்தில் அன்புக் கடமை என்ற உபசார உணர்வு தோன்றி விட்டது. ஆயினும் அசாதாரணத்திலும் அசாதாரணமாகவே மாந்தருக்குக் கிடைக்கக் கூடியதான அந்த அன்பு மட்டுமேயான நிலையை

Koviloor Digital Library

அவள் தொட்டுவிட்டாளல்லவா? அதுவே போதும், ஜீவித நிறைவுக்கு! எத்தனை பாக்யசாலினி அவள்!

தங்கையைப் பின்தொடர்ந்தாள். முடியவில்லை. வெறும் அன்பும் கடமை அன்பும் போட்டி போட, தத்தளித்தாள். ஜன்ம நிறைவை அவளுக்கு அலாக்காக அளித்துவிட்ட டாகுர் இந்தத் தத்தளிப்பையும் ரஸித்தபடி—இப்போதும் பேசாமலே-அமர்ந்திருந்தார். அந்த ரஸிப்பிலே ஒரு பரிதாபக் கனிவும் கலந்து அவர் கண்களில் சுடரிட்டது.

கடைசியில், விருந்தோம்பல் கடமையில் தவறலாகாது என்று அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அதற்கான பணிகளை மேற்கொண்டாள்.

பரம பக்தியோடும், பணிவோடும் பரமஹம்ஸரை வேறோர் அறைக்கு அழைத்துச் சென்று, அமர்த்தி, உண்வகைகள் ஸமர்ப்பித்தாள். ஆன்ம ஸமர்ப்பணம் செய்தவளின் நிவேதனம் புண்ணியனின் திருவுதரத்தில் சேர்ந்தது.

ஏனைய அடியார்களுக்கு அவர்கள் இருந்த மாடிப்பகுதியிலேயே பலகாரங்கள் பரிமாறினாள்.

சுமார் ஒன்றரை மணி நேரம் கோலாப்பின் குடிலைக் கிருஷ்ணனின் கோலோகமாகக் கோலாஹலப்படுத்திய ராமகிருஷ்ணர் புறப்படத் தயார் என்னும் பாவனையில் எழுந்திருந்தார். கண்ணனின் ஆட்ட பாட்ட அமளி துமளிகள் அவரும் அநேக இடங்களில் செய்ததுண்டுதான். ஆனால் இங்கே தாம் மௌனமாக இருந்து கொண்டே கண்ணனுலகின் களிப்பு அலைகள் பிரவஹிக்கச் செய்ததுண்டே, அது அலாதிதான்!

ஆம், அலாதிதான். "Gospel" எனப்படும் "ம"வின் அமுதமொழித் தொகுப்பில் டாகுர் எத்தனையோ இடங்களுக்கு விஜயம் செய்தது கூறப்பட்டிருக்கிறது. டாகுரின் மஹா சரிதையான சாரதாநந்தரின் "Great Master" முதலிய நூல்களிலும் அவரது பல இட விஜயங்கள் பற்றிப் படிக்கிறோம். எங்கே சென்றாலும் அவர்தான் மைய நாயக

Koviloor Digital Library

மாக இருந்திருக்கிறுரென்று அவற்றிலிருந்து காண்கிறேம். மாமேதையரான கேசவ சந்த்ர ஸேனர், ஈச்வர சந்த்ர வித்யாஸாகர், பங்கிம் சந்த்ர சட்டர்ஜி, சசதர் பண்டிட் போன்றவர்களும் அந்தச் சூரியன் முன் மெழுகுவர்த்தியாக மழுங்கி நின்றதையே காண்கிறேம். ஆனல் இந்த "பாக் பாஜார் பிராம்மணி" ஒருத்தியின் வீட்டில்தான் அந்த பகவான் மௌனம் பூண்டு இரண்டாம் பக்ஷமாகப் பின் நின்று பக்தைக்கு எல்லா முக்யமும் தந்து முன்னே விட்டிருக்கிறுர்!

இந்த அலாதிப் பெருமைக்காகத்தான், எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிச் செறிவும் உணர்ச்சிச் செறிவும் கொண்ட அவரது சரிதத்தில் ஸாமானியமாக நடந்தாற் போலத் தோன்றும் இந்த விஜயத்தைத் தனிக் கட்டுரை யாக்கத் தோன்றியது.

டாகுர் கருணைப் பூரிப்பின் மௌனத்திலேயே தலையோடு கால் மென்னகையாகப் புறப்பட்டார்.

''வாங்கோ, வாங்கோ! எல்லாரும் வந்து குருதேவை நமஸ்காரம் பண்ணுங்கோ'' என்று அவருடைய அருமை தெரியாத தன் வீட்டுக்காரர்களையெல்லாம் சத்தம்போட்டுக் கூப்பிட்டாள் கோலாப். "காகம் கரைந்துண்ணக் கண்டீர்" தான்!

காரியத்தைக் கவனிக்காமல் அவள் பைத்தியம் மாதிரிப் பண்ணுவதாக எண்ணிய தங்கைக்காரி, அவளுடைய உடன்பிறந்தான்களின் மனைவிகள் ஆகியோர் வந்து வணங்கினர். 'யாரோ பெரியவர், நமஸ்காரம் செய்கிறேம்' என்பதற்குமேல் அவர்களுக்குத் தெரியவில்லை. உடன்பிறந்தான்களும் நமஸ்கரித்தனர். அவர்களில் ஒருவரை கோலாப் டாகுருக்கு "இவன் புத்தியில்லாதவன்" என்று 'அறிமுகம்' செய்தாள்.

முதல் முறையாக டாகுர் பேசினர். "இல்லை இல்லை, இவங்க எல்லாரும் நல்லவங்க" என்றுர்.

Koviloor Digital Library

அவளுடைய அந்தரங்க அன்பு அவரைக் கரைத்திருந்த கரைப்பில் அவள் தொடர்புள்ள ஸகலமும் அவருக்கு நல்லனவாகவே தெரிந்தன போலும்! அல்லது அவள் தன்னைப் பார்க்கும் அன்புப் பார்வையுடனேயே மற்றவர் களையும் பார்த்தால் அவர்களும் அவளுக்கு நல்லவராகவே தெரிவர் என்று காட்டினரோ?

பரம நன்மையின், நல்லவர்களின் சூழலில் இருந்து விட்டுப் புறப்படுகிறேமென்பதுபோல, சந்தனமாகக் குளிர்ந் திருந்த நன்மை விக்ரஹமாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடிமேல் அடிவைத்துக் கிளம்பினர்.

ஒருவன் விளக்குக் காட்டிக் கொண்டு முன் செல்ல, அரை வெளிச்சத்தில் எல்லோரும் மௌன சித்திரமாக இருட்டுத் தாழ்வாரத்தைக் கடந்தனர்.

பக்கத்தில் மாட்டுக் கொட்டிலானதால் அங்கோரிடத் தில் ஒரே சாணமாக இருந்தது.

''இங்கே எல்லாரும் நல்லவங்க'' என்று டாகுர் சொன்ன ஸ்வரத்திலேயே, ஆனல் பெரிய குரலில், ''இங்கே எல்லாம் சாணிங்க'' என்று சின்ன நரேன் எச்சரித்தான்.

எல்லாரும் கொல்லென்று சிரித்து விட்டனர். அப்படிச் சிரிக்கச் செய்வதற்குத்தானே கோலாப் அவனைக் குறிப்பாக வரவழைத்திருந்தாள்? 'குருதேவ்' போக வேண்டிய வழியாச்சே என்று அவள் முன்கூட்டிச் சுத்தம் செய்யாமல் 'பைத்திய பக்தி' பண்ணியதில் அவரது பரிவாரம் கோபம் கொள்ளமுடியாமல் சின்ன நரேன் சிரிக்க வைத்துவிட்டான்.

கொட்டிலின் நேர் முன் ராமக்கிருஷ்ணர் வர, ''கோசாலை'' என்று அவரிடம் கோலாப் விண்ணப்பித்தாள்.

அப்படியே அவர் நின்றார். அன்பு துளும்பும் கண்களால் கோசாலையிலிருந்த மாடு கன்றுகளைத் துழாவினர். மாடுகளை யும் தன் கன்றுகளாக்கிப் பார்க்கும் தாய்ப்பசுவாக அவர்

Koviloor Digital Library

அப்போது இருந்தார். மாடுகள் மட்டுந்தானு? உடன்வந்த மனிதர்கள் யாவரும் கன்றுகளாக, அவற்றில் அருமையான குட்டிக் கன்ருக "ப்ராம்மணி" நிற்க, வாத்ஸல்ய வெள்ளத்தைப் பால் பெருக்கி வெள்ளையாக நின்ருர் நம் (ராம) கிருஷ்ணர்!

உருக்கிவிட்டது "ம"வை அக்காட்சி. சாணமும் கூளமும் நிறைந்த கொட்டில் என்று பாராமல் அப்படியே தரையில் விழுந்து அந்த கோபாலரை வணங்கினுர்.

யோகின்மா வீட்டுக்கு டாகுர் செல்ல, பரிவாரத்தோடு கோலாப்மாவும் தொடர்ந்தாள்.

பூர்ணிமைக்கு மறு நாளாதலால் தெருவெல்லாம் வெள்ளை வெள்ளம். அதைத் திரட்டி ஓர் உருவாக டாகுரும், அந் நிலவை வழிய விட்டுக் கொண்டு நிற்கும் பசுமரங்களாக அடியார்களும், அவர்களில் லேசாய் மினுமினுத்து லேசாய் விசிறும் தென்னங்கீற்ருக கோலாப்பும் சென்றனர்.

யோகின்மாவின் வீட்டில் இளைஞர்கள் வாத்தியங்கள் இசைத்துப் பாடிக்கொண்டிருந்தனர். டாகுரின் அருளும், அடியார்களின் பக்தியும் பெருக்கிய ஸுஸ்வர - ஸுகலயத்தில் அந்த இசை மேலும் அழகாகத் தெரிந்தது.

தன் வீட்டில் காரியத்தைவிட்டு பைத்திய பக்தி செய்ததுபோலில்லாமல் யோகின்மாவுக்குக் கூட மாட ஒத்தாசை செய்ய வேண்டுமென்று கோலாப்மா உள்கட்டுக்குச் சென்ருள். ஆனுல் உள்ளம் கட்டுப்பட்டால்தானே? டாகுரின் மதுரத் திருவுருவுக்கே கண்கள் அவளை இழுக்கின்றனவே! அவர் அமர்ந்திருந்த வெளியறைக்கு வந்தாள்.

வெளியறைக்கும் உள்கட்டுக்குமாக அலையும் அவளுடைய குழந்தைப் போக்கு மற்றவர்களுக்கு விநோத இன்பம் தந்தது. விளையாட்டு மட்டைக்கும் ஸ்லேட் - பலப்பத்துக்குமாக மாறி மாறிப் போகும் குழந்தை விநோதம்.

பையன்கள் பாடினுர்கள் :

Koviloor Digital Library

கொடுத்து வைக்காத இவ் வடிமையர் தமக்குக்
கொடுப்பாய் உனதருள், கேசவா!
பிருந்தாவனப் புல்வெளியிலும் புதரிலும்
திரிந்தே மகிழ்ந்திடும் கேசவா!

மகளைப் பறிகொடுத்தவளையும் எளிதே "கொடுத்து வைத்தவ" ளாக்கிவிடும் கொடை வள்ளல் ரஸித்துக் கேட்டார்.

அந்தப் பையன்களைப் பற்றி, கோலாப் வீட்டினரைச் சொன்னாற்போலவே, "இவங்க எல்லாம் நல்லவங்க" என்றார்.

ஆம், 'எல்லையில் பெரு நலம்' இங்கும் கவ்வித்தான் கிடந்தது. அது டாகுருடைய ஸாந்நித்திய விசேஷம்தான் எனில் நந்த போஸின் வீட்டில் ஏன் தெரியவில்லை?

வண்ண வண்ணமாய் ஜ்வலிக்கும் மேகங்களைப் பார்த்து மயில் தோகை விரிக்காது. சாம்பல் நிற நீர் மேகத்துக்குத் தான் தோகை விரித்தாடும். நந்தபோஸின் செல்வச் செழிப்பில் அகங்காரம்தான் ஜ்வலித்தது; கோலாப்பின், யோகினின் எளிமையில் அன்பு நீர் கோத்து நின்றது. ஹம்ஸம் வெள்ளைத் தோகையை இங்கேயே விரித்தது. அதுதான் பெருநல ஸாந்நித்தியம்.

அடைத்துப்போன ஹம்ஸத்தின் வாயும் இத்தனை நேரம் கோலாப்பின் அன்புக்குப் பழக்கப்பட்டு விட்டதால் போலும், மெல்லத் திறந்தது.

"எவ்வளவு நன்னாப் பாடினாங்க? ஃபிடில் எத்தனை ரம்யமா இருந்தது? எல்லா வாத்தியமுமே பேஷாயிருந்தது ...அதோ அந்த ரெண்டு பசங்களும் சரியான ஜோடி... வாஸ்தவமாவே நல்ல பாட்டு, நல்ல வாசிப்பு...இதோ இவனைப் பார்த்தாலே இவன் அத்தனை வாத்தியமும் பேஷா வாசிப்பான் - னு தெரியறது. பாட்டிலே இவங்க கெட்டிக் காரங்க என்கிறதோட இல்லை; இவங்க எல்லாரும் நல்லவங் களும்" என்றார்.

Koviloor Digital Library

இளைஞர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ண கோஷ்டியினரைப் பாடுமாறு கேட்டுக் கொண்டனர்.

கதவோரத்தில் ஒண்டிக் கொண்டிருந்த கோலாப்மா அவ்விளைஞர்களைப் பார்த்து, "இப்போது வந்திருப்பவர்களில் யாருக்கும் பாட வராது, தம்பிமார்களே! மோஹின் பாபு வேண்டுமானால் கொஞ்சம் பாட்டுத் தெரிந்தவர். ஆனால் அவரும் குருதேவ் முன்னால் பாடமாட்டார்" என்றாள்.

அப்போது எவனோ சிறுவன் பளீரென்று, "ஏன் மாட்டாராம்? என் அப்பாவுக்கு முன்னாலேகூட நானே பாடுவேனே!" என்றான்.

அந்நாளில் தகப்பனாருக்கு முன் பிள்ளைகள் கப்சிப் என்று வாய்மூடியே நிற்கும்.

தகப்பனாரை விடவும் பயபக்திக்கு உரியவராகவே மஹான்கள் தோன்றுவர். ஆனால் பாருங்கள், அந்தப் பையன் எத்தனை பெரிய உண்மையைச் சொல்லிவிட்டான்? டாகுரிடம் பிரேம பக்தியே போதும், பய பக்தி வேண்டாம். அப்பாவிடம் காட்டும் பயமோ, தயக்கமோ இவரிடம் எதற்கு என்பதைத்தான் 'அப்பாவுக்கு முன்னாலே கூட' என்று சொல்லிவிட்டான்!

"நீ அந்த அளவுக்கு முன்னேறியிருக்கலாம், தம்பீ! ஆனால் இந்த மோஹின் பாபு அவ்வளவு முன்னேறவில்லையே!" என்று ஹாஸ்ய வெடியைப் போட்டான் சின்ன நரேன்.

பயமும், தயக்கமும் கொள்ள வைக்காத நம் அதிசய "அப்பா" உள்பட எல்லோரும் சிரித்தனர். இந்த அப்பா ஊமையைப் பாடவைப்பார். மஹா பெரிய ஸங்கீத வித்வானை வாயடைக்கவும் வைப்பார்.

அவரே மதுர மதுரமாகப் பாடக் கூடியவர்தான். இன்றுதான் பாடவில்லை. நெடுநேரமாகப் பேச்சுமின்றி வாயடைத்தவர் இப்போதுதான் வசன நடைக்கே வந்திருக்கிறார்.

Koviloor Digital Library

அவரையே பாடுமாறு கோலாப் கேட்டுக் கொண்டிருக்கக் கூடாதோ? "யாருக்கும் பாட வராது" என்று ஏன் ஒரே போடாகப் போட்டு முடித்துவிட்டாள்? அவர் பாடத் தொடங்கிவிட்டால், ஆனந்த அழுத்தத்தில் தன் உடம்பே வெடித்துவிடும் என்றுதானே? மகள் போன பின் தனக்கும் மரணம் வராதா என்று மறுகிக் கொண்டிருந்தவளை அப்படியே மாற்றிவிட்டாரே லீலா விநோதர்! அவரது லீலா விநோதம் காணத்தானே அவள் தன் வாழ்வு நீடிக்கவேண்டு மென விரும்பியது?

செவிக்குணவு முடிந்தபின் வயிற்றுக்கு ஈவதற்காக கோலாப் டாகுரை உள்கட்டுக்கு அழைத்தாள். யோகினம்மை அடியார் கணத்துக்கு இல்லாமல் அவதார ருக்கு மட்டுமே சிற்றுண்டி தயாரித்திருந்தாள். பலர் நடுவே அவருக்கு மட்டும் படைப்பதில் ஒரு தயக்கம். அதனால்தான் அவள் சார்பில் கோலாப் அவரை உள்ளே அழைத்தது.

கவடறியாக் குழந்தையாக டாகுர், "எதுக்கு உள்ளே கூப்பிடறே?" என்றார்.

"ஏதோ கொஞ்சம் பிக்ஷை பண்ணுவதற்குத்தான்" என்றாள் கோலாப்.

"அந்த பிக்ஷையை இங்கேயேதான் கொண்டுவாயேன்" என்றார் டாகுர்.

"அந்த உள்ளேயும் உங்கள் பாதம் படணும் என்று யோகின் வேண்டிக்கொள்கிறாள். அதற்கப்புறம் அது காசி ஆகிவிடும்; அங்கே உயிரைவிட்டால் மறுபடி பிறவிப் பிணி வராது என்கிறாள்" என்று உணர்ச்சி பொங்கச் சொன்னாள் கோலாப்.

அக்காலப் பெண்களின் வாழ்வு சாவு எல்லாம் உள் கட்டில்தான்.

உடனே பரமஹம்ஸர் எழுந்திருந்து உட்புறம் சென்றார். வீட்டுச் சிறுவர் சிலரும் அவரோடு ஓடினர். சிறுமியாக கோலாப் செல்ல, அவளிலும் சிறுவராக அவளைத்

Koviloor Digital Library

தொடர்ந்து அவர் சென்றது—பனியின் நுண் துளிகளை மனத்தில் சொரியும் காட்சிதான்!

சிற்றுண்டி உபசாரமான பின் யோகின் மாவின் வீட்டிலிருந்து டாகுர் இரவு தங்குவதற்காக பலராம் போஸ் வீட்டுக்குச் சென்றார். அப்போது பத்தரைக்கு மேல் மணி ஆனபோதிலும் கோலாப்பும் பரிவாரத்தோடு உடன் சென்றாள்.

பலராம வஸுவின் வீட்டில் டாகுர் சயனம் கொள்ள உட்செல்லுமுன் அவளுக்கு விடை கொடுத்தார். அப்போது அடர்ந்த பிரிவுத் துயரோடு அவளை அனுப்பக்கூடாதென்று ஸர்வ ஸாதாரணமாகப் பேசிச் சூழலை லேசு செய்தார். "உன் உடன்பிறந்தான் ஒருவன் மிருதங்கம் வாசிப்பானல்லியோ? நான் அடுத்த தடவை இங்கே வருகிறபோது நரேந்தரரோ* அல்லது வேறே யாராவது நல்ல பாட்டுக்காரரோ வந்தால் அவனைக் கூப்பிட்டு அனுப்புகிறேன்" என்றார்.

அதனால் 'இப்போது அவரைப் பிரிகிறோம்' என்ற வருத்தம் தெரியாமல், அவரை மறுபடி சந்திக்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியும், அப்போது தன் குடும்பத்தையும் அவர் நினைவு கொண்டு சகோதரனுக்குச் சொல்லியனுப்பி மிருதங்கம் கேட்பார் என்ற திருப்தியும் கொண்டு கோலாப் விடை கொள்ளுமாறு செய்துவிட்டார்.

சயனம் கொண்டார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். அவரது கால்களை "ம" பிடித்துவிட்டுக் கொண்டிருந்தார்.

உறக்கம் என்னும் யோக நித்ரையில் ஆழ இருந்த அந்த சாந்த தெய்விகப் பொழுதில் அவதாரர் அந்த எளியாளை மனஸார நினைத்தார். "ம"விடம், "அந்த பாக் பாஜார் பிராம்மணி பார்த்தியா? ஆஹா! என்ன அன்பு? அந்த மாதிரி வீட்டிலேதான் எவ்வளவு ஆனந்தம்?" என்றார்.

---

* நரேன் எனப்படும் நரேந்திரரை டாகுர் 'நரேந்தர்' என்றும் சொல்வார்.

Koviloor Digital Library

"ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது" என்ருர் "ம". "இதே மாதிரி ஒன்று இயேஸுநாதர் வாழ்க்கையிலும் நடந்திருப்பது எனக்கு நினைவு வருகிறது."

"அப்படியா? அது என்ன, சொல்லு! கேட்கலாம்" என்று குழந்தையின் ஆவலோடு டாகுர் கேட்டார்.

மரித்த லாஸரஸுக்கு இயேசு மீளவும் உயிர் கொடுத்த கதை தெரிந்திருக்கலாம். அவனுக்கு இரண்டு ஸஹோதரிகள். மேரி என்றும் மார்த்தா என்றும் அவர்களுக்குப் பெயர். மேரிக்கு இயேஸுவிடம் உயிராழத்திலிருந்து பக்தி— கோலாப்பைப் போல. அதுதான் இயேசுவின் அன்னை மேரியைப் போல இந்த அடியாள் மேரியையும் அமரமாக்கியிருப்பது. மார்த்தாவுக்குப் பட்டும் படாததுமாக உலகினருக்குப் பொதுவில் உள்ள சிறிது ஈடுபாடுதான். பக்தியைவிடக் கடமையும் காரியமும் அவளுக்கு முக்கியம். இயேஸு அவர்களுடைய இல்லம் சென்றிருந்தபோது அவருக்கு உபசாரம் செய்யக்கூட மறந்து அவரிலேயே சித்தம் புதைத்து அடியிணை அணிமையில் மேரி அமர்ந்து விட்டாள். பாக் பாஜாரில் நாம் கண்ட அதே காட்சிதான்!

இன்று கோலாப்பின் தங்கைக்குப் போலவே அன்று மேரியின் சகோதரி மார்த்தா மீதே அதிதி ச்ரேஷ்டருக்கான உபசாரக் காரியப் பொறுப்பு விழுந்தது. அவள் இயேஸுவிடம் வந்து, "ஸ்வாமீ! இவள் என்னை ஒண்டியாய் வேலைக்கு விட்டு இங்கே அக்கடா என்று உட்கார்ந்துவிட்டதை நீங்கள் கவனிக்கவில்லையா? என்னேடு இவளும் காரியத்தைப் பார்க்க வேண்டுமென்று இவளுக்கு உத்தரவிடுங்களேன்" என்ருள்.

இயேஸுவோ விநோதமாக விடை பகர்ந்தார். "மார்த்தா, மார்த்தா" என்று குழந்தைபோல் இருமுறை அவளை விளித்து, "ஜோலிகள் என்று வைத்துக்கொண்டு நீ சங்கடப்படுகிருய். ஆனுல் உண்மையில் உனக்கு வேண்டியது ஒன்றுதான். அந்த ஒரு நல்லதையே மேரி தேர்ந்தெடுத்திருக்கிருள். அவளிடமிருந்து அதைப் பறிக்க முடியாது" என்ருர்.

Koviloor Digital Library

ஜீவனுக்கு வேண்டியது ப்ரேமைதான். கலப்பில்லாத் சுத்த ப்ரேமை. அது பொங்கி வரும்போது அதுவே பெரிய உபசாரம். ப்ரேமை கலந்த காரியமாக உபசரிப்பு என்று ஒன்று தனியே செய்ய வேண்டியதுமில்லை. எதிலும் கலந்து கலப்படம் ஆகாத அந்த ப்ரேமை அபூர்வமாக யாரோ ஒருவருக்கே வாய்க்கும். அந்த ஒருவருக்கும்கூட எப்போதும் அந்நிலை தக்கியிருக்கும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் எப்போதோ ஒருபோது வாய்த்துவிட்டாலும் போதும்; ஒரு ஜீவன் பெறக்கூடிய நிறைவின் உச்சியைத் தொட்டதாகி விடும். எப்போதோ ஒரு ஸ்வாதி நக்ஷத்ரத்தன்று, எங்கோ ஒரு சிப்பியில், ஏதோ ஒரு தூறல் விழுந்தாலும் பிற்பாடு நல்முத்தாகப் பரிணமித்துவிடவில்லையா?

கோபியர் தங்கள் ஸ்வயநலக் காரியங்களையெல்லாம் மறந்து துறந்து கண்ணனிடம் ப்ரேமித்ததால் மட்டும் பக்தர் களிடை உச்ச ஸ்தானம் பெற்றுவிடவில்லை. கண்ணனின் நலனுக்கான காரியங்கள் என்று நினைக்கக்கூடியவற்றையும் அவர்கள் நினைக்காமல் மறந்து துறந்து ப்ரேமை ஒன்றே காரியம் என அன்பு செய்ததுதான் அவர்களுக்கு அந்த உயர்வைத் தந்தது.

பிரேமிப்பதைவிடப் பெரிதாக ஒருவருக்கு என்ன நல்ல காரியம், விருந்துபசாரம் செய்ய முடியும்? "எல்லா தர்மங் களையும் விட்டு என்னை சரணடை" என்று அவனே சொன்ன போது அவனுக்குப் பணிவிடை புரியும் தர்மமும் விடுபட வேண்டியதுதானே?

பிருந்தாவன ஆய்ச்சியரும், பெதனி மேரியும் செய்த அன்பை "பாக்பாஜார் பிராம்மணி"யும் செய்துவிட்டாள். அவர்கள் எல்லோருமே எளியவர்கள்தாம்.

மார்த்தா போல கோலாப்மாவுக்குக் கடமையை நினைவுறுத்த வந்த அவளுடைய ஸஹோதரி, மார்த்தா இயேஸுவிடம் பேசியதுபோல ராமகிருஷ்ணரிடம் பேச வில்லை. கோலாப்பிடமே பேசினாள். அதனால், நல்லவேளை

Koviloor Digital Library

யாக ராமகிருஷ்ணரின் மௌன மதுரத்துக்குக் குந்தகம் வராமலிருந்தது! இவர் சொல்ல வேண்டிய பதிலைத்தான் என்றே இயேஸுநாதர் கொடுத்துவிட்டாரே!

பைபிள் கதையை டாகுரிடம் சொன்ன "ம" அந்த அந்தணியிடம் டாகுருக்கிருந்த ஆகர்ஷணத்துக்கு இன்னொரு முன்னோடியும் கண்டார். ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹா ப்ரபு அடியாருலகின் மீது செலுத்திய ஆகர்ஷணம்தான் அது!

டாகுரிடம் "ம" சொன்னார்: "உங்களைப் பார்த்ததும் பாவத்திலே அந்த ப்ராம்மணி தன் வசம் இழந்துவிட்டாள். இதை எண்ணும்போது எனக்கு கௌராங்கர்* பற்றிய பாட்டுதான் நினைவு வருகிறது.

ஆரா தெய்விக எழிற் கடலாமே
கோராவில் என் கண்ணிணைக் கயல்தாம்
வாரா வழியாய் முழுகினவே!
மனமீனும் அதில் கணமே விழுந்து
நினைவின் நீந்துகை மறந்ததுவே!"

"ம" சொன்னதையெல்லாம் உன்னி உட்கொண்டார் ஸ்ரீ ராமக்ருஷ்ணர். "ஆமாம், இதையெல்லாம் பார்க்கும் போது உன் மனஸில் என்ன தோன்றுகிறது, சொல்லு" என்றார்.

அது அவருக்கே தெரியும். ஆனால் ஒரு எளிய பெண் மணியின் பக்தி வேறொரு பக்த சிகாமணியிடம் எத்தனை பெரிய ஸத்தியத்துக்குச் சான்றுரை தர வைக்கும் என்று காட்டவே "ம"வின் வாயைப் பிடுங்கினார் மஹராஜர்!

ஆழுணர்ச்சியுடன் "ம" சொன்னார்: "இதிலிருந்து இயேசுவும் சைதன்யரும் நீங்களும் ஒருவரே. அந்த ஏக புருஷன்தான் இந்த மூன்றும் ஆனது என்று தெரிந்து கொண்டேன்."

---

* கௌராங்கர் என்பதும் சைன்யரே. அதைச் செல்லமாகச் சுருக்கி "கோரா" என்றும் சொல்வார்கள்.

Koviloor Digital Library

''ஆமாம், ஆமாம், மூன்றும் ஒன்றுதான். எல்லாம் ஒன்றுதான்'' என்று முத்திரை குத்தினார் அவதாரர், பக்தர் புரிந்து கொண்டதில் பூரிப்புடன்.

★

''ம''வின் மனத்துக்கு ''ப்ராம்மணி'' அவதார ரஹஸ்ய அமுதூட்டியதை அவதாரர் மறக்கவில்லை. ஸூக்ஷ்மமான வற்றுக்கு ஸ்தூல அடையாளம் கொடுப்பது வழக்கம் அன்றோ? இப்படியொன்று செய்தார் ஸ்ரீ ராமகிருஷ்ணர், இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஒரு நாள்.

அன்று காலை எட்டு மணிக்கு ''ம'' கங்கையில் நீராடி விட்டு தக்ஷிணேச்வர தயாநிதியின் அறையை அடைந்தார்.

அதே பொழுதில் கோலாபம்மையும் அங்கு வந்தாள்.

அவளிடம் ஸ்ரீ ராமகிருஷ்ணர், ''இவனுக்கு ஏதாவது பிரஸாதம் கொடு. அந்த அலமாரியில் பார். தித்திப்புப் பிரஸாதம் ஏதேனும் இருக்கும்'' என்றார்.

கோலாப் அவரிடம் குழந்தை ஸ்வாதீனத்தோடு, ''முதலில் உங்களுக்கு. நீங்கள் சாப்பிடுங்கள். அப்புறம் அவருக்கு'' என்றாள்.

அவள் இப்படிச் சாதாரணமாகவே சொன்னாலும் தன் அன்பினால் முதலில் டாகுரின் மனத்துக்கு அமுதுபடைத்து விட்டு, அப்புறம் அதனடியாகவே ''ம''வுக்கு இதயாமிருதம் தந்த அவள் இப்படிச் சொன்னதில் நம் போன்ற சிக்கல் சிந்தனைக்காரர்கள் உட்பொருளும் காணலாம்!

★

அதற்கடுத்த வங்காளிப் புத்தாண்டு தினம். (தமிழ்ப் புத்தாண்டு தினமும் அதுதான்.) ஸ்ரீ ராமகிருஷ்ணரின் இக வாழ்வில் அதுவே கடைசி புத்தாண்டு நாள். இன்னும் நான்கு மாதங்கள்தான் நானிலம் அவரைத் தாங்கப்

Koviloor Digital Library

போகிறது. இப்போதே புற்று நோய் முற்றத் தொடங்கி விட்டது. தேனைச் சொட்டும் அவரது பேச்சு வெகுவாகக் குறைந்து சைகை மூலமே விஷயங்களைப் பெருமளவில் தெரிவிக்கிறார். அந்த அபிநயமும் அதிநயமாக இருக்கிறது.

வருஷப் பிறப்பன்று, கிருபா வருஷம் பொழிபவரைக் காண அடியார்கள் வந்த வண்ணம் இருக்கிறார்கள். அடுத்த வருஷம் இந்த க்ருபா வர்ஷம் கிடைக்குமா என்ற இருள் மூட்டம் அவர்கள் மனத்தில் நிழல் வீசாமல் இல்லை.

வந்தவர்களில் கோலாப்மாவும் ஒருத்தி. ஆனால் இவள் மனத்தில் மட்டும் ஏதும் இருள் நிழல் வீசியதாகத் தெரியவில்லை! அவளே அறியாமல் இந்தக் குறுகிய காலத்துக்குள் எப்படிப்பட்ட உள் வளர்ச்சி பெற்றுவிட்டாள்? அதுதான் கிருபா விசேஷம். சிறிது காலம் முன்புகூட ஸ்தூல தரிசனத்தில்தான் நிறைவு கண்டவளவள். பெண் போன பின் தானும் போகத் துடித்தவள் லீலா விநோதம் தொடர்ந்து காணவே தன் ஆயுள் நீடிக்கவேண்டுமென்று விரும்புமளவுக்கு வந்தாள். ஆயினும் இப்போது அருள் என்ற அருமருந்து உள்ளே போய் அவளே அறியாமல் அதிசயமாக வேலை செய்துவிட்டதில், ஸ்தூல தரிசனத்தை எப்போது இழப்போமோ என்று அவள் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. பெண்ணின் மறைவில் அவள் உற்ற சோகத்தைக் கொய்துபோட்ட குருதேவர் தமது ஸ்தூல உடலின் மறைவைப் பற்றிய முன்கூட்டிய நினைவுமே அவளைத் தீண்டுவதற்கில்லாதபடி ஏதோ செய்துவிட்டார் போலும்! நான்கு மாதங்களுக்குப் பின் அவரது ஸ்தூல உடல் மறைந்தபோது கோலாப்மா வெகுவாக பாதிக்கத்தான் பட்டாள். ஆயினும் மற்ற எல்லோரும் அதை முன்கூட்டியே எதிர்பார்த்து சாம்பிக்கிடந்தபோது அவளொருத்தி மட்டும் அழுமூஞ்சியாயின்றி மலர்ச்சியோடிருந்தது விசேஷம்தானே?

காசிப்புரில் டாகுர் இறுதிக்கால வாஸம் கொண்ட அந்தத் தோட்ட மாளிகையில் அவர் இருக்கை கொண்

Koviloor Digital Library

டிருந்த மேல் மாடிக்கு "பைஷாகி"யான அப் புத்தாண்டு நாளன்று பெண்ணடியார்கள் செல்கிறுர்கள். அவர்களோடு வந்திருந்த குழந்தைகளும் உடன் செல்கின்றன. அவர்களில் சிலர் அவரது பூம்பாதத்தில் பூ இட்டுப் பணிகிறுர்கள்.

வருத்தம் தெரியாத இரு சிறுமிகள் பாடுகிறுர்கள். வருத்தத்தில் வடித்தெடுத்த ஒரு பாட்டை அது புத்தாண்டுச் சுபதினத்துக்கும் குரு மஹராஜ் நோயுற்றுள்ள சூழலுக்கும் பொருந்தாதது என்று உணராமல் பொட்டைப் பாடமாக ஒப்பிக்கிறுர்கள்.

அமைதி காண அழுகிறேம், ஐயோ!
அமைதி என்றும் அமைந்திடா(து) அந்தோ!
எங்கிருந்தே வந்தோமோ?
எங்கே மிதந்து செல்வோமோ?

பக்தர்கள் மீது சோகத்தைப் போர்த்திவிட்டது அப் பாடல். அடுத்து ராதை - கண்ணன் பற்றி இன்ப கீதம் பாடினுர்கள்—அல்லது ஒப்பித்தார்கள்.

வந்தனள் வனிதை ராதை;
நந்த நந்தனேயும் காணீர்!
வில்லாய் வளைந்த புருவம்
வேணுவை விளக்கும் அதரம்

மூன்றுவதாக அம்பிகைமேல் அசையாத நம்பிக்கைப் பாட்டு ஒப்பிக்கப்பட்டது.

நாவே, நாளும் நவில்வாய் துர்கை நாயகி நாமமதே!
துயரினில் தாங்க உன் தாயவள் போலே
தரணியில் எவருளரே?

சைகை காட்டி மகிழ்ச்சி தெரிவித்தார் டாகுர். 'அம்மாவைப் பற்றிப் பாடுகிறுர்களே, பேஷ்!' என்பதை அபிநயத்திலேயே புரிவித்தார்.

Koviloor Digital Library

ஆனாலும் முதல் பாட்டினால் அவர்கள் ஏனையோருக்கு ஏற்படுத்திவிட்ட துயர வடு பின் பாட்டுக்களினால் மறைய வில்லை என்பது அவருக்குத் தெரியும். வடு மறைய என்ன செய்யவேண்டும் என்று சடுதியில் கணித்துவிட்டார். பக்கத்திலிருந்த பரம ப்ரிய சிஷ்ப் பிள்ளை ராகாலிடம் 'பாக்பாஜார் பிராம்மணியைப் பாடச் சொல்லு' என்று ஜாடை மூலம் தெரிவித்தார்.

யோகின்மா வீட்டில் பாடிய இளைஞர்கள் டாகுர் கோஷ்டியினர் பாடிக் கேட்க வேண்டுமென்றபோது அவர் களில் எவருக்கும் பாடவராது என்று சொன்னவள் "பிராம்மணி". இன்று அவளையே பாடப் பணிக்கிறார் டாகுர்.

குழந்தை என்றால் அசல் குழந்தையாகவே அவளும் பளிச்சென்று பாடத் தொடங்கிவிட்டாள்.

"ஓ ஹரி, இன்றுனை ஒன்றியாய்க் கண்டேன்;
ஓஹோ எனவிளையாடி மகிழ்வேன்"

என்று ராமக்ருஷ்ணரை நேரே பார்த்துப் பாடினாள்! தெய்வத்தாய் என்றும் குழந்தையாய் வைத்திருந்த பரமஹம்ஸரைப் பார்த்து, அந்த குழந்தை ப்ராம்மணி இப்படிப் பாடியதன் தூய அழகை என்ன சொல்ல?

துயரவடு சுவடு தெரியாமல் மறைந்துவிட்டது. அத்தனை பேரும் சிரித்துவிட்டனர் அவளது குழந்தை அன்பிசை யிலே!

பெண்ணின் மரணத்தில் சோக ஸமுத்ரத்தே முழுகிய வளாக வந்தவளை இப்படி ஆனந்தத்தின், சிரிப்பின் குடியிருப்பாக டாகுர் மாற்றிய விந்தைதான் என்ன? அவர் செய்த விந்தையா? அவளே செய்து கொண்ட விந்தையா?

இருவரும் சேர்ந்து செய்த விந்தை.

ஆம், பகவானின் அருளோடு பக்தனின் சரணாகதியும் சேர்ந்தாலே பலிதமாகும். அவன் புரியும் அருளை அப்படியே

Koviloor Digital Library

வாங்கிக் கொள்ளும் எளிமையை பக்தன் சாதித்தாக வேண்டும். அதாவது பக்தன் என்ன செய்யவேண்டு மென்றால், தான் ஒன்றும் செய்யாமல் பகவான் கொடுப்பதை அப்படியே ஏற்பவனாகக் கிடக்கும் தகுதியைப் பெறவேண்டும். தாயிடம் பச்சைக் குழந்தைபோலாக வேண்டும்.

அப்படியான பாக்யசாலினி கோலாபம்மையை உளம் தழைந்து வணங்குவோம்.

இந்த பக்தைக் குழந்தைக்குத் தாயான அந்த பகவான் எத்தனை குழந்தையாயிருந்தாரென்று பார்க்கப் புறப்படு வோம்.

Koviloor Digital Library

என்றும் குழந்தை!

அம்பிகே! ஞானமுதமான உன் பாலைப் பருகிய விசேஷத்தாலல்லவா ஆனைமுகனும் ஆறுமுகனும் சிற்றின்பம் அறியாக் குழந்தைகளாகவே என்றைக்கும் இருக்கிறார்கள்?

—"ஸௌந்தர்ய லஹரி"—73

என் குழந்தைக்கென்றே உள்ள சொந்த லோகத்தின் ஒரு மூலையில் எனக்கு இடம் கிடைக்காதா என ஏங்குகிறேன்.

—ரவீந்திரநாதர் : "குழந்தையின் உலகம்"

"அப்படின்னா என்ன?"

குழந்தையாய்க் கேட்கிறார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

எப்படின்னா?

'நைன்டீன்த் ஸெஞ்சுரி' என்றாலென்ன என்று புரியாமல் தான் "அப்படின்னா என்ன?" கேட்கிறது அதிசயக் குழந்தை!

அதுவும் எந்த சந்தர்ப்பத்தில் நமது அவதார புருஷர் இப்படிக் கேட்டார் என்பதைப் பார்த்தால் அவரது குழந்தைத்தன்மையை மேலும் வியப்பீர்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரை 'நைன்டீன்த் ஸெஞ்சுரி'யின் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் என்று கேசவ சந்திர ஸேனர் கூறியதாக அடியாரொருவர் தெரிவித்தபோதுதான், "அப்படின்னா என்ன?" கேட்டார்.

கேசவ் சந்திர ஸேன் அன்றைய ஆன்மிய வானில் ஒரு சுடர்த்தாரகை. பிரம்ம ஸமாஜப் பெருந்தலைவர்.

Koviloor Digital Library

கிறிஸ்துவ மதக் கொள்கை, மதாநுஷ்டானங்கள் ஆகியவற்றின் பாணியில் ஹிந்து மதத்தை ஆக்கிப் பின் பற்றும் ஓர் அமைப்பே ப்ரம்ம ஸமாஜம். அதன் பெருந் தலைவரை நம் குழந்தை மன குருநாதன் ஈர்த்தார். ஸமாஜத்தினர் கைவிட்ட அநேக ஹிந்து மதக் கொள்கை களை—குறிப்பாக உருவ வழிபாட்டை—கேசவ் ஏற்குமாறு செய்தார். எளிய உவமை காட்டியும் கதை சொல்லியுமே அரிய தத்வங்களை உபதேசித்தும், தமது பிரத்யக்ஷமான அநுபவ சக்தியின் அளாவலைக் கொண்டும் நம் குழந்தை குரு அந்தப் பெருந்தலைவரை மாற்றினார். கேசவர் ஹிந்து மதத்தின் அவதாரக் கொள்கையைக்கூட மதித்து ஏற்க லானார்.

ராமகிருஷ்ணரும் கேசவரும் வாழ்ந்த வங்க தேசத்தில் ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாப்ரபு ஓர் அவதாரமாகவே கருதப்படுபவர். பக்திக் காதலின் உச்சத்தைக் காட்டுவதற் காகப் பரமனே மானுடனாக அவதரிக்க விரும்பினான் அந்த அவதாரம் தான் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் என்பது அவர்களது நம்பிக்கை. பக்திக் காதலின் வார்ப்பு வடிவான ராதையும், அதை ஏற்று அருளிய கண்ணனும் ஒன்று சேர்ந்து கிருஷ்ண சைதன்ய அவதாரம் நிகழ்த்தியதாகச் சொல்வார்கள்.

மதுரபாவ பக்திப் பரவசத்தின் ஸமாதிக் கொடு முடிகளைத் தங்கள் கண்முன்னே காட்டிய ஸ்ரீ பரமஹம்ஸ ராமகிருஷ்ணர் அந்தச் சைதன்யரின் அவதாரமே என்று அவரது அணுக்க அடியார்களில் பலர் கருதினார்கள். சைதன்யர் தமது அத்யந்த பக்தர் பரிவாரத்துடன் மீண்டும் அவதரிப்பாரென்று அவரைப் பற்றிய நூல்களில் கூறியிருப் பதைத் தங்களுக்கு ஆதாரமாகக் கொண்டார்கள். அந்தப் பரிவாரத்தில், ஸ்ரீ ராமனுக்கு இலக்குவன் போல, சைதன்யரோடு இணை பிரியாதவர் நித்யாநந்தர். ராதையும் கண்ணனும் ஒன்று சேர்ந்து சைதன்யரானார்களென்றால், அந்தச் சைதன்யரும் நித்யாநந்தரும் ஒன்றுசேர்ந்தே டாகுர் ஸ்ரீ ராமகிருஷ்ணராகியிருப்பதாகச் சிலர் கருதினர்

Koviloor Digital Library

கள். டாகுருமே அவ்வப்போது தமது குழந்தைத்தன மெத்து முகில்களை விலக்கி, பின்னுள்ள தெய்விக ஸூர்ய சக்தியைக் கதிர் பரப்பும் போது இக் கருத்துக்களின் உண்மையை உறுதி செய்ததுண்டு.

கேசவ சந்திர ஸேனரைப் பின்பற்றி பிரம்ம ஸமாஜத்தில் ஒரு கணிசமான பகுதியினர் நமது குரு மஹராஜிடம் மதிப்பு மரியாதைகள் பாராட்டினர். ஸமாஜ விழாக்களுக்குக்கூட அவரை அழைப்பார்கள். அவரும் சென்று அன்பு வெள்ளம் பொழிந்து வருவார். பாண்டித்தியம் அறியாத நமது எளிய குழந்தை குருநாதன் தம்மை மறந்து பரவச நடனம் செய்ய, மெத்தப் படித்தவர்களும் மேற்கத்திய முறைகளில் முழுகியவர்களுமான பிரம்ம ஸமாஜத்தினரும் குழந்தை களாகி அவரோடு ஆடிப் பாடி ஆனந்திப்பார்கள்.

இருந்தாலும் அவர்கள் தங்கள் தலைவரான கேசவரையே ராமகிருஷ்ணருக்கும் மேலாகக் கருதினார்கள். அவர்களில் அவதாரக் கொள்கையை ஏற்றவர்கள் கேசவரையே நமது நவயுக அவதாரமாகக் கொண்டதுமுண்டு.

"நிமாயி ஸந் - ந்யாஸ்" என்ற நாடகம் ஒருநாள் கேசவரின் வீட்டில் நடைபெற்றது. நிமாயி என்பதும் சைதன்யர்தான். அவர் ஸந்நியாஸம் பூண்ட உருக்கமான கட்டம் வங்கத்தின் கவி வாணர்கள், நாடகாசிரியர்கள், நாட்டுப் பாடல்காரர்கள் ஆகியோரில் பலரது நாநயத்தைத் தூண்டியிருக்கிறது. அவற்றில் ஒன்றுதான் அன்று கேசவர் வீட்டில் நடந்த "நிமாயி ஸந் - ந்யாஸ்" நாடகம்.

அதற்கு ஸ்ரீராமகிருஷ்ணரை அழைத்துப் போனார்கள்.

அங்கே சில பிரம்ம ஸமாஜிகள் கேசவரே சைதன்யர் என்றும், ஸமாஜத்தின் மற்றொரு முக்யஸ்தரான பிரதாப் சந்திர மஜூம்தார்தான் நித்யாநந்தர் என்றும் சொன்னார் கள்.

Koviloor Digital Library

ப்ரஸன்னர் என்ற அடியாருக்கு இது ஏற்கவில்லை. நிமாயியும் நிதாயி*யும் சேர்ந்து ஸ்ரீ ராமகிருஷ்ணராகியிருக்க இதென்ன வேறிருவருக்குப் பீடம் போடுகிறார்களே என எண்ணினார். ராமகிருஷ்ணரிடமே, "அப்படியானால் நீங்கள் யாராம்?" என்று கேட்டார்.

இதற்குப் பொய்யறியாப் புண்ணியர் என்ன பதில் சொல்லப் போகிறார் என்று ஆர்வம் மீதூறக் கேசவர் அவரது உதட்டையே பார்த்துக் கொண்டிருந்தார்.

உதடு கேசவரைப் பார்த்து உதிர்த்தது முத்துக்களை : "நான் யார்? உங்களுடைய அடியார்க்கு அடியான், உங்கள் பாத தூசின் தூசு."

முத்தியையே தரும் விநயத்தைவிட ஒரு முத்து உண்டா?

கேசவ் புன்னகை புரிந்தார். ப்ரஸன்னரைப் பார்த்து, "நீங்கள் இவரைப் பிடிக்கமுடியாது. இவர் யாருக்கும் அகப்படமாட்டார்!" என்றார்.

இந்த நிகழ்ச்சியை இன்று, அதாவது 1884 ஏப்ரில் ஐந்தாம் தேதி, குரு மஹராஜே தக்ஷிணேச்வரத்தில் சில அன்பர்களிடம் நினைவு கூர்ந்தார். அவதாரத்வ மகிமைப் பகட்டு சற்றுமில்லாமல் ஸர்வ ஸாதாரணமாகக் கூறினார்.

யாருக்கும் அகப்படாத ஆண்டவனிடமும் அவதார வியக்திகளிடமும் நமது அகம் அன்பு பட்டால் அதிலே அவர்கள் 'அகப்பட்டு' விடுவர்தானே? அப்படி அன்பு பட்ட கேசவ் ராமகிருஷ்ணரின் ரகசியத்தை அறிந்துகொண்டு பேசியதாக இப்போது ஓர் அடியார் தெரிவித்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் சைதன்யரே ராமகிருஷ்ணர் என்று கேசவர் சொன்னார் என்றார் அவ்வடியார்.

இதைத் தெரிவிக்கையில் அவ்வடியார், "உங்களை நைன்டீன்த் ஸெஞ்சுரியின் சைதன்யர் என்று கேசவ் சொல்லியிருக்கிறார்" என்றார்.

---

* நிதாயி என்பது நித்யானந்தரே.

Koviloor Digital Library

அப்போதுதான், "அப்படீன்னு என்ன?" என்று எளிமையின் ஏந்தல் கேட்டார். "நைன்டீன்த் ஸெஞ்சுரி" என்ற ஆங்கில வார்த்தைகள் அவதாரனுக்குத் தெரியாது!

தெரியாததை மனசு விட்டுக் கேட்பான் நம் எளிய பெரியான்.

ஆம், இந்த ராமகிருஷ்ணர்தான் எப்பேர்ப்பட்ட பச்சைக் குழந்தையாயிருந்திருக்கிறார்! இருபதாண்டுகளுக்கு முன்பே, அதாவது அவருக்கு முப்பது நிரம்புவதற்கு முந்தியே, அவதார புருஷராக அறியப்பட்டவர் அவர். அப்படி அறிந்தவர்களோ அற்ப சொற்பமானவர்களல்ல. யோகீச்வரியான பைரவி ப்ராம்மணி என்ன, பண்டித மலையான வைஷ்ணவசரண் என்ன - அவர்களெல்லாம் அன்றே அவரை அவதாரராக உணர்ந்திருக்கிறார்கள்.

மற்றொரு பெரும்புள்ளியான கௌரீகாந்தர் அவரிடம், "உங்களை அவதாரம் என்று சொல்கிறார்கள்? எத்தனை தவறான மதிப்பீடு? தனது சிறு அம்சத்தினாலேயே அத்தனை அவதாரங்களையும் நிகழ்த்தும் மூல பரமாத்மனே அல்லவா நீங்களாக மூர்த்திகரித்து வந்திருக்கிறது?" என்று வியந்திருக்கிறார்.

இப்படி அவர்கள் போற்றிய அப்போதெல்லாம் நம் கதாநாதர் அவதார அந்தஸ்து கொண்டாடிக் கொண்டு அரியணை ஏறியதில்லை. அறியாக் குழந்தையேயாகித் தம்முடைய அம்மா காளியின் அடியிணையில்தான் கிடந்தார். "அவதாரமோ, கிவதாரமோ, எனக்கு ஒன்றும் தெரியவில்லை. இந்த மட்டுக்கும் என் அநுபவங்களும், நான் பண்ணும் விசித்ரங்களும் வியாதி இல்லை, பைத்தியமில்லை என்கிறீர்களோ இல்லையோ? அது போதும் எனக்கு. மற்றபடி எனக்கு என்ன தெரியும்?" என்றே சொல்வார்.

அவரில் அவதாரனை, மூல பரமாத்மனைக் கண்டவர்கள் உள்ளம் குழைவார்கள். நாத் தழுதழுக்க, "வாஸ்தவந்தான்!

Koviloor Digital Library

த்ஸோ அங்க வேத யதி வா ந வேத என்று தானே வேதத்திலேயே சொல்லிருக்கிறது?*" என்று கூறி அவருடைய அடியிணையில் பணிவார்கள்.

இருபதாண்டுகளுக்குப் பின்பு இன்றும் அவர் அதே குழந்தையாகத்தான் இருக்கிறார். ஐம்பதை நெருங்குபவர்கள் அவர் காலத்தில் தாத்தாவாகவே மதிக்கப்பட்டார்கள். அதிலும், சிறு குடிலில் ஆனை புகுந்து அதைச் சிதைப்பது போல அவருள் புகுந்து புரட்டிய பரவச அநுபவங்களால் அவரது உடல் சீக்கிரமே கிழடு தட்டியிருந்தது. விவேகாநந்தர் கூட அவரை "தக்ஷிணேச்வரத்துக் கிழவர்" என்றே சொல்வார். ஆயினும் அந்தக் கிழவர் இன்றும் உளப் பாங்கில், பேச்சில், செயலில் பிஞ்சுப் பிள்ளையாகவே இருந்து கொண்டிருந்தார்.

இருபதாண்டுகளுக்கு முன்பு வெளியுலகு அதிகம் அறிந்திராத ராமகிருஷ்ணரை ஓரிருவரே அவதாரமாகக் கருதினார்களெனில் இன்று உலகம் ஓரளவு நன்கு அறிந்துவிட்ட அவரை இன்னும் நன்றாக அவதாரமாகவே அறிந்தவர்களும் எண்ணிக்கையில் கூடிவிட்டனர். அவர்கள் அவரது குழந்தைமையையும் துளைத்துக்கொண்டு கடவுண்மையைக் காணும்படியாக அவரது தெய்வசக்தி இந்த இருபதாண்டுகளில் அதீத அநுபவங்களாகவும், அற்புத உபதேசங்களாகவும் பொங்கிப் பெருகியிருக்கிறது. ஏன், அவரே அவ்வப்போது ரஹஸ்யத்தை ஓரளவு அவிழ்த்துத் தம்மை அவதாரராகக் காட்டிக் கொண்டதுமுண்டு.

ஆயின் இவற்றையும் ஊடுருவிச் சென்று அவரது குழந்தைமை இன்றும் அவரது இதய மலரின் பொகுட்டுள்ளிருந்து மணம் வீசிக் கொண்டேயிருக்கிறது.

ஸ்ரீ பரமஹம்ஸ ராமகிருஷ்ணரிடம் இது ஓர் அலாதி அழகு. எந்த மஹா ஞானி, மஹா பக்தர் அல்லது அவதார

---

* "அந்தப் பரம்பொருளுக்குமே தன்னைத் தெரியுமோ, தெரியாதோ?" —ரிக் வேதத்திலுள்ள நாஸாதீயஸூக்தம்.

Koviloor Digital Library

புருஷரிடமுமே அவ்வப்போது குழந்தைத்தன்மையைப் பார்க்கத்தான் செய்கிறோம். ஆயினும் இவரிடமோ "அவ்வப் போது" இல்லாமல் "பெரும்பாலும்" குழந்தை அழகைக் காண்கிறோம். மற்ற மஹான்களிடம் பாலத்தன்மை பாயஸத்திலும் ஹல்வாவிலும் முந்திரி போல; இவரோ முந்திரியாலேயே செய்த கேக்!

அவரை டாகுர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ குரு மஹராஜ் என்று பெரிதாக அழைத்துக் கும்பிடுகிறோம். டாகுர் என்றால் தெய்வ புருஷர். பரமஹம்ஸர் என்றால் துறவியரின் பல பிரிவுகளில் உச்சப் பிரிவில் இருப்பவர். குருமஹராஜ் என்பது பெருமை மிக்க ஆசார்யனாக அரியணை யில் வீற்றிருப்பதைக் குறிக்கும். இந்த அடைமொழிக ளெல்லாம் அவருக்கு நூறு சதமும் பொருந்துவது உண்மை தான். அதைவிடவும் அதிசய உண்மை என்னவெனில் தெய்வபுருஷரே சாமானியத்திலும் சாமானியமனிதராயிருந் தார்! உச்சத் துறவியே பரம பாமரரோடு அவர்களில் ஒருவராக உறவாடினார்! அரியணை வீற்ற ஆசான் அற்ப ஸமாசாரங்களும் தெரியாதவராக,"அப்படின்னா என்ன?" கேட்டுக் கொண்டிருந்தார்.

இருக்கட்டும். ஆனால் ஏனைய மக்களிடம் காண இயலாத ஓர் இனிமை எழில் அவரது இந்த சாமானியப் பாமர அறியாமையில் சொட்டுகிறதே! நம் உள்ளங்களை அவரிடம் வசீகரம் செய்து வைக்கிறதே! "இதன் ரஹஸ்யம் என்ன?" என்றால் அதுதான் அவரது குழந்தையியல்பு. ஒரு குழந்தை எது செய்தாலும் அதன்மூலம் எந்த உள்ளத்தையும் சொக்க வைக்கிறதல்லவா?

Koviloor Digital Library

தக்ஷிணேச்வரத்துக் கிழவர் என்று அவரை நரேந்திர விவேகாநந்தர் குறிப்பிட்ட போதிலும் தக்ஷிணேச்வரத்துக் குழவியாக—அங்கே குடிகொண்டிருந்த தக்ஷிணகாளியின் ஸாக்ஷாத் மதலையாகவே—ஆயுள் முடிய இருந்தவர் அவர். அவரது ஒவ்வோர் அம்சத்திலும் பிரிக்க முடியாமல் குழந்தைமையைக் கோத்து வாங்கியிருந்தது. உடலிலும் கூட ஒரு புறம் கிழடு தட்டியிருந்தாலும், இன்னொரு புறம் குழந்தையின் கவடற்ற அழகு ததும்பிக் கொண்டிருந்தது. உடம்பில் உடை தரிக்காமல் பிறந்த மேனியாக அவர் இருந்த போதுகள் அநேகம். எவருக்கும் விகல்பமே தெரியாது. நேரே பார்த்தவர்கள் குழந்தையைப் பார்ப்பது போலவே இருந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆண் பெண் வித்யாஸம் தெரியாத குழந்தையாய் அப்படி இருந்தார். குரலோ கிழடு தட்டாமல் பச்சிள மதுரமாகவே என்றும் இருந்தது. ஒரே பாட்டும், சிரிப்பும், கலகலப்புமாக விளையாட்டுப் பிள்ளையாகவே இருந்தார். அவ்வப்போது ஒரு சிறு திக்கல் அவரது பேச்சில் ஏற்படுவதும் குழந்தைத் தன்மையைப் பூர்த்தி செய்வதாகவே இருந்தது. வார்த்தைகளை ஒருவித மழலையாகவே உச்சரிப்பார். 'கிழவர்' என்று சொன்ன நரேந்திரரை 'நரேந்திரா' என்று சொல்ல அவருக்கு வராது. 'நரேந்தர்' என்றே மழலை மொழிவார். ஸுரேந்திரரை 'ஸுரேந்தர்' என்பார்.

சொல்லும் விதம் மட்டுமல்ல, அதைச் சொல்லும் மனப்பாங்கும் குழந்தையுடையதாகவே இருக்கும். பாரதி பாடினாற்போல—

சொல்லு மொழிகள் குழந்தைகள் போலொரு
சூதறியாது சொல்வான்.

இலக்கிய மொழியாயில்லாமல், பண்பாளர்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கும் நம்முடைய பேச்சு மொழியாகக் கூட இல்லாமல் குழந்தை பாஷையிலேயே பேசுவார். பெரிய விஷயங்களையும் அப்படிக் குழந்தையாகிச் சொல்வார்.

Koviloor Digital Library

உதாரணமாக, தக்ஷிணேச்வரத்தின் பவதாரிணி ஆலயத்தைக் "காளி வீடு" என்றே சொல்வார்! நாம் பேசினால் ரஸக்குறைவாகத் தொனிக்கும் கிராமிய பாஷையிலும் குழந்தை குருநாதன் பேசுவன். உதாஹரணமாகத் தமது அத்வைதகுரு தோதாபுரியைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் அவர் அவதூதர் என்பதால் "நங்ந்தா" (அம்மண ஆசாமி) என்றே சொல்வன். அவன் சொல்லும் போது அதிலும் ரஸக்குறைவு இராது. நமக்கு உடை நழுவுவதற்கும் பூவின் மடல் அவிழ்வதற்கும் உள்ள வித்தியாஸம் அது!

நமக்கு முக்கியமாக இருப்பதை விட்டு விட்டு வேறெதையோதான் பெரிசாக எடுத்துக் கொள்வது குழந்தையியல்பு. அதன்படிதான் இப்போது மஹத்தான அவதார தத்வத்தையும், அதைத் தம்மோடு பொருத்திச் சொன்ன கேசவ சந்திரரே அவரது அன்பர்களுக்கு அவதாரம் என்பதையும் ராமகிருஷ்ணர் கவனம் கொள்ளாமல், 'நைன்டீன்த் ஸெஞ்சுரி' க்குப் பொருள் கேட்கிறார்!

கிறிஸ்து சகாப்தத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டு தான் நைன்டீன்த் ஸெஞ்சுரி என்று பக்தர் விளக்கி, இந்த நூற்றாண்டு காணும் சைதன்யரின் புனரவதாரமே ராமகிருஷ்ணர் என்பதுதான் கேசவர் சொன்னது என்றும் கூறினார்.

"குழந்தை"க்கு அது கொஞ்சங்கூட முக்யமாகப் படவில்லை. "அது கிடக்கட்டும்" என்று தூக்கிப் போட்டு விட்டு, தமக்குப் பரம முக்யமான விஷயத்தைப் பற்றிக் கேட்க ஆரம்பித்தார்.

அந்த முக்யமான விஷயம் என்ன?

சில நாட்களுக்கு முன் அவர் இயற்கைக் கடனுக்காகச் சவுக்கந்தோப்புக்குப் போனபோது கீழே விழுந்து விட்டார். அப்போது அவருடைய இடது கை எலும்பு பிசகிவிட்டது.

Koviloor Digital Library

விபத்து நடந்த அப்போது பாவ பரவசத்திலிருந்த அவருக்கு எலும்பு பிசகியது ஒரு விஷயமாகவே தெரியவில்லை. ஆனால் பிற்பாடு மகிமைச் சூரியனை எளிமை மேகத்தால் இழுத்துப் போர்த்துக் கொண்டதிலிருந்து தமது எலும்புப் பிசகைப் பற்றியே ஓயாமல் விசாரப்படலானார். வருவோர் போவோரிடமெல்லாம் கட்டுப் போட்ட தம் கையைப் பரிதாபமாகத் தூக்கிக் காட்டி வருத்தப்படலானார். அது குணமாக வழி கேட்டு நச்சரிக்கலானார். நோய் படிப்படியாய் குணமடைந்துதான் வந்தது. ஆனாலும் குழந்தை போல 'இப்பவே ஸரியாகணும்' என்கிற பிடிவாதப் பொறுமை யின்மையுடன் அது பற்றியே விசாரப் படுவதும் விசாரிப்பது மாக இருந்தார்.

"இது சரியாகுமோ? நிஜமாக சரியாகுமோ?" என்று வருகிறவர்களையெல்லாம் கேட்பார். குருமஹாராஜரைப் பார்த்துப் பணிய வந்தவர்கள் ஒரு குழந்தைப் பிள்ளையைப் பார்த்துப் பரிவு கொண்டு, "சரியாயிடும்" என்று அதைத் தேற்றிவிட்டுப் போவார்கள்!

ஒரு குழந்தை விலையுயர்ந்த பொம்மையைத் தூக்கி எறிந்து விட்டு உடைசல் சொப்பை எடுத்து வைத்துக் கொள்வதுபோல், இப்போது அவதார ஸமாசாரத்தைக் "கிடக்கட்டும்" பண்ணிவிட்டு, எலும்புப் பிசகு விஷயத் துடன் உறவு கொண்டாடலானார்!

"அது கிடக்கட்டும். இந்தக் கையை எப்படி குணப்படுத் தறது, சொல்லேன். இப்பவெல்லாம் எனக்கு ஸதா இதே நினைப்புத்தான்!"

'இதென்ன? ஞானி, மஹான், ஏன், அவதாரமே என்கப்பட்டவருக்கு எங்கேயாவது தேக விசாரம் இருக் கலாமா?' எனக் கேட்கிறீர்களா? கேட்டுக் கொண்டே இருங்கள். அவரோ இந்த தேஹ விசாரத்தை ஒளிவு மறைவேயின்றி போவோர் வருவோரிடமெல்லாம் வெளியிட்டபடிதான் இருந்தார்.

Koviloor Digital Library

உங்கள் கேள்வியையும் அவரே வெளிப்படக் கேட்டதும் உண்டு. அவரது அமுத மொழிகளைத் திரட்டி அகிலத்துக்குப் படைத்துள்ள "ம"விடம் இக் கேள்வியைப் போட்டார்.

"உடம்பைப் பற்றிக் குழந்தை மாதிரி நான் பொறுமையில்லாமல் கவலைப்பட்டுப் படுத்தறது புதுசில்லை. மதுர்பாபு காலத்திலேயும் இப்படித்தான் இருந்தேன். ஜுரம் வந்துடுத் தோன்னு நினைச்சுண்டுடுவேன். மதுர்பாபு கிட்டே சும்மா சும்மா கையை நீட்டி நாடி பார்த்துச் சொல்லச் சொல்லு வேன். நான் ஏன் இப்படி இருக்கேன்?" என்று"ம"வைக் கேட்டார் மழலை பேசும் மதலை குரு!

அதற்கு "ம" கூறிய விடைக்கு மேல் எதுவும் சொல்ல நமக்குத் தெரியவில்லை. அவர் என்ன சொன்னார்? "ஐயனே! உங்களுடைய உள்ளம எப்போதும் ஸமாதி நிலையிலேயே அமிழ்ந்து இருப்பது. பக்தர் நலனை உத்தேசித்து அதில் ஒரு சிறு கூற்றை சரீரத்திடம் திருப்பியிருககிறீர்கள். அதனால் தான் உங்களுடைய சரீரத்தை ஜாக்ரதையாகக் காப்பாற்று வது குறித்து அவ்வப்போது பொறுமை இழந்து விசாரமாகிறீர்கள்."

உலகத்தாரிடம் அன்பு செய்யவும், உபதேசிக்கவும், அவர்களுக்கு ஆதர்ச வாழ்வு வாழ்ந்து காட்டவும், தெய்வ சக்தியைத் தெரிவிக்கவும் ஒரு மனித காயத்தில் ஆண்டவன் வந்தால்தான் முடிகிறது. அவதாரம் என்பதே இப்படிப் பரதத்வம் நரசரீரம் கொள்வதுதான். ராமகிருஷ்ண அவதாரத்திலோ உடலையும் உலகையும் மறந்து த்வைத மாகவும் அத்வைதமாகவும் ஸமாதியுறும் பக்தி ஞானப் பேரானந்த நிலைகளைக் கண் முன் காட்டும் ஆதர்ச பக்தராக, ஞானியாக அவர் இருக்க வேண்டியிருந்தது. அவரை உடம்பின் பக்கம் எப்படித் திருப்புவது? சிதாகாசத்தில் ஜ்வலிக்கும் அந்த ஸூர்யனை உடம்பு என்ற குடிலுக்குள் எப்படித் திருப்புவது? ஏன், குடிலின் கூரையில் ஓட்டை போட்டால் உள்ளே வருமே கதிரவனின் கதிரொளி!

Koviloor Digital Library

அவனது சக்தியில் அது கோடி கோடியில் ஓர் அம்சந்தான். அதனாலென்ன? துவாரம் எந்த அளவு உள்ளதோ அந்த அளவுக்குப் பூர்ணமாகச் சரேலென உட்பாயும் ஒளிக் கதிர் குடிலின் இருளை விரட்டப் போதுமானதாயிருக்கிறதே! நோய் என்ற பெயரில் அவதாரனின் உடற்குடிலில் துவாரங் களிட்டாள் பராசக்தி. அதன்வழி சிதாகாசக் கதிரவனின் கோடி கோடியில் ஓர் அம்சம் உடலில் இறங்கியது; அதாவது அவதாரரின் கவனம் அதற்குத் திரும்பியது. அப்போதும் வெளியே வானில் கதிரவன் இல்லாமலில்லை. சிதாகாசத்தில் உள் மனம் பதித்தேதான், அதில் சின்னஞ் சிறு கூற்றினை உடலுக்கு அவர் திருப்பியிருந்தார். சிறுகூறே ஆயினும் என்ன? ஸூர்யனின் லவலேச ஒளியே கதிராகிப் படீரென்று துவாரத்தில் பூர்ணமாகக் குதித்துத் துளைத்துக் கொண்டு குடிலை வெளிச்சமாக்கவில்லையா? அப்படித்தான் ராமகிருஷ் ணருடைய உள்ளத்தின் சிறுகூறு கவனமும் நோயுணர்வைப் பூர்ணமாக ஏற்று உடலுணர்வை அழுத்தமுடன் கொண்ட தாகக் காட்டியது. அழுத்தம் குறையாமலிருக்கவே அவர் அதீத விசாரம் கொண்டது. காகிதம் பறக்காமலிருக்கப் பேப்பர் வெய்ட் வைப்பதுபோலத்தான்!

பரவச பாவங்கள் அதிகம் ஏற்படத் தொடங்கிய இளமைக் காலத்திலிருந்தே ஜீர்ணக் குறைவு என்ற நோய் அவரைத் தொடர்ந்து வந்து, அவரை நம் பொருட்டு சரீர உணர்வு கொள்ளுமாறு செய்தது. அதை வெட்கப்படாமல் வெள்ளையாக அவர் வெளிப்படுத்தியதற்குக் காரணம் அவரது சிரஞ்ஜீவி சிசுத்தன்மையேயாகும்.

மிகமிக மலைக்கத்தக்க அவரது அதீதானுபவங்களை மட்டுமே அவர் வெளியிட்டிருந்தால் அவரை அணுகி அன்பு செய்யவும், அன்பு பெறவும் உலகம் தயங்கி எட்டியே நின்றிருக்கும். ஆனால் அன்பு புகட்டுவதே அவதாரத்தின் தலையாய பயனாயிற்றே! அதனால்தான் பராசக்தி மகிமை மலையான ஸ்ரீ ராமக்ருஷ்ணரில் எளிமை எழிலைப் பரிபூர்த்தி யாக்கி, பச்சைப் பசும் பாலகனாக அவரைச் செய்திருந்தாள்

Koviloor Digital Library

அவரைப் பொறுத்தமட்டில் அவர் தம்மை ஞானியாகவோ, மஹானாகவோ, அவதாரமாகவோ கருதாமல் குழந்தையாகவே நினைத்துக் கொண்டிருந்தார். கடைசி வரையில், 'இதனால் நம் ஞானி பீடத்துக்கு, மஹாத்ம சிம்மாஸனத்துக்கு, அவதார உச்சாணிக்கு இழுக்கு வருமே' என்ற கவலையின்றி, தம் குழந்தைமையை வெட்கப் படாமல் வெளிக் காட்டிக் கொண்டார்.

இறுதியில் புற்று நோயுற்றபோது ஒருநாள் டாக்டர் ராகால் என்பவரின் சட்டையைத் திரும்பத் திரும்ப இழுத்து, "ஐயா, என் ஐயா! என் தொண்டையைக் குணப் படுத்திவிடுங்களேன்" என்று மன்றாடியிருக்கிறார்!

அது ஆழ்ந்த சரீராபிமானம் கொண்ட நம்முடைய அஞ்ஞான மன்றாடல் அல்ல, குழந்தையின் ஞான - அஞ்ஞானத் தொடர்பற்ற வெகுளி மன்றாடலே என்பது அடுத்த நிமிஷமே அவர் நடந்து கொண்ட விதத்திலிருந்து தெரியும் :

டாக்டரிடமிருந்த 'லாரிங்கோஸ்கோப்' கருவியில் அவரது பார்வை பட்டது.

மருத்துவக் கருவி குழந்தைக்குப் பொம்மையாயிற்று! உடலுக்காக மன்றாடியது அப்படியே மறந்துபோய் 'பொம்மை'யிடமே குழந்தைக் குருவின் சிந்தை முழுதும் பதிந்தது! வாயெல்லாம் பல்லாக டாக்டரிடம், "அது என்னன்னு எனக்குத் தெரியும். உள் தொண்டை அதிலே அப்படியே பிரதிபலிக்குமே!" என்றார்.

உடம்பும் அப்படியொரு பொம்மையாகத்தான் அவரது ஈடுபாட்டைக் கவர்ந்தது. இந்த நிமிஷம் உயிராய் நேசிக்கும் ஒரு பொம்மையை அடுத்த நிமிஷம் தூக்கிப் போட்டுவிட்டு இன்னொரு பொம்மையில் ஈடுபடும் குழந்தையாகப் பல பொம்மைகளை மாற்றி மாற்றி வைத்துக் கொண்டு விளையாடிய பாலர் நம் ராமகிருஷ்ணர்.

பொம்மை ரொம்பவும் மூளியாக வேண்டுமென்றில்லை; எங்கேயோ கொஞ்சம் அதில் சாயம் உதிர்ந்திருந்தாலும்

Koviloor Digital Library

ஒரு குழந்தை 'மாய்ந்து' போய்விடுவதில்லையா? அப்படித் தான் புற்று நோய், எலும்புப் பிசகல் என்று பெரிதாக ஏற்படவேண்டுமென்பதில்லை; உடம்புப் பொம்மைக்கு ஏதோ சின்ன ஹானி ஏற்பட்டாலும் நம்முடைய குருக் குழந்தை குறுகிப் போய்விடும்.

ஒரு சமயம் அவர் பாதம் கொஞ்சம் வீக்கம் கண் டிருந்தது. "மாஞ்சு" போய்விட்டார்! வருகிற அடியார்களை எல்லாம் அந்தப் பொன்னடியைத் தொட்டு அழுத்திப் பார்க்கச் சொன்னார். அழுத்தியபோது வீக்கத்தில் குழி விழுந்தது. "இது ஒன்றுமில்லை, பயப்பட வேண்டாம்" என்று அவர்கள் சொன்னார்கள்.

இருந்தாலும் பயப்படத்தான் பயப்படுவேன் என்று பிடிவாதமாயிருந்தார் குரு மஹராஜ் என்ற குருத்துக் குழந்தை.

அவர் "நாரன்" என்று குழந்தை போலச் சொல்லும் சிஷ்யப்பிள்ளை நாராயணிடம், "உன் காலை விரலால் அமுக்கிக் காட்டு" என்றார்.

அந்தப் பிள்ளை அப்படியே செய்தான். ஆரோக்யமாக இருந்த அவன் காலிலும்தான் குழி விழுந்தது. அதில் ராமகிருஷ்ணர் கொஞ்சம் நிம்மதி பெற்றார். கொஞ்சம் தான்; முழு நிம்மதி அல்ல. எப்படியிருந்தாலும் கவிராஜ் (நாட்டு வைத்தியர்) ஸிந்தி மஹேந்திரர் தம்மை வந்து பார்த்தாக வேண்டுமென்றார்.

கவிராஜும் வந்தார். அவரிடம் தம் "உடம்பு", நாரனுக்கும் குழி விழுந்தது, அதனால் தாம் ஆச்வாஸமுற்றது —ஆகிய எல்லா விவரத்தையும் பச்சைப் பிள்ளையாக ஒப்பித் தார். ஒப்பிக்கும்போதே மறுபடி குழந்தைச் சந்தேஹம் வந்துவிட்டது. எதிரிலிருந்த ப்ரிய முகர்ஜி என்பவரிடம், "நீ உன் காலை அமுக்கிண்டு காட்டுவியா?" என்றார்.

முகர்ஜி அப்படியே செய்தார்.

Koviloor Digital Library

"குழி விழுந்திருக்கா?"

"விழுந்திருக்கு, ஸ்வாமி!"

"அம்மாடி! இப்பத்தான் நிம்மதியாயிருக்கு" என்று மகிழ்ந்து போனுர் மஹராஜ் குரு!

மணி மல்லிக் என்ற அடியார், "ஐயா! நீங்கள் ஏன் இதற்குப்போய் விசாரப்பட வேண்டும்? கங்கையிலே ஸ்நானம் பண்ணுங்கள். மருந்தே வேண்டியதில்லை" என்ருர்.

"நன்ருகச் சொன்னீர்கள்! அது அப்படியில்லை, ஐயா" என்ருர் ராமக்ருஷ்ணர். "உங்க விஷயமெல்லாம் வேறே. இதை (தம்மை) அம்பாள் கொழுந்தை மாதிரி நிலைமையிலே வெச்சிருக்கா" என்ற மஹா ஸத்தியத்தை எளிசாகச் சொன்னுர்.

அம்பிகையுடைய அந்த அம்பிப் பயலின் குண அழகு களில் சில காணவே இங்கு பிரவேசித்திருக்கிறேம்.

★

நமக்குப் பெரிய குறையான அறியாமையும் குழந்தைக்கு அலங்காரமாகிறது. எவ்வளவு ரஸிப்போடு 'அறியாக் குழந்தை' என்கிறேம்? "நைன்டீன்த் ஸெஞ்சுரி" போல இன்னும் பல அறியமாட்டான், நம் குழந்தைப் பெரியான்.

பிற்காலத்தில் ராமகிருஷ்ண தர்மத்தைப் பாரில் பரப்பவே பிறப்புக்கொண்ட அவரது சீஷப் பசங்கள் அவரிடம் கூடியிருந்த நாட்களில் ஒன்று. அவர்களில் பலர் பட்டப்படிப்பு பெறுபவர். இவரோ பட்டிக்காடு. அவர்களில் சிலருடைய பகுத்தறிவுக்கும் இவருடைய நம்பிக்கைக்கும் மலைக்கும் மடுவுக்குமாக இருக்கும். அவர்களுடைய ஸயன்ஸ் இவருடைய அநுபவத்தில் வராது. இவருடைய அநுபவங்கள் அவர்களுடைய ஸயன்ஸுக்கு ஒத்துவராது. ஆயினும் இவரோடு அவர்கள் ப்ரேம பாசத்தில் கட்டுண்டு

Koviloor Digital Library

கரைந்தனர். எதிரெதிர் துருவத்தில் இருக்கப்பட்டவர்கள் இவரது வழியில் வருவதுதான் இவருடைய வழியின் ஸத்யத்வத்துக்கு உறுதியான அத்தாட்சியாகும் என்பதாலேயே அம்பிகை இப்படி விசித்ரமாக குரு சிஷ்ய சங்கத்தை ஸங்கல்பித்திருந்தாள்!

குருதான் குழந்தை உரு ஆயிற்றே! அதனுல் அவர்கள் கை கட்டி வாய் பொத்தித் தொழும்பு செய்ய மாட்டார்கள். இவரும் 'கப்சிப் கபர்தார்' எதுவும் செய்யமாட்டார். ஆயினும் பரஸ்பரம் பரம அன்போடு அவர்கள் இவருக்கான பணி யாவும் இதயமாரச் செய்ய, இவரும் தாயினும் சாலப் பரிந்து அவர்களுக்கானதை எல்லாம் செய்வார். ஸ்வாதீன அன்பு என்பது முழு எழிலோடு அங்கு திகழ்ந்தது.

அவருக்கு எதிரில் ஒரு நாள் அவர்கள் அவருக்குப் புரியாத மின்ஸார விந்தைகளைத் தங்களுக்குள் கொட்டி அளந்து கொண்டிருந்தார்கள். அதிலே 'எலெக்ட்ரிஸிடி' என்ற வார்த்தை அதிகம் அடிபட்டதைத்தான் அவர் புரிந்து கொண்டார். அதுவும்கூட அரைகுறையாகத்தான்!

"எலெக்டிக்டிக்-னு திரும்பித் திரும்பிச் சொல்றீங்களே! அப்படீன்னு என்ன?" என்று கேட்டார் அப்பாவியாக!

"டிக்டிக்" என்பது அப்படியே குழந்தைகள் பாஷையாக இல்லை?

இன்னொன்று;

வங்கத்தின் அரசியல் முனிவர்களில் ஒருவரான அச்வினி குமார் தத்தர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்து வணங்கி எழுகிறார்.

ராமகிருஷ்ணர் "நாராயண, நாராயண" சொல்லி ஆசிக் கை காட்டுகிறாரா? இல்லை.

"ஓம் சாந்தி" சொல்லிக் கண்ணைச் சொருகிக் கொள்கிறாரா? இல்லவே இல்லை.

Koviloor Digital Library

விந்தையான குழந்தைக் குரு மஹராஜர் அவரிடம், "புளிப்பா தித்திப்பா, ரெண்டும் கலந்து—பாட்டிலைத் திறந்தவுடனே 'ஸர்ர்ர்'னு நுரை வருமே! அது பேர் என்ன?" என்கிறார்.

"லெமனேட்" என்கிறார் தத்தர்.

"ஆங், ஆங்! அதுதான்! வாங்கிண்டு வரேளா?" என்கிறார். உலகின் சித்தப் பித்தம் நீக்கவே லெமனேடாக வந்த அவதாரர்.

'பென்ஷன்' என்பதைப் 'பென்ஸில்' என்றுதான் சொல்வார் சரியாகப் பென்ஸிலைப் பிடிக்கத் தெரியாத நம் டாகுர்.

குழந்தைகள் ஒரு சில ஆங்கில வார்த்தைகளைத் தெரிந்து கொண்டு அவற்றைப் பிரயோகித்துக் காட்டிப் பெருமைப் படுவதுண்டல்லவா? இப்படியும் செய்திருக்கிறார் நமது சாச்வத பாலர்.

திரவத்தில் வஸ்துவை 'டிஸால்வ்' செய்து (கரைத்து) அது 'டைல்யூட்' ஆனதாக (நீர்த்துப் போனதாக) எவரோ பேசி அவர் கேட்டிருப்பார் போலிருக்கிறது. 'டைல்யூட்' என்ற வார்த்தையைப் பிடித்து வைத்துக் கொண்டு விட்டார்—ஆனால் தப்பான அர்த்தத்தில்! கரைந்து போவது என்பதற்கு ஆங்கிலம் 'டைல்யூட்' என்று எண்ணிக்கொண்டு விட்டார். இந்தத் தவறான பொருளிலேயே அந்த வார்த்தையை உபயோகித்துத் தம்முடைய ஆங்கில (அஞ்)ஞானத்தைக் காட்டிக் கொள்வார்!

உதாரணமாக, "எனக்கு எந்த (திவ்ய) பாவம் வந்தாலும் அது ஒண்ணு மட்டுமே வேறே எந்த பாவமும் கலக்காமல் என்னை முழுசாக ஆட்கொண்டுவிடும். நான் அதிலேயே 'டைல்யூட்' ஆயிடுவேன்" என்பார்.

என்னதான் திவ்ய பாவம் வரட்டுமே, தமது குழந்தை பாவம் போகவே போகாது என்று காட்டுவது போலிருக் கிறது!

Koviloor Digital Library

ஸரியான பொருளில் அவர் உபயோகித்த ஆங்கிலச் சொற்றொடர்களில் சில: 'ஸ்கூல் பாய்', 'தாங்க் யூ', 'யங் பெங்கால்'. (அக்காலத்தில் வங்கத்தில் பழமையை ஒதுக்கி நவீனப் புரட்சி செய்த இளைஞர்கள் தங்களை 'யங் பெங்கால்' என்று கூறிக் கொண்டனர்.) ஆங்கில பாணிகளைத் தழுவிய இந்தியரை "இங்க்லீஷ்மான்" என்பார்!

டாகுர் தமாஷான நன்றிப் பணிவோடு "தாங்க் யூ" சொல்வது அத்தனை இனிமையாயிருக்குமாம்.

நரேன் ஒரு நாள் ராமகிருஷ்ணரின் திருமுன்னர் "ம"வுடன் உரையாடிக் கொண்டிருந்தார். ஞானமும் பக்தியும் ஒன்றே என்று ராமகிருஷ்ணர் கூறியதைக் குறித்தே உரையாடல். அப்போது ஹாமில்டனின் வாசகம் ஒன்றை நரேன் மேற்கோள் காட்டினார். 'கற்றறிந்த பிறகும் ஏற்படும் அறியாமையில்தான் தத்வ வாதம் முடிகிறது; மத உணர்ச்சி பிறக்கிறது' என்று பொருள்படும் வாசகம்: "A learned ignorance is the end of philosophy and the beginning of religion".

தமது வழக்கமான, "அப்படீன்னா என்ன?" கேட்டது குருக் குழந்தை.

நரேந்திரர் விளக்கினார்.

குருக் குழந்தையின் முகம் ஆனந்தத்தில் பொன்னாயிற்று. ஆருயிர் சீஷப் பிள்ளையைப் பார்த்து, "தாங்க் யூ! தாங்க் யூ!" என்று இருமுறை கூறினார்.

அந்த அழகில் சொக்கிச் சிரித்தனர் அங்கு கூடியிருந்த அனைவரும்.

இதைவிடவும் சொக்கிச் சிரிக்கவைத்த குழந்தைமை இன்னொன்று: அவர் தமக்கே "தாங்க்ஸ்" கேட்டுக் கொண்டது! சியாம்புகுரில் புற்றுநோயுற்றுப் படுத்திருக்கிறார் புனிதர். அந் நிலையிலும் டாக்டர் ஸர்க்காரிடம் உவமைக் கதையால் உபதேசிக்கிறார். அதை ரஸித்த டாக்டர், "பேஷான வார்த்தைகள்" என்கிறார்.

Koviloor Digital Library

"என்ன வார்த்தைகள்?" என்று குழந்தைப் பெருமிதத்துடன் புன்னகைத்துக் கேட்கிறது பரமஹம்ஸம்.

"பேஷான" என்று திரும்பவும் கூறுகிறார் டாக்டர்.

"அப்படியானால் எனக்கு 'தாங்க் யூ' சொல்லுங்கள்" என்கிறது ஹம்ஸம்!

நமக்கு இத்தனை இன்பூட்டும் அந்த அன்னையின் அன்னத்துக்கு எத்தனை 'தாங்க் யூ' தான் சொல்லக்கூடாது?

சொக்கிச் சிரிப்பதன் சிகரத்துக்கு மற்றவர்களை அவர் ஏற்றுவிக்கும் ஒன்று உண்டு. கடாபுடா என்று ஆங்கிலம் பேசித் தங்களைப் பகட்டாகக் காட்டிக் கொள்வோரைப் போல அவர் நடித்துக் காட்டுவதுதான் அது. ஆங்கிலம் அறியாத அவர் அப்போது ஆங்கில மொழி பேசுவது போலவே சப்த ஜாலம் செய்வதில் சொக்காதவர் இருக்க முடியாது.

உதாரணமாக, துணியில் எங்கோ சிறிது சாயம் பட்டு விட்டாலும் அது முற்றிலும் பரவிப் படர்வது போல எதிலேனும் சிறிது அறிவு பெற்றுவிட்டாலும் அதுவே சாமானியரின் நடத்தை முழுதிலும் பகட்டாக வியாபித்து வெளிப்பட ஆரம்பித்துவிடும் என்று ஒரு நாள் கூறிய குரு மஹராஜ் தொடர்வார்: "நீங்களே பார்த்திருக்கீங்களோல்லியோ? ஏதோ கொஞ்சம் இங்கிலீஷ் படிச்சுட்டா உடனே பூட்ஸ் போடறீங்க, விஸில் அடிக்கிறீங்க! ஃபுட், ஃபட், இட், மிட்—னு இங்கிலீஷிலே போட்டு உடைக்கிறீங்க!"

மிடுக்கறியா நம் குரு மஹராஜும் மிடுக்கு மிக்க ஒரு யுவராஜாகி, "ஃபுட், ஃபட், இட், மிட்" என்று போட்டு உடைக்கும்போது எவர்தான் சொக்கிச் சிரிப்பதன் உச்சிக்குப் போகாதிருக்கமுடியும்?

தமக்கு ஆங்கிலம் தெரியாவிட்டாலும் நரேன், "ம" போன்ற படிப்பாளிகளைத் தம் முன் ஆங்கிலத்தில் வாதம்

Koviloor Digital Library

செய்து கொள்ளச் சொல்லி ஸ்ரீ ராமக்ருஷ்ணர் தூண்டுவதுமுண்டு. சிஷ்யமணிகளின் அறிவுப் பிரகாசத்தைக் கண்டு ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தாயாக மகிழ்வதற்கல்ல; அவர்களுடைய ஸாமர்த்திய வாதத்தைப் புரிந்து கொள்ள முடியாத அறியாச் சேயாகத் தாம் அதிசயித்து நிற்கும் எளிமைக்காகவே!

★

ராமகிருஷ்ணரை பாலனுக்கிய இன்னொரு அம்சம் அவர் தின்பண்டங்கள் விரும்பிக் கேட்டு உண்டு உவந்ததாகும்.

'பரமஹம்ஸர் என்ருல் உடலின் ஸகல ருசிகளும் அற்றுப் போனவராக அல்லவோ இருக்கவேண்டும்? தின்பண்டங்களாவது, விரும்பிக் கேட்பதாவது, உண்டு உவப்பதாவது?' என்கிறீர்களா?

சற்று முன் சொன்னதை மறக்காதீர், ஸ்வாமி! உலகுக்கு அன்புறவைக் காட்டுவதற்காக ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரீரப் பிரக்ஞை கொள்ளவேண்டியிருந்தது என்றும், அதற்காக நோய் மூலம் அவரது உடற் குடிலில் பராசக்தி துளையிட்டு உலகப் பிரக்ஞையின் ரச்மியை அதனுள் செலுத்தினுள் என்றும் சொன்னேமல்லவா? அதன் ஓர் அங்கமாகவே ஆகாராதிகளில் அவ்வுடலுக்கு அவ்வப்போது ஆசை தோன்றவும் செய்தாள். நோயால் துளையிடுவதில் கடுமை தெரிகிறதல்லவா? அதற்கு மாற்ருகவே, வேய்ந்த கூரையில் ஓட்டை போடுவது என்றில்லாமல், கூரை வேயும் போதே அங்கங்கே வெளிச்சத்துக்குக் கொஞ்சம் இடுக்கு விடுவது போல, குழந்தைத்தன்மை வாய்ந்த ஒரு உணவுப் பண்ட நசையை அவருக்கு ஏற்படுத்தியிருந்தாள். மதுர குண குருக் குழந்தை நோயில் வருந்துவதாலேயே சரீராபிமானம் கொள்ளக் கண்டால் நமக்கு வேதனையாயிருக்குமே என்பதால் மதுரமான தின்பண்டங்களை ரஸித்து உண்பதாகக் காட்டி வேதனைக்கு ஈடு செய்தாள் போலிருக்கிறது.

Koviloor Digital Library

லெமனேட் விரும்பிக் கேட்டது போல இன்னும் சில :

நடுவயதில், அவரது அபாரமான, அடுக்கடுக்கான ஸாதனைக் காண்டத்தில் வீசைக் கணக்கில் அவர் இனிப்பு உண்டதே அவரது மஹாபாவத்தின் மெய்ம்மைக்குச் சான்று பகர்ந்ததாகப் பண்டிதோத்தமர்கள் கருதினர்.

அதனிடையே அவர் காமார்புகுர் வந்தபோது, சாப்பாட்டில் அது வேணும், இது வேணும் என்ற நினைப் போடேயேதான் நாளைத் தொடங்குவார். அதுதான் ஸாதனை வேகத்தில் அப்படியே அவர் உடலை, உலகை உகுத்துவிடாமல் அவரை உடலோடு, உலகோடு சேர்த்துப் பிடித்து வைத்தது.

பிற்காலத்தில் இவரே தனது இஷ்ட தெய்வமான கோபாலன் என்று தெள்ளத் தெளிய அறிந்துகொண்டு அவருக்கே தன் ஆவியை அர்ப்பித்தவள் 'கோபால மாதா' எனப்பட்ட அகோரமணி. ஆனால் ஆரம்ப காலத்தில் அவள், "இவரா ஒரு பரமஹம்ஸர்? தவறிப் போயாவது தெய்விக உபதேசம் தருகிறாரா? எப்போது பார், 'தேங்காயுருண்டை கொண்டு வா; புடலங்காய்ப் பொறித்த கூட்டு கொண்டுவா; முருங்கை, உருளை, கத்திரி எல்லாம் சேர்த்து கதம்பம் கொண்டுவா' என்றுதானே சொல்கிறார்! விசித்திரமான ஸாதுவிடம்தான் வந்து சேர்ந்திருக்கிறேன்" என்று அலுத்துக் கொண்டிருக்கிறாள்.

நீங்கள் நினைக்கிற பரமஹம்ஸம் வேண்டுமானால் சுத்த நீர் கூட வேண்டாமென்று ஒதுக்கி, நீரிலிருந்து பிரித்துப் பாலை மட்டும் சாப்பிடட்டும். எங்கள் பரமஹம்ஸம் கருமார் வீட்டுச் சாப்பாடு சாப்பிடக்கூட ஆசைப்பட்டு, வாங்கிச் சாப்பிடும். ஒளிக்க இதில் ஏதுமிருப்பதாக எண்ணாமல் அதுவே இதை ஹம்ஸத்தின் வெள்ளையோடு வெளியிலும் சொல்லும். "'பார்ப்பாருங்களுக்கு இன்னா சமைக்கத் தெரியும்?' என்று கருமார் ஜாதியினர் பேசிக்கொள்வதை என் குழந்தை நாளிலிருந்து கேட்டிருக்கிறேன். அதன் பலனாக ஒரு சமயம்

Koviloor Digital Library

"எனக்குக் கருமார் வீட்டு தால் (பருப்புப் பச்சடி) சாப்பிட ஆசை எடுத்தது. அப்படியே சாப்பிட்டேன். ஆனால் அதிலும் கொல்லுப்பட்டறை நெடியே அடித்தது" என்று கூறி யாவரையும் சிரிக்க வைத்தார்.

ராமக்ருஷ்ணரைத் தன் கோபாலனாகவே கண்ட (கோபால மா எனப்படும்) அகோரமணியிடம், "என்னை உன் கோபாலன் என்கிறாய். பின்னே ஏன் நமஸ்காரம் பண்ணு கிறாய்? உள்ளே போய் இந்த கோபாலனுக்கு காய்கறி சமை. மஸாலா வாஸனை இங்கே வரணுமாக்கும்?" என்று ஒரு சமயம் கூறிய ஹம்ஸமாக்கும் இது!

கடைசிக் காலம் வரை ஐஸ் வாட்டர், ஐஸ் க்ரீம் என்றால் குருநாதக் குழந்தைக்குக் குஷி.

ஐஸ் க்ரீம் மிகையாக உண்டுதான் அவர் தொண்டை புண்ணாயிருக்கிறது என்றுகூட நினைத்ததுண்டு. அந்தப் புண் தான் புற்று நோயாகி அவர் உயிரைக் குடித்தது.

எல்லோரிடமுமே குழந்தையாயிருக்கும் அவர் லோக ஜனனியிடமோ நூற்று ஐம்பது சதவிகிதம் குழந்தையா யிருப்பார். அவளைக் குழந்தையாய்க் கொஞ்சுவது மட்டு மில்லை. கெஞ்சுவதிலும் குழந்தையாயிருப்பார். அவள் அம்மா என்பது போய் உம்மாச்சியாகி, 'உம்மாச்சி கண்ணைக் குத்திடும்' என்றால் ஒரு குழந்தை பயந்து கன்னத்தில் போட்டுக்கொள்வது போலவும் சில போதுகளில் இருப்பார்.

தொண்டைப் புண் கண்டு, எச்சில் துர்நாற்றம் எடுத்த போது இம்மாதிரிதான் ஆனார். "அம்மா, என்னை குணமாக்கு, இனிமேலே நான் ஐஸ் க்ரீம் சாப்பிடவே மாட்டேம்மா" என்று பயந்து, 'தப்பு போட்டு'க் கொண்டார். அப்படியும் புண் குணமாகாததால், "ஐஸ் க்ரீம் மட்டுமில்லை, ஐஸ் சேர்ந்த எதுவுமே சாப்பிடாமல் இருக்கேம்மா. உடம்பைச் சரி பண்ணு" என்று வேண்டிக் கொண்டார்.

Koviloor Digital Library

'வியாதி தீர வேண்டுமென ஒரு மஹா புருஷர் வேண்டலாமா என்ன?' என்றால் எங்களுக்கும் எங்கள் ராமகிருஷ்ணருக்கும் மஹா, கிஹா எதுவும் வேண்டாம். இனிய எளிமை, எளிய இனிமைதான் வேண்டும்.

தம்மை ஒளிக்காமல் அவர் எப்படி திறந்து போட்டுக் கொண்டிருந்தார் என்ற அழகைப் பாருங்கள். தாம் இப்படி வேண்டிக் கொண்டதை அவரேதான் மற்றவர்களுக்கும் சொன்னார். சரீராபிமானம் தவிர எதுவுமில்லாத நாம் இப்படி வேண்டிக் கொண்டால் வெளியே சொல்வோமோ? அந்த வெளிப்படை வெண்மைப் பாங்குதான் பக்த மனஸுக்கு ஐஸ் க்ரீமாக இனிப்பது.

வைராக்ய ஸாதனை பற்றி ஹிந்தி ப்ரம்ம ஸமாஜத்தில் உபதேசித்துக் கொண்டிருக்கிறார் நமது தின்பண்டப்பிரியர். மேடையேறி உபந்நியாஸம் என்ற பெயரில் பேச எளிய டாகுருக்கு வராது. கலந்து உரையாடுவதிலேயேதான் உபதேசங்களை இயல்பாகக் கொட்டிவிடுவார். இன்று அப்படிப் பேசும் போதே வைராக்யம் பழகுவதுபற்றி விவரிக்கிறார். எப்போதும் வீட்டில் இருந்துகொண்டே ஆசைகளை அறுப்பது கடினம்; வீட்டில் சபலங்கள் இழுக்கத்தான் செய்யும்; ஆகையால் இல்லறத்தாரும் அவ்வப்போது வீட்டை விட்டு ஏகாந்த வாஸம் செய்து ஆசைகளிலிருந்து விடுபடப் பயிலவேண்டும் என்ற தமது வழக்கமான அறிவுரையை வழங்குகிறார். "ஜ்வரக்காரன் ஒருவனுடைய அறையிலேயே புளி ஊறுகாயும், ஜில் தண்ணிப் பானையும் வைத்திருந்தால் அவனுக்குக் காய்ச்சல் சொஸ்தமாவது எப்படி?" என்று கேட்கிறார்.

கேட்ட கையோடு தாம் உபதேசிக்கும் வைராக்யத்துக்கு நேர் விரோதமாகத் தம்மையே காட்டிக் கொள்கிறார்— "பாருங்கோ! புளி ஊறுகாய்னு இப்ப சொன்னதிலேயே என் நாக்கிலே ஜலம் ஊறிண்டு வரது!"

1885 ஏப்ரல் தொடக்கத்தில் டாகுர் கல்கத்தா சென்ற போது பக்தர் தேவேந்திர நாத்தின் வீட்டுக்கு எழுந்தரு

Koviloor Digital Library

ளினர். தேவேந்த்ரர் ஐஸ்க்ரீம் தயாரித்து குரு மஹராஜுக்கும் உடன் வந்த சிஷ்ய பரிவாரத்துக்கும் அளித்தார்.

"இன்னும்! இன்னும்" என்று இன் குரலில், மென் குரலில் மிழற்றினர் குருபாலர்.

அவர் கேட்ட அந்த பாவனை அத்தனை பேரையும் சிரிக்க வைத்துவிட்டது. ஆம், அத்தனை குழந்தை ஆர்வம் ஐஸ்க்ரீமைக் கண்டவுடன் அந்த அவதார ச்ரேஷ்டனிடம் காணப்பட்டது. பனிமலை மகளின் பராவமுதைப் பருக ஆர்வமுற்றவர், இந்தப் பனிப் பாலேட்டுக்கும் அவாவுகிறார்!

பிறகு பேச்செல்லாம் முடிந்து ராமகிருஷ்ணர் வண்டியில் தக்ஷிணேச்வரம் செல்கிறார். அப்போதும் ஸந்தோஷத்துடன் "ம"விடம், "நிறைய்...ய ஐஸ்க்ரீம் தின்னுட்டேன். நீ அடுத்த தடவை தக்ஷிணேச்வரம் வரச்சே நாலஞ்சு ஐஸ்க்ரீம் கூம்பு வாங்கிண்டு வா" என்கிறார்.

ஜிலேபிக்குப் புகழெடுத்த காமார்புகுரில் பிறந்த ஜில்குண குரு மஹராஜருக்கு அந்த இனிப்பும் ஒரு "ஃபேவரிட்" ஆகும்.

1883ஆம் ஆண்டு பிறந்த அன்று ஓர் அன்பர் நம் மதுர குருநாதனுக்கு ஜிலேபிப் பொட்டணம் ஸமர்ப்பித்தார். பாப்பா பொம்மையொன்றை ஒரு குழந்தை எடுத்துப் பக்கத்தில் வைத்துக் கொள்வதுபோல அப்பொட்டணத்தை எடுத்து வைத்துக் கொண்டார் குருநாதர்.

இளநகை துளிர்த்த நிஷ்கல்மஷ முகத்தோடு பக்தர் ப்ராணக்ருஷ்ணரைப் பார்த்து, "பார்த்தியா! நான் அம்மா பேரை சொல்லிண்டேயிருக்கேன்; அதனாலே எனக்கு இந்த மாதிரி நல்ல நல்ல பக்ஷணமெல்லாம் கிடைக்கிறது" என்றார்.

உடனே அம்பாள் ஏதோ பூசணிப் பழம், பரங்கிப் பழம் தருவதோடு நிற்காமல் அம்ருதப் பழங்களான ஞானம்,

Koviloor Digital Library

ப்ரேமை, விவேகம், வைராக்யம் முதலியன தருவதை நினைந்து, அதையும் சொன்னார்.

ஆனால் அப்போதைக்கு அம்மா இவரைக் குழந்தை பாவத்திலேயேதான் இருத்திப் பார்க்க விரும்பினாள் போலிருக்கிறது. ஏழெட்டு வயசுப் பிள்ளையொன்று அப்போது அறைக்குள் வந்தது. டாகுர் பிள்ளைத்தனமாக—ஏன், "சிறுபிள்ளைத்தனம்" என்று சொல்கிறோமே, அப்படிச் சிறுபிள்ளைத்தனமாக—மாறினார். இன்னொரு குழந்தை எடுத்துக்கொண்டுவிடப்போகிறதே என்று ஒரு குழந்தை தின்பண்டத்தை ஒளித்துக்கொள்வதுபோல, அந்த ஏழெட்டு வயசுப் பிள்ளையின் பார்வை படாதபடி குரு மஹராஜ் ஜிலேபிப் பொட்டணமிருந்த பாத்திரத்தைக் கையால் மூடிக் கொண்டார்!

'என்பும் உரியர் பிறர்க்கு என்றிருக்கவேண்டிய ஒரு பெரியவர் ஒரு குழந்தைக்கு இல்லாமல் பக்ஷணத்தை ஒளித்துவைத்துக் கொள்ளலாமா? இவரை டாகுர் என்கிறீர்களே, குரு என்றும் குரு மஹராஜ் என்றும் சொல்கிறீர்களே!' என்று முனகத் தோன்றுகிறதா?

ஜிலேபி கொஞ்சம் புளிப்பும் தாங்கும் ஸ்வாமின்! இன்னும் சொல்லப் போனால் சாப்பாட்டு ரஸிகர்கள் சற்றுப் புளித்த ஜிலேபிக்குத்தான் ருசி அதிகம் எனக்கருதி, அப்படிப் புளிப்பாகத் தயாரித்ததற்கு 'ஜாங்கிரி' என்று சிறப்புப் பெயரும் தருவார்கள். எங்கள் டாகுர் குரு மஹராஜ் குழந்தையுமானதால் அவருடைய இனிமை புளிப்பினால் கூடுதலே ஆகும். பெரியவர்களுக்குத்தான் கபடம், விஷமம், சண்டித்தனம் முதலியன கூடாது. ஆனால் இவை கொஞ்சமேனும் இல்லாவிட்டால் ஒரு குழந்தைக்கு குழந்தையினிமை உண்டோ? எப்போதும் நல்லதாகவே இருந்து கொண்டிருக்கும் ஒரு குழந்தை கடுமையான கர்நாடக பாணியில் அமைத்த "நோட்டு"ப் போலத்தான்!

★

Koviloor Digital Library

குறைபாடுகள் என்று தோன்றக்கூடிய பல அம்சங்களை ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் சிலர் காணலாம். 'ஏன் இப்படிச் சில நல்ல மனிதர்களிடமுள்ள சிறு கெடுதல்களை அவர்கள் இல்லாதபோது மற்றவரிடம் விமரிசித்து மட்டம் தட்டிப் பேசுகிறார்? சிலரை ஏன் இவ்வளவு நிர்தாக்ஷிண்யமாக விலக்குகிறார்? மாறாக வேறு சிலரிடம் ஏன் அவர்களே அலுத்துக் கொள்ளுமளவுக்குப் பாசம் என்றே சொல்லக் கூடிய அதீத ஒட்டுறவு காட்டுகிறார்?' என்பது போலப் பல கேள்வி அவரைப் பற்றிய நூல்களைப் படிக்கும்போது எழலாம்.

அவதார ரஹஸ்யம் நம்மில் எவருக்கும் நிச்சயம் தெரியாது. எனவே இம்மாதிரிக் கேள்வி எழுப்புவதிலோ அதற்குப் பதில் சொல்லப் புகுவதிலோ பயனில்லை. திருவருள் கூட்டிவைத்து, அவர் எப்படியிருந்தாலும் அவற்றின் ஸார ஸாரமாக நம்மை உய்நெறிக்கு உயர்த்தும் அவதாரமே என்று உணர்ந்தால்தான் உண்டு. ஆயினும் வேறு வேறு அளவுகளில் அநேகமாக மானுடர் யாவரையுமே அறிவுஜீவிகளாகத்தான் பராசக்தி படைத்துள்ளதால் போலும், அவதாரம் எனப்படும் ஒருவரின் "குறைபாடு" களைப் பற்றிய கேள்விக்கு அறிவு ரீதியிலும் ஓரளவு பதில் காணச் செய்திருக்கிறாள்.

இப்பதில்களிலொன்று ஸ்வாமி சாரதாநந்தர் எழுதிய மகத்தான ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதத்தில் காணக் கிடைக்கிறது*. அதைத் தழுவி இங்கே விளக்கம் தருகிறோம்.

தெய்விகப் பண்புகளும் தெய்விக சக்திகளும் கொண்டவர்களாகப் பல அவதாரர்களின் சரிதங்களைப் பூர்விக நூல்கள் கொடுத்துள்ளன. அவற்றைப் படிக்கையில், 'இவை உண்மையான வாழ்க்கை வரலாறுகள்தாமா? அல்லது கட்டுக்கதைகளா? இப்பேர்ப்பட்ட உயர் பண்புகளும், உயர்ந்த சக்திகளும் படைத்தவர்களாக மானுட

* Sri Ramakrishna, the Great Master, Part IV, Appendix, Para 4

Koviloor Digital Library

உருவிலேயே இறைவன் மண்ணில் வாழ்ந்ததுமுண்டா?' என்ற ஐயம் எழலாம். உண்டு, உண்டு, உண்டு என்று முக்காலும் சாற்றவே நவயுகத்தில் இறைவன் ஸ்ரீ ராமகிருஷ்ணராகத் திருவவதாரம் செய்தான். பூர்வ நூல்கள் கூறும் அவதாரங்களிடம் சொல்லப்பட்டுள்ள அத்தனை தெய்விகப் பண்புகளையும், திவ்ய சக்திகளையும் மண்ணிலே மானுடராக உலாவிய ராமகிருஷ்ணரிடம் கண்டே அன்று அவரிடம் அடியார்கள் அடிசார்ந்தார்கள். இன்றும் சூக்ஷ்மத்தில் அவரது இறைமையை உணர்ந்தே நானிலம் முழுதிலும் ஆங்காங்கு பலர் அவரது பக்தர்களாக இருக்கிறார்கள்.

இது ரூபாய் நாணயத்தின் ஒரு பக்கம். இதைக் காட்டும் ஸ்ரீ சாரதாநந்தர் அதன் மறுபக்கத்தையும் அற்புதமாகக் காட்டுகிறார்.

அதாவது,

அவதார சரிதங்களைப் படிக்கையில் இத்தனை உயர்வாகவும் அவதாரர் என ஒருவர் மானுட காயத்தில் வாழ்ந்திருப்பாரா என்ற கேள்வி எழுவது மட்டுமில்லை. ஆங்காங்கு, அத்தனை உயர்வான ஒருவர் இவ்வளவு சாமானியத்திலும் சாமானியமாக எங்கேனும் இருந்திருப்பாரா என்ற கேள்வியும் எழுமாறு அச் சரிதங்களில் சில சம்பவங்களும், அநுபவங்களும் இருக்கும். அவதார ராமனா, கிருஷ்ணனா, இயேசுவா, புத்தரா இப்படிப் பேசுவது, நடந்துகொள்வது என்று திகைக்க வைக்குமளவுக்குச் சராசரி மானுடர் போலவே கோப தாப பாச த்வேஷாதிகளை அவர்கள் காட்டியதாகவும் ஒரு சில இடங்களில் காண்போம். இப்படியும் பூர்வ அவதார வியக்தி இருக்க முடியுமா என்ற கேள்விக்கு முடியும், முடியும், முடியும் என்று முக்காலும் சான்று காட்டவே, அவதாரங்களின் உயர்வுகளையெல்லாம் கண்முன் நிரூபித்துக் காட்டிய அந்த ஸ்ரீ ராமகிருஷ்ணரே அவர்களுடைய குறைபாடுகளையும் தம் ஜீவித உதாரணத்தால் நிரூபித்துக் காட்டினார்.

Koviloor Digital Library

தெய்விகமும் மானுடமும் ஸங்கமிக்கும் அவதாரத்தில் தெய்விக உயர்வுகளோடு மானுடக் குறைபாடுகளுங்கூடச் சிறிது சிறிது இருக்கவே செய்யும் என்று நமக்கு நன்குணர்த்துவதே ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்.

ஓர் அவதாரர் தாம் தெய்வமே என்று புரிவிப்பதற்காக திவ்விய சக்திகளை ஒருபுறம் காட்டும்போதே மறுபுறம் தாம் மானுடர் என்பதையும் கூச்சமில்லாமல் காட்டுவார். தெய்வமாக அரூபமாயிருந்து கொண்டே மக்களை வெறும் சங்கற்பத்தால் தர்மவழி திருப்பக் கூடிய பரம்பொருள் அப்படியின்றி அவர்களோடு மானுடமாக இனிக்கப் பழகி உடன் வாழ்ந்தே அவர்களை தர்மத்தில் ஊக்கவேண்டுமென்று தானே அவதாரமாக ரூபம் கொண்டிருப்பது? அவ்வாறிருக்க, தன்னை மனிதனுகக் காட்டிக் கொள்ள அவதாரரொருவர் ஏன் கூச்சப்படவேண்டும்? மிகப் பெரும்பாலும் ஆதர்ச மானுடனுக அவதாரர் வழி காட்டினுலும், அப்படி மானுடத்திலேயே ஆதரிச நிலையில் உயர்ந்து நிற்பதுங்கூட சராசரி மானுடர் தன்னேடு இனிக்கப் பழக முடியாத கௌரவ ஸ்தானத்தில் தன்னை விலக்கி வைத்துவிடும் என்பதாலேயே அவர் கூச்சப் படாமல் கொஞ்சங் கொஞ்சம் மானுடக் குறைபாடுகளையும் ஏற்றுக் காட்டுவார். "நான் மனிதன். எனவே மானுடமான எதையும் நான் புறக்கணிக்க முடியாது" என்று கி.மு. சகாப்த லத்தீன் கவி டெரன்ஸ் கூறியதை அவதார புருஷர்களைப் போல மெய்ப்பித்துக் காட்டிய எவருமில்லை.

தாம் ஏன் வெகு வெகு மானுடமாக இருக்கக் கூடாதாம் என்று நமது கதாநாயக அவதாரர் அலாக்காகக் கேட்ட ஓர் அழகு நிகழ்ச்சியை அச்வினி குமார் தத்தர் கூறுகிருர் :

> அவர் என்னிடம், "கொஞ்சம் விசிறேன்" என்றுர். நான் விசிறத் தொடங்கினேன். அவர் மௌனமாயிருந்தார்.

Koviloor Digital Library

சிறிது நாழிகைக்குப் பிறகு, "அப்பாடி, என்ன வெய்யிலா இருக்கு? விசிறியை ஜலத்திலே தோச்சு விசிறப் படாதா?" என்றார்.

"ஐயோடா! இந்த மாதிரி சொகுஸெல்லாம் வேறு கொண்டாடிக் கொள்கிறீர்களா?" என்றேன்.

குருதேவர் புன்னகைத்து, நிதானமாகக் கேட்டார். "ஏன் கூடாதாம்?"

"ரொம்ப சரி, பேஷாய்க் கொண்டாடிக் கொள்ளுங்கள்" என்றேன்.

ஓர் அவதார புருஷன் தன்னோடு மானுடர் எவ்வளவு சகஜமாகப் பழகும்படி இருக்கிறான் என்பதற்கும் இங்கு சான்று காண்கிறோம்.

அவதாரனிடம் தெய்விகத்தோடு ஏன் மானுடமும் கலக்க வேண்டுமென்பதற்கு அழகுவமை காட்டி ஒரு காரணம் சொல்வன் நம் அவதாரன். "சுத்தப் பொன் நகை செய்ய உதவாது. அதில் சிறிதே செம்பு சேர்த்தால் தான் நகை செய்ய முடியும். சுத்த தெய்விகம் மண்ணுலகில் வாழ முடியாது. அதில் சிறிதே மானுடக் குறைபாட்டைச் சேர்த்தால்தான் முடியும்."

சிறிதுதான். ஆம், குறைபாடுகள் மிகக் குறைவுதான். ஒருவேளை, எங்கோ துளித் துளி காணும் குறைகளை ஒரே இடத்தில் தொகுத்துப் பார்த்தால் அதிகமாகத் தோன்றலாம்! இது பல நூறு ஜாங்கிரிகளில் உள்ள துளித்துளிப் புளிப்பை ஒரே அவுன்ஸில் இறுக்கி வடித்து, 'ஐயே! வெறும் காடி!' என்று முகத்தைச் சுளிக்கிற புத்திசாலித்தனம்தான்!

பல மைல்கள் தாளகதி தப்பாமல் லெஃப்ட், ரைட் போட்டுக் கொண்டு நடக்கும் ராணுவ அணிவகுப்பானது ஒரு பாலத்தைக் கடக்க நேரும்போது அந்தத் தாளகதியை வேண்டுமென்றே தவறவிட்டுச் செல்லும். அல்லாவிடில்,

Koviloor Digital Library

இந்த லய ஒலிக்குப் பிரதி ஒலியாக எழும்பும் ஒலியும் இதோடு கவ்வ, இந்தச் சீர்மையைத் தாங்க முடியாமலே பாலம் நொறுங்கிப் போகும். நில ஸ்பரிசம் மிகக் குறைவாக உள்ள அவ்விடத்தின் நுட்பம் அப்படிப்பட்டது. இதற்கு எதிர்வெட்டாக, இந்த நிலத்துக்கு முழு தெய்விக ஸ்பரிசம் தாங்காது. முழு தெய்விகத்தை ஏற்றுப் பிரதிபலித்து அதோடு சீரிழைவு பெறுவதென்பது மானுடரால் தாங்க இயதாத ஒன்று. அதனால் வெகு தூரம் தெய்விகப் பாட்டையிலேயே தாளம் தப்பாது செல்லும் அவதாரங்களும் தாங்கள் மானுடத்துக்குப் பாலமாக அமையுமிடங்களில் கொஞ்சம் அவலய கதியில்தான் செல்வர்.

வயது வந்தோர் தப்புத் தாளநடை போட்டால் அது ஏதோ உடல் ஊனம் எனத் தோன்றும். ஆனால் குழந்தை அப்படி நடப்பதைத்தான் 'தளர் நடை' என்று அழகாகப் பெயர் கொடுத்து ரஸிக்கிறோம். எங்கள் நித்யக் குழந்தையாம் ஸ்ரீ ராமகிருஷ்ணனின் தளர்நடை அன்பு மனத்துக்கு இடறாது; துள்ளிராக வருடும்!

இந்த அவரது குழந்தைமையை வைத்து ஸ்ரீ ராமகிருஷ்ண அவதாரத்துக்கு மட்டுமே உரித்தானதாகக் "குறைபாடு"கள் பற்றிய கேள்விக்கு இன்னொரு பதிலும் சொல்லலாம். ஒரு குழந்தை "தான் இன்னதுதான்" என்று அஹங்காரத்தில் முத்திரை குத்திக் கொண்டு அந்த இன்னதாக மட்டும் குறுகிக் கிடப்பதில்லை. என்னதாகவும் அதனால் தன்னை பாவித்துக் கொள்ள முடியும். இந்த நிமிஷம் அம்மாவாகி ஒரு பொம்மைக்குப் பால் கொடுக்கும். அடுத்த நிமிஷம் அந்த பொம்மையையே அம்மாவாக்கி அதன் மடியில் தான் படுத்துக் கொண்டு பால் குடிக்கும். தானே எல்லாப் பாத்திரங்களையும் ஏற்று அது நாடகம் நடிக்கையில் இந்த நிமிஷம் பிச்சைக்காரனாகி ராஜாவிடம் பிச்சை கேட்கும். அடுத்த நிமிஷம் அதுவே ராஜாவாகிப் பிச்சை போடும். அல்லது பிச்சை கிடையாது என்று உதைக்க

Koviloor Digital Library

வரும். அப்படி உதைக்க வருவதும்கூட அந்தக் குழந்தை செய்யும்போது அழகுதான். ஏனென்றால் எதிலும் அஹங் கார முத்திரை பதிப்பித்துக்கொள்ளாமல் அது எல்லா வற்றையும் ஸமமாய் ஏற்கும் நாடகத்தில் விளையாடுகிறது. விசால நாடகம்! விஸ்தார விளையாட்டு! அஹங்காரத் தில் குறுகிய அசல் வாழ்க்கையல்ல.

அன்னை பராசக்தி அப்படியொரு குழந்தையாகவே என்றும் இருக்கும்படி ஈன்ற இனிய பிறவி ஸ்ரீராமகிருஷ்ணர், அக்குழந்தை பலப் பல வேஷத்தில் விளையாடிற்று, நாடக மாடிற்று. அல்லது மஹா நாடகக்காரியான அம்மாவே அதை அப்படி விளையாட்டுவித்தாள். இதில் நாம் காணும் குறை பாடும் வேஷம்தான், நிறைபாடும் வேஷம்தான்! ஏன், அம்மா, பிள்ளை என்ற இரண்டுங்கூட வேஷந்தான்! எல்லா வேஷமும் கலந்த, ஆனால் எல்லா வேஷத்துக்கும் காரண மான அகண்ட ஏக ஸத்தியத்தில் அமிழ்ந்திருந்தேதான் அவர் குழந்தையாய் விளையாடினார். அல்லது, வேறு விதத்தில் சொன்னால், அந்த அகண்ட ஏக ஸத்தியத்தைக் கண்டம் கண்டமான அநேக அஸத்தியங்களாகக் காட்டும் பராசக்தி அவரது அந்தரான்மாவை அகண்டத்தில் அழுத்தி வைத்தே கண்டம் கண்டமான ஜீவ லோகத்தில் குழந்தை யாய் விளையாட வைத்தாள். அவரது அசல் வாழ்வு இவ்விளையாட்டு எதிலும் இல்லை. வாழ்வு தாழ்வு எதுவுமில்லா அகண்ட ஆன்ம வெளியில்தான் அது இருந்தது.

இருப்பது அந்த ஒரே ஒரு நிஜவாழ்வுதான். ஸகலத்துக் கும் மூலமாய் அதைச் சொல்லும்போது பிரம்மம் என்கி றோம். ஒரு ஜீவனுக்கு மூலமாய்ச் சொல்கையில் அதையே ஆத்மா என்கிறோம். பரம்பொருள் என்று பொதுவில் கூறுகி றோம். அந்த ஒன்றே ஒன்றிலிருந்து 'ஸகலம்' என்பவையும் 'ஜீவன்' என்பதும் எப்படி வந்தன? அந்த ஒன்றே ஒன்று சாந்தமாகத் தன்னில் தானாய் அடங்கியுள்ளபோதே, சக்தி யாகத் தன்னிலிருந்து பல மாயத்தோற்றங்களை வெளிப் படுத்துவதால்தான். நம்மைப்போலவே மஹா பக்தர்,

Koviloor Digital Library

மஹா ஞானியர் ஆகியோரும் இப்படி அகண்ட ஏகத்தி லிருந்து மஹாமாயா சக்தியால் 'கண்ட'மாகத் தோற்று விக்கப்பட்டவர்களே.

அவர்களுக்கும் நமக்கும் வித்தியாசம் என்ன?

தான் கண்ட கண்டமாக ஆவதில் நிச்சயம் அந்தப் பரம் பொருளுக்கு ஓர் ஆனந்த ரஸிப்பு இருப்பதால்தான் தனது ஏக சாந்த நிலையோடு மட்டுமின்றி நானுபேதம் கொண்ட தாகவும், பல உணர்ச்சி, பல காரியம் கொண்டதாகவுமுள்ள சேதன அசேதனப் பிரபஞ்சங்களைத் தன்னிலிருந்தே படைத்து ஜீவ ஜகத்துக்களை ஆட்டி வைக்கும் மாயா மஹாசக்தியாகவும் உள்ளது என்பதில் ஐயமில்லை. அம்பாள் லீலா நாடகமாடுகிருள் என்று இதைத்தான் சொல்கிருர்கள். அதிலே பல மட்டங்கள்.

அடிமட்டங்களில் உள்ள நம் போன்றவர்கள் 'கண்ட' மாய வாழ்வு மட்டுமே கண்டவர்கள். இதையே நிஜமாக எண்ணி மயங்கியிருப்பவர்கள். இது நல்ல முறையில் நடக்கக் 'கண்ட' மூலமான சக்தியை வேண்டுபவர்கள். 'கண்ட' மூலமாகப் பல குணரஸங்களும் பொருந்தியுள்ள பராசக்தியை ஏதோ சிறிதளவு அவளுக்காகவேயும் விரும்பி வேண்டுபவர் கள். அதைவிடவும் சிறிதளவு, அவள் சக்தியாகவும் இன்றி சாந்த ஏகமாகவே இருக்கும் நிலையைத் தொடவும் விரும்பு பவர்கள்.

உண்மையான பக்தர்கள் இதற்குப் பல மட்டங்கள் மேலே போய், கண்டமான மாய வாழ்வின் நசைகளெல்லாம் அற்றவர்களாகிக் கண்டமூல மஹாமாயைச் சக்தியை அவளுக்காகவே விரும்பி, அவளோடு ஒட்டி நின்று லீலா விநோதத்தில் ஆனந்திப்பவர்கள். இவர்களுக்கு அவளே தன்னை, தன் லீலா விநோதத்தை அவ்வப்போது விலக்கி) அகண்ட ஏக சாந்தத்தின் அனுபவத்தையும் (ஆத்மாநுபவம் என்றும் ப்ரம்மாநுபவம் என்றும் சொல்வது அதைத்தான், அருள்வாள்.

Koviloor Digital Library

மாம வாழ்வு நசைகளை அடியோடு நீக்கி, ஆனால் லீலா நாடகமும் பார்க்க விரும்பாமல், எனவே பராசக்தியோடும் சேராமல், அகண்ட ஆன்ம வெளியிலேயே ஒன்றிவிட விரும்பி, அவ்விலக்கை எய்தவர்தாம் ஞானியர். ஞானியர் என்ற இவர்களையும் பல பெயர் குறிப்பிட்டு அழைக்குமாறு அகண்ட ஏகத்திலிருந்து கண்டகண்டமாகத் தோற்றுவித்த பராசக்தி இவர்களின் விழைவுப்படி தானே அருள் கூர்ந்து விலகி நின்று, இவர்களை அகண்ட ஏக இலக்கில் சேர்ப்பிக்கிறாள். இதை ஸ்ரீராமகிருஷ்ணரைப் போல வலியுறுத்திக் கூறியவர் எவருமில்லை.

அப்படி ஏக நிஜ வாழ்வில் அவர்களை நிலை நிறுத்திய பின், அந்த ஞானியரில் பலரையும் அதோடுகூடத் தன் மாயலீலா நாடகமும் பார்த்து ரஸிக்கச் செய்திருக்கிறாள்.

ஆய்ந்தோய்ந்து பார்க்கும்போது, அடிமட்டங்களிலுள்ள நம்முடைய அவல விழைவுகளிலிருந்து ஞானியின் அகண்ட விழைவு வரை யாவுமே அவள் உண்டாக்குவது தான். நாம் எல்லோருமே அவளுடைய வேஷங்கள்தான் ஆயினும் நமது தனி மனம் என்ற ஒன்று இப்படி விழைவுகள் கொள்வதாகக் காட்டி நாடகம் நடத்துகிறாள்.

இப்படி ஸ்ரீராமகிருஷ்ணரின் தனி மனத்தில் ஒரு அலாதியான விழைவையும், அதன் பூர்த்திக்காக அவளிடம் வேண்டுதலையும் ஏற்படுத்தினாள். அகண்ட ஏக சாந்தத்தில் தாம் அமிழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்த அவர், "இந்த ஏக சாந்தம் வேண்டாம். அம்மாவாக நீ நின்று, குழந்தையாய் நான் கிடந்து, உன் லீலா நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும் நிலைதான் வேண்டும்" என்று அன்பு விழைவு கொண்டு, குழைந்துருகி வேண்டினார்- அவரது குழந்தைத் தன்மைக்கு ஏற்ப, அகண்ட ஏக சாந்தத்தில் இருந்து கொண்டே அதோடுகூட "கண்ட" லீலை காண முடியும் என்றறியாதவர்போல, 'அது வேண்டாம்; இதுதான் வேணும்' என்று எண்ண வைத்தாள்! குழந்தை இப்படி

Koviloor Digital Library

வேண்டினாலும், வாய்விட்டு மற்றோரிடமும் தன் இவ்வேண்டுதலைச் சொன்னாலும், அவள் என்னவோ அதை அகண்ட நிஜவாழ்வில் நிலை நிறுத்தி வைத்தேதான், 'கண்ட' மான மாய நாடகத்தில் பல வேஷங்கள் போடவும்வைத்தாள்! வெளிமட்டத்தில் அவர் 'நித்யம்' எனும் அகண்டத்தை விட்டு 'லீலை' எனும் 'கண்ட' த்துக்கு வந்ததாக நினைத்துக் கொண்டிருந்தாலும், உள்மட்டத்தில் அவர் நித்யத்தில் நிலைத்திருந்தேதான் லீலா விபூதிகளில் மகிழ்ந்து கொண்டிருந்தார்.

இல்லறச் சீடர்களுக்கான உபதேசங்களையே வெகுவாகக் கூறும் "ம"வின் நூலை மட்டும் பார்க்காமல், அவரது சிஷ்ய மணிகளான துறவியர் கூறியிருப்பவற்றைக் கூர்ந்து பார்த்தால் 'நித்ய'மாம் அகண்ட அத்வைதத்திலிருந்து அவரது நீங்கா நிலையை அறியலாம். துரதிருஷ்டவசமாக, அந்தரங்கமான துறவிச் சீடர்களுக்கு டாகுர் அளித்த உபதேசங்களை விரிவாகத் தொகுத்து, "ம"வின் நூல்போல எதுவும் உருவாகவில்லை. அந்தரங்கமாகச் சொன்னது எப்படி முழுதும் அம்பலமாக முடியும் என்பதால் இருக்கலாம். ஆனால் அந்த சிஷ்ய ரத்னங்களின் முடிமணியான நமது மாதா - குரு ரத்னமான சாரதையின் ஒரு வாக்கே இவ்விஷயத்தில் ஸுப்ரீம் கோர்ட் தீர்ப்பாகாதோ? அந்த வாக்கைப் பார்ப்போம்.

இமாலயத்தில் மாயாவதி எனுமிடத்தில் விவேகாநந்தர் அத்வைத ஆசிரமம் என்று அமைத்திருந்தார். அங்கே முழுதும் ஆத்ம விசாரமே நடக்கவேண்டுமென்றும், மாயா சக்தியின் தீண்டுகை உள்ள உருவ வழிபாடு முதலியன கூடாதென்றும் அவர் விதித்திருந்தார். இதை ஏற்கவொண்ணாத ஒரு குருபாயி அம்மாவிடம் முறையிட்டார். பூஜா மார்க்கத்தையே எப்போதும் உபதேசித்துக் கொண்டிருந்த அம்மா அப்போது பளிச்செனக் கொடுத்த பதில்: "ஸ்ரீ ராமகிருஷ்ணர் பூர்ணமாக அத்வைதி. அவர் உபதேசித்தது அத்வைதம். நீ ஏன் அதை சம்பிரதாயப்படிக்

Koviloor Digital Library

கடைப்பிடிக்கக் கூடாது? அவருடைய சிஷ்யர்கள் எல்லோரும் அத்வைதிகளே.''*

என்றும் குழந்தையாகக் குவலயத்துக்கு அன்னை காட்ட விரும்பிய குருமஹராஜ் சாமானியமான குவலயத்தாருடன் குலவும்போது 'அத்வைத அநுபூதியில் இருந்துகொண்டே த்வைதமான மாய லீலையும் காண்பது' என்ற புதிரான படே படே நிலையைக் காட்டுவது பொருந்தாதென்றே, அவர் 'அத்வைதம் வேண்டாம், த்வைதமே வேண்டும்' என்று கேட்க வைத்தாள் போலும்!

★

ராமகிருஷ்ண அவதாரத்துக்கென்று பிரத்யேகமாகக் ''குறைபாடு'' குறித்துக் காரணம் பார்த்தாற் போலவே, அவரைப் போன்ற ஓர் அவதாரர் அல்லது மஹாபுருஷர் சில தின்பண்டங்களில் விருப்பம் காட்டுவதற்கும் பிரத்யேகமாக ஒரு காரணம் சொல்வதுண்டு. ராமகிருஷ்ணர் ஏதோ ஒரு ஸ்வீட்டை விரும்பிக் கேட்டாரென்பதற்குத் தனியாக ஒரு நோக்கமோ பயனோ தேடவேண்டியதில்லைதான். ஒரு மகானிடம் சராசரி மாந்தரின் பான்மை கூடுகையில் அது எத்தனை அழகு பெறுகிறது, அதனால் அவர் எப்படி அழகு கொள்கிறார் என்பதற்கதிகமாக வேறு நோக்கமோ பயனோ வேண்டுமா என்ன? எனினும் இப்படிச் சில மகான்கள் விரும்பிச் சில பக்தரிடம், 'இன்ன பழம் கொண்டு வா; பணியாரம் கொண்டு வா' என்று கேட்டுக் கையுறை பெறுவதில் அந்த பக்தர்களுக்கு ஆழ்பயன் விளைவிக்கும் நோக்கமும் கலந்திருக்கலாம். இவ்வாறு கேட்டு ஒரு பக்தர் நிவேதிக்கும் உண்வகையை மஹான் உட்கொள்ளும்போது அப்பக்தரது கர்மத்தில் ஒரு பங்கையே அவரறியாது கேட்டு வாங்கி உண்டு ஏப்பம் விட்டு விடுவதுமுண்டு. இக்கருத்துக்கு

* ''Holy Mother Shri Sarada Devi'' by Swami Gamfhirananda (1955 edn.) P. 452

Koviloor Digital Library

ஆதரவு தருவதாக நம் குரு மஹராஜே ஜாடை காட்டியிருக்கிறார்.

அருமையான க்ருஹஸ்த சிஷ்யர் ஸுரேந்திரநாத் மித்ராவின் க்ருஹத்துக்குச் சென்று நம் டாகுர் அநுக்ரஹ மழை பொழிந்த நாட்களில் ஒன்று. அன்று அங்கு நடந்த கண்ணன் விழாவை அசலே கோகுலத்திலும், பிருந்தாவனத்திலும், மதுராவிலும் கண்ணன் உயிரோடு கொண்ட விழாவாக ஆக்கிவிட்டார் நம் குருக் குழந்தை. பொருத்தம் தான்! மும்மதாசாரியர்களுக்கும் மஹாகுருவான அந்த கீதாசார்யன் ஆயக்குழந்தைகளின் அருமைத் தோழனுமல்லவா?

விழா முடிந்து, விருந்துண்டு, சிரம பரிஹாரமும் செய்து கொண்ட பிறகு ஸ்ரீ ராமகிருஷ்ணர் தக்ஷிணேச்வரம் திரும்ப ஆயத்தமானார். அநுக்ரஹ மழையில் கொஞ்சங்கூட மிச்சம் வைத்துவிடக் கூடாதென்றுதானிருக்க வேண்டும், அவரது பிரிய 'ஸுரேந்தரு'டைய வீட்டில் ஓரிடம் மிச்சம் வைக்காமல், பகவந் நாமங்களை மிருதுவாகக் கூறியபடி சுற்றி வந்தார்.

சட்டெனக் குத்திட்டு நின்றார். பிறகு, "சாப்பாட்டின் போது நான் லுசி* தின்னவேயில்லை. இப்ப கொஞ்சம் கொண்டு வாங்கோ" என்றார்.

கொண்டு வந்தார்கள்.

மெனக்கெட்டு, மெனக்கெடுத்திக் கேட்டவர் லுசியில் ஒரு புள்ளல்தான் ருசி பார்த்தார். மீதத்தை அப்படியே திருப்பிவிட்டார்.

நமக்கு உள்ளது போல அவருக்கும் ருசி நசை எடுத்தாலும், அது நம் நசை "போல" இருப்பதுதானே ஒழிய, அசலே நம்முடைய நசையாயிருந்து கொண்டு

---

* பூரி வகையறுவைச் சேர்ந்த ஒரு பணியாரம்.

Koviloor Digital Library

அவரை ஆட்டிவைக்கவில்லை என்பதற்கு இது சான்று எனலாம்.

அதோடு சற்றுமுன் சொன்னதற்கும் இது எடுத்துக் காட்டு. அதாவது, மஹாத்மா ஒருவரின் குக்ஷியில் விழும் சொற்ப உணவும் அந்த உணவைப் படைத்தவருக்குப் பெரும் புண்ணியம் அளிக்கும் என்ற காரணம்தான்.

லுசியைச் சிறிதே விண்டு வாயிலிட்டுக்கொண்ட டாகுர் இக்காரணத்தை விண்டு சொல்லாமல் குறிப்பிட்டார். "நான் இதைக் கேட்டு வாங்கிச் சாப்பிட்டதில் ரொம்ப அர்த்தம் இருக்கு" என்றார்.

ஸுரேந்தருக்கு விளையவிருந்த ஆழ்பயனை விண்டு சொல்லுமுன்பே, 'இந்த ஆழமெல்லாம் எதற்கு? லேசாக மேலேயே மிதப்போம்' என்று அவருக்குத் தோன்றிவிட்டது போலும்! "ரொம்ப அர்த்த"த்தைக் குழந்தையின் வேடிக்கைப் பேச்சாக்கி விட்டார். "நான் மட்டும் இந்த ஸுரேந்தர் ஆத்திலே லுசி சாப்பிடாமலேயே போய்ட்டு, அப்பறம் 'சாப்பிடலையே'ன்னு ஞாபகம் வந்தா என்ன ஆறது? லுசிக்காக 'மறுபடியும் அந்த ஆத்துக்குப் போகணும்'னு ஆசைப்படும்படி ஆயிடுமே!"

இந்தப் பிள்ளைப் பேச்சில் எல்லோரும் சிரித்துவிட்டனர்.

மணி மல்லிக் என்ற அடியார், "அப்படி நீங்கள் மறுபடி வந்தால் பிரமாதமாகத்தானே இருக்கும்? இப்போது மாதிரி நாங்களும் கூடவே வந்து..."

ஆம், அவர்களும் சுவையான லுசி மொக்கலாம்தான்! ராமகிருஷ்ண குரு மஹராஜும் அவரது சிஷ்ய யுவராஜ்களும் இப்படித்தான் ஒன்றுகூடி லுசி தின்று கொண்டு, வேடிக்கைப் பேச்சுப் பேசிக் கொண்டு குழந்தைகளாக விளையாடிக் கொண்டிருந்தார்கள்—ஆயப் பிள்ளைகள் கண்ணனோடு கூட்டாஞ்சோறு தின்றாற்போல!

Koviloor Digital Library

அந்த ஒரு குழந்தையின் குழந்தைமை மஹிமை இது தான்! எத்தனையோ பாரங்களில் நெரிபடும் ஜீவர்களும் அவரோடிருக்கும்போது பாரத்தையெல்லாம் தூக்கிப் போட்டு விட்டுக் குழந்தைகளாகிக் கும்மாளி போட்டார்கள்.

★

அசல் குழந்தைகளோடேயே நம் அமரக் குழந்தை குழைந்த ஒரு அமுத நிகழ்ச்சி பார்ப்போம். முன்பு அவர் குழந்தை கண்ணில் காட்டாமல் ஜிலேபியை ஒளித்துக் கொண்டதில் வருத்தப்பட்ட வாசகர்களும் இங்கே நஷ்டஈடு பெற்றுவிடுவார்கள்.

டாகுரின் இல்லறச் சீடருள் பரமப் பிரியரான இன்னொருவர் பலராம் போஸ். அவரது வீட்டிலேயே ஆண்டு தோறும் அடக்கமாக நடக்கும் ரதோத்ஸவம் ஒன்றுக்கு டாகுர் வருகை புரிந்திருந்த சமயம். (இந்த வீட்டு ரதோற்சவம் பற்றிப் பின்னால் பார்ப்போம்.)

அவ்வீட்டு வெளி வராந்தாவுக்குச் சென்று சிறிது நேரம் நின்றுவிட்டு உள்ளே திரும்பினார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். அவர் அங்கே போகும் வழியில் விச்வம்பரர் என்ற பக்தரின் ஐந்தாறு வயதுப் பெண் அவரை வணங்கியது. திரும்பி வந்து அறையில் அமர்ந்ததும் குரு மஹராஜ் அச் சிறுமியையும், அதன் வயதேயான அதன் தோழிச் சிறுமியையும் கூப்பிட்டுப் பேச்சுக் கொடுக்கலானார்.

முதல் குழந்தை நமது மூலக் குழந்தையிடம், "நான் நோக்கு நமஸ்காரம் பண்ணினேன். நீ பார்க்கவே இல்லை" என்று மனத்தாங்கலோடு கூறிற்று.

"அச்சச்சோ" என்றார் குருமஹராஜ் வருத்தமும் மன்னிப்பும் கலந்த குரலில். "நமஸ்காரமா பண்ணினே? நெஜமாவே நான் பார்க்காம இருந்துட்டேனே!"

Koviloor Digital Library

"சரி, அப்படியானு இப்போ நில்லு. நான் மறுபடி நமஸ்காரம் பண்றேன். அப்போ ஒரு காலிலேதான் பண்ணினேன். இப்போ இன்னுானுக்கும் பண்ணுவேன்" என்ருள் சிறுமி.

ராமகிருஷ்ணர் தேன்மடையாய்ச் சிரித்தார்.

பரம மரியாதையில் நமஸ்காரம். அதே போதில் பரம ஸ்வாதீனத் தோழமை! அந்தப் பெண் குழந்தை மட்டுந் தானு என்ன? அத்தனே பக்தர்களேயுமே இப்படியோர் அதிசயக் கலவை பாவத்தில் அவர் குழைத்திருந்தார்.

சிறுமி வணங்கினுள் சீராளனே.

என்ன ஆச்சர்யம்! சீராளனும் முடி நிலம்படக் குனிந்து சிறுமிக்கு வணங்கினுர்! அதை அது ஸஹஜமாக ஏற்றுக் கொள்ளும்படியும் செய்தார்!

ஆச்சர்யம் என்ன? குழந்தைகள் ஒன்று சேர்ந்து விளேயாடும் போது இந்த நிமிஷம் அவற்றிலொன்று "உம்மாச்சித் தாத்தா" வாகி இன்னென்றிடம் நமஸ்காரம் வாங்கிக் கொள்வதும், அடுத்த நிமிஷமே, "இல்லே; நீ தான் உம்மாச்சித் தாத்தாவாம்" என்று சொல்லி இரண்டாம் குழந்தைக்கு நமஸ்காரம் செய்வதும் இயற்கை தானே?

"ஸரி, நீ இப்போ பாடணும்" என்ருர் குருமஹராஜ் அச் சிறுமியிடம்.

"நேக்கு பாடத் தெரியாதே!"

"தெரியும், தெரியும், பொய் சொல்றே!"

"நெஜம்மா, ஸாமி ஸ த்யமா நேக்கு பாடத் தெரியாது"

"தெரியுங்கறேனே!"

சிறுமிக்குச் சிறு கோபமே வந்துவிட்டது, "நான்தான் 'ஸாமி ஸத்யமா'ன்னு சொன்னேனே? அப்பறமும் நீ கட்டாயப் படுத்தலாமா?"

Koviloor Digital Library

குழந்தை வாயிலிருந்து இத்தனை தெய்வ நம்பிக்கை, தெய்வ பயம் கொண்ட வார்த்தை வந்ததில் மஹா மகிழ்ச்சி கொண்டார் குரு மஹராஜ்.

தாமே குழந்தைகளுக்குப் பாடிக் காட்டலானார்.

காளியிடமும் கண்ணனிடமும் அப்படியே நெக்கு நெக்குருக மதுர கண்டத்தில் பாடிக் கூடியிருப்போரை யெல்லாம் பக்தி தாபத்தில் கரைய வைக்கும் அவர் இப்போது குழந்தைகளுக்காகக் குழந்தைப் பாட்டுக்கள் வேடிக்கையாய் பாடினார். மாதிரிக்கு ஒன்று:

வாடிப் பொண்ணே!—தலையை
வாரிப் பின்னி விடறேன்
கலைஞ்ச தலையொடே—நீ
களையில்லாம நின்னு
அலைஞ்சு வர உன் புருசன்
அதட்டி உருட்டுவானே!

இக் காட்சியை எண்ணுகையில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் இயேஸுநாதன், "வரவிடுங்கள், குழந்தைகளை என்னிடம்! தடுக்காதீர்கள் அவர்களை! ஏனென்றால் இப்படிப் பட்டவர்களுக்கானதுதான் ஆண்டவனின் ராஜ்யம்" என்றது நினைவு வருகிறது.

★

ஆண்டவனது ராஜ்யத்தின் நித்யவாஸிகளான பரமஹம்ஸத் துறவிகளைப் பற்றிக் கூறுகையில் "பரம ஹம்ஸர்" என்றே குறிக்கப்படும் நம் கதாநாதர் கூறுவார்: "பரமஹம்ஸன் முக்குணங்களையும் கடந்தவன். அக் குணங்கள் அவனில் இருப்பது போலவே தெரியுமாயினும் வாஸ்தவத்தில் இரா. ஒரு குழந்தை எப்படி எக் குணத்தின் வசமும் ஆதீனப் பட்டுவிடாமலிருக்கிறதோ, அப்படியே பரமஹம்ஸனும் இருப்பான். ஆமாம், ஸத்வ ரஜோ தமோ

Koviloor Digital Library

குணங்களில் ஏதொன்றிலுமே ஒரு குழந்தை ஒட்டிக்கொண்டு இருந்துவிடுவதில்லை. எந்த ஒரு வஸ்துவிடமும் ஒரு குழந்தை எவ்வளவு சீக்கிரம் ஆசையில் ஒட்டிக் கொள்கிறதோ அவ்வளவு சீக்கிரம் அதனிடமிருந்து விடுபட்டுவிடும். உயர்ந்த பட்டுத் துணியை ஒரு குழந்தை வைத்துக் கொண்டிருக்கும். நீ நாலுகாசு பெறக்கூடிய ஒரு பொம்மையை காட்டிப் பட்டுத் துணியை அதனிடமிருந்து பெறமுயன்றால் முதலில் ரொம்பப் பிடிவாதமாக, 'தரமாட்டேன், போ! எங்கப்பா நேக்குன்னே வாங்கிண்டு வந்த ஸில்க்காக்கும்' என்றே சொல்லும். ஆனால் இன்னும் சற்று தாஜா பண்ணினையானால் பட்டுத் துணியைப் போட்டுவிட்டு பொம்மையை வாங்கிக் கொண்டுவிடும்.

''ஒரு குழந்தைக்கு உசந்தவர், தாழ்ந்தவர் என்ற பேத மில்லாமல் எல்லா ஜனங்களும் ஒன்றுதான்.

''குழந்தைக்குப் பகையுணர்ச்சி தெரியாது.

''அதற்கு இது புனிதம், அது களங்கம் என்ற வித்யாஸம் கிடையாது.

''இதனாலெல்லாம்தான் அதுகளைப் போலத் தாங்களும் ஆகவேண்டுமென்று பரமஹம்ஸர்கள் நினைக்கிறார்கள்; குழந்தைகளைத் தங்களிடம் ஸ்வதந்திரமாக வரவிடுகிறார்கள்; தங்களோடு ஐந்தாறு குழந்தைகளை வைத்துக் கொள்கிறார் கள்.''

பரமஹம்ஸனோடு மட்டுமில்லை, பரம புருஷனுடனுயே குழந்தையை வைத்து அவர் பேசுவார். ''ஆண்டவனின் ஸ்வபாவம் ஒரு குழந்தையினுடையதே. குழந்தை முனைந்து ஒரு பொம்மை வீடு கட்டும். அடுத்த நிமிஷமே அதை உடைத்தும்விடும். இப்படித்தான் ஆண்டவனும் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்கள் செய்கிறான். குழந்தை முக்குண ஆதிக்கத்தில் இல்லாதது போலவே அவனும் த்ரிகுணாதீதனாக இருக்கிறான்.

Koviloor Digital Library

"அவன் கிருபை செய்வதும் குழந்தையியல்பில்தான். கிருபைக்குப் பாத்திரமாவதற்கு ஒருவர் இன்ன தகுதி பெற்றிருக்கவேண்டுமென்று அவன் பார்ப்பதில்லை. விலை உயர்ந்த ஏதோ பொருளை வைத்துக் கொண்டிருக்கும் குழந்தை அதன் அப்பா, அம்மா மன்றாடிக் கேட்டுக் கொண்டால்கூடத் தரமாட்டேன் என்கிறது. ஆனால் எவனோ தெருவோடு போகிறவன் அதைக் கேட்காதபோதே, 'இந்தா' என்று அவனிடம் வீசுகிறது! அதனால்தான் பரமஹம்ஸர்களும் தாங்கள் அப்படி ஆகவேண்டுமென்று தங்களைச் சுற்றிக் குழந்தைகளை வைத்துக் கொள்கிறார்கள்" என்பார்.

"ஞானி பாண்டித்தியத்தைத் தூக்கிப் போட்டுவிட்டுக் குழந்தையாய் நிற்பான்" என்று ப்ருஹதாரண்யமும் பரமஹம்ஸ லக்ஷணம் பகர்கிறது.

ஸ்வய உணர்ச்சி சற்றுமின்றித் தம்மையே வர்ணித்துக் கொள்வதாக, ஈச்வராநுபவம் பெற்றவனுக்கு லக்ஷணம் சொல்வார்: "எவனுக்கு ஒரு குழந்தையின் வெள்ளையுள்ளம் இருக்கிறதோ, தன் பாட்டில் சிரித்துக் கொண்டும், அழுது கொண்டும், ஆடிக்கொண்டும் பரவசத்தில் இருக்கிறானோ அவனில் ஈச்வரன் ஸாக்ஷாத்தாகப் பிரஸன்னமாயிருக்கிறான்."

இங்கே பரமஹம்ஸனைப் பரம புருஷனுக்குக் கிட்டத்தட்ட ஸமதையாகவே சொல்லியிருக்கிறார்.

அவர் சொல்லும் பரமஹம்ஸம் இதோ அவராகவே இருக்கிறது என்று அன்பர்கள் அடி ஆழ நெஞ்சிலிருந்து நினைத்த புனித சமயங்கள் உண்டு. உதாரணமாக, 1883 ஸெப்டெம்பர் 26ந்தேதி அவர் ஒரு வேதாந்தியான பிக்ஷுவை வர்ணித்தது பற்றிக் கூறும் "ம" அவரை இப்படி வர்ணிக்கிறார்:

"பிக்ஷுவைப் பற்றிப் பேசுகையில் குருதேவர் அடியார்களுக்கு ஒரு பரமஹம்ஸனின் நடத்தையையும் போக்குகளை

Koviloor Digital Library

யும் கண்கூடாகக் காட்டிவிட்டார்—குழந்தையாக நடை யிட்டார்; முகத்திலோ பொங்கும் சிரிப்பு; கண்களானுல் ஆனந்தத்தில் நீந்தின; உடம்பில் இழையளவு வஸ்திரமு மில்லாமல் திகம்பரக் கோலம்!''

இன்னெரு நாள் (1884, அக்டோபர் 5) இரண்டு அத்வைத வேதாந்தத் துறவிகளோடு உரையாடிய ஸ்ரீ ராமகிருஷ்ணர், இல்லறத்தாருக்கு அத்வைத பாவனையை விட பக்தியில் அடங்கி இருப்பதே ஏற்றதாகும் என்ற தமது வழக்கமான அபிப்பிராயத்தைக் கூறினுர். தாமும் எல்லா ஆசைகளையும் துறந்த வேதாந்தியாக இராமல் பக்தியில் ஆசை வைத்திருப்பதாகச் சொல்லிக் கொண்டார்.

உடனிருந்த அனைவரும் மௌனமாகக் கேட்டுக் கொண் டிருந்தனர். ஆசை என்ற "குறைபாடு" இருக்கிறதே என்று ராமகிருஷ்ணர் குறைந்து கொள்ளவில்லை. தன்னிறைவு என்ற உணர்வின் விக்ரஹமாகவே அமர்ந்திருந்தார்.

த்வைதியாகவே அவர் தம்மைச் சொல்லிக் கொண்ட போதிலும் அவரது அந்தக் கோலத்தைக் கண்டபோது அவ்விரு அத்வைத ஸந்நியாஸிகளில் ஒருவர் மற்றவரின் காதோடு கிசுகிசுத்தார் : "பாருங்கள்! இதுதான் பரமஹம்ஸ நிலை!''

அதே போதில் ராமகிருஷ்ணர் "ம''வைப் பார்த்து, "எனக்குச் சிரிச்சுண்டே இருக்கணும் போல இருக்கு'' என்ருர்.

குழந்தையாகச் சிரிக்கவும் செய்தார்.

பரமஹம்ஸ பாலர்! ஸாதாரண ஹம்ஸமில்லை! ஹம்ஸமே ஸாதாரண பக்ஷியில்லை என்ருல், அஸாதாரண ஹம்ஸத்திலும் உயர்வு பெற்ற "பரம'' ஹம்ஸம்! ஏனென்ருல் இந்த ஹம்ஸம் ஸாக்ஷாத் பராசக்தியுடையது! அன்னையின் அன்னம்! அசாதாரணத்திலும் அசாதாரணமான அந்த அன்னைபோலவே—தாயைப் போலப் பிள்ளை என்பதற்கேற்க

Koviloor Digital Library

—இருக்கிறது! அதென்ன அஸாதாரணத்திலும் அஸாதாரணம் என்றால் அதுதான் குழந்தையின் எளிமை! உலகியலும், தெய்விக இயலும், ஆன்மவியலும் தனக்கு ஆழ, அகல, அதிநுட்பமாகத் தெரிந்தபோதிலும்; அற்புத அநுபவங்கள் மலைமலையாக வாய்க்கப் பெற்றிருந்த போதிலும் அவற்றை எல்லாம் தூக்கிப் போட்டுவிட்டு எளிமையாக இருப்பதுதானே அசாதாரணத்திலும் அசாதாரணம்!

அன்னையும் அப்படியிருப்பவள்தான்! "மஹா" த்ரிபுர ஸுந்தரி எனப் பேர் பெற்றவள் "பாலா"வாகவும் இருக்கிறாளே! "முக்தா" (Mugdha) என்பதும் அவளது ஆயிரம் பெயர்களில் ஒன்றாகும். "மஹா" திரிபுரசுந்தரி கோமளக் கொழுந்தாக லலிதை எனப் பெயர் கொண்டதே விசேஷமெனில், அவளது ஆயிர நாமங்களில் முக்தா அதிவிசேஷமானது. முக்தா என்றால் எளியவள். சாதாரண எளிமை இல்லை. நிஷ்களங்கம், கல்மஷம் தெரியாத் தன்மை, சூதுவாதின்மை என்பதிலிருந்து ஆரம்பித்து அப்பாவித்தனம், அசட்டுத்தனம் வரை யாவையும் இந்த முக்தா என்ற வார்த்தையில் அடங்கும். "முக்திரூபிணி" என்று அதே ஸஹஸ்ரநாமம் சொல்லும் முக்தா (Mukta) இப்படி முக்தாவுமாக இருக்கிறாள்!

ஹம்ஸ வாஹனம் ஏறும் கோலத்தில் பரஞானம் தரும் சாரதையாயிருப்பவள் அவள். நம்முடைய பரம ஹம்ஸத்திடமும் சாரதாமணியாக வந்தாள். இவரைவிடவும் எளியளாயிருந்து கொண்டே இந்த சாரதாமணி பர ஞானத்தை வாரி வழங்கினாள்.

எளியளாயிருந்து கொண்டே அவள் உலகுக்கெல்லாம் தாய்மை தாங்க, ஸ்ரீ ராமகிருஷ்ணரோ அவள் மிகமிகப் பார்த்துப் பேணவேண்டிய ஒரு குழந்தையாயுமிருந்தார், திருவாசகம் மெய்யாகுமாறு!

......எங்களப்பன் எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன், மகன், தகப்பன், தமையன்...

Koviloor Digital Library

இப்படி அலங்காரமாக இன்னும் எவ்வளவோ சொல்லிக் கொண்டு போகலாம். இப்போதைக்கு இவ்வளவு போதும். அலங்காரங்களைத் தூக்கிப் போட்டுப் பிறந்தமேனிக் குழந்தை யாயிருக்கும் டாகுரின் அழகிலே மேலும் சிறிது பார்ப்போம்.

★

கல்கத்தாவுக்கு வில்ஸன் ஸர்க்கஸ் வந்தது. குழந்தைப் பரமஹம்ஸம் ஸர்க்கஸ் பார்க்க ஆசைப்பட்டது. வண்டி வைத்துக் கொண்டு போனார்கள். அன்னக் குஞ்சுக்கு அந்த ஸாரட்டு சவாரியிலேயே ஒரு குதூஹலம். தெருக்காட்சிகளை யும், போவோர் வருவோரையும் பார்த்துப் பார்த்து டாகுர் மகிழ்ந்தார். வண்டியின் எதிரெதிர் ஜன்னல்களால் இரு பக்கத்தையும் மாறி மாறி எட்டிப் பார்த்து அவர் குதூஹலித்ததைக் "குழந்தை மாதிரி" என்றே "ம" வர்ணிக் கிறார்! கட்டிடங்கள், விதவித வண்டிகள், அவற்றின் வேறுபாடான வேக ஓட்டங்கள் யாவற்றையும் ரஸிப்பது அவர் வழக்கம்.

சந்திர பொம்மை, மந்தை மந்தையாக மேகப் பொம்மை, கடல் பொம்மை என்று பாரதிக்கு தெய்வத்தாய் "விந்தை விந்தையாகப் பல வித விதத் தோற்றங்கள் காட்டு வித்தது" போல நம் டாகுர்க் குழந்தைக்கும் உலகையெல் லாம் பொம்மைக் கொலுவாகக் காட்டிக் களிப்புறச் செய்தாள்.

ஸர்க்கஸ் கூடாரத்தில் காலரி உச்சியில் குருக் குழந்தையை சிஷ்யர்கள் உட்கார்த்தி வைத்தனர். திவ்ய அநுபூதிகளின் எவரெஸ்ட்களில் ஆரோஹணித்த அவர் இங்கே காலரி உச்சியில் இடம் கிடைத்ததில் அப்படியொரு ஸந்தோஷப்பட்டார்! அந்த இடத்திலிருந்து ஸர்க்கஸ் காட்சிகள் யாவும் மறைபடாமல் தெரிவதில் மகிழ்ந்தார்.

பிஞ்சுப் பிள்ளையின் வாடாத புது மகிழ்ச்சியுடன் ஸர்க்கஸ் காட்சி ஒவ்வொன்றையும் பார்த்தார்.

Koviloor Digital Library

ஸர்க்கஸ் முடிந்து எல்லோரும் வெளியில் வந்தாயிற்று. பனி பெய்து கொண்டிருந்தது. பச்சை சால்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு வண்டியின் பக்கத்தில் நின்ருர் ஸர்க்கஸ் ரஸிப்பின் மகிழ்ச்சி இன்னமும் நீங்காத பச்சிளம் பாலர். (நம் உள்ளத்திலும் ஜில்லெனப் பச்சை பாய்ச்சும் தோற்றம்!)

"ம"வைப் பார்த்ததும் உற்சாகமாக ஆரம்பித்து விட்டார். "அந்த வெள்ளைக்காரிச்சி எப்படி ஸர்க்கஸ் பண்ணிஞ பார்த்தியா? மின்னலாட்டம் குதிரை ஓடறச்சே, அது மேலே ஒத்தைக் காலிலே நின்னுண்டு இருந்தாளே!..."

இதன் பிறகு சில நாட்களுக்கு அவர் அந்த ஸர்க்கஸ் விநோதங்களை அவ்வப்போது நினைவு கூர்ந்து பேசிக் கொண்டே இருந்தார்.

ஸந்நியாஸக் கடுமைகளில் தம்மை வரவரப்பாக்கிக் கொள்ளாமல் குழந்தை மழமழப்புடனேயே இருந்த நம் டாகுர் நாடகங்களுக்கும் செல்வார். அவரது தலையாய அடியாருள் ஒருவரான கிரிஷ்சந்திர கோஷ் புகழ்பெற்ற நாடகாசிரியர்தாம். உசத்தி தாழ்த்தி அறியாதது என்று குழந்தையைப் போற்றிப் பேசியவர் அல்லவா ஸ்ரீ ராமகிருஷ்ணர்! அதற்கேற்ப அவரே குடிகாரரும் துன்மார்க்கத்தில் நெடுகச் சென்றவருமான கிரிஷிடம் அலாதியான அன்பு காட்டினர்.

கிரிஷ் எழுதிய "சைதன்ய லீலா" நாடகம் பார்ப்ப தற்காக, கிரிஷே நிர்வாகியாயிருந்த ஸ்டார் தியேட்ட ருக்குச் சென்ருர் ராமக்ருஷ்ணர். கிரிஷ் மிகுந்த மகிழ்ச்சி யுடன் box எனப்படும் பெட்டிபோன்ற உயர்வகுப்பு ஆசனங் களிலொன்றில் குரு மஹராஜை அமர்த்தினர். "பாக்ஸ்" காரர்களுக்கு விசிறுவதற்கு ஆள் போட்டிருந்ததால் குரு மஹராஜுக்கு நல்ல காற்றும் கிடைத்தது. ஆள் ஒருத்தன் விசிறிவிட "பாக்ஸி"லிருந்து நாடகம் பார்க்கிறோமென்பதில் குழந்தை குருவுக்கு ஏகப்பெருமை!

Koviloor Digital Library

"ம"விடம், "ஆஹா, இங்கே எவ்வளவு 'ஜம்'முனு இருக்கு தெரியுமா?' ட்ராமாவுக்கு வந்தோமே—ன்னு ரொம்ப சந்தோஷமாயிருக்கு" என்றார்.

உடனேயே எளியருக்கு டிக்கெட் கட்டணம் உயர்வா யிருக்குமோ என்ற கவலை வந்துவிட்டது. "இந்த ஸீட்டுக்கு டிக்கெட் எவ்வளவு?" என்றார்.

"நம்மிடம் அவர்கள் கட்டணம் வசூலிக்கவில்லை. நீங்கள் வந்திருப்பதில் அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி" என்றார் "ம".

"இதெல்லாம் அம்பாள் கிருபைதான்" என்றார் குரு மஹராஜ்.

உலகத்தையே அவளுடைய நாடகமாக நன்கு கண்டுணர்ந்தவர் ஒரு நாடகத்தில் உயர் வகுப்பு ஆசனம் கிடைத்ததை அவளது க்ருபை என வியக்கிறார்! ஜிலேபிப் பொட்டணம் கிடைத்தால் அது தாம் செய்த தேவி நாம ஜப விசேஷம் என்கிறார்!

ட்ராமா பார்ப்பதைக் குழந்தைகள் எப்படிப் பெரிய விஷயமாகப் பேசிக்கொள்ளுமோ அப்படிப் பேசியவர் நம் விந்தை குரு மஹராஜ். உதாஹரணமாகத் தமது தமையனின் மகனும் தக்ஷிணேச்வரக் கோயிலின் முக்ய அர்ச்சகருமான ராம்லாலிடம் அவர் சொல்வதைப் பாருங்கள். "கிரிஷ்கோஷை ஸ்நேகிதம் பிடிச்சுக்கோ, ஏன்னு அப்போ ட்ராமா பார்க்க 'ஓசி' டிக்கெட் கிடைக்கும்" என்றார்!

★

இந்தக் குழந்தை யானைச்சவாரி செய்து களித்ததுமுண்டு

அப்போது ராமகிருஷ்ணர் நடுத்தர வயதினராக இருந்தார். மதுர்பாபு அவரைத் தம்முடைய பிறந்த ஊரான

Koviloor Digital Library

ஸோனு பேரே என்ற கிராமத்துக்கு அழைத்துப்போனூர். மதுர்பாபு யானை மீது செல்வதெனவும், ராமக்ருஷ்ணர் பல்லக்கில் செல்வதெனவும் ஏற்பாடாகியிருந்தது. ஆனால் அவரோ குழந்தை மாதிரித் தாம் யானைச் சவாரி செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டார். "வழியெல்லாம் குண்டும் குழியுமாயிருக்கிறது. அம்பாரியில் ஆடி ஆடிப்போனால் உங்கள் பூஞ்சை உடம்பு வலி கண்டுவிடும்" என்று கூறி மதுர் அவரைப் பல்லக்கில் ஏற்றிவிட்டுத் தாம் யானை மீது சென்றூர்.

மதுர்பாபு ஒரு பக்கம் ராமகிருஷ்ணரை அவதார ச்ரேஷ்டரான 'அப்பா'வாக வழிபட்டவர்; இன்னொரு பக்கம் ஏதுமறியாக் குழந்தையாகக் கருதிப் பேணி வளர்த்தவர். (மதுர் மட்டுமில்லை: அம்மா சாரதையும், மற்ற அடியார்களும் சீஷப் பிள்ளைகளுங்கூட இப்படி நேரெதிராகத் தோன்றும் இரு நிலைகளிலும் குரு மஹராஜிடம் தொடர்பு கொண்டிருந்தார்கள்.) போகும் வழியெல்லாம் இந்த "அப்பாக் குழந்தை"க்கு யானைச்சவாரி செய்யாத வருத்தம் இருந்ததை மதுர் ஊகித்துவிட்டார். எனவே கிராம எல்லை வந்ததும் தாம் யானையிலிருந்து இறங்கினூர். அப்பாக் குழந்தையைக் பல்லக்கிலிருந்து இறக்கினூர். வாஹனப் பரிவர்த்தனை நடந்தது. ராமகிருஷ்ணர் ஆசைப்பட்டபடியே ஆனைச்சவாரி செய்ய, மதுர்பாபு பல்லக்கில் சென்றூர்.

அந்த சவாரியை வெகுவாக ரஸித்தார் நம் நித்ய பாலர். தமிழகத்தில் பிறந்திருந்தால், "ஆனை ஆனை! அழகரும் சொக்கரும் ஏறும் ஆனை!"க்கு அபிநயித்திருப்பார்!

பல்லக்குப் பயணத்திலும் நம்முடைய குழந்தை ரஸிப்பதற்கு ஒன்று உண்டு. பல்லக்குத் தூக்கும் போயிக்கள் அலுப்புத் தெரியாமலிருப்பதற்காகப் போடும் சப்த ஜாலங்கள்தாம் அவரது ரஸிப்புக்கான விஷயம்.

காளைப் பருவத்தில் (காளியின் குழந்தையாகவே சாச்வதமும் இருந்தவராதலால் காளைத்தனம் என்பது

Koviloor Digital Library

அவருக்கு வாய்க்கவே இல்லைதான். ஆனால் வயசுக் கட்டத்தை வைத்து காளைப் பருவம் என்றேனும்) அவருக்கு ஆருயிர்த் தோழனாக இருந்த ராம் மல்லிக்கைப் பற்றிச் சொல்லும்போது, அவனது வீட்டினர் பல்லக்குப் பிரயாணம் செய்வது வழக்கம் என்று குறிப்பிட்டதோடு அவர் நிறுத்த வில்லை. ''அவங்க பல்லாக்கிலேயே போவாங்க, வருவாங்க. போயிங்க 'இஞ்சோடா, இஞ்சோடா'ன்னு கத்திண்டே பல்லாக்கு தூக்கிண்டு வருவாங்க'' என்று ஆர்ப்பரித்தார்!

படகுக்காரர்களின் 'ஐலஸா' போலத்தான் பல்லக்குத் தூக்கிகளின் 'இஞ்சோடா'. அந்த 'இஞ்சோடா'வில் நம் நித்ய பாலருக்கு ஒரு குதூஹலம்.

கங்கையில் நீராவிப் படகில் செல்வதிலும் இப்படித் தான் அவருக்குக் குஷி!

அவருடைய சவாரிகளைச் சொன்ன கையோடு அவர் கலந்துகொண்ட பரமனின் சவாரிகளையும் சொல்ல வேண்டும்.

புரி ஜகந்நாதத்தில் ரதோத்ஸவம் நடக்கும்போது கல்கத்தாவில் பலராம் வஸுவின் வீட்டிலும் கண்ணனுக்கு, தமையன் பலபத்ரனுடனும் தங்கை ஸுபத்ரையுடனும் தேர்த் திருவிழா நடக்கும். சின்னஞ்சிறு தேரில் மூன்று மூர்த்திகளையும் வைத்து வீட்டு வராந்தாவில் பக்தர்கள் வடம் பிடித்து இழுப்பார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவர்களில் ஒருவராகத் தேரிழுப்பார். ஒரு வித்யாஸம். மற்றவர்கள் பக்தர்களாகத் தேரிழுக்க இவர் பக்தக் குழந்தையாய் இழுப்பார்!

இன்குரலில் பாடிக்கொண்டே இழுப்பார் :

அதிருது நதியா முழுதும் கௌராங்கர்*
அடித்து வீசும்அன் பலைநதி தனிலே!

---

* கௌராங்கர் என்பது ஸ்ரீகிருஷ்ண சைதன்யர். அவர் பிறந்த நவத்வீபமே மருவி 'நதியா' என்றாயிற்று.

Koviloor Digital Library

மற்ற எந்த தெய்வ வியக்தியைவிடவும் பிள்ளைத் தமிழ் பெறச் சிறப்புரிமை பெற்ற ஸ்ரீ ராமகிருஷ்ணரின் 'சிறு தேர் உருட்டல்' இதுவே. கவிதையாய் பிள்ளைத் தமிழ் முடியா விடினும் சித்திரமாய் மனக் கண்ணில் தீட்டிப் பாருங்கள்.

★

உபரியாகக் குஷிப்படுவது போலவே பயந்தடித்துக் கொள்வதும் ஒரு குழந்தைக் குணமல்லவா? இந்த அச்ச குண அழகும் நம் அபய மூர்த்தியிடம் உண்டு!

பண்டிதர் எவரேனும் தம்மைப் பார்க்க வருகிறு ரென்றாலே 'குளிர்' எடுத்துவிடும் நம் எளிய பெருமாளுக்கு! ஆதிகாலத்தில் அப்படி பயப்பட்டாரென்றால் அதற்குச் சிறிது நியாயமுண்டு. 'தாம் மெத்தப் படித்துப் பாண்டித் தியம் பெற்றவரில்லையே; பண்டிதர்களுக்கு நாம் எப்படி ஈடு கொடுப்பது?' என்று அந்தத் தொடக்க காலத்தில் அவர் அஞ்சியிருந்தால் ஓரளவு சரி. ஆனால் அன்றிலிருந்து அவரிடம் எத்தனையோ பண்டித மலைகள் வந்து, தங்களது புலமையை எல்லாம் வாரி ஒரு வாயில் விழுங்கிவிடும் ப்ரத்யக்ஷ மஹா நுபூதிகள் கண்ட மஹாநுபாவன் இவர் எனக் கண்டு இவரது சேவடியில் சென்னிபட விழுந்த பிற்பாடும் இவரது பயம் போகவில்லை என்றால் அதற்கு ஒரே 'நியாயம்' இவருடைய குழந்தைமைதான். மஹா உபந்நியாஸகர்களும் வியந்து போற்றுமாறு எளிய உவமைகளாலேயே பேருண்மைகளின் நுண்மைகளைப் புலர்த்திக் காட்டி உபதேசிப்பதில் நிபுணர் பெயர் கொண்ட பிறகும் மேடைப் பிரஸங்கம் புரிய அவர் பயப்படவே செய்தார்.

வைஷ்ணவ சரண், கௌரீகாந்தரிலிருந்து தொடங்கி கேசவ சந்திர ஸேன், ஈச்வர சந்திர வித்யாஸாகர், பங்கிம் சந்திர சட்டர்ஜி ஆகிய மூன்று சந்திரர்களும் (மதியின் பெயர் கொண்ட மூன்று பெருமதியாளர்கள்!), 'தர்க்க சூடாமணி' என்றே வழங்கப்பட்ட பண்டித சசதரும் (மதியை தரித்தவர்

Koviloor Digital Library

என்பதே 'சசதர்' என்பதற்குப் பொருள்) தங்களது தர்க்கமும் புலமையும் இந்த ஞான சூரியன் முன்பு பகல் நிலாவாகச் சாம்பியதைக் கண்டனர். ஞான, பக்தி உலகத்திலோ அக்காலப் பெரும் பர்வதங்களாகத் திகழ்ந்த த்ரைலிங்க ஸ்வாமி, கங்கா மாதா, கால்னு பகவன் தாஸ் போன்றோரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் பெருமதிப்புப் பாராட்டினர். இப்படியெல்லாமிருந்தும் யாராவது படிப்பாளி வருகிறாரென்றால் குழந்தை, பாவம், பயப்பட்டது!

அவரது கதையமுதைத் தரும் சாரதாநந்தர் சொல்கிறார்: "பரிசயமில்லாதவர்களிடம் போகும்போது குழந்தை போன்ற குருதேவருக்குச் சொல்லி முடியாத அச்சம், கூச்சம் முதலியன உண்டாவது அடிக்கடி நடந்த ஒரு விஷயமாகும்." "புகழ் பெற்ற ஒருவர் அவரைப் பார்க்க வருகிறார் என்னும் போது சிறு பையனின் இயல்பு படைத்த குருதேவர் பயந்து நடுங்கியது பன்முறையாகும். 'தமக்கு விசேஷமாக எழுதப் படிக்கக்கூடத் தெரியாதே! தவிரவும் எந்த நேரம் தமக்குப் பரவச ஸமாதி வந்து விடுமோ? அப்படி உடலுணர்வு அற்றுப் போகும்போது தாம் சுற்றிக் கொண்டுள்ள ஒரே வஸ்திரமும் நழுவி விழுந்தாலும் தமக்குத் தெரியாதே!' என்றெல்லாம் அஞ்சுவார்."

ஓர் உதாரணம் பாருங்கள். வித்யா ஸாகரின் வீட்டுக்குப் போகும்போது, "என் சட்டையிலே பொத்தான் சரியாப் போட்டுக்க வரல்லியே! வித்யாஸாகர் தப்பா நினைச்சுண்டுடுவாரா?" என்று கேட்குமளவுக்குப் பசும் சிசுவாயிருந்திருக்கிறார்!

கால்னுவில் பகவான்தாஸைக் காணப்போகும்போது காலோடு தலை போர்த்துக்கொண்டு கூசிக் குறுகியபடி சென்றார்.

சசதர் வருகிறாரென்றபோது அவர் பட்ட பாடு! "நரேன், யோகேன்!" என்று தம் இளம் சிஷ்யர்களை எல்லாம்

Koviloor Digital Library

கூப்பிட்டு வைத்துக்கொண்டு, "சசதர் பண்டிதர் இங்கே வரச்சே நீங்களெல்லாம் என்னை விட்டுக் கொஞ்சங்கூட அந்தண்டை போயிடாதீங்கோ!" என்று 'காப்பு' வேண்டினார் அவர்களது குரு மஹராஜர்! மஹா ராஜ்ஞியான தம்முடைய அம்மாவிடமும் இச் சமயங்களில் அவர் அபலரிலும் அபலராக அரண் புகுந்து முறையிடுவார்.

குக் என்ற ஆங்கிலேய மிஷனரியைத் தம்மிடம் அழைத்து வரப்போவதாகக் கேசவ் தெரிவித்த அன்று தாம் கொண்ட தொடை நடுங்கிக் கோலத்தை குருதேவரே 'ரஸித்து'க் கூறியதுண்டு.

★

பயந்து ஒதுங்குவதில் குழந்தைக்கு நிகர் குழந்தைதான் என்றால் பழகி ஒட்டிக் கொள்வதிலும் அதற்கு அதுவேதான் இணை! இத் தன்மையின் பரிபூர்ணத்வத்தை நம் டாகுரிடம் போல் வேறெங்கும் பார்க்க முடியாது. அவரது அந்த தேவாமுதமான ஒட்டுறவைப் பற்றித் தனிக் காப்பியமே வரையலாம்.

வேடிக்கை என்னவென்றால், தாம் பயந்த அந்த மஹாப் பிரமுகர்கள் பலரை இவரேதான் முன்னடி வைத்துப் பார்க்கச் சென்றிருக்கிறார். சிறப்புப் பொருந்திய ஒருவர் இருப்பதாய் அறிந்தால் அவரைப் போய்ப் பார்க்க வேண்டுமென எளிய டாகுர் விழைவார். தம்மை வந்து அவர்கள் காண வேண்டுமென்று சற்றும் எண்ணமல் தாமே அவர்களைக் காணப் புறப்பட்டு விடுவார். அப்புறம்தான் தம்முடைய 'தகுதியின்மை', 'கோணங்கித்தனம்' முதலியவற்றின் நினைவு வந்து பயப்பட ஆரம்பித்து விடுவார். அதற்காக முன் வைத்த காலைப் பின் வைத்து விட மாட்டார். அவருடைய மஹாராஜ்ஞியம்மா அவர் அப்படிச் செய்ய விட மாட்டாள்! அந்தப் பிரமுகரிடம் இந்த எளியர் சென்று பயமும் கூச்சமும் விட்டுப் பழகி, பிரமுகரையும் தமக்குப் பணியும் எளியராக்கி

Koviloor Digital Library

விட்டு வெற்றி வீரராகத் திரும்புமாறே அவள் அநுக்ரஹித்து வந்தாள்!

தங்கள் பிரமுகத் தன்மையை விட முடியாமல் அவர்கள் முதலில் சற்றேனும் விலகி விலகித்தான் நிற்பார்கள். ஆயினும் விளையாட்டுக்கு விழையும் ஒரு பிள்ளை விலகி நிற்கும் இன்னொரு பிள்ளையை எப்படியாவது 'ஃப்ரண்ட்' செய்து கொண்டு விளையாட்டுக்கு இழுத்து விடுவது போல, விலகும் பிரமுகரிடம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஸர்வ ஸஹஜமாக இழைந்து பேசித் தம்மிடம் இழுத்துக் கொண்டு விடுவார்! பய அழகு போய் நய அழகின் நாயகராக இப்போது திகழ்வார்.

இந்த ஸ்வாதீனத்தில் அந்தப் பிரமுகர்களது குறைபாடு களைக்கூட அவர்களிடமே ஹாஸ்யமாக இடித்துக் காட்டு வார். ஏன், ஹாஸ்யமாக இல்லாமல் தீவிரமாகவேகூட அவர்களைக் கண்டிக்கவும் தயங்க மாட்டார். வித்யா ஸாகரர், பங்கிம் சந்திரர், பகவான் தாஸ் ஆகியவர்களுடன் அவரது சந்திப்புப் பற்றி சாரதாநந்தர் நூலிலும், "ம"வின் நூலிலும் படித்துப் பார்த்தீர்களானால் தெரியும்.

அழகுகள் நிறைந்த ஒரு வீட்டுக்குள் தானாகவே போய்ப் பார்க்க வேண்டுமென்று குழந்தை ஆசைப்படுவது இயல்பு. அதே போதில் போவதற்குக் கூச்சமும் இருக்கும். அப்புறம் சுதாரித்துக்கொண்டு அங்கே போய்விடும். போனதுதான் தாமதம், கூச்சமும் போகத் தொடங்கும். அங்குள்ள வஸ்துக்களையெல்லாம் தன்னுடைமையே போல் எடுத்து வைத்துக்கொண்டு புழங்கும். அவற்றில் அழகில்லாததாகத் தோன்றுபவற்றை ஸ்வாதீனமாக எடுத்து எறியவும் செய்யும்.

★

பண்டிதர்களுக்குத் தம்மால் ஈடுகொடுக்க முடியுமா என்று ராமகிருஷ்ணர் பயப்பட்டதற்கும் நியாயம் இல்லாம

Koviloor Digital Library

வில்லை. சில விஷயங்களைப் புரிந்துகொள்ள அவரது அறிவு போதவில்லைதான். இயல்பாகவே கூர்த்த அறிவு பெற்றிருந்து பிரம்மசரியத்தால் அதற்கு மேலும் சாணைபிடித்துக்கொண்டு எத்தனையோ துறைகளில் அபார மேதா விலாஸம் காட்டிய டாகுரையா இப்படிச் சொல்கிறோமென்றால், அவரைத்தான் அம்பிகை அதி விசித்ரக் கலவையாகப் படைத்து விட்டாளே!

எத்தனை இடங்களில் அவரே சொல்லியிருக்கிறார்? "நான் என்ன, படிப்பு வழக்கில்லாத ஆசாமி". "நான் ஒரு பைத்தியம்தானே!" "நான்தான் முட்டாள் சிகாமணி".

பல விஷயங்களைப் பற்றிக் கேட்டுத் தம்மால் புரிந்து கொள்ள முடியாமல் தவித்திருக்கிறாரே!

பருவங்களைப் பொறுத்துக் கடலில் அலை பொங்கும் காலம், வடியும் காலம் என்று உண்டல்லவா? இது ஏன் நிகழ்கிறது என்று விளக்கும்படி ராமகிருஷ்ணர் இரு வேறு சந்தர்ப்பங்களில் "ம"வைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். மக்குப் பிள்ளைக்கும் புரிவதுபோல் பாடம் கற்பிக்கும் திறன் பெற்ற பள்ளி ஆசிரியரான "ம" படம் கிடம் எல்லாம் போட்டு இதை விளக்கியிருக்கிறார். ஆனால் முதல் முறை ராமகிருஷ்ணர் அவர் விளக்கிக் கொண்டு போகையில், "நிறுத்தப்பா, நிறுத்து! என்னால் புரிஞ்சுக்க முடியலை, தலை சுத்தறது" என்று கூறியிருக்கிறார். சுமார் ஒன்றரை ஆண்டுக்குப் பிறகு இரண்டாம் முறை விளக்கியபோது வரைபடத்தை ஒரு நிமிஷம் பார்த்தார். "தயவுபண்ணிப் போறுமே! எனக்குத் தலையை உடைக்கிறது" என்றார்!

அவர் பெற்ற பள்ளிப் படிப்பே குறைவு. அந்த ஆரம்ப நாட்களில் தமக்குச் சுட்டுப் போட்டாலும் கணக்கு வராமலிருந்தது என்றும் அது ஆயுள் பரியந்தம் நீடிப்பதாகவும் சொல்லிக்கொள்வார்.

புதானந்தர் அழகாகச் சொல்வர் : "இடுப்பைச் சுற்றி முறையாக வேஷ்டி கட்டிக்கொள்ளத் தெரியாத குழந்தை;

Koviloor Digital Library

49-ஐயும் 73-ஐயும் சரியாகக் கூட்டத் தெரியாத காளி மகவு.''

கணிதப் பெரும் பேராசிரியருக்கும் தெரியாத, ஆனல் இவருக்கோ உயிருக்கு உயிராய்த் தெரிந்த விஷயம் ஒன்று உண்டு! ஒன்றுக்குமேல் அங்கு இடமில்லை. எனவே கணக்குக்கு அங்கு காரியமில்லை. அல்லது அது கணிக்கவே முடியாத அனந்த சக்தியும், குணமும், கிரியையும் கொண்டது. எப்படிப் பார்த்தாலும் அங்கே கணித சாஸ்திரத்துக்கு வேலை இல்லை!

படித்தவர்களுக்கு அவர் படிவரிசை போட்டு அளவை வகுத்தது எழிலார்ந்த குழந்தைத்தனமாக இருக்கும். அக் காலத்தில் பள்ளிப் படிப்பு முடிந்தபின் பட்டப்படிப்பு தொடங்குவதற்குமுன் பயின்ற இரு வருஷக் கோர்ஸை எஃப். ஏ என்று சொல்வார்கள். ராமக்ருஷ்ணரோ எஃப். ஏ படிப்பவர்களை 'ஒண்ணரை பரீக்ஷை கொடுக்கிறவங்க' என்பார். அவர் மொழியில் பீ.ஏ படிப்பவர்கள் 'இரண்டரை பரீக்ஷை கொடுக்கிறவங்க'. பி. எல் படிப்பவர்கள் 'மூணரை பரீக்ஷை கொடுக்கிறவங்க'!

சாரதாநந்தர் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம் சொல்வார். ஏறக்குறைய நிரக்ஷரகுக்ஷியாகவே தம்மைக் கருதிய டாகுர் அவதரித்த அந்த 1836-ம் ஆண்டிலேயேதான் நம் நாட்டில் ஆங்கிலக் கல்வி முறை அமலாயிற்று! ஆங்கிலேயருக்கு அடிமை செய்யும் குமாஸ்தா வர்க்கத்தை சிருஷ்டிப்பதற்கும், நம்மவர்களே பாரத கலாசாரம் வெறும் பதர் எனத் தள்ளி மேற்கத்திய வாழ்முறைக்கும் சிந்தனை முறைக்கும் தங்களை ஸ்வீகார புத்திரர்களாக்கிக் கொள்வதற்கும் வசதியாகவே அந்தக் கல்விமுறை உருவாக்கப்பட்டிருந்தது. 'வாலறிவன் நற்றாள் தொழவே' பிறந்த நம் நூல் நாயகர் 'கற்பதால் ஆய பயன் என்?' என்று பள்ளியை ஒதுக்கி, பள்ளி சேரும் வயது வராத பாலனாகவே ஆயுள் முழுதும் வாழ்ந்தார். ஆங்கிலக் கல்வி முறையில் தேர்ந்து, அவர்களது வழிமுறை

Koviloor Digital Library

களிலேயே மோஹித்துப்போன மேதைகள் பலரும் இப் படிக்காத மேதையின் பரம சிஷ்யர்களாயினர்.

★

"அதென்ன, இதென்ன?" "அப்படின்னு என்ன?" என்று துருவித் துருவிக் கேட்கும் குழந்தை ஸ்வபாவத்தை ஸ்ரீ ராமக்ருஷ்ணர் பலமுறை காட்டியிருக்கிறார்.

இவரிடம் உபதேச அமுது பருக அடியார் கூடியிருக்க, இவரோ அவர்களிடமே, 'அதைப் பற்றிச் சொல்லுங்கள்', 'இதைப் பற்றிச் சொல்லுங்கள்' என்று துளைத்தெடுத்து விஷயங்கள் கேட்டுக்கொள்வார்.

பேசுவதில் "தான்" நிறைய இருக்கிறது. கேட்டுக் கொள்வதில் எளிமை நிறைய இருக்கிறது. அதிலும் நம் டாகுர் எத்தனை எளிமையோடு கேட்டுக்கொண்டார்?

உதாரணமாக,

மதாசாரணைகளைக் கவனமாகப் பயில்பவரும், தாராள மனத்தருமான ஈசான பாபு வந்திருந்த ஒரு ஸமயம் டாகுர் அவரிடம், "காரியத் துறவு பற்றிச் சொல்லு", "ஞானம் வந்தவுடன் ஜாதி வித்தியாஸங்கள் தாமாகவே கழல்வதைப் பற்றிச் சொல்லு", "ஸகல மார்க்கத்தாலும் எப்படி ஆண்டவனை அடையமுடியுமென்பதைப் பற்றிச் சொல்லு". "அடியார் மனமே பெரிசிலெல்லாம் பெரிசு என்பதைப் பற்றிச் சொல்லு" என்றெல்லாம் ஊக்கிக் ஊக்கிக் கேட்டார். அவர் கூறிய விளக்கங்களில் தாம் பூரித்துக் கூடியிருந்தோரையும் மகிழவைத்தார். இதையெல்லாம் விடப் பசுங்குழந்தையாக, "ஒரு சின்னப் பையன் ஸாமிக்கே கடிதாசு போட்டான்-னு ஒரு கதை சொல்லுவியே, அதைச் சொல்லு" என்று கதை கேட்டார்!

ஆழ்ந்த ஸமயப் பற்றுகொண்ட கர்னல் விச்வநாத் உபாத்யாய என்பவர் ராமக்ருஷ்ணரின் அடியார்களில்

Koviloor Digital Library

ஒருவர். அவரை ராமகிருஷ்ணர் 'காப்டன்' என்றே அழைப்பார். 1885 ஜூன் மத்தியில் ராமகிருஷ்ணரைக் காணக் காப்டன் வந்திருந்தார்.

ராதா பாவத்திலே நாட்கணக்காக முழுகியிருந்த நம் குருமஹராஜர், ஸ்ரீக்ருஷ்ண சைதன்ய அவதாரமாகவே கருதப்பட்ட நமது டாகுர், "ராமனுகவும் க்ருஷ்ணனுகவும் வந்தவனே இதோ ராமக்ருஷ்ணனுக வந்திருப்பது" என்று சில காலத்துக்குப்பின் நரேந்தரிடம் கூறப் போகிறவர்—அப்போது காப்டனிடம், "நீ பாகவதம் நிறையப் படிச்சிருக்கியே! கோபிகைகளைப் பத்திக் கொஞ்சம் எங்களுக்குச் சொல்லேன்" என்று கேட்டுக் கொண்டார்!

அவர் கொஞ்சம் சொன்னதுமே டாகுர், "கோவிந்தா, கோவிந்தா!" என்று கூவியவாறு பாவஸமாதி உற்றுர். அவரது உன்னத நிலை கண்டு அப்படியே மலைத்துவிட்டார் காப்டன்.

அநுபூதி மலையாயிருந்த டாகுரோ வெளியுணர்வு வந்தவுடனேயே எளிமை மலரானுர், பாலகனுனுர்.

"இன்னும் சொல்லேன்" என்று காப்டனிடம் கோரினுர்.

★

தனக்கு ஒன்றும் தெரியாது என்று உணர்ந்த குழந்தை யார் எது சொன்னுலும் அவர்கள் தெரிந்தே சொல்வதாக எண்ணி அவர்கள் சொல்வதை அப்படியே நம்பிவிடுமல்லவா? இப்படிப்பட்ட நம்பிக்கைக்கும் உருவகமாயிருந்தவர் நம்முடைய குருக் குழந்தையார்.

அண்ணு பிள்ளை ராம்லால் அவரிடம் சரத்காலத்தின் குளிர் ஆரோக்கியத்துக்கு நல்லது என்று ஒரு நாள் சொன்னுர். அதற்கு ஒரு செய்யுள் மேற்கோளும் காட்டினுர்.

அதன் பின் ஓர் இரவு ராமகிருஷ்ணர் கல்கத்தாவிலிருந்து தக்ஷிணேச்வரத்துக்குக் குதிரை வண்டியில் வந்து

Koviloor Digital Library

கொண்டிருந்தார். 'இது சரத்காலமாயிற்றே! குளிரை நன்கு வாங்கிக் கொண்டால் ஆரோக்யம் பெறலாமே' என்று குழந்தைக்கு நினைவு வந்தது. அதனால் வரும் வழி நெடுக வண்டிக்கு வெளியிலேயே தலையை நீட்டிக்கொண்டு குளிர்காற்றையும் பனியையும் நன்கு வாங்கிக்கொண்டார்.

அதனால் அவர் பெற்ற ஆரோக்யம் என்னவென்றால் சளிக் காய்ச்சலில் விழுந்ததுதான்!

இதை அவரே நினைவு கூர்ந்து சிரித்தபடிச் சொல்லி பக்தர்களைச் சிரிக்க வைப்பார்.

அவர் நினைவு கூரும் இன்னொன்று.

ஒரு நாள் எங்கோ காட்டு வெளியில் புல்தரையில் உட்கார்ந்திருந்தார். கையில் எதுவோ கடித்துவிட்டது. பாம்பாயிருக்குமோ என்று பயந்தார். (பயப்படுவதற்கு பயப்படாத விந்தை ஞானி அவர் என்பதை மறந்து விடாதீர்கள்!)

உடனே நம்பிக்கையுருவான குழந்தைக்குத் தான் கேள்விப்பட்டிருந்த ஒரு விஷயம் ஞாபகம் வந்தது. ஒரு பாம்பு கடித்தபின் சிறிது போதுக்குள்ளேயே மீண்டும் ஒருமுறை கடித்தால் முதலில் செலுத்திய விஷத்தைத் திரும்ப வாங்கிக் கொண்டுவிடும் என்ற விஷயம்தான். இது நினைவு வந்ததோ இல்லையோ பாம்பு வளையைத் தேட ஆரம்பித்துவிட்டார். ஒரு வளை தெரிந்தது. அதிலே கையை விட்டுக்கொண்டு நின்றுவிட்டார்! இப்படி ஒரு குழந்தை நம்பிக்கை எங்கேனும் பார்க்க முடியுமா?

வழிப்போக்கன் ஒருவன் பாம்பு வளைக்குள் கையை நுழைத்திருக்கும் விசித்ர பிராமணரைப் பார்த்து, "என்ன சாமி பண்ணறே?" என்று கேட்டான்.

ராமகிருஷ்ணர் விஷயத்தைக் கூறினார்.

"நல்ல காரியம் பண்ணினே, போ!" என்று அவரைக் கடிந்துகொண்ட வழிப்போக்கன், "ரெண்டாம் வாட்டி

Koviloor Digital Library

பாம்பு கடிச்சா மட்டும் போறுது! முதல்லே கடிச்ச அந்தக் கொட்டுவாயிலேயே மறுபடி கடிச்சாத்தான் வெஷத்தை உள்ளே வாங்கிக்கும். வேறெங்கே கடிச்சாலும் ஆளு பனூல்தான்'' என்றுன்.

சரேலென்று வளேயிலிருந்து கையை எடுத்தார் பாலர்.

இச்சம்பவத்தை ஒருமுறை அவர் கூறுகையில், இந்தக் கட்டுரையில் நாம் கண்ட, காணவிருக்கும் அத்தனைக்கும் ஸாரமான உண்மையைச் சொன்னுர். "அம்மா என்னே ஒரு குழந்தையின் நிலேயிலே வெச்சிருக்கா''.

இந்த நம்பிக்கையின் ஓர் அங்கமாகவே சாஸ்திர, ஸம்பிரதாயக் கோட்பாடுகளிலும், அது மட்டுமின்றி 'மூட நம்பிக்கை' என்றே புத்திசாலியுலகம் சொல்லும் பொது ஜன வழக்குகளிலும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஈடுபாடு கொண்டிருந்தார். அதை ஒரு தனிக் கட்டுரையாகப் பார்ப்போம். அந்த அம்சத்தைச் சேர்ந்ததாக, அதே போதில் அவரது குழந்தைத்தனத்தின் மிக உச்ச நிலேயாக உள்ள, ஒரு விஷயம் பார்க்கலாம். அவருடைய மஹா மஹிமையின் ஊடேயே பரம குழந்தைத்தனம் பிதிர்ந்து வந்த விஷயம்.

1885, ஆகஸ்ட் மாதம். குருதேவர் உடலே உகுப்பதற்குச் சரியாக ஓராண்டு முந்திய சமயம். புற்றுநோய் நன்றுக அவரது தொண்டையைப் பற்றி விட்டது. ஆனுல் ஏதோ தொண்டை நோய் என்ற அளவிலே நினேக்கப்பட்டதேயன்றி, பெத்தப் பெயர் பெறவில்லை.

அவரது உடல் நலம் நாளுக்கு நாள் நலிந்தபடி இருப்பதாக அறிந்து அவரைக் காண அநேகர் வந்தனர். அவர்களில் ஒரு பெண்மணியிடம் ராமக்ருஷ்ணர், "எனக்குத் தொண்டையில் ஒரே வலியாயிருக்கு. உனக்கு வியாதி நிவாரண மந்த்ரம் ஒண்ணு தெரியுமே, அதைச் சொல்லி என் தொண்டையைத் தடவிக் கொடுப்பியா?'' என்று கனிவாகக் கேட்டார்.

Koviloor Digital Library

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஏனெனில் குருநாதரிடம் தனது வாழ்க்கை விஷயங்களையெல்லாம் அற்றுபடி செய்திருந்த அவள் தனக்கு மேற்படி மந்திரம் உபதேசமாகியிருப்பதை மட்டும் சொல்லவேயில்லை. காம்ய பலன் மட்டுமே தருவது அது என்பதாலும், வியவஸ்தைக் குறைவான சில வழக்கங்களைப் பின்பற்றும் கோஷ்பாரா வைஷ்ணவர்களிடமிருந்து அதை அவள் தீக்ஷை பெற்றிருந்த தாலும் இந்த சமாசாரத்தை அவள் ரகசியமாகவே வைத் திருந்தாள். ஆனால் ஸர்வ மந்த்ர ஸ்வரூபியான டாகுர் ஸர்வ ஸஹஜமாக அதைக் குறிப்பிட்டுவிட்டார்!

இது அவருடைய மகா மகிமை. ஆனால் விந்தை பாருங்கள். அந்த மகிமர்—ஸர்வ மந்த்ர ஸ்வரூபியாக இருக்கப்பட்டவர்—ஒரு சாமானியப் பெண்மணியிடம் அவளது மந்திர உச்சாரணத்தால் தமது நோய்க்கு நிவாரணம் கேட்கிறார்! அவரொத்த ஒரு மஹான் உடல் உபாதையைப் பொருட்படுத்துவதே விந்தையெனில், அதற்கு மேலும் விந்தையாயுள்ளது அவரொத்த ஒரு யோகீச்வரர் யாரோ ஸ்திரீயிடம் மாந்திரிகமான நிவாரணம் தேடுவது! ஆனால் எல்லா விந்தைகளுந்தான் எளிமையாகி இந்த எளியவரிடம் அடக்கமாகி விட்டனவே!

தன்னுடைய ரஹஸ்யங்களையும் அறியக்கூடிய மஹிமர் அவர் என்பதில் அம் மாது பெற்ற பிரமிப்பை அடியோடு நீக்கும் எளிமையோடு அவர் குழந்தையாக அவளிடம் கழுத்தைச் சாய்த்துக் காட்ட, அந்த சாதாரணப் பெண்மணி அவதாரரின் தொண்டையைத் தடவி மந்திரிக்கவும் செய்தாள்!

★

அறநெறிகளில் அவருக்கிருந்த அதிசய ஈடுபாட்டிலும் ஒரு குழந்தை எதொன்றையும் மனமார நம்பி அதீதப் பற்றுடன் அதைப் பிடித்துக் கொள்ளும் எளிய எழில் கமழ்ந்தது. 'தப்பு பண்ணினு உம்மாச்சி கண்ணைக் குத்திடும்'

Koviloor Digital Library

என்று பரிபூர்ணமாக நம்பி தப்பாகத் தான் நினைக்கும் ஒன்றுக்கும் பயப்படும் எழில்! உதாரணம் காட்டினால் புரியும். "குருதேவரின் பிள்ளையியல்புக்கு ஓர் உதாரணம்" என்றே துணை முகுடமிட்டு சாரதாநந்தர் கூறும் நிகழ்ச்சி* பார்ப்போம்:

ஒரு நாள் மதுர்பாபுவின் மனைவி குளித்துவிட்டு வரும் போது குளக்கரையில் ஏராளமாகக் காய்த்திருந்த வெள்ளரிக் காய்களில் சிலவற்றைப் பறித்தெடுத்துக் கொண்டாள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த பரமஹம்ஸர் ஒரேயடியாகப் பதறிப் போய்விட்டார். மாபெரும் அதர்மம் ஒன்று நடந்து விட்டதைக் கண்டுவிட்ட பதற்றம்! அந்த மாபெரும் அதர்மம் என்ன தெரியுமா? அந்த வெள்ளரிக் காய்கள் காய்த்திருந்தது அவளுக்குச் சொந்தமான பகுதியில் இல்லை, அப்பகுதி அவளுடைய ஸஹோதரிக்குச் சொந்த மானது என்பதுதான்!

இச் சகோதரிகள் யாவரும் கோடீச்வரிகள். அந்தக் கோடீச்வரிகளில் ஒருத்தியின் தோட்டத்தில் கணக்கு வழக்கில்லாமல் காய்த்திருந்த இந்த சாமானியமான வெள்ளரிக்காய்கள் அவளுக்கு ஒரு பொருட்டேயில்லை. திருட்டுணர்வேயில்லாமல் வழிப்போக்கர்களுங்கூட அந்தக் காய்களைப் பறித்துக் கொண்டு போவார்கள்.

ஆனால் இது நம் பரமஹம்ஸக் குழந்தையாருக்குப் புரியவில்லை. 'ஒருத்தர் சொத்தில் அவருடைய அநுமதி இல்லாமல் இன்னொருத்தர் கைவைக்கக் கூடாது' என்ற அறநெறியை அணுவுக்கு அணு நம்பிவிட்ட குழந்தையார் அவர்! அதனால்தான் இப்படியும் ஒருத்தி அறநெறியைச் சிதைப்பாளா என்று அலமாந்துவிட்டார்.

உடனே அவர் அந்த வெள்ளரிக்காய்களின் உடைமைக் காரியைப் பார்த்து தர்மம் கொள்ளை போனதைத் தீவிர உணர்வோடு புகார் கொடுத்தார்.

* Sri Rama krishna, The Great Master III-7-34

Koviloor Digital Library

அவளுக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லை. ஆனாலும் 'அப்பாக் குழந்தை'யிடம் மேலும் விளையாட்டுப் பார்க்க எண்ணி, சிரிப்பை அடக்கிக் கொண்டாள். "அப்பா, இப்படியா ஒரு அக்கிரமம் என் உடன் பிறந்தாள் செய்து விட்டாள்? விடப்படாது அவளை!" என்கிற ரீதியில் சொல்லிக் கொண்டு போனாள்.

அப்போது 'அக்கிரமக்காரி'யான மதுரின் மனைவியும் அந்தப் பக்கம் வந்தாள். அவளிடம் ஸஹோதரி கண் ஜாடை காட்டிவிட்டுப் பொய்ச் சண்டை பிடிக்கலானாள்.

அவளும் 'அப்பாக் குழந்தை'யை விளையாட்டுவித்து வேடிக்கை பார்க்க விரும்பினாள். அதனால் அவரிடமே சண்டைக்குப் பாய்ந்தாள். "அப்பா, நான் பண்ணினது முறைகேடு என்றால் நீங்கள் பண்ணுவது மட்டும் முறையா? நானும் 'அவரும்' உங்களிடமே சரணாகதி செய்திருக்க, நான் வெள்ளரிக்காய் பறித்ததை இவளுக்குக் காட்டிக் கொடுத்து என்னைக் குற்றவாளியாக நிறுத்தி வைத்திருக்கிறீர்களே! யாரும் என் முகத்தில் முழிக்காதபடிப் பண்ணியிருக்கிறீர்களே!" என்றெல்லாம் சாடினாள்.

குழந்தையப்பா ஒன்றும் புரியாமல் திணறினார். "ஒங்களோட ஒலகப் போக்கெல்லாம் நான் என்ன கண்டேன்? எனக்குத் தெரிஞ்சது, கூடப் பொறந்தவாளா இருந்தாக்கூட பாகம் பிரிச்சாச்சுன்னா அப்பறம் ஒத்தர் ஒடமையிலே அவருக்குத் தெரியாம இன்னொத்தர் கைவைக்கக் கூடாது—ங்கிறதுதான். அதனாலேதான் நியாயப்படி யார் ஒடமைக்காரியோ அவ விஷயத்தைத் தன்னிஷ்டப்படித் தீர்த்துக்கட்டும்னு அவளுக்குத் தெரிவிச்சேன்" என்றார்.

அதற்கு மேலும் அக்காள்—தங்கைகளால் தங்கள் பொய்ச் சண்டையை நிறுத்திவிட்டு, மெய்யாகப் பொத்திக் கொண்டுவரும் சிரிப்பை அவிழ்த்துவிடாமலிருக்க முடியவில்லை.

Koviloor Digital Library

சண்டை போட்டுக் கொள்வதற்குப் பதில் ஏன் இப்படி இருவரும் ஒற்றுமையாகச் சிரிப்பு 'டுயட்' நிகழ்த்தினர்கள் என்று புரியாமல் அப்பாக் குழந்தை முழித்தது!

ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதத்தைத் தவிர வேறெங்காகிலும் இரு பெண்டுகள் இப்படி சகஜமாக ஒரு மஹாபுருஷனை ஆட்டுவித்து விளையாட்டுப் பார்த்ததாகக் காணக்கூடுமா? அவர் எத்தனை குழந்தையாயிருந்தாரென்பதற்கு இதுவே அத்தாட்சி.

★

ஐந்து வயது முடியும்வரை ஒரு ஜீவனைக் குழந்தை என்கிறோம். பிறகு மத்திம வயது வரும்வரை பையன் என்கிறோம். அப்புறம் வாலிபப் பருவம். ஸம்ஸ்கிருதத்தில் பால்யம் (பாலப் பருவம்) என்பது ஐந்துவயது முடியவாகும். ஆறிலிருந்து பத்து முடியப் பௌகண்டம் என்றும், பதினொன்றிலிருந்து பதினைந்து முடியக் கைசோரம் என்றும், பதினாறுக்கு மேற்பட்டால் யௌவனம் என்றும் சொல்வார்கள். பல வேஷம் பூண்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர் குழந்தைக் குணம் போலவே பௌகண்ட, கைசோர குணங்களையும், 'காளை'த்தனமில்தாத யௌவன குணத்தையும் கூட வெளியிட்டதுண்டு. அவரே சொல்லியிருக்கிறார். "நான் குழந்தை மாதிரி இருக்கேன். ஆனால் எனக்கு ஒரு பையன் குணம், வாலிபன் குணம் எல்லாமும் ஒவ்வொரு சமயம் வாய்க்கிறது. அறிவுரை தரும்போது என்னை வாலிபனாக நினைக்கிறேன். வேடிக்கை, விஷமம் பண்ணத் தோணறச்சே பையனாக இருக்கிறேன். அப்போ சிறுவயசுக்காராளோடே தமாஷ் பண்றேன்."

இவை மட்டுமல்ல. பையனாகவும், வாலிபனாகவும் இருக்கும்போது அக் கட்டத்தில் உள்ளோரின் பிடிவாதம், பிறரைக் கேலி செய்தல் முதலிய குணங்களும் டாகுரிடம் பிரதிபலித்தன.

Koviloor Digital Library

கபடமறியாக் குழந்தைமையின் மாதுரியம் இப் பருவங்களில் இல்லை. குழந்தையின் முரட்டுத்தனத்திலும் பிடிவாதத்திலுங்கூட மனத்தைத் தொடும்படியாக உள்ள ஏதோ ஒன்று அப் பருவம் கடந்தபின் மறைந்துவிடுகிறது. எனவே இந்தக் கோணங்களில் நமது குரு மஹராஜரை நாம் சித்திரிக்கவில்லை. குழந்தைமையிலேயே இன்னும் ஓர் இனிய கோணம் மட்டும் சொல்லி இக் கட்டுரையைத் தலைக்கட்டுவோம். மனிதரிடை குழந்தையாயிருந்த அவர் தெய்விகத் தொடர்புகளிலும்கூட குழந்தைப் பாங்கு காட்டிய அழகுதான் அது. அதையே தனிக் கட்டுரையாக்குமளவுக்கு விஷயமுண்டெனினும் "மாதிரி"க்கு மாத்திரம் சில துணுக்கு பார்ப்போம்.

முகமுகமாகத் தம்மோடு பேசும் மஹாமாதாவிடம் அவர், மற்ற பக்தர்கள் வேண்டுவதற்கு நேர்மாறாக, பச்சைக் குழந்தையாய் வேண்டும் ஒன்று பாருங்கள். "அம்மா! எனக்கு நல்ல பணக்காரனு ஒருத்தனைப் பிடிச்சுக் கொடேன்!"

எதற்காம்? பணத்தின் ஸ்பரிசம் பட்டாலே பாம்பு தீண்டினாற்போலத் துடிப்பவர் ஏன் இப்படி வேண்டுகிறார்? அதையும் அதிபாலனாகச் சொல்கிறார்: "இல்லாட்டா இந்த ஒடம்பை எப்படிக் காப்பாத்திக்கொள்றது? எப்படி ஸாதுக்களையும் பக்தாளையும் என்கூட வெச்சிக்கிறது?"

(இப்படி அந்தக் குழந்தை கேட்டுக் கொண்டதற்கு விடையாகத்தான் அம்பிகை மதுர்பாபுவை அவரிடம் அனுப்பிவைத்தாள். மதுர் அவருக்கும் அவரிடம் கூடிய பரிவாரத்துக்கு ராஜோபசாரம் செய்து பேணினார்.)

அம்மாவிடம் சண்டையும் போடும் குழந்தை ஸாதுக்களையும் பக்தர்களையும் "கூட வெச்சுக்கவே", அதாவது அவர்களோடு கூடிக் களித்து அவர்களிலொருவராக இருக்கவே, ராமக்ருஷ்ணர் விரும்பினார். ஆனால் அம்மா

Koviloor Digital Library

என்ன செய்தாளென்றால், இப்படிப் பலர் அவரோடு அன்பில் உறவு கொள்ள அருளியதோடு நிற்காமல் இன்னும் பலர் அவருக்கு குருபீடம் போட்டுத் தள்ளி நின்று அவரிடம் உபதேசம் பெறவே வருமாறும் செய்தாள். புல் தரையில் புரள ஆசைப்பட்ட குழந்தைக்கு வெல்வெட் தைத்த பீடாரோஹணம் கொண்டு ஜபர்தஸ்தில் கட்டுப் பட்டிருக்கக் கட்டோடு பிடிக்கவில்லை. அம்மாவிடம் சண்டை சண்டை போட்டார். (இது ஏதோ கற்பனையாக அவர் அவளிடம் பேசியதல்ல, வாஸ்தவமாக அவளை நேரே நிறுத்திப் பேசியது என்பதை எண்ணும்போது அவரிடம் உன்னதமும் எளிமையும் எப்படி அதிசயமாகக் கலந்திருந் தனவென்ற வியப்பு மேலிடுகிறது.) "நீ என்னடி உபத்திரவம் பண்றே? எதுக்காக இப்படி ஊர்க்கும்பலை எங்கிட்ட கொண்டு சாய்க்கிறே? குளிக்க, சாப்பிடக்கூட எனக்கு பொழுதில்லாமல் இப்படிப் பண்றயே! பழசாயிண்டே இருக்கற இந்த மிருதங்கத்திலே ஓட்டை விழுந்துட்டா, அப்பறம் எப்படி வாசிப்பே? அதுக்கப்பறம் என்ன பண்ணுவே?" என்றவர், தம்மிடம் அவள் தள்ளுவோரில் உத்தம ஜீவர்களைவிட நடுத்தர, கீழ்த்தர ஜீவர்களே பல மடங்கு இருப்பதைக் குறித்துச் சண்டையைத் தொடர் கிறார். (குரு - சிஷ்ய ஸ்தானங்களில்லா வெறும் அன்புறவில் உயர்வு தாழ்வு பாராது எவருடனும் இழையலாம். ஆனால் தரம் பிரித்து உபதேசங்களை மாற்றிக் கொடுத்தும், தரக் குறைவானவரின் பாபத்தை ஏற்றும் குருவாக அவஸ்தைப் பட அவரால் இயலவில்லை. அதனாலேயே அம்மாவிடம் சண்டை.) "ஒரு சேர் பாலுக்குக் கால் சேர் ஜலம் சேர்ந்திருந் தாலாவது போனால் போறதுன்னு ஒப்புக்கலாம். ஒரு சேர் பாலிலே அஞ்சு சேர் ஜலம் கலந்துன்னா அனுப்பறே? இதை எத்தனை நாழி சுண்ட வெக்கறது? புகையிலே எனக்குக் கண் எரியறது. அடுப்புக்கு விறகு போட்டு போட்டு என்னாலே மாளவில்லை. இந்த மாதிரி என்னாலே இன்னமும் முடியாது. வேணும்னா நீயே நேராப் பண்றதைப் பண்ணிக்கோ. எங்கிட்டே இவாளையெல்லாம் கொண்டு வந்து தள்ளாதே!"

Koviloor Digital Library

குழந்தைப் பேச்சாயினும் உள்ளத்தைக் குடைகிறது. புகையில் அவர் கண் சிவந்தால் துயரில் நம் கண்ணும் சிவக்கத்தான் செய்கிறது.

நம் கண்ணைச் சிவக்கவைக்கும் இன்னொன்று அம்மாவிடம் அவர் பாதி கோபமும் பாதி துக்கமும் பட்டுக்கொண்டு அழுத ஸந்தர்ப்பங்களில் ஒன்றாகும். அவருக்குக் கையில் எலும்பு பிசகிக் கொண்டதாக முன்பு பார்த்தோமல்லவா? அப்போது வலி தாங்கமுடியாத வலிவற்ற நோஞ்சானாக விம்மிக் கொண்டு அம்மாவிடம் முறையிட்டார்: "அம்மா ப்ரம்மமயீ! எனக்கு ஏம்மா இதைப் பண்ணினே? கை நன்னா அடி பட்டுடுத்தே!" பலரும் சூழ்ந்திருந்தபோது இப்படி வாய் விட்டு அரற்றி வேண்டினார் பாலர் டாகுர்.

குழந்தையாய் அம்மாவிடம் அவர் பயந்து கொள்வதும் உண்டு. உதாரணம் பார்த்தோம், அமிதமாக ஐஸ்க்ரீம் உண்டு தொண்டைப் புண் கண்டபோது அவர் "தப்புப்" போட்டுக் கொண்ட அப்போது! இன்னும் ஒரு ஸாம்பிள்: "அம்மா என்னை பாவத்திலேயே இருக்கச் சொல்லியிருக்கா*. சில சமயத்திலே அதை நான் மறந்து போயிடறேன். அதனாலே கஷ்டப்படறேன். ஒரு சமயம் இப்படி அம்மா உத்தரவைக் கேட்காததாலேதான் பல்லை ஒடைச் சிண்டுட்டேன்". உம்மாச்சி கண்ணைக் குத்தும் என்று நம்பும் குழந்தை!

மேலும் ஒரு கொசுறு:

காளி பூஜையில் மாம்ஸம் நிவேதிப்பதும், அதை சிஷ்டர்களும் கூட ப்ரஸாதம் என்பதால் உண்பதும் வங்காளத்து வழக்கு. சாதாரணமாகவே அங்கு அந்தணரும் மீன் உண்பார்கள். வெகுகாலம் வரை ராமகிருஷ்ணரும்

---

* "உலகை மாயையாய் ஒதுக்கி குணம் குறியற்ற பிரம்மத்தில் ராம கிருஷ்ணர் ஒன்றிவிடாமல், உலகை இறைலீலையாய்க் கண்டே தெய்விகத்தில் ஆழ்ந்திருக்குமாறு அன்னை கட்டளையிட்டதைத்தான் பாவத்தில் இருக்கச் சொன்னதாகக் கூறுகிறார்.

Koviloor Digital Library

அவருக்கே உள்ள குழந்தை மகிழ்ச்சியுடன் இப்படிச் செய்த வர்தாம். ஆனால் பிற்பாடு அவருக்கு அது ஏற்காமல் ஆயிற்று. அது பற்றிச் சொல்கிறார்: "இப்போதுள்ள என் மனநிலையில், அம்பிகைக்கு நைவேத்யமாயிருந்தால் மட்டும், கொஞ்சம் கொஞ்சம் மீன்குழம்பு சாப்பிட முடியறது. அவளுக்கு நைவேத்யமானதாயிருந்தால்கூட மாம்ஸம் சாப்பிட முடியலே. ஆனாலும் அவ கோவிச்சுண்டுடப் போறாளேன்னு விரலாலே தொட்டு வாயிலே வெச்சுக் கறேன்."

★

தமது மஹாநுபூதிகளின் மெய்ம்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவர் பரீக்ஷைகள் வைப்பார். அவை மிக மிக கனமானவையாக, கடுமையானவையாக இருக்கும் என்று தானே நினைக்கிறீர்கள்? அல்லவே அல்ல. வெகு குழந்தைத் தனமான பரீக்ஷைகளாலேயே பெரும் பேரநுபவங்களையும் அவர் நிரூபித்துக் கொள்வார். இன்னார் இன்று தம்மைப் பார்க்க வந்தால், அல்லது தாம் கொல்லைப்புறம் போகையில் கோயில் அதிகாரிகளில் பலானவர் தன்னைக் கூப்பிட்டுப் பேசினால் தாம் பெற்ற அநுபவம் மெய்யானது என்று உறுதி கொள்வார்! தவறாமல் அந்த 'இன்னார்' அவரைக் காணவருவார்; அந்தப் 'பலானவர்' அவரைக் கூப்பிட்டுப் பேசுவார். எளிய வேண்டுதலை அம்மாவும் மதித்து எளிமை யாக நிறைவேற்றித் தந்தாள்.

★

பரவசத்தில் 'மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து'ப் பூசனை செய்த அதே ராமகிருஷ்ணர் குழந்தைமாயும் வழிபாடு செய்துண்டு. சிறு தேர் இழுத்தது இவற்றிலொன்று தான்.

மிகவும் வெப்பமாக இருந்த ஒரு நாள் ஒரு பக்தர் சந்தனத்தாலான ஒரு விசிறியை குரு மஹராஜுக்கு

Koviloor Digital Library

அளித்தார். ஸந்தோஷம் தாங்க முடியவில்லை குருக் குழந்தைக்கு! 'பேஷ், பேஷ்! ஓம் தத்ஸத்! காளீ!'' என்றெல்லாம் அந்தச் சிறு விசிறியின் ''விசிறி''யாகத்தாமே ஆகி ரஸித்தார்!

அறையில் மாட்டியிருந்த தெய்வங்கள், மஹான்கள் ஆகியோரின் படங்களுக்கு முதலில் அந்தப் புது விசிறியால் விசிறினர். பிறகு தமக்கு விசிறிக்கொண்டார். ''பார் இந்த மலயமாருதத்தை'' என்று அருகிருந்த "ம" வுக்கும் விசிறி விட்டார், பகவான மஹராஜர்!

''ம'' வுக்கு எப்படி வேடிக்கையாய் விசிறினரோ அப்படியேதான் குழந்தை விநோதமாக தெய்வ உருவங் களுக்கும் விசிறினர். மந்த மாருதமான குழந்தை பக்தி! சண்ட மாருதமாய் அடித்த அவரது பரவச பக்தியிலே ஸகிபாவத்தில் தேவிக்குச் சாமரம் வீசியது போன்றதல்ல!

எல்லாத் தெய்வங்களுடையவும் மஹான்களுடையவும் படங்களுக்கு அவர் இப்படி விளையாட்டாக வ்யஜனோபசாரம் செய்ததைச் சொல்கையில், அவர்களில் இருவரை நீக்கி விட்டு ஏனையோருக்கு மட்டும் அவர் இன்னோர் உபசாரத்தை இதேபோல் குழந்தையாகச் செய்தது நினைவு வருகிறது.

அன்று ஹோலிப் பண்டிகை. தக்ஷிணேச்வர ஆலயத்தி லுள்ள ராதா கோவிந்தன் ஸந்நிதிக்குச் சென்றார் ராமகிருஷ்ணர். ஹோலியில் ஒருவர் மீதொருவர் வாரி இறைத்துக் கொள்ளும் குலால் செம்பொடியில் ஒரு பிடி எடுக்கிறார். ராதா கோவிந்தர்களின் மேல் அதை வீசுகிறார். ராதா பாவம், கோவிந்த பாவம் யாவும் பூர்ணமாகத் தமக்கே கைவரப் பெற்றவர்தாம் எனினும் இப்போது அப்படிப் பரவசங்கள் கொள்ளாமல் குழந்தை விளையாட் டாகவே குலால் வீசிக் குலாவுகிறார். கண்ணனை ஆயக் குழந்தையாக மட்டுமே அறிந்த இன்னோர் ஆயக்குழந்தை யின் விளையாட்டாக அது இருக்கிறது.

Koviloor Digital Library

மஹா காளி பவதாரிணியின் ஸந்நிதிக்குச் செல்கிறுர். "மஹா"வோ, கால தத்வக்காளியோ, பவமோ, அதிலிருந்து தாரணமோ, இந்தப் பெரிய விஷயம் எதுவும் தமது மனஸில் மேவாமல், 'அது அம்மா; இது குழந்தை' என்ற எண்ணத்திலேயே அங்கு நிற்கிறுர். அம்மாவின் மேலும் பிடி குலால் வாரி இறைக்கிறுர்.

தமதறைக்கு வருகிறுர்.

அங்கு மாட்டியுள்ள தெய்வப் படங்கள், மஹான்களின் சித்திரங்கள் ஆகியவற்றைப் பார்த்தவாறு செம்பொடியை அள்ளுகிறுர்.

ஒவ்வொரு "உம்மாச்சி" மீதும், "உம்மாச்சி மநுஷங்க" மீதும் கொஞ்சம் கொஞ்சம் குலால் தூவும் ராமகிருஷ்ணக் குழந்தை அவர்களில் இருவரை மட்டும் இந்த உபசாரத்தில் நீக்கி விடுகிறது.

அப்படங்களின் இடையில் அவரது புகைப்படமும் உள்ளது. அவரிடமிருந்து ஹோலியுபசார விளையாட்டுப் பெருத இரு படங்களில் இது ஒன்று.

இன்னொரு படம் இயேஸுநாதருடையது.

"ஹிந்து உம்மாச்சி மநுஷ"ராக இல்லாத அவருக்கு ஹிந்து வழக்கப்படி உபசாரம் செய்தால் அவர் கண்ணைக் குத்திவிடுவார் என்று நம் குருக் குழந்தை பயப்பட்டதா? அல்லது அவரை அப்படி உபசரித்தால் மற்ற ஹிந்து உம்மாச்சிகளெல்லாம் கண்ணைக் குத்தி விடும் என்று பயப்பட்டதா?

★

ராமக்ருஷ்ண சரிதத்தில் பாலகாண்டம் என்பது தொடக்கப் பக்கங்களோடு முடிந்துவிடும் ஒன்றல்ல. மனித வாழ்வின் பேரிழப்பாக வேர்ட்ஸ்வொர்த் கருதியது, குழந்தைமை என்பது ஒரு கால கட்டத்துடன் முடிந்து

Koviloor Digital Library

விடுவதைத்தான். நாமறிந்த வரையில் ராமகிருஷ்ணரிடம் தான் குழந்தைத்தன்மை என்பது இப்படி இழப்புக்கு ஆளாகவேயில்லை. மஹா நிர்வாணம் எய்துமளவும் அவர் பாலராகவே இருந்தவர். ஏன், இன்றும் குழந்தையாய் நம் உள்ளங்களில் தவழ்கிறார். இனிவரும் பக்தர்களுக்கும் அப்படியே இருப்பார். என்றும் இளையாத இனிய இளைய தன்மை அவருடையது.

தம்மை குருதேவர் என்றும், பிதா என்றும், பிரபு என்றும் அடியார் அழைப்பதை அவரால் தாங்கிக் கொள்ள முடியாது. "அந்த மூன்று வார்த்தைகள் என்னை முள்ளாகக் குத்துகின்றன. நான் இதெல்லாம் இல்லை. நான் காளியின் குழந்தை. நித்தியக் குழந்தை. நான் எப்படிப் பிதா, அது, இது, எல்லாம் ஆகமுடியும்?" என்பார்.

பக்திக்கே வந்தவர் அவர். பக்தியின் பரம காஷ்டை சரணாகதிதான். அந்த சரணாகதியைக் குழந்தைத்தன்மை யாகவே வர்ணிப்பார் அவர். அந்த வர்ணிப்பிலும் குழந்தைத்தனம் சொட்டும். "பந்தியிலே எடம் பிடிக்கணும்னு முண்டிண்டு பெரியவங்க போவாங்க. போட்டா போட்டியிலே சில பேருக்கு எடம் கெடைக் காமலே போகும். அங்கே ஒரு செவலைக் கொழந்தை, அது பாட்டுக்கு தன்னை கவனிச்சுக்கத் தெரியாம, ஒரு மூலையிலே நின்னுண்டிருக்கும். விருந்து நடத்தறவங்களே, 'ஐயோ பாவம்'னு அதைத் தூக்கிண்டு வந்து இலையிலே ஒக்கார்த்தி வைப்பாங்க. 'பாப்பா, சாப்பிடு'ன்னு பார்த்துப் பார்த்துப் போடுவாங்க."

குழந்தையாயிருந்த ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு காளி பவ தாரிணி பார்த்துப் பார்த்துப் படைத்தாள். பாயஸமும், பாதாம் ஹல்வாவும், பாதிரிப் பழமுமான பரமாநுபவங்கள் மட்டும் அல்ல; அவற்றின் சுவையை எடுத்துக் காட்டவே ருசி மாற்றமாக அப்பளமும், வறுவலும், பொறியலுமான மானுட அநுபவங்களையும் பரிமாறினாள். இதெல்லாவற்றை யும் அவர் நானிலத்துக்கு விருந்தாகப் படைத்தார்.

Koviloor Digital Library

உலகை மறந்து பரம்பொருளோடு ஒன்றியிருக்கக்கூடிய மஹனீயர்களும் மாந்தரின் உய்வுக்கு உதவக் கருதித் தங்களை உலகோடு பிணித்துக் கொண்டாற் போலக் காட்டிக் கொள் வார்கள். இவ்வாறு தங்களை உலகோடு தொடர்புறுத்திக் கொள்வதற்காகவே அவர்கள் ஒருவிதமான அஹங் காரத்தை வைத்துக்கொள்வார்கள் என்று ஸ்ரீ ராமக்ருஷ்ணர் கூறியிருக்கிறார். திருஷ்டாந்தமாக, உலகுக்கு ஞானோபதேசம் செய்யவேண்டுமென்பதற்காகவே ஸ்ரீ சங்கர, பகவத்பாதர் வித்யா அஹங்காரம் என்பதை வைத்திருந்ததாகவும், தெய்வக் காதலைப் பரப்பவேண்டுமென்றே சைதன்ய மஹாப்ரபு பக்தி அஹங்காரம் என்பதை வைத்திருந்த தாகவும் அவர் சொல்வதுண்டு.

ஒருநாள், சரியாய்ச் சொன்னால் 1884 ஆகஸ்ட் மூன்றும் தேதி, அவர் தமக்கே உரிய எளிமையோடு "ம"விடம், "எனக்கு அஹங்காரம் ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டார்.

அவர் மனத்தை விட்டுக் கேட்கும் சக்தியில் எதிராளியும் மனத்தைவிட்டுப் பேசி விடுவர். "ம"போன்ற அடியார் விஷயத்தில் கேட்பானேன்? உடனே அவர் மனம் திறந்து, "ஆமாம், மஹாசய! உங்களிடம் ஒரு சிறிய அஹங்காரம் இருக்கிறது. சரீர உணர்வு கொண்டு சரீரத்தைப் பேணு வதற்காகவும், பக்த கோஷ்டியோடு சேர்ந்து திவ்ய ப்ரேமையை ருசிப்பதற்காகவும், அவர்களுக்கு ஆத்மோப தேசம் செய்வதற்காகவும் நீங்கள் இந்த அஹங்கார லேசத்தை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். திவ்ய மாதா விடம் நீங்களே இதை வேண்டிப் பெற்று வைத்துக் கொண்டி ருக்கிறீர்கள்" என்றார்.

அதற்கு ராமக்ருஷ்ணர், "நானாக ஒன்றும் அதைக் கேட்டு வைத்துக் கொள்ளவில்லை. அவளே அதை என்னில் விட்டு வைத்திருக்கிறாள்" என்றார்.

Koviloor Digital Library

பக்தரோடு திவ்ய ப்ரேமையை ருசிப்பதற்கே சைதன்யர் பக்தி அஹங்காரமும், ஆத்மோபதேசம் செய்யவே சங்கரர் வித்யா அஹங்காரமும் வைத்திருந்தனர். இரண்டையுமே ராமகிருஷ்ணர் வைத்திருந்ததாக "ம" சொன்னார். அவை தம்மிடம் இருப்பதை ராமக்ருஷ்ணர் மறுக்கவில்லை. ஆனால் சங்கரரும் சைதன்யரும் போலத் தாமாகப் பிரியப்பட்டு இவ்வஹங்கார லேசத்தை வைத்துக்கொண்டிருப்பதாக அவர் ஒப்புக் கொள்ளவில்லை.

இந்நூலாசிரியருக்கு ஒன்று தோன்றுகிறது. வித்யா அஹங்காரம், பக்தி அஹங்காரம் ஆகியவற்றோடு "குழந்தை அஹங்காரம்" என்ற ஒன்றையும் குரு மஹராஜ் குறிப்பிடுவதுண்டு.

"பக்தி அஹங்காரமும், வித்யா அஹங்காரமும், குழந்தை அஹங்காரமும் ஒருவருக்குக் கெடுதல் பயப்பதில்லை. குழந்தை யஹங்காரமென்பது ஏதொன்றிலும் பற்றில் கட்டுண்டு விடுவதில்லை. முக்குணங்களையும் தாண்டி நிற்கும் குழந்தையை அவற்றில் எதுவும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில்லை. இந்த நிமிஷம் குழந்தை படு கோபமாயிருக்கும். ஆனால் அடுத்த நிமிஷமே அக் கோபத்தின் சுவடு தெரியாமற் போகும். இந்த நிமிஷம் பிரமாதமாய் பொம்மை வீடு கட்டும். மறு நிமிஷம் அதன் ஞாபகமே குழந்தைக்கு இராது. இப்போது எந்தக் குழந்தைகளுடன் அது அன்போடு விளையாடுகிறதோ அந்தக் குழந்தைகளை நாலு நாள் பார்க்கா விட்டால் மறந்தே போய்விடும். (அன்புத் தோழமையின்) ஸத்வம், (வீடு கட்டும்) ரஜஸ், (கோபித்துக் கொள்ளும்) தமஸ் எதற்குமே அது ஆதீனப்பட்டு விடுவதில்லை" என்பார்.

இவ்வளவு விஸ்தாரமாகக் "குழந்தையஹங்கார"த்தைப் பற்றிச் சொன்ன அவர் பக்தியஹங்காரம், வித்யாஹங்காரம் ஆகியவற்றுக்குச் சைதன்ய சங்கரர்களை உதாரணம் காட்டியதுபோல, குழந்தையஹங்காரத்துக்குக் காட்டாததிலிருந்து என்ன தெரிகிறது? தம்மைக் காளியம்மாவின்

Koviloor Digital Library

நித்யக் குழந்தையாகச் சொல்லிக்கொண்ட அவர் தம்மையேதான் குழந்தையஹங்காரத்தின் உதாரண புருஷராகச் சொல்லாமல் சொல்லிக் கொண்டாரென்று தோன்றவில்லையா? இன்று அவர் நம் கையில் சிக்கி, அந்த தெய்வக் குழந்தையின் கையை நாம் பிடித்துக்கொண்டு, "நீயேதானே அம்மாவை வேண்டிக்கொண்டு இந்தக் குழந்தையஹங்காரத்தைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறுய்?" என்று கேட்டால், "ஆமாம், ஆமாம், ஆமவே ஆமாம்" என்றே அவர் குழந்தை போல விடை சொல்வாரென்று தோன்றுகிறது.

"கடவுளை யார் அறிஞ்சுக்க முடியும்? நான் அந்தமாதிரி முயற்சிகூட பண்ணறதில்லே. நான் பண்ணறதெல்லாம் அவளை 'அம்மா'வாக்கிக் கூப்பிடறதுதான். அவளுக்கு எப்படி இஷ்டமோ அப்படிப் பண்ணிண்டு போகட்டும். அவ இஷ்டப்பட்டு ஸங்கல்பிச்சா அவளை நான் அறிஞ்சுக்கவும் முடியும். ஆனு அப்படி அவ இஷ்டப்படலியா, அதுவும் எனக்கு ஸந்தோஷமே. நான் பாட்டுக்கு அறியாப்பிள்ளையாகவே ஆனந்தமா இருந்துட்டுப் போறேன். என் ஸொபாவம் பூனைக்குட்டியோடது மாதிரி. அது 'ம்யூ ம்யூ'ன்னு ஈன ஸ்வரத்திலே கத்தறதோட ஸரி. பாக்கி எல்லாத்தையும் அம்மா பொறுப்பிலேயே போட்டுடறது. அம்மாப் பூனை அதை வாயிலே கவ்விண்டு போய் எங்கே போட்டாலும் அங்கேயே குட்டி கெடக்கு. சில சமயம் அம்மாப் பூனை அதை சமையல் ரூமிலே கொண்டு போய்ப் போடும்; சில ஸமயம் எஜமான் மெத்தையிலே போடும், எதுவானுலும் குட்டிக்குப் பொருட்டில்லே. அதுக்கு வேண்டியதெல்லாம் அம்மா ஒண்ணுதான். அம்மா பணக்காரியா, அதுவா, இதுவா-ன்னு எல்லாம் அதுக்கு எதுவும் தெரியாது. தெரிஞ்சுக்கணும்னு அது கொஞ்சங்கூட ஆசைப்படவும் இல்லே. அதுக்குத் தெரிஞ்சதெல்லாம், 'நேக்கு ஒரு அம்மா இருக்காளாக்கும். அப்புறம் என்ன குறை?' என்கிறதுதான். அம்மாவைத் தெரிஞ்சுண்டு அறிஞ்சுண்டு ஆகவேண்டியது ஒண்ணுமில்லே"—இத்தனை கல்கண்டாக திவ்யமாதாவிடம்

Koviloor Digital Library

தமது குழந்தைமையைச் சொல்லிக் கொண்ட அவர் அந்த இயல்பிலே ஒரு 'தான்' உணர்வைத் தனியாக வைத்திருந்தார்; அதாவது குழந்தையஹங்காரத்தை வைத்திருந்தா ரென்றேசொல்லலாம்.

சின்னக் குழந்தைகளை அப்படியே சித்திரம் பிடித்துச் சொல்வார்—எந்தக் குழந்தைக்கும் தாயார் என்கப்பட்ட வள் எப்பேர்ப்பட்ட பலம் என்று காட்டுவதற்கு. ஒரு ப்ரபுவின் வீட்டில் வேலைக்காரியாயிருப்பவளுக்கு ஒரு குழந்தை இருக்குமாம். அவள் அந்த ப்ரபுவின் சிறு பிள்ளைக்கும் பயந்து பணிவிடை செய்யத்தான் வேண்டும். ஆனால் ப்ரபுவின் குழந்தைக்கும் அவளுடைய குழந்தைக்கும் ஏதாவது சண்டை வந்துவிட்டால் ப்ரபுக் குழந்தையை வேலைக்காரிக் குழந்தை மிரட்டுமாம். என்ன சொல்லி மிரட்டுமாம் தெரியுமா? "நேக்கு ஒரு அம்மா இருக்காங்க, தெரிஞ்சுக்கோ! அவங்க கிட்டே சொல்லிப்பிடுவேன்" என்றே மிரட்டுமாம்! "என் ஸொபாவம் அப்படி ஒரு கொழந்தையோடது தான்" என்பார்.

அவள் பலம் துணை நின்றதால்தான், தாம் எத்தனை பலவீனராயிருக்க முடியுமோ அத்தனை பலவீனமாய் இருந்தார். உடல் பலவீனம் மட்டுமல்ல. மஹாஞானி என்கப் பட்டவரின் பலம் என்று எண்ணப்படும் பயமின்மை, துக்க மின்மை, சரீர - ஆஹார உதாஸீனம் முதலிய பலவற்றை யும்கூட உதறிவிட்டு, 'நேக்கு ஒரு அம்மா இருக்காளாக்கும். அதனாலே நான் உடம்பைப்பற்றி விசாரப்பட்டாதான் என்ன? வாய்க்கு ருசியா சாப்பிட்டாதான் என்ன? பயப் பட்டா, துக்கப்பட்டா என்ன? எல்லாத்தையும் அவ சரி பண்ணிப்பா' என்பது போலப் பூஞ்சைப் பூனைக்குட்டியாக இருந்தார். 'மர்க்கட கிசோர ந்யாயம்' என்று சரணாகதி யில் பெரிதாகச் சொல்வதையே எளிசாக, "என் ஸொபாவம் பூனைக்குட்டியோடது" என்றார்.

வேத வேள்வியில் ஆட்டைப் பலி தருவர் எனில், மன்பதைக்காக த்யாக வேள்வியில் சிலுவையிலே பலியான

Koviloor Digital Library

ஏசுவையும் Lamb என்றே கிறிஸ்துவர்கள் குறிப்பார்கள். நல்மேய்ப்பஞக வந்தவனையே வஞ்சனையறியா ஆட்டுக் குட்டியாய்ச் சொல்வது எத்தனை அழகு! நம் தக்ஷிணேச்வர மூர்த்திக்கு அது எவ்வளவு பொருத்தம்? இயேசு - ஆட்டுக் குட்டியைப் பற்றி மதநுண்ணுணர்வு படைத்த கவி ப்ளேக் பாடியதில் ஆட்டுக்குட்டி என்பதற்குப் பதில் பூனைக்குட்டி என்று மாற்றிவிட்டால் தக்ஷிணேச்வரருக்கு இன்னும் எவ்வளவு பொருத்தம்?

அவன்தனை ஆட்டுக்குட்டி என்பன்
மெத்தவும் சாது, மெத்தென இருப்பன்
பச்சைச் சிசுவாய் பாரிதில் ஆனவன்

வேதரிஷி இந்த்ரியாதீத நிலையில் காட்சிகண்டு அதை மந்திர மொழியில் வடித்தார். அதீத நிலையில் அவர் கண்டது என்னவெனில்—பரமனைப் பச்சைக் குழந்தையாகக் கண்டார். தாயொருத்தி அதை முத்தமிடுகிறாள். தாயை அது முத்தமிடுகிறது. 'அதை நான் குழந்தை மனஸோடு பக்கத்திலேயே நின்று பார்த்துவிட்டேன்' என்று ஆர்த்துப் பாடினுர் ரிஷி.

தம் பாகேந மநஸாபச்யம் அந்திதஸ் -
தம் மாதா ரேள்ஹி ஸ உ ரேள்ஹி மாதரம்

அவன் குழந்தையாயிருப்பதைக் காண்பதற்கும் குழந்தை மனம் வேண்டும். அதைத்தான் 'பாகேன மனஸா' என்றுர். அப்போது எங்கோ தள்ளி நின்றல்ல, பக்கத்திலேயே நின்று காணலாம் கவின் காட்சி.

ராமகிருஷ்ணக் குழந்தை தன்னுடைய கள்ளமற்ற குழந்தைமையாலேயே கள்ளமிக்க நம்மையும் குழந்தை யாக்கித் தன் பக்கம் நின்று காணுமாறு இத்தனை காட்சிகளை வழங்கிவிட்டது. "உன் குழந்தைத்தன்மை மூவுலகிலும் அதிசயமானது எனக் கண்டுகொண்டேன்" என்று கண்ண னிடம் லீலா சுகர் சொன்னதை நாமும் ராமகிருஷ்ணக் குழந்தையிடம் சொல்லுமளவுக்குக் காட்சி பல கண்டோம்.

Koviloor Digital Library

அதை வணங்கி விடை பெறுமுன் அதுவே வணங்கிய ஒரு குழந்தைமை சொட்டும் காட்சியைப் பார்த்து நிறைவோம்.

1885-ல் ஜகந்நாதனது சிறு தேரிழுக்க ஸ்ரீராமகிருஷ்ணர் பலராம் போஸின் வீட்டுக்கு வந்திருந்தபோது அடித்த அம்ருத அலைகளில் இதுவும் ஒன்று.

ஒவ்வொரு பக்தராக விழாவுக்கு வந்து குரு மஹராஜை வணங்குகிறார்கள். மஹேந்த்ர முகர்ஜி என்பவர் எட்ட இருந்தே கும்பிடு போடுகிறார். எளிய குருதேவர் தம் வழக்கப்படி பதில் கும்பிடு போடுகிறார். நம்முடைய ஹிந்து வழக்கப்படி கும்பிடு போட்டதோடு நிற்கவில்லை, குமிண் சிரிப்போடுகூட, முஸல்மான் வழக்கப்படி ஸலாமும் வைக்கிறார்! எட்ட இருந்த மஹேந்திரர் அதை கவனித்தாரோ இல்லையோ என்ற எண்ணம் அவருக்கு வருகிறது. எனவே அருகிருந்த சீஷப் பிள்ளையிடம், "நான் அவருக்கு ஸலாம் போட்டேன்னு அவர்கிட்டே சொல்லேன்; அவர் ரஸிப்பார்" என்கிறார்.

அவர் மட்டும்தானா? இன்றும் இதோ நாமெல்லாம் ரஸிக்கிறோம். அந்த நித்தியக் குழந்தையின் ஸலாம் நமக்கு அன்பு ஸல்லா போர்த்த, அதில் இன்புறுகிறோம்.

Koviloor Digital Library

"அதி"மானுடர் செய்த அதிமானுட அற்புதங்கள்

பிரம்ம ஸமாஜத்தினரில் பலர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் அன்பும் மதிப்பும் கொண்டிருந்தனரெனக் கண்டோ மல்லவா? அப்படிப்பட்ட ஒருவரின் வீட்டுக்குச் செல்வதற் காக டாகுர் தக்ஷிணேச்வரத்திலிருந்து கல்கத்தாவுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். அவருடன் கூட சீஷப் பிள்ளை கள் பாபுராமும் லாடுவும் புறப்பட்டனர்.

பாபுராம் பிற்காலத்தில் ப்ரேமாநந்த ஸ்வாமிஜியானர், லாடு அத்புதாநந்த ஸ்வாமிஜியானர். ராமகிருஷ்ணரின் இரு பெரும் சிறப்புக்கள் அவரது ப்ரேமையும் எளிமையும் அல்லவா? அந்த ப்ரேமைக்குப் பிரதிநிதி போலிருந்தவர் ப்ரேமாநந்தர்; எளிமைக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர் அத்புதாநந்தர். வேடிக்கையாகத் தோன்றலாம்— எளிமைக்கு எதிர் துருவம் அற்புதம். எளியவர் ஏன் அற்புதாநந்தரெனப் பெயர் கொள்ளவேண்டும்? ஏனென்றல் எவ்விதமான கலப்படமும் அற்ற எளிய ப்ரேமைதான் அற்புதத்திலும் பேரற்புதத்தை சாதிக்கவல்லது என்பதால் தான்.

பிற்கால ப்ரேம—அத்புத ஆனந்தர்களுடன் ப்ரேமாற் புதரான டாகுர் புறப்படும் சமயத்தில் கிரிஷ் சந்திர கோஷ் உள்ளே நுழைந்தார். இன்று தம் காரணமாக எளிய அன்பு ஓர் அரிய அற்புதம் ஆற்றப் போகிறதென்று அப்போது அவர் சற்றும் எண்ணியிருக்க முடியாது.

டாகுரோடு அவரது உயிரான பரிவாரத்தினரில் இருவர் புறப்பட்டது போல கிரிஷோடு அவரது உயிர்ப் பரிவாரத் தினரில் இருவர் வந்திருந்தனர். அவ்விருவர் இரு மதுப்

Koviloor Digital Library

புட்டிகள்தாம்! நாடகாசிரியரான கிரிஷின் அறை முழுதும் மதுப்புட்டிகளே பரிவாரமாக அணிவகுத்திருக்கும். தமது உயிராக மதுவையே எண்ணி ஓயாமல் குடிப்பவரவர்—அந்த மதுதான் தம்முடைய உயிரைக் குடிப்பது என்று புரிந்து கொள்ளாமல்.

அந்த நாடகாசிரியராலும் கல்பிக்க முடியாததாக மஹா நாடகாசிரியையான காளி ஓர் அதிசயம் புனைந்தாள்! என்னவெனில், சதாகால மதுபானத்தாலும் மதியிழக்காமல் இந்த கிரிஷ் எப்படியோ காளியின் அன்புக்களிப்பாம் கள்ளையுண்டு திவ்விய போதையிலிருக்கும் மதுர குரு மஹராஜிடம் வந்து அவரிடம் மெய்யன்பில் ஆழங்காற் பட்டார்.

கிரிஷுடைய குடிப்பழக்கத்தை விடும்படித் தவறிக்கூடக் குறிப்பிடாமல் குருமஹராஜ் அவரிடம் அன்பே பொழிந்து கொண்டிருந்தார். பெருமளவுக்குப் பக்குவப்பட்ட "ம" போன்ற இளைஞர்களுக்கு ஒவ்வொரு சமயத்தில் தாம்பத்திய இன்பத்தில் நாட்டம் மிகுந்தாலே அதற்காக அவர்களைத் திட்டித் தீர்க்கும் அதே குரு மஹராஜ், வயதேறியபின்னும் மிக இழிய குடிப்பழக்கத்தில் ஆழ்ந்து கிடந்த கிரிஷை மறந்தும் கண்டியாமலிருந்தார்!

கிரிஷும் கொஞ்சம்கூடக் கூச்சமில்லாமல் தக்ஷிணேச்வரத்துக்கு வரும்போதுகூட குருமஹராஜின் அன்பமுதமும் உபதேச அமுதமும் போதாமல் கள்ளுப் புட்டிகளை உடன் கொண்டு வந்து குடிப்பார்.

இன்று அப்படித்தான் இரண்டு புட்டிகளுடன் எழுந்தருளினர்.

அந்த விசித்ர பக்தரையும் பாபுராமோடும் லாடுவோடும் சேர்த்து அழைத்துக் கொண்டு அவரினும் விசித்ரமான குரு மஹராஜ் கல்கத்தாவுக்குப் புறப்பட்டார்.

சேரிடமான பிரம்ம ஸமாஜ அன்பரின் வீடு வந்தது. டாகுர் தமது இரு பரிவாரத்தினருடன் இறங்க, கிரிஷை

Koviloor Digital Library

மூந்திக்கொண்டு அவரது பரிவாரத்தைச் சேர்ந்த 'இருவரும்' வெகு அவசரமாக தொப் தொப்பென்று குதித்தனர். ஆம், எப்படியோ அவருடைய மதுப்புட்டிகள் இரண்டும் வண்டியிலிருந்து உருண்டு சாலையில் விழுந்தன. உடைந்தும் போயின.

டாகுருக்கு அந்த வீட்டில் வரவேற்பாக ஆரத்தி சுற்றிக் கொட்டியிருப்பார்களோ இல்லையோ, வீட்டு வாசலில் சாராயம் ஆரத்தியாக துர்நெடியுடன் ஓடிற்று.

எத்தனை அலங்கோலமான கட்டம்! ஸமாஜக் கருத்துக்களிலிருந்து வெகுவாக மாறுபட்டவரே ராமக்ருஷ்ணரெனினும் அவர் ஒரு பரிசுத்த ஆத்மா என்ற மதிப்பில்தான் ஸமாஜியொருவர் அவரை வீட்டுக்கு அழைத்திருக்கிறார். ஆனால் அவர் இறங்கும்போதே அசுத்தத்தின் வடிக்கட்டிய சாறுகச் சாராயம் வழிந்தோடுகிறது! வீட்டினரும், உடன் கூடியிருந்த ஸமாஜத்தினரும் கிரிஷைக் கண்டார்களா, கண்டாலும்தான் ஆசார்ய புருஷரான ஒருவரிடம்கூட அவர் கள்ளுப்புட்டியுடன் போகத் துணிவாரென்று எண்ணியிருப்பார்களா? ராமக்ருஷ்ணரே மதுப் பழக்கமுள்ளவர் தாம் என்றே அவர்களில் பலரும் நினைத்துவிட்டனர்.

காளிக்குக் கள்ளு நிவேதனம் செய்வது அந்நாளில் வெகு சகஜம். ராமகிருஷ்ணர் பரவசத்தில் குழறுவதையும், தள்ளாடுவதையும் கண்டு அவர் இந்த நிவேதனத்தில் நீந்துபவரோ என்று ஏற்கெனவே ஐயுற்ற சந்தேகப் பிராணிகளும் உண்டு.

இன்று கையும் மெய்யுமாக அவர் பிடிபட்டுவிட்டதாகவே அவர்களில் அங்கு கூடியிருந்த சிலர் எண்ணிவிட்டனர்.

அதிர்ச்சியில் விக்கித்துப் போன ஸமாஜிகள் சற்றுத் தெளிவு பெற்றதும் இப்படிப்பட்டவரை உள்ளே அழைத்து உபசரிப்பதா என்று குழம்பியபடி ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

Koviloor Digital Library

துளிக்கூட அதிர்ச்சியடையாத ஒரே ஒரு வியக்தியாக அவர்களிடை நின்றார் ஸ்ரீ ராமக்ருஷ்ணர்.

"என்ன, எல்லாரும் மூஞ்சியைத் தொங்கப்போட்டுக் கொண்டு நிற்கிறீர்கள்? என்ன நடந்துவிட்டது? ஏதோ இரண்டு மருந்து பாட்டில்கள் விழுந்து உடைந்து போய் விட்டன, அவ்வளவுதானே? மருந்து கொட்டிப் போனாலே சுப சகுனம், வியாதி ஸரியாய்ப் போய் விடும் என்றுதானே சொல்வது வழக்கம்? அதுவும் இந்த மருந்து கொட்டினதிலோ கூடுதல் ஸந்தோஷம். ஏனென்றால் அது சகிக்க முடியாத கசப்பாயிருந்தது. பாருங்கள், என்ன கசப்பு நெடி அடிக்கிறதென்று!" என்று சர்வ சாதாரண மாகச் சொன்னார்.

அஸாதாரணம் நடந்தது அந்தக் கணத்திலேயே! உண்மையாக நடந்ததைத்தான் மஹான்கள் சொல்ல வேண்டும் என்பதில்லை, அவர்கள் எது சொன்னாலும் அது உண்மையாக நடந்து விடும் என்பார்களே! அப்படிப்பட்ட, ஓர் அசாதாரண அற்புதம் அப்போது நிகழ்ந்து விட்டது! சாலையில் பெருக்கிட்ட திரவத்தின் சாராய நாற்றம் அடியோடு மாறிக் கசப்பு மருந்தின் நெடியே அங்கு வீசலாயிற்று!

அங்கு கூடியிருந்தோருக்கு ஒரே அதிசயம்! 'தங்கள் அத்தனை பேரின் மூக்குமா சற்றுமுன் பொய் சொல்லி விட்டது?'

காற்றோடு கரைந்து மறைந்து போவது அன்றோ மூக்குக்குப் புலனாகும் வாஸனை? எனவே வாஸனை மாற்றச் சான்று நிரந்தரமாக நிற்கமுடியாதே! ஆகையால் அற்புத சக்திக்கு நிரந்தரச் சான்றாக இன்னொன்றும் அப்பொழுது நிகழ்ந்தது. காற்றில் கரைந்து போகாமல் கண்ணுக்குத் தெரியும் ஸ்தூல வஸ்துவாக நிற்கும் சான்று! உடைந்து கிடந்த புட்டிகளின் மீது ஒட்டப்பட்டிருந்த மது லேபிள்கள் மருந்து லேபிள்களாக மாறிவிட்டன! குப்தா ஃபார்மஸிக்

Koviloor Digital Library

காரர்களின் ஏதோ ஒரு மருந்தே புட்டிக்குள்ளிருந்த சரக்கு என்று தெரிவிக்கும் லேபிள்கள் புட்டிகளின் மேல் நூதனமாக ஸ்ருஷ்டிக்கப்பட்டு, காகித உருவிலும், காகிதத்தில் அச்சிடப் பட்ட எழுத்துருவிலும் கண்ணுக்குத் தெரியும் ஸ்தூலமான, நிரந்தரமான சான்றுயின!

ஸமாஜிகளுக்கு ஒன்றும் புரியவில்லை. அவர்களுக்குப் புரிந்த ஒன்று, பரமஹம்ஸரைப் பற்றிக் கேள்வி கேட்காமல் அவரைப் பணியவேண்டுமென்பதுதான். ராமக்ருஷ்ணர் தான் மருந்தை மதுவாக்கினுரா; அல்லது அம்மருந்தே சற்று மது நெடியைக் காட்டிவிட்டுப் பிறகு கசப்பு நாற்றத்தைக் காட்டுவதா; புட்டியில் முதலில் மது லேபிள் இருந்து பிறகு அது மாறிற்ரு, அல்லது முதலுக்கே மருந்து லேபிள்தான் இருந்ததா என்று அவர்கள் எவ்வளவுக்குத் தீர்மானமாகத் தெரிந்து கொண்டிருப்பார்களோ? 'அது முதலிலேயே மருந்துதானெனில் ராமக்ருஷ்ணரைப் பற்றித் தாங்கள் ஸம்சயித்தது தவறு, அவர் தங்களது வணக்கத்துக்குரிய பரிசுத்தர்தான். அல்லது மதுவைத்தான் அவர் இச்சா மாத்திரத்தில் மருந்தாக்கினுரென்ருலும். இப்படி அமாநுஷிக மாக, இயற்கைக்கு அதீதமாக லீலை புரியக்கூடிய ஒரு மஹாஸித்த புருஷனை மானுட நியதிகளில் சட்டுப்படுத்தி அவர் மது அருந்தலாமா கூடாதா என்பது போன்ற கேள்விகள் எழுப்புவதில் பயனில்லை' என்றே அவர்கள் எண்ணி அவரிடம் மரியாதை பூண்டிருக்க வேண்டும். ஆகக்கூடி நடந்தது என்னவெனில், மருந்து நெடியும் மருந்து லேபிளும் தோன்றியவுடன் ஸமாஜிகள் தங்களுடைய விரஸ வேற்றுணர்ச்சியை விட்டு டாகுரை விநயத்துடன் வரவேற்று உபசரித்துத் திருப்பி அனுப்பி வைத்தனர்.

அப்போது கிரிஷின் மனநிலை என்னவென்று பார்த்தால் ஆச்சர்யமாக இருக்கும். இரண்டு புட்டி மது வீணுகிவிட்டதே என்ற விசாரம்தான் அவருக்கு ஏற்பட்டதாம்! குருமஹராஜ் செய்த அற்புதம் அவருக்குப் பெரிய விஷயமாகப் படவில்லை, ஒருக்கால், குருமஹராஜ் உடைந்த புட்டி ஒட்டிக்கெள்ளுா

Koviloor Digital Library

மாறும், தெருவில் ஓடிய மது அந்தப் புட்டிக்குள் வந்து புகுமாறும் அற்புதம் செய்திருந்தாலே திருப்திப்பட்டிருப்பாரோ, என்னவோ?

ஸமாஜ பக்தரின் இல்லத்திலிருந்து பரமஹம்ஸர் தக்ஷிணேச்வரத்துக்குப் புறப்படும்வரை கிரிஷ் தம்முடைய "அத்தியந்தப் பரிவாரம்" பறிபோன தாபத்தில் பரிதவித்து விட்டு, எப்போதடா வீடு திரும்பி நாலு மொடா போடுவோம் என்ற ஏங்கிக் கொண்டிருந்தார். அவர் புது நாடகம் எழுதியாக வேண்டும். அதற்கு அவரது கற்பனைக் குதிரையை விசைப்படுத்தும் உந்தி மதுதான்.

வீடு திரும்பிய கிரிஷ் ஆவல் வெறியுடன் அலமாரியைத் திறந்தார். அலமாரியா அது? அவருக்கு ஆலயம் அதுதான். அதிலேதான் மதுதேவதை தனது பல மூர்த்திகளான புட்டிகளில் வரிசை வரிசையாகக் கொலுவீற்றிருப்பாள்!

அலமாரியைத் திறந்த கிரிஷின் கண்கள் ஆச்சரியத்தில் சிறிது நேரம் நிலைக்குத்திட்டு விட்டன! வரிசை வரிசையாய் நின்ற அத்தனை புட்டிகளிடமும் மஹாஸித்த புருஷர் தம் கைவரிசையைக் காட்டியிருந்தார்! ஆம், அத்தனை புட்டிகளும் குப்தா ஃபார்மஸியின் கசப்பு மருந்து லேபிளை ஒட்டிக் கொண்டு காட்சியளித்தன!

லேபிள் மட்டும் மாறியிருக்குமோ, உள்ளே சரக்கு மாறுமலிருக்குமோ என்று அப்போதும் கிரிஷுக்கு நைப்பாசை. புட்டிகளை உடைத்து மோந்து பார்த்தார். ஸந்தேஹமேயில்லை, அடிவயிறுவரை பிடுங்கி எடுக்கும் கசப்பு நெடிகொண்ட மருந்துதான்!

கசப்பு நாற்றம் உடலுள்ளே சுவாஸத்துடன் போகும் போதே சுவாஸ மூலமான பிராணனுக்குள் கருணை மணம் ஊடுருவியது! மது வாஸனையையும் மருந்து வாஸனையையும் மட்டுமின்றி ஒரு ஜீவனின் பூர்வ வாஸனையையே விஞ்சி வெல்லும் அருள் வாஸனை கிரிஷின் ஆவியை நிரப்பியது.

Koviloor Digital Library

மதுவை மாற்றிய மஹா ஸித்தர் மதம் பிடித்த மனத்தையும் மாற்றிவிட்டார்! குடிப் பழக்கமுள்ளவர் வெகுவாக ப்ரயத்தனம் செய்தாலும் லேசில் அப் பழக்கத்தைவிட முடியாமல் அது பழி வாங்கி ஹிம்ஸிக்கும். எந்தப் பிரயத்தனமும் செய்ய விழையாத கிரிஷின் விஷயத்திலோ இப்போது திவ்ய மா கருணை புரண்டு வந்து நொடியிலே அந்தப் பழக்கத்தை பஸ்மமாக்கிவிட்டது. இல்லை, பஸ்மம் என்பதாகக் கூட அடையாளம் காட்ட எதுவும் மிஞ்சி நிற்காமல் அவருடைய குடிவெறி அடியோடு அழிந்து போய் விட்டது.

''குடிப் பழக்கத்தை விடு'' என்று குருமஹராஜ் கிரிஷிடம் சொன்னதே இல்லைதான். அதனாலென்ன? எந்தப் பழக்கத்தையுமே விடுவதற்கான கட்டுப்பாடு கிரிஷிடம் அறவே இல்லை என்று அவர் அறிவார். அதனாலும்தான் என்ன? 'தம்மிடம் கிரீஷுக்குக் கட்டுப்படுத்த முடியாத அன்பு இருக்கிறதே, அதைவிட வேறென்ன வேண்டும்?' என்றே கருதினார் அன்புக்கு அடிமைப்படும் அவதாரர், குடிகாரரது குடி தாங்க முற்பட்டுவிட்டார். அப்புறம் நாடகாசிரியர் கிரிஷின் கருமக் கணக்கில் கருணைச் சக்தி புகுந்து நாடகம் தொடங்கியது. இன்று அந்த நாடகத்தில் ஓர் அங்கம் அருமையாய் முழுமை பெற்றுவிட்டது. கர்ம வாஸனையால் மதுவில் முழுகியிருந்த கிரிஷ் இன்று கணக்குத் தீர்க்கப்பட்டு அதிலிருந்து கரையேற்றப்பட்டார். அருள் மாரியால் அமுக்குப் போக முழுக்காட்டப் பட்டார்.

அன்று குருமஹராஜுடன் சென்ற இரு சிஷ்ய ரத்தினங்களில் ஒருவரான பாபு ராம் மஹராஜ் எனும் ப்ரேமாநந்தர் பிற்காலத்தில் வெளியிட்ட அற்புதம் இது. இது குறித்து ஸ்வாமி ப்ரபவாநந்தர் ஆங்கிலத்தில் எழுதியிருப்பதைத் தழுவி பிரம்மசாரி ராஜு ''ஸ்ரீ ராமகிருஷ்ண விஜய''த்தில் தமிழில் எழுதியுள்ளார்.

★

Koviloor Digital Library

சிஷ்ய ரத்தினங்களில் ஒருவர் வெளியிட்ட நிகழ்ச்சி இதுவென்றாலும், அந்த ரத்தினங்களுள் கோஹினூராகக் கருதப்படும் விவேகாநந்தரோ இம்மாதிரி அற்புதங்களைப் பரப்புவதை வெகுவாகக் கண்டித்திருக்கிறார். வாசகர்கள் அறிந்திருக்கக்கூடும், ஸ்ரீ ராமக்ருஷ்ண சங்கத்தினர் 'மிரகிள்' எனப்படும் அற்புதங்களை ஆதரித்துப் பேசுவதில்லை என்று. இதற்குக் காரணமாக ஸ்ரீ ராமக்ருஷ்ணரே அற்புத சித்துக்களை வன்மையாகக் கண்டித்திருப்பதைக் காட்டுவார்கள். அவர் கண்டித்திருப்பதும் வாஸ்தவம்.

பின் ஏன் மேலே நாம் கண்ட அற்புதத்தை அவரே செய்தார்? இனி இக் கட்டுரையில் நாம் காணவிருக்கும் வேறு பல அற்புதங்களை ஏன் செய்தார்? இதிலே நாம் சொல்லாமல் விட்ட அநேக அற்புதங்களை ஏன் செய்தார்?

'அதி' என்பதற்கு உள்ள இரண்டு அர்த்தங்களிலும் அவர் அதிமானுடமாயிருந்தது ஏன்? 'அதிகோரம்', 'அதி ஸுந்தரம்' போன்ற பதங்களில் 'அதி' என்றால் 'மிகவும்' எனப் பொருள். இவ்வாறு மிகவும் சாமானிய மனிதராக இருந்ததால் ஸ்ரீ ராமகிருஷ்ணர் 'அதி' மானுடராக இருந்தவர். ஆனால் அது மட்டுமல்ல. 'அதிவர்ணாச்ரமி', 'அதிமாத்ர' போன்ற பதங்களுக்கு 'வர்ணாச்ரமம் கடந்தவர்' 'மாத்ரை (அளவை)க்கு அப்பாற்பட்டது' எனப் பொருள். அதாவது இங்கு 'அதி' என்பது ஒன்றைக் கடந்து, ஒன்றுக்கு அப்பாற்பட்டு அதை விஞ்சி நிற்கும் உயர்வைக் குறிக்கும். இப்பொருளில் மானுட சக்தியைக் கடந்து விஞ்சி அற்புத சக்தி படைத்திருப்பதை 'அதிமாநுஷம்' என்பார்கள். மிகவும் மானுடத்தன்மை பொருந்திய நமது காவிய நாயகரோ, அதே போதில் மானுடத்துக்கு அப்பாற்பட்டு விஞ்சி நிற்கும் அற்புத சக்தி படைத்தவராகவும் இருந்ததைத்தான் இரு அர்த்தங்களிலும் அவர் அதிமானுடராயிருந்தவர் என்றோம். ஏன் அந்த எளிய மனிதர் இப்படி அற்புதம் ஆற்றியவராகவும் இருந்தார்?

Koviloor Digital Library

ஏனென்ருல் அவர் அவ்வற்புதங்களை ஆற்றியபோது அவை அற்புதமாக இல்லாமல் இயல்பாக அமைந்ததால்தான். 'சித்து' என்பதாக இன்றி அன்பின் வெளிப்பாடு மட்டுமாகவே இந்த அற்புதங்கள் நடந்ததால்தான்.

யோகசக்தி, மந்த்ரசக்தி போன்ற ஒன்றைப் பயின்று அற்புதம் ஆற்றும் சக்தி பெறுவதே சித்து எனப்படுவது. ஸாதனைச் சக்தியால் பெறும் காரிய சக்தி மட்டுமே அது. வெறும் சக்தியாய் மாத்திரம் நிற்பது அது. அதை நல்லதற்குத்தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதில்லை. தீயைக் கொண்டு ஆலய தீபம் ஏற்றலாம், அல்லது ஆலயத்துக்கே நெருப்பு வைக்கலாம் என்பதுபோலத்தான் இதுவும். ஒருவன் வேண்டுமென்று உழைத்து யோக மந்த்ர சக்தியால் சித்துச் சக்தியைப் பெறும்போது தன்னை சக்தன் என்று ஸதாவும் காட்டிக் கொள்வதிலும், நாட்டிக் கொள்வதிலுமே அவனுடைய நாட்டம் போவது இயல்புதானே? பக்தனுக, முக்தனுக ஆவதற்கு முயலவேண்டியவன் சக்தனுக ஆனுல் அதைவிட விபரீதம் என்ன வேண்டும்? தனக்கெனத் தனிச் சக்தி ஏதுமின்றி, எளியனில் எளியனுய் பரமனிடம் அடங்கிக் கிடக்க வேண்டியவனல்லவோ பக்தன்? சக்திக்கு நிலைக்களனுன மனம் என்பதையே அழித்து சாந்தியின் நிலைக்களனுன ஆன்மாவில் அமிழ்பவனல்லவோ முக்தன்? மாருக ஒரு ஸாதகன் சக்தனுக ஆகிவிட்டால், தன் சக்தி தரும் அஹம்பாவத்தில் என்னவும் செய்யக்கூடும்தானே? தன்னுடைய சக்தியைக் காட்டுவதிலேயே ஆழ்ந்துவிடக் கூடிய அவன் பக்தியாலோ ஞானத்தாலோ பர தத்வத்தை அடையும் வழியையே தப்பவிட்டு விடுவான்.

இந்த ஆபத்தில் ஸாதகருலகம் சிக்கிவிடக் கூடாதென்பதால்தான் ராமகிருஷ்ணர் அற்புத சித்துக்களைக் கண்டித்தார்.

ஆனுல் இலக்கை நோக்கிச் செல்லும் நிலைகளிலேயே உள்ள ஸாதகனுக்கான ஒரு விதியை அவ்விலக்கை அடைந்து

Koviloor Digital Library

விட்டவனுக்குப் பொறுத்துவதற்கில்லை. ஸாதகன் இலக்கைத் தவறவிட்டு, அற்புத சக்தியிலேயே திசை திரும்பிவிடுமாறு செய்யும் மயக்குத் திறன் சித்துகளுக்கு உண்டு என்பதால் தானே கண்டனம்? எனவே இலக்கை எய்தியே விட்டவன் விஷயத்தில் அது எப்படிப் பொருந்தும்? திவ்விய லக்ஷியத்தை அடைந்தேவிட்ட அந்த நிஜ ஸித்தன் மந்த்ர தந்த்ர யோகங்களை வேண்டுமென்றே பயின்று இந்த சித்து, அந்த சித்து என்பதாகச் சில பல அற்புத சக்திகளைப் பெற்ற போலி ஸித்தனைப் போன்றவனல்லன். அவனுக்கு ஸ்வயம், ஸ்வய சக்தி என்ற அஹம்பாவ எண்ணங்களே எழும்ப முடியாது. அவனுக்கு எழும் ஒரே எண்ணம் அன்பாகத்தான் இருக்கும். அவன் தெய்வத்துடன் ஒன்றுபட்டிருப்பதால் அந்த அன்பெண்ணமே எந்த சித்துக்கும் இல்லாத தெய்வ சக்தி பெற்றுப் பேரற்புதத்தையும் இயல்பாக, எளிதாக ஆற்றிவிடும்.

கண்ணனும், இயேசுவும் அற்புதம் செய்தது சரியா என்று ஒருவர் ரமண பகவானைக் கேட்டார். ஆத்ம சாந்தியில் ஆழ்ந்திருப்பதன்றி அற்புதம் கிற்புதம் என்ற எதையும் பற்றி நினையாத ரமண பரப்ரம்மன் அதற்கு, "அற்புதம் செய்ததாக நீ சொல்கிறாயே தவிர, அந்தக் கண்ணனும் இயேசுவும் அச்சமயங்களில் தாங்கள் ஏதோ அற்புதம் செய்வதாகவா நினைத்துக் கொண்டிருந் தார்கள்?" என்று எதிர்கேள்வி போட்டு அவர் வாயை மூடினார். தெய்வ மயமான பரம பவித்ர அன்பிலே மஹா புருஷர்கள் ஏதொன்று எண்ணி விட்டாலும்—அது நம் பார்வையில் எத்தனை அற்புதமானதாயிருந்தாலும்—ஸஹஜ மாக நடந்துவிடும். அவர்களுக்கும் அன்பின் பீறலில் இது ஸாத்தியமா, அஸாத்தியமா என்ற நினைப்பின்றி சகஜ மாகவே அந்த "அற்புத" எண்ணம் தோன்றியிருக்கும்.

இந்நூலாசிரியர் அறிந்தவரை உலகே மாயமெனத் தள்ளிய பரம அத்வைதிகள் உள்பட, நமக்கு அற்புதமாகத் தெரியும் இயற்கைக்கு அதீதமான செயல்கள் புரியாத

Koviloor Digital Library

மஹான் எவருமே இல்லை. அவர்கள் செய்த மிரகிள்கள் அளவில்தான் வித்யாஸப்படும்.

குழந்தைத்தன்மையை முக்கியமாகக் கொண்டு மானுட மாதுர்யங்களையும் மாண்புகளையும் அனைவருக்கும் ஆதர்சமாகக் காட்டவே குறிப்பாக ஏற்பட்டது ஸ்ரீ ராம கிருஷ்ணரின் அவதாரம். அதனால்தான் அமானுடமான அற்புதங்களை அவர் வெகு வெகு குறைவாகச் செய்தார்; அல்லது அவர் மூலம் அவரது அம்மா செய்தாள். அவரை அற்புதராகப் பிரகாசப்படுத்திக் காட்டுவதால் மானுட குணசித்திரத்தின் இளவொளி கெட்டுவிடப் போகிறதே, அவரிடமிருந்து எந்த மானுடனும் பாடம் பெறக்கூடிய ஆதர்சப் பண்புகளை விடுத்து, மானுடர் பெறமுடியாத, பெறவேண்டிய அவசியமுமில்லாத, அற்புதங்களையே பெரி தாக எடுத்துக்கொண்டுவிடப்போகிறார்களே என்பதால்தான் விவேகாநந்தர் அவரது அற்புதங்களைப் பிரகடனப்படுத்துவ தற்கு ஆக்ஷேபம் தெரிவித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்ற வைரமணியின் பல பட்டைகளில் ஒன்றாகவே அற்புத அம்சத்தை இந்நூலில் நாம் காட்டுவதற்கு விவேகாநந்தர் ஆசியே கூறுவாரென நம்புகிறோம்.

மனித சமுதாயத்தில் எப்படிப்பட்ட வர்க்கங்களுக்கு, என்னென்ன பலன்களை உத்தேசித்து ஒரு மஹாபுருஷரின் பிறவிப்பணி ஈசனால் திட்டமிடப் பட்டிருக்கிறது என்பதை யோசியாமல் சகட்டு மேனியாக, அற்புதம் செய்பவர் ஆன்மியப் பெரியாராக இருக்கமுடியாது என்று தீர்ப்புச் சொல்லிவிடக் கூடாது. தன் சக்தியைக் காட்டுகிறேன் என்று ஒருவர் புறப்படுவதுதான் தவறு. "எல்லாம் இயற்கைப்படி நடக்கிறது. ஈச்வர சக்தி என்று ஒன்றை எதற்காக வெறும் நம்பிக்கையின் மேல் ஒப்புக் கொள்ள வேண்டும்?" என்று நினைப்பவர்களுக்கு அறிவு புகட்டுவதற் காக இயற்கைக்கு அதீதமான ஈச்வர சக்தியை அற்புதங்கள் மூலம் காட்டுவது எப்படித் தவறு? ஈசனுக்கு வேறாகத் தானென்று ஒன்று இருப்பதாகவே காட்டிக் கொள்ளாதவர்

Koviloor Digital Library

கள் அற்புதத்தின் மூலம் ஈச்வர சக்தியைக் காட்டி அதனு லேயே நாஸ்திகர்களை ஆஸ்திகராக்கினுல், அல்லது ஆஸ்திகர் களின் இறைப்பற்றை மேலும் ஆழப்படுத்தினுல் அது போற்றுதலுக்குரியதே அல்லவா?' ஜடமான இயற்கை என்ற ஒன்ருேடு பிரபஞ்சம் முடிந்துவிடவில்லை. ஈச்வர சைதன்யமே அந்த இயற்கைக்கும் மேம்பட்ட இயக்குச் சக்தி' என்ற உண்மையை, அச் சக்தியை அன்பில் மையப்படுத்தி எத்தரத் தினருக்கும், எவ்விதத்திலாயினும் புரிவிப்பதற்காக அற்புத மிரகிள் உருவில் நோய் தீர்ப்பது, வறுமை நீக்குவது, உணவு படைப்பது முதலியவற்றைச் செய்யவும் சில மஹாபுருஷர் கள் தயங்குவதில்லை என்பதைப் புரிந்து கொண்டோமானுல் இப்படிப்பட்டவர்களை மஹாபுருஷர்களின் வரிசையில் வைத்து மரியாதை செய்ய நாமும் தயங்கமாட்டோம்.

மஹான் எனப்படும் ஒருவர் அற்புதத்தோடு முடித்து விடுகிருரா, அல்லது அற்புதத்தில் ஆரம்பித்து அடியாருலகம் அன்பு அறம் ஆஸ்திகம் ஆன்மியம் ஆகியவற்றில் படிப்படி யாய் முன்னேற அவர் வழி வகுத்திருக்கிருரா என்று கவனிக்கவேண்டும். அற்புதத்தோடு முடித்து விடாமல், அற்புதம் காட்டி அதன் மூலம் பாமரரைக் கவர்ந்து மெல்லப் பாரமார்த்திகத்தில் திருப்புவோருக்கு நன்றி நமஸ்காரம் செய்யவே கடமைப் பட்டிருக்கிருேம்.

ஏன் அற்புதத்தில் ஆரம்பிக்கவேண்டும் என்பதற்கு இயேஸுநாதன் ரத்தினச் சுருக்கமாகப் பதில் சொல்லி விட்டார். "Except ye see signs and wonders, ye will not believe"—"அதிசய அடையாளங்களும் அத்புதங்களும் கண்டாலன்றி உலகம் (திவ்விய சக்தியை) நம்பாது" என்று அர்த்தம்.

ஏதோ பாமர ஜனங்கள்தான் இப்படி என்று சொல்வது கூடத் தப்பு. ஸாக்ஷாத் ஸ்ரீ பரமஹம்ஸ ராமகிருஷ்ணருமே ஓர் ஐயப்பாடு தெளிந்து உறுதி பெறுவதற்காக இயற்கையை மீறிய அற்புதத்தைத்தான் சான்ருகக் கேட்டிருக்கிருர்!

Koviloor Digital Library

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேர் சிஷ்யரான ஸ்வாமி விஜ்ஞாநாநந்தரின் வாழ்வும் உபதேசமும் குறித்த நூலில்* இந்த அதிசய விவரம் காணப்படுகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிரத்யக்ஷமாகக் காளியை தரிசித்த பிறகு, மெய்யாலுமே காளி நேரே தோன்றினளா, அல்லது அது தமது பிரமை தாஞ என்று ஐயப்பாடுற்றூராம். அப்போது தாம் பெற்றது மெய்யான தர்சனமானுல் பக்கத்திலிருந்த ஒரு பெரிய கல் மும்முறை எழும்பிக் குதிக்கவேண்டுமென்று வேண்டினராம். அப்படி அவர் விரும்பியதுதான் தாமதம், உடனே அந்தக் கல் அப்படியே மூன்று முறை குதித்ததாம்!

தெய்வத்தாயை நேரே கண்ட ஒருவரே (அந்தக் காட்சியிலேயே ஐயம் கொண்டு) அற்புதத்தின் அத்தாட்சி கேட்க, தெய்வத்தாயும் அவ்வற்புதத்தை நிகழ்த்திக் காட்டியிருக்கும்போது, ஏனையோர் அற்புதம் கண்டே ஆஸ்திகரா வதையோ, அப்படி அவர்கள் ஆஸ்திகராவதற்காகச் சில மஹான்கள் அற்புதம் புரிவதையோ கண்டிப்பதில் நியாய மில்லை.

இவ்விஷயமாக நம் டாகுரே நினைவுகூர்ந்த ஒன்றைப் பார்ப்போம். பல்லாண்டுகள் டாகுருக்குப் போஷகராக அரும்பணி புரிந்த காளி கோயில் நிர்வாகியான மதுர்பாபு குறித்த விஷயம். "கடவுளுக்கும் கூடத் தாம் ஒரு முறை விதித்துவிட்ட இயற்கையின் சட்டங்களை மீற ஆற்றல் கிடையாது என்பது மதுரின் கருத்து. நான் அவரிடம், 'சரியாகத்தான் பேசுகிறீர்களா? ஒரு சட்டத்தைப் போடுகிறவன் விரும்பினுல் அதை ரத்து செய்யவும் முடியும், அல்லது அதற்குப் பதில் புதுச்சட்டம் போடவும் முடியும்' என்றேன். அவர் இதை ஒருகாலும் ஒப்புக்கொள்வதற்கில்லை என்றூர். 'சிவப்புப் பூ பூக்கிற ஒரு செடி மாறுமல் சிவப்புப் பூதான் பூக்கிறது; அது ஒரு நாளும் வெள்ளைப்பூ பூப்பதில்லை. ஏனெனில் இது அவனுடைய சட்டம். நல்லது, அவனுல்

* Swami Vijnanananda—His Life and Sayings, Page 37.

Koviloor Digital Library

முடியுமாயின் ஒரு சிவப்புப் பூச் செடியில் வெள்ளைப் பூவை சிருஷ்டித்துக் காட்டட்டுமே' என்றார். நான் அதற்கு, 'அவன் ஸங்கல்பித்தால் எதுவும் செய்யமுடியும்; நீங்கள் சொல்வதையும் கூடத்தான்' என்றேன். அதை அவர் ஏற்கவில்லை.

"மறுதினம் நான் இயற்கைக் கடனுக்காகச் சவுக்குத் தோப்புக்குப் போனேன். அங்கே ஒரு செம்பருத்திச் செடியின் ஒரே கிளையில் பிரிந்த இரண்டு உபகிளைகளில் ஒவ்வொன்றிலும் ஒரு பூ பூத்திருந்தது. அவ்விரண்டில் ஒரு பூ சிவப்பாக இருந்தது. மற்றதோ வெள்ளை வெளேரென்று இருந்தது. அதிலே ஒரு சிறு பொட்டுக்கூடச் சிவப்பு இல்லை. அதைப் பார்த்தேனோ இல்லையோ, அந்தக் கிளையை இரண்டு பூக்களோடும் அப்படியே ஒடித்து எடுத்துக் கொண்டு மதுரிடம் போய் அவர்முன் வைத்தேன். "அகப்பட்டுக் கொண்டீரா?" என்று அவரைக் கேட்டேன். உடனே அவர், "ஆமாம் அப்பா! நான் தோற்றுவிட்டேன்" என்றார்."

★

மஹான்களின் இயல்பு நாம் ஆழம் காணமுடியாத ஒன்று. இதிலே ஒரு விளக்கவொண்ணாத அம்சம் 'மிரகிள்' குறித்தும் உள்ளது. பிரேம சக்தியாலேயேதான் அவர்கள் அற்புதம் புரிவது என்றாலும், சில சமயம் ஏதோ மந்த்ரம், சடங்கு ஆகியவற்றைக் கைக்கொள்வது போலவும் காட்டியிருக்கிறார்கள். ஒருகால் இது அவ்வற்புதங்களுக்குப் பாத்திரமானவர்களின் மனத்துக்கு ஏற்கிற, புரிகிற விதத்தில் செயற்பட வேண்டுமென்பதாலிருக்குமோ என்னவோ? அல்லது, மந்த்ரம், சடங்கு ஆகியவற்றுக்கும் பலன் உண்டு என்று நம்பிக்கை ஊட்டுவதற்காகவும் இருக்கலாம்.

இப்படிச் சடங்கு ரீதியில் ஸ்ரீ ராமக்ருஷ்ணர் ஆற்றிய ஓர் அற்புதம் :

காமார்புகுரின் அண்டைக் கிராமமொன்று. அங்கே ஒரு இஸ்லாமியர் வசித்து வந்த குடிசை ஆண்டுதோறும் தீ

Koviloor Digital Library

விபத்துக்கு ஆளாகி வந்தது. எப்படித் தீப் பற்றியது என்றே தெரியாது. திடுமென எரிய ஆரம்பித்து விடும். எத்தனை தற்காப்பும் முற்காப்பும் செய்தும் பயனில்லை. பல்லாண்டு கள் இப்படி வருஷாந்தர விஷயமாகக் கூரை எரிவதும், இஸ்லாமியர் புதுக்கூரை வேய்வதுமாக நடந்து வந்தது. ஏவல் சூனியம்தான் விபத்துக்குக் காரணம் என்று எல்லாரும் கருதினார்கள்.

இப்படி அந்த ஆண்டும் குடில் அக்னி தேவனுக்கு இரை யானபோது, இதற்கு என்ன மாற்று மாந்த்ரீகம் செய்வது என்று புரியாமல் இஸ்லாமியர் நண்பரொருவரிடம் வியா குலப்பட்டுக் கொண்டிருந்தார்.

சட்டென்று நண்பரின் முகத்தில் நம்பிக்கையொளி படர்ந்தது. "கவலைப்படாதேயப்பா! அதோ போகிறாரே ஒரு மஹாத்மா, அவரிடம் முறையிடு. உன் கஷ்டமெல்லாம் விடிந்துவிடும்" என்றார்.

அதோ போன அந்த மஹாத்மா நம்முடைய குரு மஹராஜ்தான் என்று சொல்லவும் வேண்டுமா?

பரவச நிலையிலே ஹரி நாம போத அமுதம் கண்களி லிருந்து பாஷ்பமாகப் பெருக, ஆடிப்பாடி ஆனந்தமாகத் தாளம் போட்டுக்கொண்டு குரு மஹராஜர் சிஷ்ய யுவராஜர் கள் சூழச் சென்றுகொண்டிருந்தார்.

முகமதியர் விரைந்து சென்று விரைகழல் பணிந்தார். மதிமுக ஹரியிடம் பறந்து சென்றிருந்த மஹராஜின் மனம் சட்டென்று மண்ணுக்கு வந்தது. பக்தியும் கருணையும் மஹாத்மாக்களிடம் கைகோத்துச் செல்வன அல்லவா?

"என்ன வேணும் குழந்தே?" என்று முழு மதியை வடித்த குரலில் குருதேவர் கேட்டார்.

இந்த முழு மதி பெருக்கும் பனிவெள்ளத்தில் குடிசைத் தீ சாச்வதமாக அணைந்துவிடும் என்ற உறுதி இஸ்லாமியருக்கு ஏற்பட்டது. பிரச்னையைப் பிரானிடம் விண்ணப்பித்துக்

Koviloor Digital Library

கொண்டார். "என்னைக் காக்கத் தாங்களே கதி. தயவு செய்து என்னோடு வாருங்கள். சாம்பலாகி விட்ட கூரையைக் கண் பாருங்கள்" என்று வேண்டினார்.

உடன் வந்த அடியார்களை அங்கேயே இருக்குமாறு பணித்துப் பரமஹம்ஸர் மட்டும் இஸ்லாமியருடன் சென்றார்.

சாம்பலாகிப் பறந்து போயிருந்த கூரையைக் கண் பார்த்தார். அந்த ப்ரேமாம்ருத கடாக்ஷத்திலேயே சாம்பல் மீளவும் கூரையாக, ஏன் அரண்மனையின் நிலாமாட மாகவுங்கூட, எழும்பியிருக்கக் கூடும்தான்! ஆயினும் இன்று சடங்கால், மந்திரத்தால் அற்புதம் செய்யவே திருவுளம் இருந்தது.

எனவே டாகுர் இஸ்லாமியரிடம், "கொஞ்சம் நாவல் பழம் கொண்டு வா" என்றார்.

அவர் அவ்வாறே கொண்டு வந்து டாகுரிடம் கொடுத்தார்.

குட்டிச் சுவராக நின்ற குடிசையை டாகுர் அவருக்குக் காட்டி, "இதைச் சுற்றி வலமாக வா" என்றார்.

முகமதியர் அப்படியே செய்ய, குருதேவரும் அவருக்குப் பின்னால் சென்றார். செல்லும்போதே நாவற்பழங்களை ஒவ்வொன்றாகக் கீழே போட்டுக்கொண்டு வந்தார். அவரது திரு அதரம் ஏதோ முணமுணத்துக் கொண்டிருந்தது. என்ன மந்திரமோ?

ஒரு சுற்று முடிந்தது.

இக உணர்வு லேசாகவே இருந்த நிலையில் சுற்றி வந்த டாகுர், "ஒரு ப்ரதக்ஷிணம் ஆச்சா?" என்று கேட்டார்.

"ஆச்சு" என்றார் இஸ்லாமியர்.

டாகுர் வேறொன்றும் செய்யவில்லை, சொல்லவுமில்லை. தென்றலைப் போலத் தன் பாட்டுக்குச் சென்று அடியார் பரிவாரத்துடன் சேர்ந்து கொண்டார். தேனலையாக ஹரி நாம கீர்த்தனம் பரப்பியபடிப் போய்விட்டார்.

Koviloor Digital Library

அவர் வேறென்ன செய்ய வேண்டும், சொல்ல வேண்டும்? Novel-ஆன இந்த நாவற் சடங்கினுலேயே அற்புதம் ஆற்றி விட்டாரே!

அதன்பின் குடிலைத் "தீ"வினை தொடவேயில்லை!

★

அடியாரது கர்மாவைத் தாமே வாங்கி, தாங்கித் தீர்த்தும் மஹான்கள் அற்புதமாகக் காப்பதுண்டு. ஸ்ரீ ராமக்ருஷ்ணர் வாணுள் முழுதுமே வயிற்றுப் பிணிக்கு ஆளாகியிருந்ததும், இறுதியில் தொண்டையில் புற்றுநோய் உற்றதும் பக்தர்களின் வினையை அவர் ஏற்றுக் கொண்டதால் தான் என்று ஒரு கருத்து உண்டு. புற்றுநோய் குறித்து அவரே இவ்வுண்மையை உறுதிப்படுத்தியிருக்கிறார். நோயுற்றபின் அவர் கல்கத்தா ச்யாம்புகுரில் வஸித்தபோது கண்ட ஒரு அதீதக் காட்சியைப்பற்றி அவரே சொன்னது: "அக் காட்சியில் இந்த (தமது) ஸ்தூல சரீரத்துக்குள்ளிருந்து ஸூக்ஷ்ம சரீரம் வெளி வந்து, மேலும் கீழும் நடந்தது. அதன் முதுகுப்புறம் முழுதும் புண்மயமாக இருப்பதைப் பார்த்தேன். ஏனிப்படி யிருக்கிறது என்று நான் ஆச்சரியப் பட்டுக் கொண்டிருந்தபோது அம்பிகை விளக்கி வைத்தாள். எல்லாவிதமான பாவமும் செய்த ஜனங்கள் இவ்விடம் வந்து இந்த உடம்பைத் தொடுவதுதான் புண்மயமான தற்குக் காரணம்; ஏனென்றால் அவர்களிடம் உண்டான பரிவினால் நான் அவர்களுடைய தீவினைப் பயன்களை வாங்கிக் கொண்டு விடுகிறேன் என்று எனக்குப் புரியவைத்தாள். அதனால்தான் (புற்றுநோயுற்ற தமது தொண்டையைச் சுட்டிக் காட்டி) இது இப்படியிருக்கிறது. அல்லாவிடில் ஒரு தவறும் செய்யாத இந்த சரீரத்துக்கு ஏன் இவ்வளவு உபாதை ஏற்படவேண்டும்?"

இங்கே ஒன்று கவனிக்க வேண்டும். பராசக்தியிலேயே தங்கள் தனித்தன்மையை முற்றிலுமோ பெருமளவுக்கோ கரைத்துவிட்ட, அல்லது அப்படிக் கரையவேண்டி சரணுகதி

Koviloor Digital Library

செய்துவிட்ட மஹான்களின் தனிமனம் என்பது நமக்குப் புரியாத புதிர். என்றாலும் அப்படியொன்று எந்த மஹானிடமும் ஜாடை மாடையாகவாவது இருப்பதுபோலவே நம் பார்வையில் தெரிகிறது. முழுதும் அவளே ஆட்கொண்டு கருவி மாத்திரமாக இயக்கினால், மஹான்களின் வாழ்வில் மானுட ஜீவ கதியின் ரஸபேதங்கள் இன்றி அவை இயந்திர கதியிலாகிவிடும் என்பதாலேயே அந்த மகா நாடகக்காரி நமது பார்வைக்கு இப்படித் தெரிய வைக்கிறாளோ என்னவோ? ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் இப்படியொரு தனி மனம் இருப்பதாகக் கொள்ளும்போது, அவர் மனப் பூர்வமாக விரும்பிப் பிறரது தீ வினையை வாங்கிக் கொண்டு அதற்காக நோயுறவில்லை என்றே தோன்றுகிறது. அதீதக் காட்சி கண்டு அதில் அம்பிகையே தெரிவித்துத்தான், தம்மைத் தீண்டுவோரின் வினை தம்மிடம் சேர்ந்து தாக்குவதாக அவர் உணர்ந்தாரென்பதால் இது அவருடையே சுய மனத்தின் ஸங்கல்பத்தால் அல்ல என்று தெரிகிறது. அவரிடம் வந்தவர்கள் தொட்ட மாத்திரத்தில் அவரது அன்பு மனம் செய்ததென்னவெனில் அவர்களிடம் பரிவில் பொங்கியதுதான். அதற்குமேல் அவர் மனப்பூர்வமாக (அல்லது "புத்தி பூர்வமாக" என்றாலே தமிழ் வாசகர்களுக்குப் புரியும்) அவர்களது கர்மாவைத் தாமே ஏற்று அநுபவிக்க வேண்டுமென்று சங்கற்பிக்கவில்லை.

அம்பாள் அவரை ஓர் அற்புதப் பண்டமாகப் படைத்திருந்தாள். அதிலே ஓர் அம்சமாக அவர் ஒருவரை "புத்தி பூர்வமாக" உத்தேசித்துத் தீண்டினால் இவரது ஆன்ம சக்தி அவர்களுக்குள் பாய்ந்தது; இன்னோர் அம்சமாக, பிறர் இவரைத் தீண்டினால் இயல்பாக இவருக்கு அவர்களிடம் பரிவெழுச்சி ஏற்பட, இவர் உத்தேசியாமலே அவர்களது வினைப் பயன் இவருள் பாய்ந்து இவரை பாதித்தது.

அற்புதப் பண்டமாக அம்பாள் அவரைப் படைத்திருந்ததில் முக்யமான அம்சம் அவருடைய குழந்தைமை அல்லவா? குழந்தை போல அவர் தமது உடற்பாதிப்புக்

Koviloor Digital Library

களைக் குறித்துக் கவலையும் பயமும் உறுவாரே! அதனால் முடிந்தவரையில் பிறர் தம்மைத் தொடுவதற்கு இடம் தர மாட்டார். நோய் தீருவதற்காக யாராவது தம்மிடம் வந்தாலும் அவர்களை விலக்கிவிடுவார். எங்கே அவர்களது நோய் சொந்த உருவத்திலோ அல்லது வேறொரு நோயாகவோ தம்மிடம் வந்து சேர்ந்துவிடுமோ என்ற அச்சத்தால்தான்!

அம்பாள் ஒருத்தி இருக்க, பிறருக்கு உபகரிக்கிறேன் என்று புறப்பட்டு அற்புத அநுக்ரஹம் செய்யவோ, பிறர் சார்பாக அவளிடம் பிரார்த்திக்கவோகூடத் தாம் யார் என்ற அடக்கமும் இதற்கு ஒரு முக்யமான காரணம்தான். ஆனாலும் அன்பெழுச்சியில் அடியாரது ஆன்மிய நலன்களுக்காக அற்புத அநுக்ரஹம் புரியவும், அன்னையிடம் பிரார்த்திக்கவும் அதிகம் தயங்காத டாகுர் அவர்களது உடல் நிலை, பொருளாதாரம் போன்ற உலக நலன்களுக்காக இப்படிச் செய்ய மிகமிகத் தயங்கவே செய்தார். இகத்திலிருந்து பரத்துக்கே அடியார் பார்வையைத் திருப்பத்தான் அவர் இக நலன்களில் அருளவில்லை என்பது முழு உண்மையுமாகி விடாது. அவரைக் குறித்த நூல்களை நடுநிலையில் படித்தால், இந்த இக விஷயங்கள் கர்மாவினாலேயே நிர்ணயிக்கப் படுவதால் எங்கே அந்தக் கர்மா தம்மை வந்து பிடித்துக் கொண்டு பீடிக்குமோ என்று அவர் குழந்தை மனப்பான்மையில் அஞ்சியதாகவும் தெரியவரும்.

அவருடைய அச்சத்தை அவரது பூர்வ அநுபவம் மெய்ப்பிக்கிறது. மிரகிள் என்னும்படியாக அவர் மூலம் சிலர் நோய் நிவாரணம் பெற்றபோது அவரே அதற்காக மிகுந்த உபாதைப் பட நேர்ந்திருக்கிறது. இரண்டு உதாஹரணங்கள்:

மதுர்பாபுவின் மனைவி ஜகதம்பா தாஸி பயங்கரமான வயிற்றுப்போக்குக் கண்டு யமனுலகுக்கு விரைந்து கொண்டிருந்தாள். வைத்தியர்கள் கைவிட்டு விட்டார்கள்.

Koviloor Digital Library

மதுருக்கு வருத்தம் சொல்லிமுடியாது. அருமை மனைவியை இழக்கும் வருத்தம் மட்டுமல்ல. "அப்பா" என்றழைக்கத் தமக்கு விசேஷ உரிமை தந்திருந்த ஸ்ரீ ராமக்ருஷ்ண ஸேவையைத் தாம் இழக்கும் வருத்தமும்தான். ஏனெனில், காளி கோயில் கட்டிய ராணி ராஸமணியின் பெண்ணான ஜகதம்பாதாஸியின் கணவர் என்ற முறையில்தான் அவர் அக் கோயிலின் நிர்வாகியாகி அங்கு வஸித்து வந்த ராமகிருஷ்ணக்குச் சேவை செய்ய முடிந்தது. பெண்ணே போய் விட்டாளென்றால், அதன் பின் ஆலயப் பொறுப்பு மற்ற பெண்களான அவளுடைய ஸஹோதரிகளிடமும் அவர்களது கணவர்களிடமும் போய்விடலாமல்லவா? அதன் பின் மதுர் எப்படி "அப்பா"வுக்கு ஸேவை செய்ய முடியும்?

சித்தம் சிதிலமாகும் நிலையில் மதூர் பஞ்சவடிக்கு ஓடி வந்தார், "அப்பா"வின் பஞ்சு அடியில் விழுந்து முறையிட.

"என்ன மதுர்? என்ன ஆச்சு?" என்று மதுரக் கருணை யோடு அவரைப் பக்கத்தில் அமர்த்திக்கொண்டு குருதேவர் கேட்டார்.

கண்கள் பெருக, தொண்டை அடைக்க மதுர் விஷயத் தைச் சொன்னார். "அவள் போகத்தான் போகிறாள். அதை விடவும், அப்பா, என்னை வாட்டுவது உங்களிடம் நான் பெற்றுள்ள சேவா பாக்யத்தைப் பறிகொடுக்கப் போகிறேன் என்பதுதான்" என்றார்.

"அப்பா"வுக்குப் பரிவு பொங்கி எழுந்தது "பிள்ளை" யிடம். அதிலே தாம் பச்சைப் பிள்ளையாய் நிற்கும் பாவம் போய் அத்புத ஸித்தராய் எழுச்சி கொண்டார். அந்த அதீத நிலையிலிருந்துகொண்டு மதுரிடம், "பயப்படாதே யப்பா, உன் பெண்டாட்டி குணமாவாள்" என்ற அபய அமுதவாக்கு நல்கினார்.

அபூர்வமான அநுக்ரஹம் பெற்ற மதுர் அபாரமான தெளிவும் நிம்மதியும் பெற்றார். "அப்பா"விடமிருந்து விடை, கொண்டார்.

Koviloor Digital Library

ஜான்பாஜாரிலுள்ள தமது மாளிகைக்கு அவர் திரும்பிய போது அதிசயம் நிகழ்ந்திருந்தது. யமனுலகுக்கு விரைந்து கொண்டிருந்த ஜகதம்பாதாஸியின் உயிர் பூவுலகுக்கு மீண்டு கொண்டிருந்தது. முக்காற் பிணமாயிருந்த உடலில் நவஜீவனத் தளிர்ப்பு மெல்ல மெல்ல ஏற்படலாயிற்று.

சிறிது காலத்தில் ஜகதம்பாதாஸி பூர்ண ஆரோக்யம் பெற்றுவிட்டாள்.

ஆனால் ஜகதம்பா தாஸரான நம் டாகுர் அவளுக்குத் தளிர்ப்புத் தந்ததற்குப் பலனாகத் தாம் சருகாக வாடினார். வயிற்றுப் போக்கு அவரது திருவுடலத்தைப் பற்றிக் கொண்டது. அந்த நோயினாலும் அதையொட்டி எழுந்த வேறு நோய்களாலும் ஆறு நீண்ட மாதங்கள் ஐயன் அவதிப் பட்டார்.

இரண்டாவது எடுத்துக்காட்டு: வெண்குஷ்டரோகி ஒருவன் வெண்மனத்தவரிடம் வந்தான். "சாமி, ஒன் கையாலே இந்த ஒடம்பை ஒரு வாட்டி தடவிக் கொடேன்! இந்த வியாதி பறந்துடும்!" என்று உருகி வேண்டிக் கொண்டான்.

வெண்மனம் ஒளிவில்லாமல் பதில் கூறியது: "நல்லது அப்பா! ஆனால் நமக்கு ஒண்ணும் இந்த மாதிரி சக்தி பத்தித் தெரியலே. இருந்தாலும்...," வெண்மனம் வெண்ணெயாக உருகித் தொடர்ந்தது: "இருந்தாலும் நீ என்னமோ ஆசைப்பட்டுக் கேக்கறியே, அதனாலே தடவிக் கொடுக்கிறேன். அம்மா சங்கல்பம் இருந்தா வியாதி குணமாகும்."

பிறர் உள்ளத்தை மாற்றும் தமது 'ஸாமர்த்திய' ஸ்பர்சமாக* இல்லாமல், பிறன் ஒருவன் உடல் மாற்றத் துக்காக வேண்டிவிட்டானே என்றே அவனுடைய வெண்குஷ்ட உடம்பை அறுவறுப்புப் பாராமல் தயாமயர் தடவிக் கொடுத்தார்.

---

* ''குரு மஹராஜ் செய்த ஸாமர்த்தியம்'' என்ற கட்டுரை பார்க்க.

Koviloor Digital Library

ரோகம் சிறிது காலத்தில் பறந்து போயிற்று. ஆனால் அவன் அதனால் பட்டிருக்கவேண்டிய அத்தனை அவதியும் வெட்கமும் சமூகக் கூச்சமும் இறுகிக் கொடுவலியாயிற்று. தடவிக் கொடுத்த தயாமயரின் திருக்கரத்தை அக் கொடு வலி பற்றிக் கொண்டு ஒரு நாள் முழுமும் அவரைத் துடிதுடிக்க வைத்தது.

இம்மாதிரிச் சம்பவங்களிலிருந்துதான் நோய் தீர்ப்புப் பணி தமக்கு அம்பாள் விதிக்காத ஒன்று எனக் கொண்டு நோயாளிகளிடமிருந்து அவர் தம்மை ஜாக்ரதை செய்து கொள்ளலானார். பிணியுற்ற எவரேனும் வந்து அவரிடம் முறையிட்டால், "ஐயோ அப்பா! அந்த ஸங்கதியெல்லாம் நமக்கு வராது" என்று அவர் குழந்தைபோல அந்த முறையீட்டைத் தாண்டிக் குதித்து வேறேதேனும் பேச ஆரம்பித்துவிடுவார்!

இப்படி நினைத்து நினைத்து அவருக்குத் தமக்கு நோய் தீர்ப்புச் சக்தி அறவே கிடையாது என்ற எண்ணமே ஏற்பட்டுவிட்டது. எத்தனை குழந்தையாயிருந்திருக்கிறார்? நோய் தீர்ப்பு, வறுமை தீர்ப்பு என்று ஒவ்வொன்றுக்கும் ஒரு மந்திரத்தால் சக்தி பெற்றால்தானா? பிரேம சக்தி என்ற ஒன்றே அனைத்தையும் சாதித்துவிடாதா? ஐயா, ராம கிருஷ்ணா! இந்த உண்மை எங்களைவிட அனந்த கோடிமடங்கு திவ்யப் பிரேமை புரிந்த உனக்குத் தெரியாதா? உன்னைப் பச்சைக் குழந்தையாகவே வைத்து அழகு பார்க்க வேண்டு மென்பதால் அம்மா உனக்கு இது புரியாமல் வைத்தாளா? ஏதோ உடல் கோளாறு போன்ற இகப் பிரச்னை தீர்க்கும் ஸாதாரகச் சித்தர் என்று உன்னை எவரும் பேசுவதற்கில்லா மல், அக மலர்ச்சிக்கே வந்த நல்ல குருநாதன் என்றே கொள்ளவேண்டும் எனக் கருதி இப்படிச் செய்தாளோ?

தமக்கு மருத்துவ சக்தி மருந்துக்கும் கிடையாது என எண்ணிய டாகுர் அதற்காக வருந்திய ஒரு ஸந்தர்ப்பமும் உண்டு. அப்போது ப்ரேமசக்தியே அற்புதமாய் நோய்

Koviloor Digital Library

தீர்த்ததும் உண்டு. இது மதுர்பாபுவின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி.

ஆறாத கட்டியொன்று மதுர் பாபுவை வீட்டோடு கட்டிப் போட்டது. "அப்பா"வைப் பார்க்கப் போக முடிய வில்லையே என்று ஆராத் தாபம் கொண்டார். ராமக்ருஷ்ண ரிடம் அவரது மெய்க்காவலர் போலிருந்த ஹ்ருதயர், "மதுர் பாபு தங்களைக் காண மிகவும் ஏங்குகிறார். ஆனால் எலும்பு மூட்டில் கட்டியாயிருப்பதால் அசையமுடியாத நிலையில் இருக்கிறார். நாம்தான் சென்று அவரைப் பார்த்து வருவோமே!" என்றார்.

ராமக்ருஷ்ணரின் சந்திர முகத்தில் வருத்த மேகம் ஓடிற்று "போய் என்ன பிரயோஜனம்? ப்ரிய மதுர் வலியில் துடிப்பதைப் பார்ப்போம். அதை குணமாக்க என்னால் முடியுமா என்ன?" என்று மிகவும் குறைந்து கொண்டார்.

ஆனாலும் மதுரோ "அப்பா"வுக்கு விடாமல் ஆளனுப்பிக் கொண்டிருந்தார். கடைசியில், தம் குறைவுணர்ச்சியுட னேயே "அப்பா"வும் அந்தப் பிள்ளையின் வீட்டுக்குச் சென்றார்.

அவரைக் கண்டதும் மதுர் பெற்ற மகிழ்ச்சி சொல்லி முடியாது. வெகு சிரமத்துடன் படுக்கையிலிருந்து எழுந்து திண்டில் சாய்ந்தமர்ந்து கொண்டு, "அப்பா, கொஞ்சம் உங்கள் பாத தூளி பாலியுங்கள்" என வேண்டினார்.

குருதேவர் தம்மைக் குற்றவாளி ஸ்தானத்தில் நிறுத்திக் கொண்டார். அசத்தி நிலையின் வேதனையுடன், "என் பாத தூளியால் என்ன பிரயோஜனம் மதுர்? அதனால் உன் கட்டி தீருமா என்ன?" என்றார்.

உடனே மதுர், "அப்பா, நான் அத்தனை அல்பனா என்ன? என் கட்டி தீர்வதற்காகவா நான் உங்களை, உங்கள் பாத தூளியை விரும்புகிறேன்? கட்டியைக் கவனிக்க டாக்டர்கள் போதும். பவ ஸாகரம் தாண்டுவிக்கவே உங்களை, உங்கள் பாததூளியை நான் விரும்புவது" என்றார்.

Koviloor Digital Library

இப்படி அவர் பக்தி ப்ரேமையை வெளியிட்டாரோ இல்லையோ, டாகுர் அநுக்ரஹப் ப்ரேமையில் பரவசமாகி விட்டார். அவரது பாதத்தில் மதுர் சிரஸைப் பதித்து அடிப்பொடியால் முடிக்கு முழுக்குப் பெற்றார். எல்லையில்லா நிறைவில் அவருடைய கண்கள் தாரை பெருக்கின.

அந்த நிறைவில் அவர்கள் இருவரும் அறியாவிட்டாலும், நாடாவிட்டாலும் ஆரோக்ய நிறைவும் அடக்கமாயிருந்தது! அதிசயவிரைவுடன் மதுர்பாபுவின் கட்டி குணமாகிவிட்டது!

★

மஹாபுருஷர்களது ஜீவிதப் பணி அவர்களில் ஒவ்வொருவரும் எத்தகு வர்க்கத்தினருக்கு, என்னென்ன மட்டங்களில் அருளவேண்டும் என்ற பராசக்தியின் நிர்ணயப்படியே அமைந்திருக்கிறது என்று முன்பு கூறியதை மீண்டும் நினைப்பூட்டுகிறோம். ஏனெனில் டாகுரோடு அபேதமான ஸாக்ஷாத் சாரதாமணியே நோய் தீர்ப்பு அருளில் அவருக்கு மாறுபாடாக இருந்திருக்கிறாள். நோயாளி வந்தாலே, "அச்சச்சோ, அம்மாடி, இது நமக்கு வராத ஸங்கதி" என்று டாகுர் ஒடியதுபோல அவள் ஒதுங்கி நிற்கவில்லை. இகமா, பரமா என்று பாராது எதற்கும் தயங்காது அருள் செய்யும் புக்தி முக்தி ப்ரதாயினியான அவள் நோய் நீங்கவும் நிறைய அருள் புரிந்திருக்கிறாள்.

உதாரணமாக: பன்னிரண்டு ஆண்டுகளாக ஆறுமலிருந்த க்ஷீரோதபாலாவின் நகச்சுற்றிப் புண்ணை அம்மாவின் கமண்டலு தீர்த்தம் குணமாக்கியிருக்கிறது; வ்ரஜேச்வரி காக்கை வலிப்புக்காக அணிந்திருந்த தாயத்தை நம் தாய் அவிழ்த்தெறியச் செய்து தன் இச்சா மாத்திரத்தில் அக்கொடுநோயை விரட்டியிருக்கிறாள்; காசநோயினால் கால பாசத்தில் சுருக்குண்டிருந்த ஸுரேந்த்ர நாத் ராயிடம் புகைப்பட உருவிலே சென்று சுருக்கிலிருந்து அவரை வெகு 'சுருக்க' அவிழ்த்து விட்டிருக்கிறாள்.

Koviloor Digital Library

மிக விநோத அம்சம், "அச்சோ, அம்மாடி" என்று அலறிப் புடைத்துக்கொண்டு ஒதுங்கிய டாகுரின் படத்துக்கு அர்ப்பணிக்கப்பட்ட நிர்மாலியப் பிரஸாதத்தை அளித்துத் தான் அவள் பெரும்பாலான நோயாளிகளை சொஸ்தப் படுத்தினுள்!

★

இகப் பிரச்னைகளிலும் ஸ்ரீ ராமக்ருஷ்ணரின் காக்கும் கருணையன்பு தன் சக்தியைக் காட்டி தீர்வு தந்ததற்கு த்ருஷ்டாந்தங்கள் இல்லாமலில்லை. இதிலே நம் அம்மா சாரதையையுங்கூட அவர் விஞ்சியிருக்கிறுராக்கும்! பூர்ணநந்த பௌமிக் என்பவர் செய்யாத குற்றத்துக்குத் தண்டனை பெற விருந்த சமயத்தில் அம்மாவின் அருள் அவரை அதிசயமாகக் காத்தது எனில், மெய்யாலுமே குற்றம் செய்த ஒருவரையும் மன்னித்துத் தண்டனையிலிருந்து விடுவிக்குமளவுக்கு டாகுரின் அருள் சென்றிருக்கிறது. இதுவும் மதுர்பாபு என்னும் மதுராநாத விச்வாஸ் அவரிடம் கொண்டிருந்த அந்தரங்க விச்வாஸம் கிளர்த்திய ப்ரேம சக்தியால் நிகழ்ந்ததுதான்.

"அப்பா"விடம் மதுர் எத்தனை விச்வாஸம் கொண்டிருந்தபோதிலும் அவரது பொது இயல்பு ராஜஸிகமானது தான், ஸாத்விகமானதல்ல. லௌகிகரான எந்தவொரு பெரிய முதலாளியும் எப்படியிருப்பாரோ அப்படித்தான் மதுர் பெரும்பாலும் இருந்தார். அவருக்கு எதிர்க் கோஷ்டிகள் உண்டு. அவற்றை அடக்க அவர் தர்மாதர்மங்களுக்கு பயப்படாமல் வன்முறையை நாடியதுமுண்டு.

இப்படி ஒருமுறை இன்னொரு ஜமீன்தாருடன் அவருக்கு மோதல் ஏற்பட்டது. இம் மோதலில் ஒரு நபர் மதுரின் ரஹஸ்ய ஏற்பாட்டின் கீழ் கொலைக்கு ஆளானுர். சட்டத்தின் இரும்புக் கரம் மதுரின் கழுத்தை நோக்கிப் பாய்ந்தது. மதுர் "அப்பா"வின் கரும்புக் கழல்களில் தஞ்சம் அடையப் பாய்ந்து வந்தார்.

Koviloor Digital Library

கரும்பு மிளகாயைவிடக் காரமாயிற்று தஞ்சம் தர மறுத்தது. "சை, நீசனே! நீ தினமும் ஏதாவது தப்பு தண்டா வியவஹாரம் பண்ணுவே, அப்புறம் 'காப்பாத்து'ன்னு எங்கிட்டே வருவே! நான் என்னவும் பண்ண முடியாது. போ, போ, நீசனே! பண்ணினதுக்கு நன்னு அநுபவி" என்று தர்மாத்மனான ஸ்ரீ ராமகிருஷ்ணர் வெடித்தார்.

(தமது 'போஷக'ராக அம்பாளே அனுப்பிவைத்த கோடீச்வரரிடம் அபலர் இப்படி வெடித்ததிலிருந்து அவரது நியாயதீரம் தெரிகிறதல்லவா!)

மதுர் அவரை விடவில்லை. அவர் அபயமளித்தேயாக வேண்டுமென மன்றாடினார்.

நியாய தர்மத்தையும் மீறி அருட்பிரேமை எழுந்தது. "நல்லது, அம்மா சித்தப்படி என்ன நடக்கணுமோ நடக்கும்" என்றார் டாகுர். அந்தக் குரல் மிளகாயாயில்லாமல் சர்க்கரையாயிருந்தது.

"அம்மா சித்தம்" என்று டாகுர் சொல்லிவிட்டாலே அந்த சித்தத்துக்கு அவர் பிரார்த்தனை விடுக்கச் சித்தம் கொண்டு விட்டாரென்றும், அந்தப் பிரார்த்தனைக்கேற்கவே அவளும் தன் சித்தத்தை மாற்றிக் கொள்வாளென்றும் அவரது நெருக்கமான அடியார்கள் அறிவர். ஆகவே மதுர் நிம்மதியுடன் திரும்பினார்.

தண்டனையிலிருந்து தப்பியும் விட்டார்!

★

மிகவும் குறைந்த அளவிலேயே ஆயினும், ஸ்ரீ ராமகிருஷ்ணரும் "ஸித்தர்கள்" என்று கூறப்படும் மஹான்கள் புரிந்துள்ள பல விதமான மிராகிள்களும் செய்திருக்கிறார். இன்றும் செய்கிறார் என்று அநுபவிகள் எடுத்துக்காட்டுவார்கள்.

Koviloor Digital Library

அவர் உடலை உகுத்தபின், கைம்மைக்கு அடையாள மாக சாரதை கை வளைகளைக் களைய இருந்தபோது அக் கைகளைக் ''கைக்கு மெய்யாக''ப் பற்றியிருக்கிறார்! ''ஏன் அமங்கலியக் கோலம் போடுகிறாய்? நான் போய்விட்டேனா என்ன!'' என்று கேட்டிருக்கிறார்!

சிறிது காலத்துக்குப் பிறகு அவள் பிருந்தாவனத்துக்கு ரயிலில் சென்றுகொண்டிருக்கையில், ஓடும் ரயிலில் ஜன்னலுக்கு வெளியேயிருந்து அவர் கழுத்தை நீட்டியிருக் கிறார். அவள் கையில் அணிந்திருந்த அவரது தாயத்தை அவள் தாரை வார்த்து விடாமல் எச்சரிக்கவே இந்த ஸாஹஸம் செய்திருக்கிறார்.

அமெரிக்காவில் ஸ்வாமி விவேகானந்தர் பாரதப் பண்பாட்டின் வெற்றிப் பாவட்டாவைப் பரக்கப் பறக்க விட்டது காரணமாக அவரிடம் ஆழ்ந்த காழ்ப்புக் கொண்ட நயவஞ்சக மிஷனரிகள் டெட்ராய்ட்டில் அவருக்கு வரவேற்பு அளிப்பதாக ஏமாற்றுச் செய்து விஷம் கலந்த பானத்தை அளித்தனர். அப்போது ஸ்வாமிஜியின் அதரம் பானத்தைப் பருக இருந்த அயனான தருணத்தில் ஐயன் அவர் முன் தோன்றி, ''குடிக்காதே, விஷம் கலந்திருக்கிறது'' என்று கூறிக் காத்திருக்கிறார்.

பிரச்னைகளில் தவிக்கும் அடியார்களுடைய கனவில் தோன்றித் தீர்வு தரும் உத்தரவுகளை அளிக்கும் அற்புதமும் நிறையச் செய்திருக்கிறார். குறிப்பாக, அவரது அருமையான துறவிச் சீடர்களுக்கு இப்படிப்பட்ட ஸ்வப்ன ஆக்ஞை அவ்வப்போது கிட்டியிருக்கிறது.

★

பல இனங்களில் சிறிது சிறிது அற்புதங்கள் செய்த அவர் ஆன்ம மேம்பாட்டுக்காகத்தான் அதிகமாக அற்புதம் செய்தது. இவை எந்த ஸித்தராலும் இயலாததும், ஈச்வராவதாரத்தினாலேயே இயல்வதுமான பரமாத்புதங் களாகும்.

Koviloor Digital Library

குறுக்குக் கேள்வி நரேனை வாயடைக்கச் செய்து விவேகாநந்தஸ்வாமியாக ஆக்கினுரே, வாய் மட்டுமின்றி அனைத்துப் புலனும் அடைத்துப்போன பிரம்மாநுபவத்தில் அவரை இவர் ஸ்பரிச மாத்திரத்தில் அமிழ்த்திய பேரற்புதத்தின் விளைவன்ரே அது?

"ராமகிருஷ்ண சிஷ்யர்களான நமக்கெல்லாம் அரசர் இவரே" என அந்த நரேனுமே கருதி "ராஜா" என்று அழைத்த சிஷ்ய சிரோமணியான ராகால்—பிற்கால ப்ரஹ்மாநந்த ஸ்வாமிஜி—குருதேவரின் கால்களை அழுத்திக் கொண்டிருக்கும் போது, அவர் தாபத்தோடு ஏங்கிக் கொண்டிருந்த அதீத ஸமாதி அநுபவத்தை அநாயாசமாக அள்ளிக் கொடுத்திருக்கிறுர்.

இப்படிப் பல சொல்லிக் கொண்டே போகலாம். இந் நூல் ஆரம்பத்தில் பார்த்தோமே, முரட்டு மன்மதை இந்தக் கோமள ஸ்பர்சம் ஸாது சிரேஷ்டராகப் புத்துருப் படுத்தியதை! அதற்கு மேலுமா ஓர் ஆன்மபரமான அற்புதம் வேண்டும்?

தீக்ஷையின் மூலம்தானே குறிப்பாக ஒருவரின் ஆன்ம சக்தி விழிப்புறுவது? "குரு மஹராஜ்" என்ற விருதுக்குப் பொருந்த இவ்வினத்தில் அவர் அளப்பரும் அற்புதம் புரிந் திருப்பதை விசேஷமாகக் குறிப்பிடத்தான் வேண்டும்.

அடங்கி ஒடுங்கி ஒதுங்கி நின்ற சாரதையை உலகம் கண்டிரா மாபெரும் தீக்ஷா குருவாக அவர் ஆக்கியதே ஒரு மகா மிரகிள் தான்.

அவரது பருவுடல் மறைந்தபின் அம்மா சாரதை பிருந்தாவனத்தில் மனத்தை ஆற்றிக் கொண்டிருந்தபோது ஒருநாள் அவர் நன்ருக உடலும் உயிருமாய் அவள் முன் வந்தார். ஒரு மந்திரத்தைக் கூறி, "யோகேன் பயலுக்கு இதை உபதேசம் பண்ணு" என்ருர்.

எளிய சாரதை ஆசார்ய பீடம் ஏற அஞ்சினுள். ஆனுல் அவரோ மறுமுறை, ஏன், மூன்ரும் முறையும் தோன்றி

Koviloor Digital Library

அவளை முடுக்கினர். "யோகின்மாவிடம் சொல்லி யோகேன் பயலை அழைத்து வரச் செய்து உபதேசம் பண்ணு" என்று தீர்மானமாகக் கூறி அந்தர்தானமானர்.

பின்னரும் மறுக்க முடியாத அம்மா யோகின்மாவிடம் விஷயத்தைச் சொன்னுள்.

யோகின்மா யோகேனிடம் போக, மற்ருெரு அற்புதத்தை யோகேன் வெளிப்படுத்தினர். "டாகுர் எனக்குப் பிரத்யக்ஷமானர். அம்மாவிடம் மந்திரோபதேசம் வாங்கிக் கொள்ளும்படி உத்தரவிட்டார். எப்படி அம்மா விடம் போய் இதைச் சொல்வது என்று நான் கூச்சப்பட்டுக் கொண்டே யிருக்கும்போது, அம்மாவே அனுப்பி நீங்கள் வந்து விட்டீர்கள்" என்ருர் யோகேன்.

அடுத்து அம்மா யோகேனுக்கு மந்திரம் வழங்கினுள். அப்புறம் அவள் வாழ்வில் கணக்கெடுக்க முடியாமல் எத்தனையெத்தனை பேருக்கு எத்தனையெத்தனை மந்திரங்கள் தந்திருக்கிருள்? ஆசார்ய சங்கரர் சாரதா பீடம் அமைத்தா ரெனில், குருமஹராஜரோ சாரதையையே மஹத்தான ஆசார்ய பீடத்தில் ஏற்றிவிட்டார்.

ஆயினும், மந்த்ரோபதேசம் அம்மாவின் வாய்வழி வந்தது எனினும், இவ்விஷயம் முழுக்க முழுக்க டாகுரின் கையிலேயே இருந்ததாகவும், அவர் இயக்கி வைத்த கைப்பாவையாகவே தான் செயற்பட்டதாகவும் அம்மா பன்முறை கூறியிருக்கிருள்.

அம்மா மட்டுமல்ல. ஸ்ரீராமகிருஷ்ண மடத்தலைவர் களாக இருந்து பலருக்கு மந்த்ர தீக்ஷை அளித்த மஹாபுருஷ்ஜி சிவாநந்தர் போன்றவர்களும், 'இன்னர்தான் மந்திரம் பெறப் பாத்திரர்; இவருக்கு இன்ன மந்திரம்' என்று அச்சமயங்களில் டாகுரே தங்களை ஆட்கொண்டு ஆட்டுவித்துத்தான் உபதேசிக்கச் செய்தார் என்று அழுத்த மாகக் கூறியுள்ளனர்.

★

Koviloor Digital Library

"கட்டிக் காப்பது" என்னும் ரீதியில் எந்த மஹானும் செய்யும் மிரகிளைத் தமது துறவிச் சீடர்களைக் குறித்து அதி சிறப்பாகச் செய்தவர் ஸ்ரீராமகிருஷ்ணர். அதனால்தான் அவர் "மறைந்த" பிறகும் அவர்கள் சிதறிப் போகாமல் ஒன்றாகக் கட்டுண்டிருந்து ஸ்ரீராமகிருஷ்ண ஸங்கம் என்ற உலகப் பெரும் ஆன்மிய நிறுவனத்தை நிர்மாணிக்க முடிந்தது.

இப்படிப் பொதுப்படையாகச் சொன்னால் போதுமா? சிஷ்யர்கள் ஒவ்வொருவரோடும் உடனிருந்து—அவர்கள் தன்னந்தனியாக இருந்ததாக நினைத்தபோதும்கூட அவர்களுடன் இருந்து—அவர் கட்டிக் காத்ததற்குக் குறிப்பாகத் திருஷ்டாந்தம் காட்ட வேண்டாமா? அவர் விவேகாநந்தரை விஷபானத்திலிருந்து காத்ததை முன்பு பார்த்தோம். இப்போது, வேறொரு விதத்தில் அகண்டாநந்தருக்கு அவர் அளித்த அற்புதக் காப்புப் பாருங்கள்:

ஹிமாலயத்தில் தமது ஏகாந்தத் தவத்திற்கு ஓரிடம் தெரிவு செய்தார் அகண்டாநந்தர். அங்கு வந்த இடைச் சிறுவர்களோ அது கொடிய விலங்குகள் உள்ள இடம் என்றும், நீர்த்தட்டுப்பாடுள்ள இடம் என்றும் கூறி அவரைத் தடுத்துத் தங்கள் கிராமத்துக்கு அழைத்துப் போய்விட்டார்கள். அங்கே கணப்புக் காயும்போது அகண்டானந்தருக்கு, 'சை! இதென்ன விச்வாஸக் குறைவு! அந்த ஏகாந்த ஸ்தலத்துக்கே போய் என்னதான் நடந்துவிடுமென்று பார்த்து விடுவோமே!' என்ற எண்ணம் ஏற்பட்டது.

தாம் தேர்வு செய்திருந்த நிர்மாநுஷ்யப் பகுதிக்கே மீளவும் சென்று ஒரு மரத்தடியில் த்யானத்துக்கு அமர்ந்தார். விபத்தாக, விபரீதமாக எதுவும் நடந்து விடவில்லை. மாறாக, ஆழ்ந்த தியான லயம் கைகூடிற்று.

இப்படிப் பல மணிகள் கடந்தபின் இந்த த்யான லயிப்புக்குப் பின்னிருந்து உந்திய சக்தி தமக்குப் பின்னே உருக்கொண்டு நிற்பதை உணர்ந்தார். ஆம், அந்த

Koviloor Digital Library

நிர்மாநுஷ்ய மலைக்காட்டிலே அவரை விலங்கு முதலிய ஆபத்துக்களிலிருந்து கட்டிக் காத்து, அதோடு புலன் விலங்குகளிலிருந்தும் விடுவித்து ஸமாதியில் சேர்ப்பித்த ஸ்ரீராமகிருஷ்ண குரு மஹராஜர் தமக்குப் பின்னே நிற்பதை உள்ளங்கை நெல்லிக்கனியாகக் கண்டு கொண்டார்.

மதுரக் குரலெடுத்து குரு மஹராஜர் கானம் செய்வதையும்கேட்டார். மெய்யாலுமே அகண்ட ஆனந்தம் துய்த்தார் அகண்டாநந்தர். அருமைக் காளியிடம்தான் உரிமையோடு மிரட்டிப் பாடிக் கொண்டிருந்தார் குரு மஹராஜ்!

"பைத்திய மாதே! பதியின் மார்பினில்
வைத்திடும் பாதம் விலக்கி இறங்கி
ந்ருத்தியம் செய்வாய் நித்தியமே!

பரசிவன் சவமாய்ச் சாய்ந்திட வில்லை;
பரசுக த்யான லய வ்யமாகிக்
பரவச முற்றே கிடக்கின்றான்.

கூத்தனின் மேல்பேய்க் கூத்திட் டெலும்புக்
கூட்டினை, கூளி! பிளந்துவி டாதே!"

★

கட்டிக் காப்பது மட்டுந்தானா? கட்டியிழுத்து அடியவரைத் தம்மிடம் சேர்த்துக் கொள்வதிலும் அற்புதம் காட்டியவர் ஸ்ரீராமக்ருஷ்ணர்.

"பக்ஷியின் காலில் கயிறு கட்டி, கயிற்றைக் கையில் பிடித்துக் கொண்டு, இஷ்டப்பட்ட போது இழுத்துக் கொள்வது போலவாக்கும் நான் பக்தர்களிடம் விளையாடுகிறேன்" என்றார் ஷிர்டி ஸாயிநாதர். இதை ஸ்ரீ ராமக்ருஷ்ணரும் அப்படியே உயிரோவியமாகக் காட்டியிருக்கிறார், கௌரியம்மையின் விஷயத்தில்.

Koviloor Digital Library

"கௌரி-மா" என்பதாக ராமகிருஷ்ண பக்தர்கள் அறிந்த இந்தப் பெண்மணியின் இயற்பெயர் ம்ருடானி. ('ம்ருடன்' என்பது சிவபெருமானுக்கு வேதமே சூட்டியுள்ள ஒரு நாமம். 'இன்பம் அளிப்பவன்' என்பது பொருள். சிவனின் சக்தியான கௌரிதான் ம்ருடானி.)

புத்தி, பக்தி இரண்டிலும் பிஞ்சிலேயே பழுத்தவள் ம்ருடானி. இருபத்தைந்து வயதுக்குள் ஸாதனை பல புரிந்து, வட பாரத ஸ்தலங்கள் யாவற்றுக்கும் யாத்திரை செய்து, துவராடை பூண்டு விட்டவள். கண்ணனையே கணவனாக வரித்த ஸந்நியாஸினி. ஆனால் அவன் தன்னை ஏற்றுக் கொண்டு விட்டான் என்ற நிச்சயம் இன்னமும் அவளுக்கு ஏற்படாததால் கலங்கிக் கொண்டிருந்தாள். கலக்கம் தெளிவதற்காக அவள் அணுகிய எந்த மதப் பெரியாரிடமிருந்தும் அவளால் பயன் பெற முடியவில்லை.

இச் சந்தர்ப்பத்தில்தான், அதாவது அவளுக்கு இருபத்தைந்தாவது வயது நடந்து கொண்டிருந்த 1882-ல் தான் அவள் ஸ்ரீராமகிருஷ்ணரின் மகிமை பற்றி அவரது கிருஹஸ்த சிஷ்யருள் முடிமணி போன்ற பலராம வஸுவிடம் கேள்விப் பட்டாள். இதற்கு முன் அவள் புரிஜகந்நாதத்தில் இருந்தபோது, ராமகிருஷ்ணரது ஸமாதிநிலையை நேரில் கண்ட ஒரு பக்தர் அது பற்றி மிக உயர்வாகக் கூறியிருந்தது இப்போது அவளுக்கு நினைவு வந்தது.

ஆயினும் இவரும் தமக்கு ஏமாற்றமே தரும் ஒரு மதப் பெரியாராக இருந்து விடப் போகிறாரே என்ற எண்ணமும் ம்ருடானிக்கு எழுந்தது. எனவே அவள் பலராம் போஸிடம், "நீங்கள் சொல்கிற அந்த உங்கள் ஸ்வாமியார் தாமாகவே என்னை இழுத்துக் கொண்டாலொழிய நான் அவரிடம் போகப் போவதில்லை" என்றாள்.

அப்புறம் அவள் தனது இஷ்ட தேவதையான தாமோதரக் கண்ணனின் பூஜைக்குச் சென்றாள். அங்கே அவளுக்கு ஓர் ஆச்சர்யம் காத்துக் கொண்டிருந்தது!

Koviloor Digital Library

தாமோதர ஸாளக்ராமத்தின் பக்கத்தில் இரண்டு பாதங்கள் தெரிந்தன. கல்லாலோ, மரத்தாலோ, உலோஹத்தாலோ செய்த பாதப் பதுமை அல்ல! நரம்பும் ரத்தமும் ஓடுவதான. சதையும் தசையும் கூடியதான, வாழும் பொற்பாதங்கள்!

ஆச்சர்யத்தை அடக்கிக் கொண்டு, அப் பாதங்களைக் கவனியாது, தான் நாளும் வழிபட்டுவந்த ஸாளக்ராம மூர்த்திக்கே பூஜை புரிவதுதான் அனன்ய பக்தியாகும் என்ற எண்ணத்துடன் ம்ருடானி துளஸீ தளங்களை எடுத்து அதன் மீது அர்ச்சித்தாள். அவள் போட்டது ஸாளக்ராமத்தின் மீதானாலும், துளஸீ தளங்கள் விழுந்ததோ அந்த வாழும் பாதங்களின் மீதுதான்!

இன்னொரு முறை அவள் வெகு கவனமாகத் திருத்துழாயை அந்த இஷ்ட மூர்த்திக்கே இட, திருத் துழாயோ தன் இஷ்டப்படி, அல்லது அந்தப் பாதங்களின் இஷ்டப்படி, பாதங்களின் மேலேயே விழுந்தது!

மூன்றும் முறையும் இப்படியே அப் பத்திரங்கள் பாதங் களின் மீது பத்திரமாக விழ, ம்ருடானியும் உணர்விழந்து விழுந்துவிட்டாள்.

பல மணிகளுக்குப் பிறகே அவள் மீண்டும் உணர்வு பெற்றாள். விசித்ரமான ஓர் உணர்வு விஞ்சி நின்றது: கண்ணுக்குத் தெரியாத ஒரு கயிற்றின் ஒரு முனையில் தான் கட்டப்பட்டிருப்பது போலவும், மறு முனையிலிருந்து ஒரு சக்தி அக் கயிற்றை இழுத்துக் கொள்வது போலவும் உணர்ந்தாள். "இழுத்துக் கொள்வது போல" இருந்ததேயன்றி, அச் சக்தி அவளை அசலே இழுத்துக் கொண்டுவிடவில்லை. "ஐயோ! அது நிஜமாகவே இழுத்துக் கொண்டுவிடாதா?" என்ற தவிப்பு ஏற்பட்டது. இழுப்பது போலக் காட்டிய அந்தக் கை எவருடையது என்று தெரியவில்லை. ஆயினும், தான் அவருடையவளே என்ற உறுதி இருந்தது. இந்த உறுதி இருந்ததாலேயே அவர் இன்னார் என்று அறிந்து புகலடைய முடியவில்லையே என்ற தாபம் மிகுந்தது. தவித்தாள்.

Koviloor Digital Library

"ஏன் தவிக்கிருய்? இன்னமும் அறைகூவல் விடுத்துக் கொண்டிருக்காமல் எங்கள் டாகுரைப் பார்க்க வாயேன்" என்ருர் பலராம்.

"வருகிறேன்" என்ருள் ம்ருடானி.

விடியுமுன்பே பலராம் அவளேயும், வேறு சில பக்தர்களே யும் அழைத்துக்கொண்டு தக்ஷிணேச்வரம் சென்ருர்.

அவளது விடிவுக் காலத்துக்கு ஸூர்யனுன அந்த டாகுர் இவர்கள் அவரது அறையை அடைந்த அப்போது...ஆஹா ...ஒரு குச்சியிலே சுற்றிக் கொண்டேயிருந்த நூல் கயிற்றின் முனேக்கு வந்து, சுற்றலே முடித்து அதை முடிச்சுப் போட்டுக் கொண்டிருந்தார்!

அவரது பட்டு அதரங்களோ கடை கயிற்ருல் இடுப்பில் கட்டப்பட்ட தாமோதரக் கண்ணனேத்தான் பட்டுக் கயிற்ருல் சுற்றுவது போல ம்ருது மதுரமாகப் பாடிக் கொண்டிருந்தன.

ம்ருடானிப் பக்ஷியின் காலில் கயிறு கட்டி இழுத்துக் கொண்ட டாகுர் இன்று அவளே சாச்வதமாகத் தம் சரண் சேர்த்து, சாச்வதமான ப்ரேம முடிச்சுப் போட்டுவிட்டார்!

அக்கணமே ம்ருடானியின் தவிப்புத் தணிந்தது. டாகுரின் வாழும் பாதத்தை அடைக்கலம் கொண்டு விட்டாள்.

அப்புறம் டாகுருக்கும் சாரதாமாவுக்கும் பரமப் பிரியமான கௌர் - தாஸியாகவும், அவர்களது அடியார் களுக்கு கௌரி - மாவாகவும் பரிணமம் கொண்டாள்.

டாகுரே பணித்தபடி அவரது "மறைவு"க்குப்பின் மகளிர் கல்விக்கும், பண்பாட்டு முன்னேற்றத்துக்கும் அரும்பணி ஆற்றினுள்.

ஸூத்ரதாரியான டாகுரின் கயிற்ருட்டப்படிதான் கௌரிமா பணியாற்றினுள். என்ருலும் டாகுரின் அபின்ன சக்தியான அம்மா சாரதை பரமபதம் புகுந்தபின் கௌரிமா வுக்கு பிரிவின் வருத்தம் ஏற்படத் தொடங்கியது. எங்கோ

Koviloor Digital Library

பரமபதத்தில் கயிற்றின் ஒரு முனையை டாகுர் பிடித்து ஸூத்ரதாரணம் செய்து கொண்டு, இங்கே மறுமுனையில் மண்ணுலகில் தான் இந்தப் பணிகளைச் செய்துகொண் டிருக்கும்படி விட்டிருக்கிறாரே என்ற வேதனை அவ்வப்போது ஏற்பட்டது.

அவரை அவள் முதன்முறை சந்தித்ததற்கு ஐம்பத்தாறு நீண்ட ஆண்டுகளுக்குப் பிற்பாடு, 1938-ம் ஆண்டு சிவராத்ரி நன்னாள். "டாகுர் கயிற்றை இழுத்துக் கொள்கிறார்" என்று ஆர்ப்பரித்தாள்.

மறுதினம் அவளது உயிர்ப்பக்ஷி பரமபதத்திலிருந்து கயிற்றை இழுத்த பவித்திரக் கரங்களில் புகுந்துவிட்டது.

★

பரமபதத்திலிருந்து கௌரிமாவை இழுத்துக் கொண்ட கயிற்றை யாரும் ஸ்தூலமாகப் பார்க்கவில்லை. ஆனால் புராணங்களிலோ பிறர் காண வைகுண்ட விமானம் இறங்கி வந்து பக்தர்களை அழைத்துச் சென்றதாகக் காண்கிறோம்.

இப்படியும் ஒரு மகா அற்புதம் ராமகிருஷ்ணர் புரிந்திருக் கிறார். கௌரிமாவை அவரிடம் ஆற்றுப்படுத்திய பலராம வஸுவுக்குத்தான் இந்த அதிசய அருளை அவர் நல்கியது.

பலராமரது மூச்சொடுங்கவிருந்த இறுதிக் கட்டத் தில்கூட அவரது மனைவி கோஷா முறையை ஒட்டி உள்ளறை ஒன்றில்தான் இருந்தாள். யோகின்மா, கோலாப் மா முதலியோரும் அவளுடன் இருந்தனர். சட்டென்று அவள் ஆகாயத்தைப் பார்க்க அங்கொரு மேகம் அவளுடைய கவனத்தைக் கவர்ந்தது. விரைவிலே அம் மேகம் ஒரு தேர் போன்ற உருவத்தில் அமைந்தது. விண்ணிலிருந்து அத் தேர் இழிந்து வருவதாகவும், அசல் தேராகவே தன் வீட்டுக் கூரையில் இறங்குவதாகவும் கண்டாள் ஸ்ரீமதி பலராம்.

ரதத்திலிருந்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் இறங்கினார்.

பலராம் படுத்திருந்த இடம் நோக்கிச் சென்றார்.

Koviloor Digital Library

மறுநிமிஷம் அவர் பலராமரின் கையைப் பிடித்து அழைத்து வருவதையும் அவரோடு தேரில் ஏறிக்கொள்வதையும் கண்முன்னே கண்டாள் மாதரசி.

ரதம் அப்படியே மேலே ஏறி மறைந்தது!

ஸ்ரீமதி புலராமின் உணர்வும் சோக தாபங்கள் தீண்டாத ஓர் உன்னத நிலைக்கு மேலேறியது.

அதிலிருந்து அவள் விடுபட்ட போது, அதற்குச் சிறிது நேரம் முன்தான் முன்னறையிலிருந்த பதி ப்ரமபதம் ஏகி விட்டாரென்று தெரிந்தது!

ஸ்ரீ ராமகிருஷ்ணரை ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரின் அவதாரமாகவே பலர் கருதியதுண்டு. அவர் தமது பரவச ஸமாதியில் சைதன்யரைப் பரிவாரத்தோடு கண்டிருக்கிறார். அப் பரிவாரத்தில் அவர் கண்ட ஒரு கனிந்த பக்தர்தான் பலராம் போஸாகப் பிறந்திருப்பது என்று பலராமரை முதன் முறை கண்ட மாத்திரத்தில் பரமஹம்ஸர் அடையாளம் தெரிந்துகொண்டார். சைதன்யர் என்றவுடன் புரிஜகந்நாதத்தின் நினைவு வரும். உடனே புரியின் புகழ் பெற்ற ரதோத்ஸவமும் ஞாபகம் வரும். பொருத்தமாக, பலராமர் ஒவ்வோராண்டும் புரியில் தேர்த் திருவிழா நடக்கும்போது தமது வீட்டிலும் ஒரு சிறிய தேரில் ஜகந்நாதனை எழுந்தருளச் செய்து விழாக் கொண்டாடுவார். படாடோபமின்றி, பக்தி நிறைவோடு நடத்தப்பட்ட இவ் விழாக்களில் பரமஹம்ஸரும் கலந்துகொண்டு வடம் பிடித்திருக்கிறார். இதற்கெல்லாம் பொருத்தமான முடிவாகத் தான் அவர் பலராமரின் முடிவு நேரத்தில் விண்ணிலிருந்து ரதம் கொண்டுவந்து அதிலே அந்த ஜன்ம ஜன்மாந்தர பக்தரை ஏற்றிக்கொண்டு போயிருக்கிறார்.

ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் போன்ற மஹா புருஷர்கள் மிரகிள்கள் எனப்படும் அற்புதம் செய்வதெல்லாம் முடிவாக நம்மை மண்ணிலிருந்து விண்ணுக்கு உயர்த்தத் தான்.

Koviloor Digital Library

ராமகிருஷ்ணரின் நந்தனர்!

விந்தை அன்னம்! ஒரே போதில் மிதந்து கொண்டும், முழுகிப் புதைந்தும் இருப்பது! பரமஹம்ஸம் எப்போதும் தேவியின் லீலைப் பொய்கையில் மிதந்து கொண்டிருக்கும். அதேபோல எப்போதும் சிவத்தின் சாந்த அடிப்படுகையில் முழுகிப் புதைந்தும் கிடக்கும். மிதக்கும் லீலா லோகத்திலும் அதற்குச் சில போதுகளில் ஓர் ஓய்வும் சாந்தியும் வேண்டியிருப்பதுண்டு. தான் முயன்று நீந்தாமல், அலையின் போக்கில் மிதப்புண்டு அமைதி காணும் இன்ப நிலை.

இன்று அப்படித்தான் குரு மஹராஜ பரமஹம்ஸர்—டாகுர் ஸ்ரீ ராமக்ருஷ்ணர்—தமதறை வராந்தாவில் ஓய்வு கொண்டிருந்தார். ஸுக சீதோஷ்ணமான பிற்பகல் வேளை. கங்கையின் மர்ம கானம், தோப்பின் இனிய காற்று, அக் காற்றின் மர்மர கானம், தக்ஷிணேச்வர ஆலயத்துக்கே உரிய பாவன அதிர்வலைகள் (அல்லது நமது மனத்து அலைகளின் அதிர்வை அநாயாஸமாக நீக்கும் எதுவோ ஒன்று) யாவும் இழைந்த ரமணீயமான பொழுது. உயர்வுகளிலெல்லாம் உயரநுபவங்களை மலைமலையாகத் துய்த்தும் மதுரக் குழந்தையாக இருந்த டாகுர் இந்தப் பின்னணியில் ஓய்வு கொண்டிருப்பதை எண்ணினாலே ஓயாத நம் சித்தத்திலும் ஹிதமான சாந்தி சுரக்கிறது.

ராம்லால் தாதா மட்டுமே அப்போது உடனிருந்தார். அவர் டாகுருடைய தமையனார் குமாரர். டாகுர் அதீத பாவ நிலைகளை அபரிதமாகப் பெற்றதில் பூஜாரியாக முறைப்படி (!) வழிபாட்டை நடத்த இயலாமலானபோது அப்பணியை ஏற்றவர் இந்த ராம்லால் தாதாவே.

திடீரெனத் தன் அதிசயச் சிற்றப்பா ஓய்வுச் சொக்கலிலிருந்து சொடுக்குப் போட்டாற்போல் விழிப்புற்று

Koviloor Digital Library

விருட்டென எழுந்து நிற்பதைக் கண்டார் ராம்லால் தாதா. அவருக்கு ஏதோ தெய்விகப் பரவச அநுபூதி கூடுகிறதெனப் புரிந்து கொண்டார். சிற்றப்பாவின் விசித்ர பாவங்களுக்கு நன்கு பழக்கப்பட்டவராயிற்றே!

டாகுர் எதை அப்படி வைத்த கண் வாங்காது பார்க்கிறார்? நமக்கெல்லாம் தெரியாத காளியின் நடனத்தையா? த்ரிபுரஸுந்தரியின் திவ்யப் பேரெழிலையா? ராதா கோவிந்தனின் ராஸ மநோஹரத்தையா? ப்ரேமை மோதுகிறதே அவர் பார்வையில்!

இன்று பரவச நிலையிலேயே ஒருவிதமான வெளியுணர்வும் கூடியவராக இருக்கிறார் டாகுர்! நமக்கெல்லாம் தெரியாததாக இல்லாமல், நமக்கும் தெரிவதாக, நம் போன்றோருக்குப் பிரதிநிதியான ராம்லாலுக்கு தமது பார்வை சென்ற திசையில் கையைக் காட்டிப் பார்க்கச் சொல்கிறார்!

ராம்லால் காணப் போகும் திவ்யக் காட்சி என்ன?

டாகுர் காட்டியதைக் கண்ட ராம்லால் அதிசயித்தார். அதை ஒரு மாறுபாடான அதிசயம் என்று சொல்ல வேண்டும்.

அந்த அதிசயம் என்ன?

★

இந் நூற்றாண்டின் ஐம்பதுகளில் ஸ்ரீ ராமக்ருஷ்ண மிஷனின் உபதலைவராக இருந்த ஸ்வாமி விசுத்தாநந்தர் டாகுரின் வாழ்வில் ஓர் ஒப்பற்ற நிகழ்ச்சியை ஓவியமாக்கிக் கண்டு களிக்க விரும்பினார். பிரபல புகைப்படக் கலைஞரும் சைத்ரிகருமான என்.ஸி.தாஸிடம் அக்காட்சியை விவரித்து அதை எழிலோவியமாக்கித் தரப் பணித்தார். தக்ஷிணேச்வரத்தின் பஞ்சவடித் தோப்பில் டாகுரையும் இன்னொரு வியக்தியையும் தொடர்புறுத்திக் காட்டும் காட்சி. பஞ்ச

Koviloor Digital Library

வடியின் புகைப்படம், ராதாபாஜார் ஸ்டுடியோவில் எடுக்கப்பட்ட டாகுரின் புகைப்படம் இரண்டையும் கலந்து 'மான்டேஜ்' செய்து காட்சிக்குரிய பாவம் டாகுரிடம் பொலியும் படியாக 'டச்' செய்து ஓவியத்தில் பாதிப் பகுதியை அருமையாகச் செய்துவிட்டார் தாஸ்.

இன்னொரு பாதி உள்ளதே! டாகுரிடம் அந்த பாவத்தைப் பொலிவித்த வியக்தி இருக்கிறாரே! அவரைச் சித்திரிக்க வேண்டுமே!

எப்படிச் சித்திரிப்பது?

பஞ்சவடியில்தான் டாகுர் பெரும்பாலான திவ்ய தரிசனங்கள் பெற்றது. அவற்றில் இத் தரிசனம் காளியுடையதா, திரிபுராம்பிகையுடையதா, ராதை மணாளனுடையதா?

யாருடையதாயினும் அந்த வியக்தியின் வடிவைத் தெரிவிக்கப் புகைப்படம் ஏது? வரைபடம்தான் ஏது? "வண்ண படமுமில்லை கண்டாய்" தான்! தெய்வப் படங்கள் என்று எவ்வளவோ பேர் வரைந்து விடுகிறார்கள். ஆயின் உயிர் கொண்டு டாகுர் தர்சிக்கும்போது, தெய்வமும் உயிர் கொண்டு எப்படி அவருக்கு தர்சனம் சாதித்திருக்குமோ, அந்த நுட்ப—திட்பங்களைக் காட்ட ஏது சித்ரமும், சிற்பமும்? புதிதாய் வரையும் ஓவியர்கள் தமது கல்பனா சக்தியாலேயேதான் அவ்வடிவை வடித்தாக வேண்டும்.

'டாகுருடன் காட்ட வேண்டிய இன்னொரு வியக்தியைத் தம்மால் கல்பித்துப் பார்க்க முடியுமா?'—உயிர்க் குருத்தில் பிறந்த கல்பனா சக்தியைத் தட்டி விழிப்புறுத்திக் கொண்டு பார்த்தார் தாஸ்.

பனி மூட்டம் போல ஒருவாறு வியக்தியின் வடிவைக் கண்டு கொண்டார்.

Koviloor Digital Library

ஆனால், எண் சாண் உடம்புக்குப் பிரதானமான, பாவங்களின் நடன அரங்கான முகம்? அதைக் கல்பிக்க இயலாது; இயன்ற இம்மியளவும்கூடத் தூரிகை வழி வனைய இயலாது எனத் தெளிந்தார்.

தெளிவும், தெம்பும் பெற்றார். 'தாம் கண்டதே போதும். முகத்தைக் காட்டாமல், பிற அங்கங்களின் பாங்கிலேயே பார்ப்போருக்கு முகத்தைச் சூசனை செய்யலாம். வியக்தமாக வெளிவர இயலாததை வியங்கியமாக உள்ளே உணர்த்தலாம். நாதத்தில் வரக் கூடாததை ரஹஸ்யத்தில் புரிவிக்கலாம்.'

திருவருளானது ஓவியரது தீர்மானத்தைத் தூரிகை வாயிலாய் அற்புதமாக நிறைவேற்றிக் கொடுத்துவிட்டது. விசுத்தாநந்தரின் அபிலாஷை நிறைவேறியது! இன்றும் நம்மில் எந்த அசுத்தாநந்தரும்கூட அப்படத்தின் வழி ஒரு பரிசுத்த நிறைவை உணராதிருக்க முடியாது!

அதென்ன, அதிசயக் காட்சி? யார் அந்த அதிசய வியக்தி?

ராம்லால் தாதா யாரைக் கண்டு அதிசயித்தாரோ அவரேதான் அந்த அதிசய வியக்தி.

★

'சிற்றப்பாவின் ப்ரேமை மோதும் பார்வைக்கு இலக்கானது எந்த தெய்வ வடிவம்? அல்லது அவரைத் தேடிவரும் நிர்மல ப்ரம்மசாரிகளுள் பார்த்த மாத்திரத்தில் அவரை பாவ ஸமாதி கொள்ள வைப்பவர்களில் எவர்?' என்னும் ரீதியில் எண்ணித்தான் ராம்லால் அவர் காட்டிய திசையில் நோக்கினார்.

ஆனால்—

அம்மாதிரி எவரும் இன்றி,

சாது, சாதகர், சாதாரண மனிதர் எவரும் கூட இன்றி,

Koviloor Digital Library

போயும் போயும், தக்ஷிணேச்வரத்தின் கிழத் தோட்டியைப் பார்த்துத் தான் டாகுர் அப்படி ப்ரேமை மீதூற நின்ருர்! தமக்கும் அதை திவ்ய தர்சனம் போல் காட்டினுர் இதில்தான்,

ராம்லால் மாறுபாடாக அதிசயித்தார்!

பரவச நிலையிலிருந்த பரமஹம்ஸமோ சற்றுத் தொலைவில் அவன் பாட்டுக்குத் தன் காரியமாகப் போய்க் கொண்டிருந்த அந்தத் தோட்டி மறைகிற வரை அவனைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, பிறகு ராம்லாலைப் பார்த்தது.

'ரஸிக் ஏதோ அல்ப ஜீவனில்லை. மநுஷ ரூபத்திலிருக்கும் தெய்வ லோகப் பிரஜையாக்கும்" என்ருர் டாகுர். அவர் குரலில் ஓர் அடர்த்தி த்வனித்தது.

ரஸிகத் தன்மையே இருக்க முடியாதவன்; கழிப்பிடத்தையும் தோட்டத்தையும் பெருக்கிக் கழுவும் தாழ்ந்த பணி செய்பவன் என நாம் எண்ணுபவனின் பெயர் ரஸிக்! அவனில் தெய்வ லோகவாஸியைக் கண்டு ரஸிக்கிருர் ஸச்சிதாநந்த ரஸம் கண்டவர்!

ராம்லால் தாதா அவனை நன்கறிவார். ஆனுல் பொன்னுட்டுக் குடிமகனுக அல்ல! அவரது வீட்டுக்குச் சிறிது அப்பால் வங்காளிகள் 'மேதோர்' என்றும், அதைவிட கௌரவமாக ஒலிக்கும் 'ஸன்மார்ஜ்ஜக்' என்றும் கூறும் தோட்டிகள் வசிக்கும் சந்து ஒன்று உண்டு. அந்த சேரிவாசிகளில் ஒருவனுன ரஸிக் நல்லவன், அடக்கமானவன், கடமையுணர்ச்சி மிக்கவன் என்றுதான் ராம்லால் அறிந்திருந்தாரேயன்றி அமரருலகிலிருந்து இறங்கி வந்து மரிக்கும் நரவுடலில் புகுந்த ஒரு ஜீவனுக அல்லவே அல்ல!

பரவச நிலையில் புல்லிலிருந்து, புழுவிலிருந்து புவியில் உள்ள அனைத்தையும் ஏக'சைதன்ய ரஸமாகவே காணும் சிற்றப்பா அந்த நிலையில்தான் ரஸிக்கையும் ரஸித்திருக்க

Koviloor Digital Library

வேண்டும்; அதற்கு விசேஷ அர்த்தம் கொள்ள வேண்டிய தில்லை என்று ராம்லால் விட்டுவிட்டார்.

நிஜமாகவே நல்லவனாக, நிஜமாகவே அடக்கமான வனாக, நிஜமாகவே கடமையுணர்ச்சி மிக்கவனாக உள்ள மானுடன் தேவனேயாகிறான் என்று ராம்லாலும் இன்னும் பலரும் காணவிட்டாலும் அந்த எல்லாருக்கும் சேர்த்து வைத்து அப்படிக் கண்டார் டாகுர்—நிஜமாகவே தெய்வங் களைக் கண்டு, தெய்விக அநுபவங்களில் தோய்ந்திருந்த டாகுர்!

★

ராம்லால் விட்டு விட்டதாக நினைத்த ரஸிக் மறுபடி அரங்கில் தோன்றினான். ஹரித்வார கங்கையாக வெண்மை யும் குளுமையும் வெள்ளம் பெருக்கும் நிகழ்ச்சி அது.

தக்ஷிணேச்வரத் தோப்பின் ஒரு தொலைப் பகுதியிலுள்ள சவுக்கந் தோப்பு டாகுர் இயற்கைக் கடன் செலுத்தும் இடமாகும். ஒரு நாள் வழக்கம்போல ராம்லால் தாதா மூக்கு வைத்த தண்ணீர்ச் செம்பும், துவாலையும் எடுத்துக் கொண்டு உடன் செல்ல, டாகுர் அங்கு சென்று கொண்டிருந் தார்.

புனிதமான பஞ்சவடிப் பகுதியில் அவர்கள் போகும் சமயம். பொதுவில் நினைக்கப் படுவது போல பஞ்சவடி என்பது ஐந்து ஆலவிருக்ஷங்கள் கொண்ட இடமல்ல. வட வ்ருக்ஷம் என்பது ஆலமரத்தை மட்டும் குறிக்கும் பெயருமல்ல. "வட" வ்ருக்ஷம் என்ற இனத்தைச் சேர்ந்ததாக ஐந்து விதத் தருக்கள் உள்ளன. ஆல், அரசு, வில்வம், நெல்லி, அசோகு என்பனவே ஐந்து "வட" ங்கள். அவ்வைந்தும் உள்ள இடமேபஞ்சவடி. ஐந்து "வட" த்தில் ஒன்றே ஆல். அதனால்தான் "வடவால்" என்பது. ஐந்தையும் ஓரிடத்தில் பயிர் செய்து ஏற்படுத்தும் பஞ்சவடி மிகப் புனிதமானது. தக்ஷிணேச்வரத்துப் பஞ்சவடியோ மிக மிகப் புனிதமானது. ஏனெனில் உலகம் கண்டும் கேட்டுமறியாத

Koviloor Digital Library

நாநாவித திவ்ய அநுபவங்களை ஏகப் பரம்பொருளின் விதவித வண்ணங்களாக டாகுர் கண்ட ஸாதனைக் களம், அல்லது ஸாதனையாலயம் அப் பஞ்சவடிதான்.

உச்சத்தில் உச்சங்களை அவர் எய்திய அப்பகுதி வழி இன்று செல்கையில், நீசத்தில் நீசப் பிறவு எடுத்ததாகக் கருதப்படும் ரஸிக் கிழவன் எதிர்ப்பட்டான். அப்போது அவன் தோட்டத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தான்.

டாகுரைக் கண்ட மாத்திரத்தில் மரியாதைப் பண்பையே பின்னி உருவான அவனுடைய உடம்பு தானுகப் பின்னுக்கு வாங்கிக் கொண்டது. தோட்டத்தைப் பெருக்கும் முறத் துடைப்பத்தின் நீண்ட பிடிக் கொம்போடு உடலை ஒடுக்கி அவன் நின்றபோது அதனுடனேயே ஐக்ய பாவம் பெற்றுவிட்டாற்போல இருந்தது. தன்னுடைய வேள்வித் தண்டத்துடன் ஒன்றிய வேதியன்!

அன்றொரு நாள் அன்பு மோத அவனை தேவலோகவாசி யாகப் பார்த்த அன்னம் இன்று தன் பாட்டில் விசுக்கு விசுக்கு என்று மேலே நடையைக் கட்டியது. அதனது உள்ளக் கோலங்களை யாரே ஊகிக்க இயலும்?

ரஸிக்கின் தொரட்டி மீண்டும் தோட்டத்தின் புனித பூமியை வருடிக் கொடுக்கலாயிற்று.

'டாகுர் வரும் வழி! தளிர்ச் சரணம் படுமிடத்தில் ஒரு சருகு, பருக்கைக் கல் இருக்கக்கூடாது'—தன் இதயத்தையே அவர் பாதம் பாவப் பட்டுப் பாயாக விரித்து வேள்வியைத் தொடர்ந்தான் தோட்டி.

சரக், சரக், சரக். சருகுகளைப் பாதுகை தீண்டும் ஒலி நெருங்கி, நெருங்கி வருகிறது. டாகுர் திரும்பி வருகிறார். பரமனின் ஒவ்வோர் அடியிலும் பஞ்சமனின் இதயம் அடித்துக் கொள்கிறது.

வருகலாமோ நான் அங்கே?

என்று கேட்கக் கூடத் தகுதியில்லாதவனுகவே தன்னை வைத்துக் கொண்டவன் இவன். பவதாரிணியின் ஆலயத்தை

Koviloor Digital Library

யும், பரமப்பிரேமை ஆலயமான டாகுர் இருக்கையையும் அணுகக் கனவிலும் அவன் எண்ண மாட்டான். ஆனால் இன்று தோப்பில் அவரே வந்து தன்னைக் காணச் செய்த பின், 'இன்னும் நன்கு காணச் செய்யக் கூடாதா? அவர் கண் நம்மைக் காணாதா? திருவாய் ஒரு மொழி பேசாதா?' என்றெல்லாம் ஆதங்கம் மூண்டது.

தேரடியில் நின்று தெரிசித்தாலும் போதும்,
கோயிலினுள் வர மாட்டேன்!

அடி வைப்பு விரைகிறது. கன்றைக் காணப் பசு விரைகிறதா? விரைவு மந்தமாகிறதே! அன்பு கனத்திலே கால்கள் தளர்நடை இடுகின்றனவா?

பால்கோவாப் பதுமையாக மெல்ல வந்த டாகுர் மல்லிகையாகப் பார்வையைத் தூவினார் ரஸிக்கின் மீது.

பாதுகை பதிந்து நின்றது பூமியில் அல்ல,
ரஸிக்கின் பட்டுப்பாய் மனத்தில்!

நம் சீமையில் மேல் வேஷ்டியை எடுத்து இடுப்பில் கட்டிக்கொள்வது மரியாதை. ரஸிக் வங்காள வழக்கப்படி இடுப்பில் சுற்றியிருந்த தன் துண்டை அவிழ்த்துக் கழுத்தைச் சுற்றித் தொங்கவிட்டுக் கொண்டான்.

சற்று முன் ஒடுங்கி ஒதுங்கிப் பின் வாங்கிய உடம்பு இப்போது அப்படியே புண்ய மூர்த்தியிடம் ஓடிச் சென்று அவர் பாதத்தில் விழுந்தது. இவன் தாபம் அவரைத் தொட, அவர் பரிந்து ஈர்க்கத் தொடங்க, அதன் சக்தியில் இவன் அணுகிச் சென்று விழாமல் எப்படித் தப்ப முடியும்?

ஸர்வ அங்க நமஸ்காரம் மட்டுந்தானா அது? ஸர்வப் பொறி புலன்களும், ஸர்வப் பிராணனும், ரஸிக்கின் ஸர்வமுமே செய்த நமஸ்காரம்!

பூமியில் புலையனாய்ப் பிறந்தேனே!—ஒரு
புண்ணியம் செய்யாமல் இருந்தேனே!

Koviloor Digital Library

சாமீ! உன் சந்நிதி அடைந்தேனே!...
சரணம் அடைந்தேன்......
எந்தன் பரிதாபமும் பாபமும் தீரவே

வாணுள் முழுவதும் உண்மையாய் உழைத்தவன், பிறர் செய்யும் அஸங்கியம் கழுவி அவர்களது சுகாதாரத்துக்கு உதவியவன், அவர்களால் அஸங்கியமானவனுக எண்ணப் பட்டவன், அதுவும் நியாயமே என அவர்கள் தள்ளி வைக்கு முன் தானே தள்ளி நின்ற ன், எளியன், பக்தி நிறைந்தவன், தான் பிறந்த வைஷ்ணவ குல மரபுப்படி விண்ணவனைக் கும்பிட்டவன்—இப்படிப்பட்ட ஒருவன் அந்த விண்ணவனே இந்த மண்ணவன் என்று நூறு சதவிகிதமும் நம்பி, அந்த நம்பிக்கையால் அவரே இழுக்க அவரடியில் விழுந்த காட்சி எப்படியிருக்கும்?

அவனை இழுத்து விழ வைத்த பரிவுருவக் காந்தம் அப்போது எப்படிக் காட்சி கொடுத்திருக்கும்?

'மஹிமையனைத்தையும் எளிமையாக்கிக் கொண்ட குரு மஹராஜிடம் எளியரில் எளிய ரஸிக் எப்படி சரண் செய்திருப்பான்? அப்போது இவனது மானுட எளிமையிடம் அவரது தெய்விக எளிமை எப்படி ஆவிர்பவித்திருக்கும்?

'காளியையும், திரிபுரஸுந்தரியையும், கல்யாணக் கண்ணனையும் அவர் கண்டது இருக்கட்டும். அவற்றின் மஹத்வம் நம் மனத்துக்கு எட்டாதது; காட்சிக்குக் கிட்டா தது. ஆனுல் அவற்றைவிடப் பெருமையில் குறையாத தாயினும் மானுடத்துவமும் மாதுரியமும் கூடிய குரு மஹராஜ் - ரஸிக் சந்திப்பை ஆவியிலேயே ஓவிய உணர்வு கொண்ட ஒருவரின் கைவண்ணம் காட்சியாக்கித் தரக் கூடுமோ? அவ்வாறுயின் அடியார் உலகம் அதனுல் பயன் பெறுமே!'—இப்படி விசுத்தாநந்தர் எண்ணியிருக்க வேண்டும்.

அந்த எண்ண வித்திலிருந்து விளைந்த பழமே என்.ஸி. தாஸின் உயிரோவியம்.

Koviloor Digital Library

ஓவியத்தின் பாவம் அதன் மெய்ம்மையை எந்த ஒட்டு மிதயத்துக்கும் உணர்த்திவிடும். ஆம், தாஸ் சித்திரிப்பது போலத்தான் ரஸராஜர் ராமகிருஷ்ணரை தாஸன் ரஸிக் வணங்கியிருக்க வேண்டும். ரஸிக்கின் சிரம், அதாவது சித்தம் முழுதும், அன்னேயுடையதான அந்த இடப்பாதத்தில் தான் பதிந்திருக்க வேண்டும். சுத்தீகரிப்பு வேள்வி செய்யும் அவன் கைகள், அவரைக் கும்பிடவே ஏற்பட்டதாக இன்று அவன் கருதிய அக் கரங்கள், ப்ரபு பரமேச்வர னுடையதான அந்த வலது திருவடியில்தான் படிந்திருக்க வேண்டும். இணையடி மிதித்த மண்ணில் அவன் உடல் அப்படித்தான் புதைந்திருக்க வேண்டும். "ஊனினே உருக்கி" என்பதாக அவ்வுடல் இப்படித்தான் மெலிந்திருக்கவும் வேண்டும்.

அவருடைய பட்டுப் பாதத்துக்கு நோவாமல்தான் சிரத்தைப் பதித்து, கரத்தைப் படிய விட்டிருக்கிருன். பாவம் புரியவில்லே? அவன் சிரம் உருண்டு புரண்டு பாதத்தை அலுக்கி நலுக்கவில்லே; வைத்தது வைத்தபடியே கிடக்கிறது. கரங்களும் பாதத்தை இறுக்கவில்லே, பற்றவில்லே; அவற்றை அப்படியே "போட்டிருக்கிருன்"! அவை போட்டபடி கிடக் கின்றன.

தலே கிடக்கிறது, கைகள் கிடக்கின்றன, அவனே "கிடக்கிருன்"! அதுதான் சரியான வார்த்தை! கைவிரல் நுனியிலிருந்து பாதவிரல் வரையுமாக எப்படி நீள நெடுகக் குச்சியாகக் கிடக்கிருன், பாருங்கள்! தன்னே அப்படியே அவருக்குத் திறந்துவிட்டுக் கிடக்கிருன். முகமும், முன்னுடம்பும் மறைந்திருந்தாலென்ன? இதோ இந்த முதுகும், தூக்கிக் கட்டிய கிழ்ப்பாச்சு வேட்டியும், குச்சிக் காலும், ஊன்றிய பாதமும் அவன் கிடக்கும் கிடக்கைக்கு விரிவுரை வரைந்து விடுகின்றனவே! பெரியதில் பெரியோ ஞன "எங்கள் மால் இறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கை"யை ஆழ்வார் பாடினர். விரிந்த முகமும், பரந்த மார்பும் காட்டி ரங்கன் கிடக்கும் கிடக்கை அது. சுருக்க

Koviloor Digital Library

முகமும், சூம்பிய மார்பும் காட்டாமலே, விசாலமாய் விஸ்தாரமாய் ரஸிக் கிடக்கும் கிடக்கை இது! "வருக லாமோ" - க்காரனின் முகத்தை நாம் "பார்க்கல் ஆகுமோ?"

டாகுர் நிற்கும் நிலையைப் பாருங்கள். வார்த்தை விளக்கம் என்ற தடுப்பு வராமலே அதைப் புரிந்து கொள்வதுதான் உள்ளபடிப் புரிவிப்பது. ஆயினும் அப்படிப் புரிந்து கொள்ளக் சக்தியற்றோரைக் கொஞ்சம் கிளர்த்திவிடவே வர்ணனையும் செய்து பார்ப்போம்.

ப்ரேமைக் கதகதப்பில் மூடிய கண்கள். அநுதாப, பரிதாபங்களில் வாட்டம்போல் காட்டும் கன்னப் பிரதேசம். இதய நாளத்திலிருந்து முட்டி மேலோங்கும் கருணையில் வாய் மலரின் திறப்பு. அடியானுக்காக அருளமுத கும்பத்தை அப்படியே பிடிப்பதுபோல விரல்கள் மடங்கிய வலக்கை கும்பத்தின் கனமான பிடிப்பினால் போல, வலத் தோளும் தாழ்ந்து சரிந்திருப்பது எத்தனை நயம்! இத்தனை நயத்துக்கும் நகாசு அந்த இடக்கையிலே!

டாகுரின் பாவ ஸமாதிப் புகைப்படம் என்பதாகப் புகழ் பெற்ற ஒன்று உண்டு. அதில் அவரது இடக்கரம் இதய கமலத்தின் அருகே அதன் பூர்ண மலர்ச்சியைக் காட்டுவதாக அபிநயம் புரியும்! வலது கரம் மேல் தூக்கி நிற்க, 'ஏகம் ஸத்யம்' என்பதை அதில் ஆள் காட்டி விரல் அபிநயிக்கும். மேலே உள்ள அந்த ஏகப் பெருமான்தான் இதய கமல வாஸி என்று அவரது கண் சொருகலும், கனிவாய் முறுவலும், இரண்டையும் இணைத்துக் கொடுக்கும். அது பென்னம் பெருமாள் அநுபவம், இங்கே சின்னஞ்சிறு ஆளை அவர் அநுபவிப்பதில்—ரஸிக்கிலும் பெருமாளை ரஸிக்கையில்—இந்த எளிமைக்குப் பொருத்தமாக வலக்கை இடக்கைகள் மாறுகின்றன. தூக்கலே இறக்கலாக மாறுகிறது! அங்கே இடக்கரம் இதய கமல மலர்ச்சியைக் காட்டிற்று. மஹான் விரிந்து மலர்ந்தார். தோட்டி குவிந்து கூம்பினான். இரண்டும் ஒரே அநுபவம்தான். இதற்கேற்க, இங்கே

Koviloor Digital Library

அவரது வலக்கரம் ஒரு தாமரை கீழ்நோக்கிக் கவிழ்ந்து குவிகிறது போல இருக்கிறது.

அங்கே வலது ஆள் காட்டி விரல் மேல் நோக்கி நீண்டு விண்ணைக் காட்டியது. இங்கோ இடது கரத்தின் அதே விரல் கீழ் நோக்கி நீண்டு மண்ணில் கிடக்கும் ரஸிக்கைக் காட்டு கிறது. எத்தனை உட்பொருள்கள்?

★

அவன் கிடக்க, காலமும் கிடந்தது.

அவர் நின்ற நிலை நிற்க, காலமும் நின்றது.

அப்புறம் எப்படியோ, கிடந்த அவன் எழுந்து நின்றான். 'தீண்டாதான் பாவனரைத் தீண்டி விட்டோமே' என்று பதறி, விலகி நின்றான்.

நிலைக்குத்திட்டவரின் நயனம் பெயர்ந்தது. விலகிய வனைத் தன் குளிர்ச்சியாலேயே கூப்பிட்டது. "அஸ்பர்ச யோக" வடிவம் பார்வையால் அவனை ஸ்பரிசித்த தோடன்றி, வாக்கினாலும் அவனை அணைத்துக் கொண்டது!

எப்படிப்பட்டவரையும் தம்மோடு கலந்துறவாட வைக்கும் தமக்கே உரிய அந்த வசீகர நகை கொழிக்க, "என்னப்பா, நல்லாயிருக்கியா?" என்றார் டாகுர்.

"இந்த ஈன சென்மாவுக்குள்ளாற என்ன நல்லாயிருக்க முடியுமோ அந்த அளவுக்கு ஏதோயிருக்கேன் என் அப்பா, சாமியப்பா!" என்றான் ரஸிக்.

கனிவு ரஸம் பில்க அதைக் கேட்டு நின்றார் டாகுர்.

ராம்லால் தாதாவுக்கு ஆச்சர்யமாயிருந்தது. அத்யந்த விச்வாஸம் பூண்ட அடியாரும், தக்ஷிணேச்வர ஆலய பரிபாலகருமான மதுரநாத் விச்வாஸ் ஒருவரைத் தவிர எவரும் தம்மை "அப்பா" என்றழைக்க டாகுர் அநுமதிக்க மாட்டார். சாரதைதான் எல்லாருக்கும் அம்மா,

Koviloor Digital Library

கன்னித் தாய். டாகுர் ப்ரஹ்மசாரீத் தந்தை உறவை ஏற்க முடியாமல் பதறியவர். "என்னைக் குறிப்பிட்டு மூன்றுவார்த்தைகள் சொன்னால்அவை என்னை முள்ளாகக் குத்துகின்றன. 'குரு', 'ப்ரபு', 'அப்பா' என்ற மூன்று வார்த்தைகள்தாம்" என்று கூறி, பவதாரிணியின் குழந்தையாய் மட்டுமே தம்மை உலகம் கருதவேண்டுமென எண்ணியவர். அப்படிப் பட்டவர், இன்று இந்த ஒட்டனோடு ஒட்டி, அப்பாவாக அழைக்கப்பட்டும் அதை ஏற்றுக்கனிந்து நிற்கிறாரே!

ஒவ்வொரு பதமும் கனிரஸத்தின் சொட்டாகக் கனிவாய் பேசலாயிற்று. 'ஈன சென்மா' என்று அவன் சொன்னதில் ஏற்பட்ட பரிவுப் பீறலில் வழக்கமான குழந்தைக் குழறல் இல்லாமல் பொங்கு புனலாக அவனை ஆற்றிக் கொடுத்துப் பேசினார் டாகுர்.

"மகனே, சமூகத்திலே நீ எங்கே இருக்கேங்கிறதை நினைச்சுக் குறையாதேடா! நீயும் மநுஷன். ஆண்டவன் படைப்பிலே அவனையே நினைச்சு அவனே ஆகக் கூடிய மநுஷன்தான் ரொம்ப ஒசத்தி. அந்த ஒசத்தி ஒனக்கும் தான். ஈனமே இல்லை. புரிஞ்சுண்டியா கெழவா? ஒனக்குள்ளாரவும் ஆண்டவன் இருக்கான்.

"ஒனக்கு ராமாயணம் தெரியுமில்லே? குஹன்னு மொரட்டு வேடன். பூ ஒடம்புக்கார ராம்ஜி அவனைக் கட்டிக்கிட்டார், தெரியுமா? பரதனும் லக்ஷ்மணனும் அந்த குஹனை அண்ணா - னு கும்பிட்டாங்களாம்!

"கபீர்னு கேட்டிருப்பியே! தீண்டாதார்னுட்டு ஒடன் பொறந்த ஜனங்களை ஒதுக்கி வைக்கிறது திமிரிலே பண்றது; அது எவ்வளவு தப்புன்னு அவர் ரூபிச்சுக் காட்டியிருக்காரு.

"ஹரி, ஹரின்னு எப்பவும் பக்தியா சொல்லிக்கிட்டிருக்கிற பஞ்சமன் அப்படிச் சொல்லாத ஐயமாருங்களுக்கு மேலே, மகனே! தெரிஞ்சுண்டியா?

Koviloor Digital Library

"அதோ பாரு! நம்ப அம்மா கோவிலு!" —'நம்ப அம்மா' அவர் நெஞ்சைத் தழுதழுக்க வைத்தாலும், ஆறுதல் தரும் வேகத்தில் மீண்டும் தழலாகித் தொடர்ந்தார்—"அவன் - இவன், பெரியவன் - சின்னவன் இந்த வித்யாஸமெல்லாம் எல்லோருக்கும் அம்மாவாயிருக்கிறவ முன்னுலே நிக்குமா, கெழவா? எந்த ஜாதி, ஜனமும் ஒரே மாதிரி அவ கொழந்தைதாண்டா!

"நேர்மையா தொழில் பண்ணறே! எப்பேர்ப்பட்ட தொழிலு! ஊரு நாறும பாத்துக்கறே! எந்த ஒழைப்பும் கௌரவம்தான், கெழவா! எதுவும் தெய்வத்துக்குச் செய்யற கார்யந்தான். ஒசத்தியுமில்லே, தாழ்த்தியுமில்லே!

"தர்மவியாதர்னு ஒத்தரு. பொறப்புப்படி கசாப்புக் கடை வெச்சிருந்தாரு. எத்தனையோ படிச்சு, ஸாதனைங்கள்ளாம் பண்ணிஞ மட்டுமே கெடைக்கற ஞானத்தை அந்தக் கசாப்புக் கடைக்காரரு கிட்டேயிருந்து ஐயமாருங்ககூடக் கத்துக்கிட்டாங்களாண்டா! நேர்மையா செஞ்சா எந்தத் தொழில்லேயும் ஈனம் கெடையாது. புரிஞ்சிட்டியா? எந்தத் தொழிலானுலும் அதைச் செய்யறது ஆண்டவனைப் புடிக்கிறதுக்கு குந்தகம் பண்ண முடியாதுன்னு நல்லா, உறுதியா தெரிஞ்சுக்கோ, என்ன?

"அதிலேயும் கெழவா, நீ ரொம்ம்ம்ப 'அதிஸ்டம்' பண்ணியிருக்கே. இது ஆயிரக்கணக்கான ஜனங்க பக்தியோட வர எடம். ஸாதுங்க, யோகிங்க வர எடம். அவங்க பாத தூளியினுலே புண்ணியமான எடம். அப்படிப்பட்ட கோயில் தோட்டத்தை, வெளி முத்தத்தை, படிங்களை நீ கூட்டறே இல்லே? அதுக்கு எம்மாம் அதிஸ்டம் செஞ்சிருக்கணும் தெரியுமா?"

அவரது பிரேமை அவனது கிராம்யமான வசன நடையிலிருந்து, தனக்கே இயல்பான தேவகானமாயிற்று.

தீங்குரலில் பாடலானுர் தேன்மனத்தர்:

Koviloor Digital Library

ராணி! மணிரே கணன மணி கரியே
பாரே கொதொ தூலார் பரே
ஜந்த் தீதே கர் தஷிரா தேகே
துலே தேயி ராணி தொமார் கொரே

அரசீ! பெருமித அரசீயோ!
அருசீர் கொண்டநின் அணிபணிகள்
சிந்திச் சிதறவிடும் மணிகணங்கள்
எந்தக் கணக்கென எள்ளளவும்
சிந்தை செயாது நீ செல்லுகிறாய்!
நிலத்தைக் கூட்டும் பணிமகளே - பள
பளக்கும் பன்மணி அவை யெடுத்து
அளித்திடுவாள் உன் அங்கைதனில்!

பேரரசி—ஸஹஸ்ர நாமம் சொல்லும் ஸ்ரீமஹாராக்ஞீ—கவனியாத அடியார் கணத்தை, அவர்தம் அடிப்பொடிகளை ஒன்றுசேரத் திரட்டிப் பெருக்கும் ரஸிக்தான் அவளுடைய கவனத்துக்குக் கொண்டு வருகிறானென்கிறாரா? அல்லது தம்மையேதான் அந்தப் பணிமகளாக, பணியாள் ரஸிக்காக ஐக்கியப்படுத்திக்கொண்டு பாடுகிறாரா?

தக்ஷிணேச்வரத்திலே கங்கை ஓடுகிறாள், அங்கே காளி சந்நிதி இருக்கிறது, தோப்பும் துரவும் இருக்கிறது, இனிய தாக டாகுர் என்றும் ஒன்றும் இருக்கிறது என்கிறார்களே! கானம் செய்யும் இந்த இனிய டாகுரிலேயே வெள்ளைக் கங்கை தூய்மை வெள்ளம் பெருக்குகிறாள், கருங்காளி களிநடம் புரிகிறாள், பசும் தோப்பும் துரவும் வளம் வர்ஷிக்கின்றன!

ரஸிக்கின் கண்கள் "சிந்திச் சிதறவிடும் மணி கணங்க"ளாக பக்தி முத்துக்கள் ஒளிர்ந்தன. "அப்பா, எஞ்சாமியப்பா! நீ ஒண்ணு சொல்லிட்டா படிப்பு வளக்கு தெரியாத குப்பைக்காரன் அதுக்கு எதிர்க்கேள்வி போடப்படாதுதான். ஆனாலும் அப்பா, ஒன் வாயாலே சொல்லு,—நெசமாவே

Koviloor Digital Library

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
PHONE: A-436846)

இந்தக் கட்டைக்குக்கூட கெதி மோச்சம் உண்டா? அதுக்கு நீ அருளு பண்ணுவியா, அப்பா?"

எல்லையில்லா எதிர்பார்ப்புடன் அவன் டாகுரின் திருமுகத்தைப் பார்க்க, பொன் முகத்தில் சந்திர சூரியர்களை ஒன்று சேர்த்துப் பிழிந்தாற் போன்ற குளிரொளி நகை குலவியது. ரஸிக்கை "கெதி மோச்சம்" சேர்த்தே தீருவது என அருளாளர் கங்கணம் கட்டிக் கொண்டதற்கு அடையாளமே அது. சொன்னார் :

"கெழவா! நம்ம கதி என்னன்னு கொஞ்சங்கூட பயப்படாதேயப்பா. ஒன் ஆசை நிச்சயம் பலிக்கும்.

"ஒன்னோட சேரி இருக்கு பாரு. அதன் ஓரத்திலே ஒரு துளசித் தோட்டம் போடு. ('துள்ஸீ கானன்' என்பது டாகுரின் துளஸித் துளிர் போன்ற மூல வாக்கு.) ஹரிநாம கீர்த்தன் பண்ணிட்டே இரு. கடைசி காலத்திலே ஆண்டவனை கண்ணுக்கு நேராத் தெரிஞ்சுக்கற பாக்யம் ஒனக்குக் கண்டிப்பாக் கெடைக்கும். ஆமாம் மகனே, நீ கண்ணை மூடறச்சே என்னை நிச்சயம் பார்ப்பே!"

வாரியல்லவா கொடுத்துவிட்டார் கெதிமோச்சத்தை, நம் அருள்வாரியப்பர்!

அதோடு, 'பாகவதம்' கூறுவதுபோல, அந்திமத்தில் வந்து பிரபு பரமாத்மனிடம் ஒரு ஜீவனைச் சேர்க்கும் நிஜமான ஸத்குருவாகத் தம்மைத் தெரிவித்துக் கொண்டு விட்டார்.

அப்படிச் சொல்வதும் போதாது. பிரபு பரமாத்மனிடம் சீடனைச் சேர்ப்பிக்கும் ஸத்குருவாக மட்டுமின்றி அந்தப் பிரபு பரமாத்மனாகவே தம்மை வெளியிட்டுக் கொண்டுவிட்டார்.

பவதாரணியின் எளிய குழந்தையார் அப்பாப் பதவியை ஒப்ப வைத்த எளிய ரஸிக், இப்போது அதற்கும் மேலே,

Koviloor Digital Library

அவரைப் பக்தனின் பிறவி முடிவில் வந்து பிறவா நிலைக்குக் கடத்துவிக்கும் பவதாரணராகவும்* தம்மை ஸ்பஷ்டமாக அறிவித்துக்கொள்ளச் செய்துவிட்டான்!

இவனொருவனுக்கு மட்டும் அப்பாவாக, குருவாக, ப்ரபுவாக இருப்பது அவரை முள்ளாகக் குத்தாமல் ரோஜா வாக அலங்கரித்திருக்கிறது!

விசுக்கு விசுக்கு என்று இருக்கைக்கு விரைந்துவிட்டார் பாவன பவதாரணர்.

அவரது உத்தரவை உயிரில் கரைத்துக் கொண்டான் ரஸிக்.

அழுக்கிலும் மலத்திலும் ஸதா தொழில் செய்பவன் அன்றிலிருந்து மும்மலம் நீக்கும் முத்தனின் நாமத்தோ டேயே அத்தொழிலைச் செய்யலானான். அத்தொழிலோடு, எதனினும் பரிசுத்தம் கிடையாதோ அந்தத் திருத்துழாயைப் பார்த்துப் பார்த்துப் பயிரிடும் தொழிலும் மேற்கொண்டு 'துள்ஸீ கானன்' உருவாக்கிவிட்டான். வேதியரின் நாற்பது வேலி நிலமல்ல; நடராஜனே பணித்த அரைக்கால் காணி ஒதுக்கிடம்தான்!

★

காலம் ஓடிற்று. டாகுர் காளியில் பிறிதறக் கரைந் தாயிற்று. பின்னரும் ஈராண்டு சென்றுவிட்டது.

ஒரு நாள் ராம்லால் தாதா ஆலயத்துக்கு வரும் வழியில் அதே பஞ்சவடியின் அருகே ரஸிக்கின் மனைவி ஓலமிட்டுக் கொண்டிருக்கக் கண்டார்.

"என்னம்மா? ஏன் அழறே? புருஷன் எப்படியிருக் கான்?" என்று விசாரித்தார்.

விம்மலுக்கிடையே கிழவி சொன்னாள்: "ரொம்ப ஆபத்தாக் காயலாக் கெடக்கிறானுங்கோ! புள்ளைங்க போயி

---

* பவ—பிறவிப் பெருங்கடல்; தாரண—கடத்துவிப்பது

Koviloor Digital Library

டாக்கிட்டரு அய்யாவைக் கூட்டியாந்தாங்கோ! ஆனா அந்தப் பாவிப் பய மவன் டாக்கிட்டரைத் 'தொட விடேன்'னு திருப்பியனுப்பிச்சுட்டானுங்கோ! சர்ணாமிர்த் (சரணாம்ருதம் எனும் தீர்த்த ப்ரஸாதம்) தவிர ஒண்ணும் ஸாப்ட மாட்டானாமுங்கோ. ஒங்ககிட்டே சர்ணாமிர்த் வாங்கிட்டு வரத்தான் அனுப்பியிருக்கானுங்கோ."

........மருந்தொன்றிருக்குது
பேரின்ப மன்றுள்ளே
மற்ற மருந்துகள் தின்றாலும் உள்ளுக்கு
வல்லே வல்லே........

ரஸிக் வைணவனாதலின், அவரவர் மனமறிந்து மரபறிந்து டாகுரின் வழியில் பிரஸாதம் தரும் ராம்லால் தாதா பவதாரிணியாலயம் செல்லாமல் ராதாகாந்தன் கோயிலுக்குச் சென்று சரணாம்ருதமும் துளஸீதளங்களும் கொண்டுவந்து கொடுத்தார்.

சரணாம்ருதம் ரஸிக்கின் தூய் உடம்புள் சென்றதும் அற்புதமே புரிந்தாற் போலிருந்தது! காய்ச்சல் தணிந்தது. ஒய்ச்சல் நீங்கி உத்ஸாஹம் பிறந்தது. கண் சொக்கித் துயில் ஆழும் வரை, விழித்த நேரம் முழுதும் ஹரிநாம கீர்த்தனத்திலேயே அலையாடிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் பிள்ளைகள் வேலையிலிருந்து மதிய உணவுக்காக வந்தார்கள். அவர்கள் நுழைந்ததும் நுழையாததுமாக, "ஒடனே துண்ணுங்க" என்று ரஸிக் அவர்களை விரைவு படுத்தினான்.

அவர்கள் அப்படியே உண்டு முடித்தபின், தன் திவ்ய பாசம் எல்லாம் பொங்கிவர, தான் பல நாட்களாகக் காணாத துளஸிக் கானனத்துக்கு இட்டுச் செல்லுமாறு ரஸிக் கூறினான்.

"வெய்யிலு கொளுத்துதே" என்றார்கள்.

Koviloor Digital Library

"வெய்யிலாவட்டும் மழையாவட்டும், நான் அங்கிட்டுப் போயே ஆவணும்"—பூஞ்சையாகப் பேசும் ரஸிக்கா, அந்த துர்பல நிலையில் இத்தனை வஜ்ரமாகப் பேசுவது?

"இப்போ ஸொல்றே! வெய்யில்ல போனு அப்பத் தெரியும். ஸூருண்டுவே, ஸூருண்டு" என்று அவர்கள் மறுத்தனர்.

ரஸிக் கேட்பதாயில்லை.

ஐயே; மெத்தக் கடினம்
......உள்ளே சேருமே, அது பூருமே!

—ஸமாசாரந்தான்!

அவர்கள் வேறு விதத்தில் ஆக்ஷேபித்தார்கள். "ஊர்ல எங்களை என்னு ஸொல்வாங்கோ? வேணுமின்னே ஒன்னெ அங்கிட்டுக் கொண்டு போயி பெலி வாங்கினேமுன்னு பேஸ மாட்டாங்கோ?"

இதுவும் அவன் காதில் ஏறவில்லை.

அங்கே செல்லவோ, நேரமாகுதல்லவோ?

தவிர அவனுக்கு எதுவும் தெரியவில்லை.

வா்திட்டுத் தோற்ற பெண்டாட்டி, பிள்ளைகள் ரஸிக்கை —அவனுடைய சாமியப்பாவின் வார்த்தைப்படி அவன் வளர்த்த—துளஸிப் பிள்ளைகளிடையே கொண்டு விட்டனர்.

துளஸிப் பிள்ளையா? இல்லை. துளஸியம்மா! "அம்ம! ரா, அம்ம!" என்று தியாகையர் கல்யாணியில் வரவேற்ற துளஸம்மா! "உன் மென்மை மேவும் மேனி கண்டு; உன் தூய மணத்தை மோந்து; உன் தெய்விக மேன்மை உணர்ந்துதான் சிவனின் தோழனை நாராயணன் உன்னைப் பிரேமையோடு சிரத்திலேயே கொண்டு, கொண்டாடினன்" என்று அவர் பாடிய அம்மாவின் பச்சையிலே பாய் போட்டுப் படுத்தான் ரஸிக்.

Koviloor Digital Library

சுற்றி மனைவி மக்களை அமர்த்திக் கொண்டு பச்சை மா மலை மேனியனைப் பற்றிப் பாடச் சொன்னான்.

அவன் வாயிலும் அந்த ஹரி நாமமே உருண்டது. கையில் ஜபமாலை உருண்டது. இதயத்தில் பக்தி வெண்ணெய் திரண்டது.

அரை மணிக்காலம் எளியோரின் நாம கீர்த்தனையில் உருண்டது. அந்த அரை மணிக்குள், கவிழ்ந்த கமலத்தைக் காட்டிய கர கமலம் ரஸிக்கின் கர்ம ஓலைக் கட்டை ஒரே புரட்டாகப் புரட்டிக் கடைசி ஏட்டுக்கு வந்துவிட்டது!

ரஸிக்கின் முகத்தில் ஒளி முலாமிட்டது. உதடுகளின் இடையே அன்பனை மீளக்கூடும் இன்னகை விரிந்தது. "அஹ்ஹா! வந்துட்டியா கடோஷிலே—கெதி மோச்சம் தர? அப்பா! என் பக்கத்திலேயே வந்துட்டியே! நெசமாவே இங்கிட்டு வந்துட்டியே, என் சாமியப்பா! என்னு அளகா இருக்கே, என்னு பள பளப்பா சொலிக்கிறே!" என்று ஆர்த்தான்.

மண்ணுலகில் பளபளப்பை மறைத்து வாழ்ந்த 'அப்பா' மண்ணுலகில் மங்கியே கிடந்த ஒரு புனித ஜீவனைப் பொன்னுலகுக்கு அழைத்துக் கொள்வதற்காக வந்தபோது முழுப் பிரகாசமும் காட்டிப் பொலிந்திருக்கிறார்!

பளபள அழகர் அவ்வழகை ரஸித்த ரஸிக்கை அழைத்துப்போய் விட்டார்! கொடுத்த வாக்கை நிறைவேற்றி விட்டார்!

"மேதோர் கிழவனும்! உயிர் போனபின் உடம்பு இத்தனை அழகாக, பளபளப்பாக இருக்கிறதே!" என்று பார்த்தவர் வியந்தனர்.

Koviloor Digital Library

குரு மஹராஜ் செய்த 'ஸாமர்த்தியம்'

அன்பின் சக்தியால் எந்த ஜீவனது உள்ளும் புகுந்து அதன் உள்ளத்தைக் கண்டுவிடுவார் பரமஹம்ஸ தேவர். எனவே அன்று கூடியிருந்த அடியார்களுள் அத்யந்த பக்தர் பலராம் போஸ் உள்ளூர வேதனையில் குமைவதை அவர் புரிந்துகொண்டுவிட்டார்.

பலராம் பாபுவை உடனே தனியாக அழைத்து, "என்னப்பா உன் வேதனை?" என்று விசாரித்தார்.

"புரியில் நான் நீடித்து வாஸம் செய்தால் அங்கே கூடும் ஸாதுக்களோடு சேர்ந்து ஸந்நியாஸியாகிவிடுவேனோ என்று என் வீட்டார் பயந்தனர். அதனால் என்னைக் கல்கத்தாவுக்கு வரவழைத்தார்கள். ஆனால் இங்கு வந்தபின் நான் தங்களைக் கண்டு, தாங்களே எல்லாமும் என்று தஞ்சம் புகுந்துவிட்டேனல்லவா? இது புரி வாழ்க்கையைவிட ஆபத்தானது என்று அவர்களுக்குத் தோன்றிவிட்டது. அதனால் இங்கேயிருந்தும் என்னைக் கிளப்ப ஏற்பாடு நடக்கிறது. இரண்டில் ஒன்று தீர்த்துக்கட்டுவது என்றே என் தாயாதி ஹரிவல்லப் வந்திருக்கிறார். டாகுர், தங்களைவிட்டு நான் போகமாட்டேன். ஆனால் பிடித்த பிடி என்று சாதிக்கும் குணமுள்ள ஹரிவல்லபுக்கு எப்படி ஈடு கொடுப்பது என்றும் எனக்குத் தெரியவில்லை. மனஉளைச்சலில் விண்டு விரிகிறேன்" என்றார்.

"அது ஸரி, இங்கே நீ வருவதில் அப்படி என்ன ஆபத்தாம்?" என்று குழந்தையாய்க் கேட்டார் குரு மஹராஜர்.

"ஐயோ டாகுர், அதை எப்படிச் சொல்வேன்?" என்று மென்று விழுங்கிய பலராமர், மெள்ள மெள்ள 'ஆபத்தை' ஒரு மாதிரி விளக்கினார்.

Koviloor Digital Library

அவரது குடும்பத்தினர் நாஸ்திகரல்லர். கிருஷ்ணராம் வஸு என்ற மஹனீயரின் வழிவந்த பக்தர் பரம்பரையினரே அவர்கள். காஸ்னு என்ற இடத்தில் வயதாலும் திவ்யா நுபவத்தாலும் பழுத்த பழமாக பகவான்தாஸ் என்ற பெரியார் இருந்தார். பலராம் குடும்பத்தினர் அவரைகுரு வாகக் கொண்ட வைஷ்ணவ ஸம்பிரதாயஸ்தராவார்கள். ஆயினும் பலராம் மத்திம வயதிலேயே நிலபுல நிர்வாகங்களை விட்டு ஜகந்நாதபுரி சென்று அங்கேயே ஆண்டு ஆண்டாகப் பதினேரு வருஷங்கள் ஜகந்நாதன் தர்சனத்திலும் ஸத்ஸங்கத்திலும் செலவிட்டபோது, எங்கே அவர் துறவியாகிவிடுவாரோ என்ற பயம் அவர்களைப் பிடித்துக் கொள்ளத்தான் செய்தது. அவருடைய மூத்த மகளுடைய திருமணத்தைச் சாக்காகக் காட்டி அவரைக் கல்கத்தாவுக்கு வரவழைத்தனர். அப்புறம் அங்கேயே ஒரு வீட்டை விலைக்கு வாங்கி பலராமை அதில் இருத்திவிட்டனர்.

இவர்கள் என்ன செய்து என்ன? பலராமின் பூர்வ ஸம்ஸ்காரம் அவரை விடுமா என்ன? கல்கத்தாவுக்குப் பெயர்ந்தவர் தக்ஷிணேச்வரத் தவமுனிவனின் தவிர்க்க முடியாத காந்த சக்திக்கு ஆளாகி, 'அன்னவரே எம் தலைவர்' என்று அவருடைய தாளுக்குத் தலைப்பட்டுவிட்டார்.

'பெருமாள் போய் பெத்த பெருமாளாச்சே!' என்று வீட்டார் விசனித்தனர். 'புரியில் ஆண்டியாய்ப் போயிருந் தாலும் தேவலை. அது சம்பிரதாயப்படி ஸந்நியாஸம் பெற்றதாகவாவது இருந்திருக்கும். இந்த தக்ஷிணேச்வரப் பூசாரியோ ஒரு ஸம்பிரதாயத்திலும் சேராமல் மனம் போனபடிக் கிறுக்கர்போல் காரியங்கள் செய்பவராக இருக்கிருர். சில காலம் வைஷ்ணவ ஆசாரங்களைப் பின்பற்றினராம், சில காலம் சாக்த தந்த்ரங்களின்படிச் செய்தாராம், அப்புறம் அத்வைத வேதாந்தம் வேறும்! இதெல்லாம் தொலைகிறது என்றாலும் கிறிஸ்துவத்தையும் இஸ்லாத்தையும்கூட அல்லவா கொஞ்சம் கொஞ்ச காலம் பின்பற்றினராம்! இன்னெரு விசித்ரம், அகமுடையாள்

Koviloor Digital Library

பக்கத்திலேயே இருக்கிறுளாம், ஆனுலும் ஸந்நியாஸியாம்! பாவ ஸமாதி என்று சொல்லிக்கொண்டு ஆடுவதும் பாடுவதும் அழுவதும் சிரிப்பதுமாக அமர்க்களமாம்! இதெல்லாவற்றுக்கும் மேலாக, வாழ்க்கையில் நன்ருக முன்னுக்கு வரக்கூடிய அநேகம் இளம் பிள்ளைகளை ஏதோ வசிய சக்தியைக் கொண்டு பரதேசி வழிக்கு இழுத்துவிடு கிருராமே! நம் பலராமுக்கு இந்த துர்கதி ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது? அவன் ஸந்நியாஸி ஆவதானுல்கூட, க்ருஷ்ணராம வஸுவை மூதாதையாய்க் கொண்ட நம் குடிப்பெருமைக்குக் கேடாக இந்த ஆசாரவீனரிடம் ஆட்பட்டா ஆண்டியாக வேண்டும்?' என்றிப்படியெல்லாம் அவர்கள் எண்ணிஞர்கள்.

அவர்களில் முக்யமானவர் பலராமரின் ஞாதியான ஹரிவல்லப வஸு. 'விட்டேனு பார்' என்று அவர் இப்போது பலராமின் வீட்டிலேயே வந்து உட்கார்ந்துகொண்டு அவரை எப்படியாவது பரமஹம்ஸரிடமிருந்து அப்பாற்படுத்த முயற்சி தொடங்கிவிட்டார். இதிலே அவர் வெகு விபரீத மாக நினைத்த அம்சம் என்னவென்ருல், பலராம் தமது மனைவி மக்களையும் பைத்தியப் பூசாரிடம் அழைத்து வந்து அவர்களையும் அவரிடம் சிறிது சிறிதாகப் பைத்தியம் கொள்ளச் செய்திருந்ததுதான். 'ஆபத்து முற்றி விட்டது. இதை எப்படியும் தீர்த்தேயாக வேண்டும்' என்று கங்கணம் கட்டிக்கொண்டு தண்டு இறங்கிவிட்டார் ஹரிவல்லபர்.

இதையெல்லாம் ஒருமாதிரி மென்று விழுங்கிக் கொண்டு பலராம வஸு பகவானிடம் தெரிவிக்க அவர், "அந்த ஹரி வல்லபைத்தான் ஒருநாள் நீ இங்கே அழைத்துக்கொண்டு வாயேன்" என்ருர் சகஜமாக.

"அது முடியுமென்று தோன்றவில்லை டாகுர்" என்ருர் பலராமர்.

"ஏன்? அவர் எப்படிப்பட்டவர்?"

Koviloor Digital Library

"பொதுப்படையாய்ப் பார்த்தால் நல்லவர்தான். படிப்பாளி. அறிவாளி. ஏன், பெருந்தன்மையும் தர்ம சிந்தை யுங்கூட உள்ளவர்தான். தெய்வ பக்திக்கும் குறைச்சலில்லே. ஆனால், என்ன செய்வது? எவர் பேச்சையோ கேட்டுக் கொண்டு, இங்கே நான் வந்திருப்பதாலேயே என்னிடம் அதிருப்தி கொண்டிருக்கிறார். நானே இங்கு வரப்படாது என்கிறவரை நான் எப்படி இங்கே அழைத்துவர முடியும்?"

★

குரு மஹராஜுக்கு ஒன்று தோன்றிவிட்டதென்றால் அது பரதேவியின் பொய்க்க முடியாத ஸங்கல்பமேயல்லவா? எனவே ஹரிவல்லபர் தம்மிடம் வரவேண்டுமென அவர் எண்ணியவுடன் கிரிஷ் அதற்குத் துணை செய்ய முன் வந்தார்.

ஸ்ரீ ராமக்ருஷ்ணர் ஈச்வராவதாரமே என்று அடித்துச் சாற்றிய நாடகாசிரியர் கிரிஷ் சந்திர கோஷேதான். ராமகிருஷ்ணரைப் பைத்தியப் பூசாரியாக எண்ணிய ஹரி வல்லபருக்கு கிரிஷ் நெருங்கிய நண்பராக இருந்தார். இவர்கள் ஆதியில் சகமாணவர்களாக இருந்தவர்கள்.

"எப்படியாவது ஹரிவல்லபை நான் தள்ளிக்கொண்டு வருகிறேன். இன்றைக்கே போய் அவனைப் பார்க்கிறேன்" என்றார் கிரிஷ்.

என்னதான் செய்தாரோ? சொன்னபடியே, மறுநாளே ஹரிவல்லபரைத் தள்ளிக்கொண்டு வந்து விட்டார்!

முறைப்படி அறிமுகம் நடந்தது. "இவர் என் பள்ளிப் பருவ நண்பர் ஹரிவல்லப் போஸ். கட்டாக்கில் அரசாங்க வழக்கறிஞராக இருக்கிறார். தங்களைக் காண வந்திருக்கிறார்" என்று கூறி கிரிஷ் அந்த 'எதிரி'யை குருதேவரின் எதிரே நிறுத்தினார்.

Koviloor Digital Library

குருதேவர் பரம அன்பு கமழ ஹரிவல்லபரை வரவேற்ருர். ஜாடையால் தமக்கு வெகு நெருக்கத்தில் அமர்த்திக் கொண்டார்.

"பல பேர் சொல்லி உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதிலிருந்து உங்களைப் பார்க்க வேணுமென்று ஆசைப்படவும் செய்தேன். ஆனுலும் நீங்கள், 'எது எப்படி இருக்குமோ?" என்று யோசிப்பவராக இருந்து, இங்கே வராமலிருந்து விடுவீர்களோ என்றும் நினைத்து பயந்து வந்தேன்" என்று ஹரிவல்லபரிடம் தொடங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ணர், கிரிஷைப் பார்த்தார். "ஆனுல் இவர் அப்படிப் பட்டவரில்லை என்று தெரிகிறது" என்று கிரிஷிடம் திருப்தராகக் கூறினுர்.

அதோடு நில்லாமல் மேலும் நற்சான்றிதழ் கொடுத்துப் பேசினுர்: "இந்த மநுஷ்யர் ஒரு பாலனைப் போன்ற எளிமையுடன் இருக்கிருர். இவருடைய கண்ணைக் கவனித்தீர்களோ? ஹ்ருதயம் நிறைய பக்தி இருந்தாலொழிய ஒருவருக்கு இந்த மாதிரியான கண்ணமைப்பு இருக்க முடியாது" என்ருர்.

இப்படிச் சொல்லிக் கொண்டே போனவர் சடேரென்று ஹரிவல்லபரைத் தொட்டார். அவரிடம், "நீங்கள் எனக்கே சொந்தமாகச் சேர்ந்தவர் என்று உணர்கிறேன். ஆமாம், உங்களிடம் வித்தியாஸம் பார்த்து விலகி நிற்பதற்கு என்னுல் முடியவில்லை" என்று பட்டாக இழைந்து கூறினுர்.

தொட்டுவிட்டாரல்வா? அப்போதே அக் கணமே ஹரிவல்லபர் "விதியின் எழுத்தைக் கிழித்தாச்சு; விட்ட குறை வந்து தொட்டாச்சு"! இல்லை, விட்ட குறை இல்லை; விட்ட நிறை!

டாகுரின் ஸ்பரிசம் அதன் மாயமந்திர வித்தையைச் செய்துவிட்டது!

பலராமரைப் பரமஹம்ஸரிடமிருந்து விலக்க வந்தவரே அவரது பொற் பாதங்களில் ஒட்டிக்கொண்டார்.

Koviloor Digital Library

குருதேவரை விழுந்து வணங்கிய ஹரிவல்லபர் அவரது பாத தூளியை ஒற்றிக்கொண்டு, "எல்லாம் அவ்விடத்தின் க்ருபா விசேஷம்தான்" என்று நனைந்து கூறினர்.

கிரிஷுக்கு ஏக ஸந்தோஷம். தம் முயற்சி பழமாயிற்று. ஆசாமியை மசித்தாகிவிட்டது என்று கண்டுகொண்ட அவர், "ஹரிவல்லபுக்கு இதயம் நிறைந்த பக்தி இருப்பது இயற்கை தான். ஏனெனில் ப்ராத: ஸ்மரணீயர்களில்* ஒருவராகவே பலர் கருதும் கிருஷ்ணராம் வஸுவின் வம்சத்தில் வந்தவர் இவர்" என்றார்.

அந்த பக்திமானைப் பற்றிப் பேச்சு வந்ததையடுத்து, பத்தி பாவங்களைப் பற்றி உரையாடல் தொடர்ந்தது. பிரேமையுடன் ஈசனை விச்வஸித்து அவனே கதி என்றிருப்பது குறித்துப் பேசி வந்த குரு மஹராஜ் தாமே அந்நிலையில் சொக்கிச் சொருகுண்டு பரவசராகி விட்டார். பின்னர் அரைமூட்டமாகப் புறவுணர்வுக்கு வந்தவர் சிஷ்யர்களில் ஒருவரை பக்தி கீதம் பாடப் பணித்தார். சீடர் பாடினர். அதன் உள்ளர்த்தங்களை குருநாதர் லேசான கனவுக் குரலில் ஹரிவல்லபருக்கு எடுத்துரைத்தார். அப்படியே ஆழ்ந்த ஸமாதி கூடினர்.

அச் சமாதியின் ஆழ்மையால் ஸ்பர்சிக்கப்பட்ட சில இளம் பக்தர்களும் பரவசத்தில் மெய்ம்மறந்தமர்ந்தனர்.

குரு மஹராஜ் தொட்டவுடன் தமக்குள் ஏதோ மகா மாறுதல் நிகழ்ந்ததை உணர்ந்திருந்த ஹரிவல்லபரின் இதயத்தை இப்போது அவரது பரவச ஸமாதியும், அது பிறரையும் தன் வசப்படுத்துவதும் ஆழத் தொட்டுவிட்டன. அவர் கனிந்துருகிக் கண் ஜலம் கொட்டிவிட்டார்.

ஸ்ரீ ராமக்ருஷ்ணர் புறவுணர்வுக்கு வந்தார். ஹரிவல்லப் அவரை பக்தி புஞ்ஜிதமாக நமஸ்கரித்துப் பிரியாவிடை

---

* காலையில் விழித்தெழுந்தவுடன் தியானிக்கத்தக்க புண்ய புருஷர்களை "ப்ராத ஸ்மரணீயர்" என்பர்.

Koviloor Digital Library

கொண்டார். ஆம்! தம் குடிக்கே கேடாக வந்தவர் அவர் என்று நினைத்து வெறுத்து வந்த அதே ஹரிவல்லப வஸுதான்!

இதற்கப்புறமும், பரமஹம்ஸரை பலராமர் அண்டுவது தவறு என்ற எண்ணம் ஹரிவல்லபரை அண்ட முடியுமா?

தடுப்புக்களிலிருந்து விடுபட்ட பலராம் நிர்விசாரமாக டாகுருக்குத் தொழும்பு செய்து அவரது க்ருஹஸ்த சிஷ்யர்களுள் அதி முக்கியமான ஒருவரானர்.

★

ஹரிவல்லபரை அப்படி அடியோடு மாற்றுவதற்கு விசையாயிருந்த குருதேவரது ஸ்பர்சத்தின் மாயமந்திர ரஹஸ்யம்தான் என்ன? இதை ஐயனே இப்படி விளக்கினர் :

"அகந்தையின் ஆதிக்கத்தால் சிலர் பிறரை உள்ளபடி அறிந்தேற்க முடியாமலிருக்கிறர்கள். இப்படிப் பட்டவர்கள் இதனுள் (தம்முடைய சரீரத்துக்குள் என்பதைத்தான் 'இதனுள்' என்கிறர்) இருக்கும் ஸத்வஸ்துவின் ஸ்பரிசத்தைப் பெற்றதும் அகந்தையாதிக்கத்தின் வீர்யம் அழிந்துவிடுகிறது. பாம்பு படம் விரிக்கும்போது அதை ஒரு மூலிகையால் தொட்டால் உடனே அது அடங்கித் தலையைக் கீழே போட்டுவிடும். அது மாதிரி, ஸத்வஸ்துவின் திவ்யசக்தியானது அகந்தைத் தலைக் கனத்தைத் தொட்டவுடன் அந்தத் தலை தொங்கிப் போகிறது. அப்புறம் அது தூக்கல் பெருது. இதனுல்தான் நான் இம் மாதிரியானவர்களிடம் பேசிக்கொண்டிருக்கையில் சாமர்த்தியமாக அவர்கள் உடம்பைத் தொட்டுவிடுகிறது."

நிஷ்கபடக் குழந்தையாம் ஸ்ரீ ராமக்ருஷ்ணரும் "ஸாமர்த்தியம்" செய்திருக்கிறர்! அவரே அப்படிச் சொல்லிக்கொள்கிறர்! இப்படித் தாமே சொல்லிக் கொள்வதிலேயே அவரது நிஷ்கபடத் தன்மை நிமலமாய் சுடரிடுகிறது.

Koviloor Digital Library

எதற்காக சாமர்த்தியம் செய்தார்? நாம் செய்வது போல சுய ஆதாயம் எதற்கேனுமா? அல்லவே அல்ல. ஸ்வாநுபூதி பெற்றவருக்கு வேறு ஸ்வய ஆதாயம் என்ன வேண்டும்? ஓர் அஞ்ஞான ஜீவனை உய்விக்க வேண்டுமென்ற ப்ரேமையிலேயே ஸாமர்த்தியம் செய்தார்.

ஒரு விஷயம் தெளியவேண்டும். அதாவது, ஹரிவல்லபர் பாலகன் போல எளியவர், அவர் இதயம் நிறைய பக்தியும் அந்த பக்திக்கு ஸாக்ஷியம் காட்டும் கண்ணமைப்பும் கொண்டவர், தமக்கே அவர் சொந்தமாகச் சேர்ந்தவர் என்றெல்லாம் பகவான் சொன்னதையும் "ஸாமர்த்திய"த்தில் சேர்த்துவிடக் கூடாது. இவை யாவும் குருமஹராஜ் மெய்யாகவே அவரிடம் கண்ட உள்ளியல்புகளும் அவற்றுக்குரிய அங்க லக்ஷணங்களும்தான். ஆனால் அவ்வுள்ளியல்புகள் உள்ளேயே ஒளிந்து கொண்டிருந்தன. அவை வெளிப்பட்டு சோபிக்க முடியாமல் அஹந்தை இரும்புக் கவசம் பூட்டியிருந்தது. அஹந்தை இரும்பு எனில் அன்பு காந்தம் அல்லவா? அன்பு வடிவ டாகுரின் காந்த சக்தி அதிசயமான ஒன்றாகும். அது அவரது உள்ளே அவர் ஸதாவும் நன்குணர்ந்துவந்த ஸத்வஸ்துவில் கருக்கொண்டு, அங்கிருந்து அவதார சரீரத்தின் வழியே ஸ்பரிச ரூபத்தில் ஆகர்ஷண அலைகளாக வெளிப்பட்டது. இந்தக் காந்தத்தின் அதிசய குணம் என்னவெனில், இதன் ஈர்ப்பு அலை வெளிப்பட்ட போது பிறரது அஹந்தையான இரும்புக் கவசத்தை அது ஆகர்ஷித்துக் கொள்ளவில்லை. மாறாக அந்த இரும்புக் கவசத்தைத் துளைத்துக் கொண்டாக்கும் உட்சென்றது. அவர்களுக்குள்ளேயும் குடி கொண்ட அதே ஸத்வஸ்துவின் பிரேம பாவத்தைத் தட்டி எழுப்பித் தன்னோடு ஒட்டிக் கொள்ள வைத்தது.

"ஸ்பர்ச தீக்ஷை" என்ற மஹா தத்வமே டாகுரிடம் இப்படிச் செயற்பட்டது.

ஹரிவல்லபர் விஷயத்தில் நடந்ததும் இதுதான். பலராமருக்கு அநுக்ரஹம் செய்வதற்காக ஹரிவல்லபர்

Koviloor Digital Library

மனத்தை அவருக்கு அநுகூலமாக மாற்றி டாகுர் சாமர்த்யம் செய்தார் என்ற மட்டோடு முடித்துவிட்டால் அது சரியில்லை. ஹரிவல்லபருக்குமே அநுக்ரஹம் புரிய வேண்டியே ஸர்வ ஜீவ ரக்ஷகரான டாகுர் இப்படிச் செய்தாரென்பதுதான் உண்மை. மெய்யான தெய்விகம் மானுட வடிவில் வந்துள்ளபோது அதை ஹரிவல்லபர் அறியாமற் போகலாமா என்ற கருணையில் அவருக்கும் அதை அறிவதற்கான பிரேம எழுச்சியைத் தமது தொடுகையால் டாகுர் அநுக்ரஹித்துவிட்டார். அருளாளர் அல்லவோ?

இப்படி ஸ்பரிச தீக்ஷையால் பொன்னுனவர் பலர். "நாங்கள் தக்ஷிணேச்வரத்திலிருந்தபோது அடிக்கடி பார்த்திருக்கிறோம். எதனுலோ குரு மஹராஜிடம் விரோத பாவத்துடன் சில புது மனிதர்கள் வருவார்கள்; அவர்களை அவர் ஸம்பாஷணைக்கிடையிலே ஸாமர்த்தியமாகத் தொட்டு விடுவார். உடனேயே அவர்கள் அவர் சொல்லை ஏற்கத் தொடங்கிவிடுவார்கள்" என்கிறுர் பரமபுருஷரின் பாகவதத்தைப் படைத்துள்ள சாரதாநந்தர்.

''மாற்றுரை மாற்றழிக்க வல்லான்'' என்று மாதவனைப் பாடுவாள் மாதா கோதை. மாற்றுரை அழிப்பவன் அல்லன்; அவர்களது மாற்றுப் போக்கை மட்டுமே அழித்து அவர்களைப் பத்தரை மாற்றுப் பொன்னுக்கியவன். நமது தக்ஷிணேச்வர மா தவரும் அப்படி மாற்றுரை மாற்றழிக்க வல்லவர். அந்த வல்லமைக்கு, அவரது ப்ரேம வல்லபத்துக்கு ஓர் எடுத்துக்காட்டுத்தான் ஹரிவல்லபர்.

★

இன்னுேர் எடுத்துக்காட்டு. ''அதி மானுடர் செய்த அதிமானுட அற்புதங்கள்'' என்ற கட்டுரையின் தொடக்கத்தில் காணும் கிரிஷ் கோஷ் நிகழ்ச்சியோடு இதை இணைத்துப் படிக்கலாம்.

Koviloor Digital Library

கிரிஷ் கோஷுக்குச் சரியான நண்பர் காளிபாத கோஷ். அவரைப் போலவே இவரும்,

கொஞ்சு மாதரும் கூட்டுணும் கள்ளும்
இச்ச கத்தினில் இன்பங்கள் அன்றோ?
இவற்றின் நல்லின்பம் வேறென்றும் உண்டோ?

என்று துன்மார்க்கத்தில் திளைத்திருந்தவர்.

அவரது மனைவி கணவனைக் காக்கக் கோரி ஸ்ரீராமகிருஷ்ணரிடம் முறையிட்டாள்.

அப்போது ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் (அம்பிகையின்) விநோத சங்கற்பமொன்று எழுந்தது. துன்மார்க்கனின் மனைவிக்கு ஸன்மார்க்கரின் மனைவியான சாரதையை அருள் புரிய வைத்து முறையீட்டில் ஒரு பாதியைத் தீர்த்து, மீதி பாதியை அந்த துன்மார்க்கனுக்கே நேராக நமது ஸன்மார்க்கர் புரியும் அருளால் தீர்க்கவேண்டும் என்பதாக அந்த விசித்திர சங்கற்பம் இருந்தது.

அதனால் பரமஹம்ஸர் தம்மிடம் முறையிட்ட காளிபாத கோஷின் மனைவியை சாரதையிடம் விண்ணப்பித்துக் கொள்ளச் சொல்லி அனுப்பி வைத்தார்.

முதலில் எளிய சாரதை, அருள் கிருள் எல்லாம் தான் செய்யவாவது என்று நடுங்கிவிட்டாள். அப்புறம் கணவனாரின் விடாப் பிடிவாதத்தின் மீது அருள் செய்தாள். எப்படி என்றால்—ஒரு வில்வ இலையில் ஸ்ரீ ராமக்ருஷ்ண நாமத்தை எழுதி அதைத் தனது பூஜையில் வைத்து ஸ்ரீமதி காளிபாத கோஷிடம் கொடுத்தாள். அந்தப் புனித நாமத்தை ஜபித்து வருமாறும் அம் மாதிடம் கூறினாள். அதாவது அருள்வது தானல்ல, அவர்தான் என்பதுபோலக் காட்டினாள். உள் மர்மமோ அவரும் அவளும் ஒன்றே என்பதுதான்.

Koviloor Digital Library

. இது பாதிக் கதை, இந்தப் பாதி அருளின் சக்தி காளிபாதரை ரகசியமாக உந்தி மீதி பாதியைப் பூர்த்தி செய்ய வேண்டிய பரமஹம்ஸரிடம் அனுப்பி வைத்தது.

ரகசிய உந்தலை வெளிப்படச் செய்தவர் கிரிஷ் கோஷ். ஹரிவல்லபரைப் "பிடித்து" வந்த கிரிஷேதான் காளி பாதரையும் பரமஹம்ஸரிடம் பிடித்துக்கொண்டு வந்தார்.

பரமஹம்ஸம் அந்த ராஜாளியைப் பார்த்தது. "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டது.

காளி பாதர் மதுபானம் இல்லாமல்தான் அப்போது தவித்துக் கொண்டிருந்தார். (தக்ஷிணேச்வரத்துக்கும் கூசாமல் மதுப்புட்டி கொண்டுவரும் அவரது தோழர் கிரிஷ் அன்று ஏனோ கொண்டு வரவில்லை. ஒருவேளை இச் சம்பவம் கிரிஷ் அப் பழக்கத்திலிருந்து விமோசனம் பெற்ற பின் நடந்ததோ என்னவோ? அல்லது குடிப் போட்டியில் நம்மையும் இவன் மிஞ்சிவிடப் போகிறானே என்று அவர் புட்டி கொண்டு வராதிருந்திருக்கலாம்.)

அநேக பக்தர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் தங்களது இஷ்ட தெய்வத்தின் தரிசனம் வேண்டும் என்று பிரார்த்தித்திருக்கிறார்கள். காளிபாதரின் இஷ்ட தெய்வம் மது தேவதைதானே? எனவே அவர், "என்ன வேண்டும்?" என்று டாகுர் கேட்டவுடன், சற்றும் வெட்கம் மானமில்லாமல், "மது வேண்டும்" என்றார்!

"வெட்கம், மானமில்லாமல்" என்று நாம் குற்றமாகக் கூறுகிறோம். இதையே பரமஹம்ஸர் "ஒளிவு மறைவில்லாமல்" என்ற உயர்குணமாக எடுத்துக் கொண்டார் போலும். அல்லது, வெட்கம் மானம் யாவும் துறந்த அன்பும் நம்பிக்கையும்தானே உயர்ந்தது? அப்படிக் குழந்தை காளிபாதன் தன்னிடம் உண்மையான அன்போடும் நம்பிக்கையோடும் இஷ்டமானதைக் கேட்கிறான் என்று கருதினாரோ?

Koviloor Digital Library

கூடியிருந்த மற்றவர்களுக்கெல்லாம் தூக்கி வாரிப் போடும்படியாகக் காளிபாதர் மது வேண்டும் என்றபோது பரமஹம்ஸரின் முகத்தில் மநோஹரமான மந்தஹாஸம் படர்ந்தது. அவர்களுக்கு மேலும் தூக்கி வாரிப் போடும் படியாக, "மதுதானே வேண்டும்? கொடுக்கிறேனப்பா கொடுக்கிறேன்" என்றார்.

தொடர்ந்து அவர் கூறியதிலிருந்து, அவர் குறிப்பிடும் மது எதுவென்று அவர்கள் புரிந்து கொண்டு தெளிவு பெற்றார்கள். "என்னுடைய மது ரொம்பவும் வீர்யம் வாய்ந்ததாயிற்றே! உன்னால் அத்தனை போதை தாங்க முடியுமா?" என்றார்.

காளியின் பாத பத்மம் பிலிற்றும் ஆனந்த மதுவைக் காளி பாதர் கண்டாரா? எனவே நாக்கில் நீர் ஊற, "எத்தனைக்கெத்தனை வீர்யமோ அத்தனைக்கத்தனை சந்தோஷம்தான். ரொம்பவும் ஸ்ட்ராங்கான பிரெஞ்சு ஒயின் தந்தீர்களானால்கூட பாட்டில் பாட்டிலாகக் குடித்தும் போதை தாங்குவேனாக்கும்" என்று தமது 'குடிப்பெருமை' பேசினார்.

"இது பிரெஞ்சுச் சரக்கெல்லாமில்லை. ரொம்ப ரொம்ப சொந்தச் சரக்குத்தான். ஆனால் இதை ஒரு தடவை ருசி பார்த்துவிட்டால் இதன் போதையில் பிரெஞ்சுச் சரக்குக் கூடக் கழுநீராகி விடும். பிற்பாடு ஒருவிதமான மதுவையும் தொட முடியாமல் செய்துவிடும் மது என்னுடையது என்று புரிந்து கொள். அப்படியும் பரவாயில்லை என்று நீ நினைத்தால் உனக்கு அதைத் தருகிறேன்" என்றார்.

காளிபாதர் சற்று யோசித்தார். "ஒருமுறை கண்ட ருசியின் போதை என் வாழ்நாள் முழுதும் அகலாதிருக்கச் செய்வீர்களானால் உங்கள் மதுவைக் குடிக்கத் தயார்" என்றார்.

Koviloor Digital Library

அந்த மகத்தான கருணையைச் செய்ய மகா காருண்யர் திருவுளம் பற்றினர்.

"வா, கிட்டே" என்னும் பாவனையில் காளிபாதரை நோக்கிக் கரகமலத்தை அசைத்தார்.

பேராவலோடு பரமஹம்ஸரை நெருங்கினர் காளி பாதர்.

ராஜாளியைத் தொட்டது ஹம்ஸம். கையால் தொட்டது மட்டுமின்றி கண்ணேக்காலும் ஆழத் தொட்டது.

அந்த ஹம்ஸத்தின் இதயம் ஒரு மதுக்கும்பம், அல்லது அமுத கும்பம். பராசக்தியின் பேரானந்த அமுத மது நிரம்பிய கும்பம். நம் இதயத்திலுள்ள ரத்தம் உடலெங்கும் பாய்கிறதல்லவா? அப்படியே அவரது இதயத்திலிருந்த காளியின் களிரஸமும் அவருடைய புனித தேகம் முழுதிலும் பரவியிருந்தது. திவ்விய சங்கற்பம் ஏற்பட்ட சமயங்களில் அப்படிப்பட்ட அதிசய தேகத்தின் தீண்டுதலினுலேயே அந்தக் களிரஸத்தை அவரால் பிறருள்ளும் பாய்ச்சி அவர்களை திவ்ய போதை கொள்ளச் செய்ய முடிந்தது.

துன்மார்க்கக் காளிபாதர் பூர்வத்தில் என்னதான் ஸுக்ருதம் செய்திருந்தாரோ? அல்லது அவரது பத்தினியின் தீவிரப் பிரார்த்தனு பலன் தானே? இன்று பரமஹம்ஸர் ஒட்டிக்கு இரட்டியாக அவருள் களி ரஸத்தைப் பாய்ச்சினர். கையால் தொடும் ஹஸ்த தீக்ஷையோடு, நோக்கால் தொடும் நயனதீக்ஷயாலும் அவருக்கு டபுள் டோஸ் "ஒயின் ட்ரீட்மெண்ட்" கொடுத்துவிட்டார்!

"எந்த போதையும் தாங்குவேன்" என்று சவால் விடுத்த காளிபாதரால் முதலில் சிறிது நேரம் இந்த போதையைத் தாங்க முடியாமல் ஸ்தம்பித்து நின்றூர். அப்புறம் விம்மி விம்மி அழலானர். மேலும் மேலும் அது ஓலமாக ஓங்கிக் கொண்டே போயிற்று.

Koviloor Digital Library

கூடியிருந்தோர் எத்தனையோ ஸமாதானம் செய்தும் அழுகை நின்றபாடாயில்லை.

பரமஹம்ஸம் மந்த ஹாஸத்துடனேயே பார்த்துக் கொண்டிருந்தது. 'அழுகையா அது? தொழுகை அல்லவா? இந்த அசட்டுக் குழந்தை இத்தனை காலம் குடித்திருந்த மதுவையெல்லாம் இறுக்கி வெளியே வடிக்கும் பச்சாத்தாபக் கண்ணீர் அல்லவா அது? அதிலே தற்போது பெற்ற புதிய அநுபவத்தின் ஆனந்த பாஷ்பமும் கலந்திருக்கிறதே! அதை ஏன் பிரயாசைப்பட்டு நிறுத்த வேண்டும்? அதுவாக நிற்கிற போது நிற்கட்டும்' என்பதைச் சொல்லாமல் சொல்லும் மந்தஹாஸம் அது.

இப்படியாகத்தானே அன்று ஹம்ஸம் செய்த "ஸாமர்த்திய"த்தினால் அன்றிலிருந்து ராஜாளி மெல்ல மெல்ல மாற்றுருவம் கொண்டு முடிவில் ஹம்ஸ பரிவாரத்தில் சேர்ந்தது! ராஜாளி விரும்பியபடியே அதற்கு வாழ்நாள் முழுதும் நீடித்த போதையை டாகுர் அளித்துவிட்டார்.

★

அந்த ஸாமர்த்தியம் அலாதிதான் போங்கள்! அவர் நரேனைத் தொட்டால் நரேனுக்கு உடனே இகப்ரக்ஞை அற்றுப் போய் நிர்விகல்ப ஸமாதி கூடுகிறது. அவரே ஸமாதியிலிருந்து வெளிவராமல் புதைந்து கிடைக்கும் ராகாலைத் தொட்டால் உடனே ஸமாதி நிலை கலைந்து ராகாலுக்கு இக ப்ரக்ஞை கூடுகிறது! பரம ஸாதுவான ராம கிருஷ்ணருக்கு இத்தனை ஸாமர்த்தியமா?

இந்த ஸாமர்த்தியத்தை வியந்து சாரதாநந்தர் சொல்வார்: "அந்தக் கோமள ஹஸ்தம் சும்மாப் பட்டாலே போதும், மிகவும் சஞ்சல மனம் படைத்த பக்தர்களும் தங்கள் இஷ்ட தெய்வத்தின் உருவத்தைக் கண்ணுக்கு முன் கண்டிருக்கிறார்கள்; ஆழ்ந்த தியானத்தில் அமிழ்ந்திருக்கிறார்

Koviloor Digital Library

கள்; ஏன், தக்க பாத்திரங்களுக்கு அத்தொடுகையில் நிர்விகல்ப ஸமாதியின் கதவங்களே திறந்துகொண்டிருக்கின்றன".

இன்னொரிடத்தில் கூறுகிறார். "பலமுறை பார்த்திருக்கிறோம்—"குரு மஹராஜின் முடிவுகளை ஏற்கச் சற்றுது மனமில்லாத ஒருவர் அவரிடம் உஷ்ணமாக வாதம் செய்து கொண்டு போவார். அப்போது குரு மஹராஜ் சாமர்த்திய மாக அந்த நபரைத் தொட்டுவிடுவார். அம் மாத்திரத்தில் அந்நபரின் எதிரிடைக் கருத்துக்களுக்குக் காரணமாயுள்ள பலமான பூர்வ வாசனைகள் மறைந்தே போய்விடும். அவர் வாதங்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு குருமஹராஜின் கருத்துக்களைச் சற்றும் தயக்கமின்றி ஏற்றுக் கொண்டு விடுவார். இவ்விஷயமாக எங்களிடம் குருமஹராஜ், 'நான் பேசறப்போ இந்த மாதிரி சில பேரை ஏன் தொடறேன் தெரியுமா? அவாளுக்கு இருக்கிற எந்த சக்தியாலே இப்படிப் பிடிவாதமா தப்பபிப்ராயத்தைப் பிடிச்சுண்டிருக்காளோ அந்த சக்தியை இல்லாமப் பண்ணி அவாளும் உண்மையைச் சரியா, முறையா புரிஞ்சுக்க வைக்கிறதுக்காகத் தான்' என்று கூறியிருக்கிறார்." அதாவது பிறரை உத்தரிக்கும் கருணையில் பிறந்த சாமர்த்தியத்தைக் கள்ளமற்ற குருதேவர் கைக்கொண்டிருக்கிறார்.

குறிப்பாக குருதேவரின் உள்வட்டச் சீடர்கள் விஷயத்தில் இந்தத் தொடுகை மாஹாத்மியத்தைக் குறித்து அந்த உள்வட்டத்தின் ஒரு முக்யப் புள்ளியான சாரதாநந்தர் கூறிவதிலிருந்து:

தமது உள்வட்டத்தைச் சேருவதற்கென்றே பிறந்தவர்கள் இன்னார், அவர் இன்ன நாளில், இன்ன திசையிலிருந்து வருவாரென்பதையெல்லாம் தேவியிடமிருந்து முன்கூட்டியே டாகுர் அறிந்திருந்தார். 'இவ்விடத்தைச் சேர்ந்த ஒருவன் இன்று கிழக்கிலிருந்து வருவான்' என்பது போல அவர் ஒன்று சொன்னால் அப்படியே நடக்கும்! அந்த நபர் உள்ளே நுழையும்போதே டாகுர்—கன்றைத் தாய்ப்பசு போல—

Koviloor Digital Library

அவரை வாஞ்சையுடன் வரவேற்று, 'நீ இவ்விடத்தைச் சேர்ந்தவன்' என்பார். அவரைத் தனியிடத்துக்கு அழைத்துச் சென்று அவரது மார்பு, நாக்கு போன்ற ஓர் அங்கத்தை திவ்விய போதையில் தொடுவார். உடனே தொடப்பட்டவரின் மனம் உள்முகப்பட்டு, அவர் ஓரளவோ முற்றிலுமோ உணர்விழந்துவிடுவார். பிறகு அவரது முற்கால சமய சம்ஸ்காரம் யாவும் ஒன்று திரண்டு, திடீரென ஆக்கமும் ஊக்கமும் பெற்று, அவரை ஈச்வர ஸாக்ஷாத்காரத்துக்காக ஆழ்ந்து ஈடுபடச் செய்யும். இதன் விளைவாக, அதாவது குரு தேவரது ஸ்பரிச விசேஷத்தின் விளைவாக, இப்படிப்பட்டவர்களில் ஒருவர் தெய்விக ஜோதி தர்சனம் பெறுவார்; இன்னொருவர் இஷ்ட தெய்வரூபம் காண்பார்; வேறொருவர் இதுகாறும் கண்டிரா ஆனந்தத்தில் அமிழ்வார், அல்லது தியானத்தில் மூழ்குவார்; மற்றொருவர் தமது இதய க்ரந்திகள் யாவும் பட்பட்டென முடிச்சவிழ்வதை நன்குணர் வார்; அதன் விளைவாக ஒருமுகமான ஈச்வரானுபவ தாபத்தில் ஆழ்வார்; பிறிதொருவர் குணம் குறிபடைத்த பரம்பொருளை அநுபவிப்பதான ஸவிகல்ப ஸமாதி காண் பார்; அபூர்வமான ஓர் அதிருஷ்டசாலியோ குணம் குறி கடந்த பிரம்மத்தை, அதுவேயாகி அநுபவிப்பதான நிர்விகல்ப ஸமாதியே கண்டுவிடுவார். உதாரணமாக, பிற்கால சிவாநந்த மஹாபுருஷ்ஜியான தாரக் இந்த ஸ்பரிச மாத்திரத்தில் ஈச்வரானுபவம் பெற ஆராத் தாபமுற்றிருக்கிறார். அவரது இதய முடிச்சுகள் வெடித்துக் கழன்றன. இதை குருமஹராஜே கூறியிருக்கிறார். சின்ன நரேன் இத் தீண்டலினால் ஆனந்தக் களிப்பில் அலையாடி அருவக் கடவுளின் தியானத்தில் தோய்ந்தார். நரசிரேஷ்டரான பெரிய நரேனே இத் தொடுகையில் கடவுள் என்ற தத்வமும் அடிபட்டுப்போன நிர்விகல்பத்தில் நிஷ்டை பெற்றது பிரசித்தம்.

இப்படி எத்தனையோ சாமர்த்தியங்கள் செய்து அற்ப மர்த்தியரை அம்ருத புத்ரர்களாக்கிய குரு மகராஜரின்

Koviloor Digital Library

ஸ்பரிசத்தைப் பற்றிச் சொல்லும் சாரதாநந்தர், கண்ணனும் புத்தரும் இயேசுவும் சைதன்யரும் பாபியரையும், தூர்த்தரையும், வேசியரையுங்கூட ஸ்பர்ச மாத்திரத்தில் புனிதப் படுத்தியதாக நாம் படிப்பதெல்லாம் கட்டுக் கதையல்ல என்று குருதேவர் நம் முன் கண்காணக் காட்டி விட்டார் எனக்கூறித் தலைக்கட்டுகிறுர்.

(ஸ்)பரிசித்து வேதி செய்து
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பட்சத்தை என் சொல்லு கேன்?

★

எளிய குருமஹராஜரை அறிவதற்கரிய புதிராகவும் அம்பிகை படைத்திருத்தாள்! அறிவதற்கரிய அற்புத சக்தி யால்தான் மேலே நாம் கண்ட பல ரஸவாத ஸாமர்த்தியங் களை அவர் செய்தது. ஆனுல் அவர் எளியராக இருந்ததே அதிகமல்லவா? அதனுல் எப்போதோ சில சமயங்களில்தான் மன்மதை, காளி பாதரை, ஹரிவல்லபரைப் போன்ற ஒரு பித்தளையை அவர் ஸ்பரிசித்துப் பத்து மாற்றுத் தங்கமாக்கிய அற்புதராக இருந்தது. பெரும்பாலும் இப்படிப்பட்ட பித்தளைகளின் ஸ்பரிசத்தைத் தாங்கிக் கொள்ளவே இயலாத எளியராகத்தான் இருந்தார். ராஜாளியை அன்னமாக்கிய ராஜஹம்ஸமாக அவர் இருந்தது சில போதுகளில்தான். பெரும் போதுகளில் ராஜாளி அருகே வந்தாலே அதன் கூர் அலகு தம்மைக் குத்திக் குளசுவது போலத் துடித்த எளியராகத்தான் அவர் இருந்தார்.

தண்ணீர் நேராகத் தீ மீது பட்டால் தீ அணைகிறது. தீ மீது தண்ணீரைப் பாத்திரத்தில் வைத்தாலோ தண்ணீர் ஆவியாகி அழிகிறது. ராமகிருஷ்ணரின் ஸ்வச்சமான தெய்விக சக்தி தீவினையாளர்களின் தீவினையை அழித்தது. அதையே அவர் பெரும்பாலும் எளிய மானுடத்தன்மையில் ஏந்தி நின்றபோது தீவினை தெய்விகத்தைத் தாக்கிக் கொந்தளித்துத் தவிக்க வைத்தது.

Koviloor Digital Library

இந்த எளிமையிலும் ஒரு மகிமை உண்டு. உலகுக்கொரு பாடமும் உண்டு. பாபக் கதிரைச் சற்றும் தாங்கொணுத அவரது புனிதத்தின் பெரு மகிமைதான். பாபியரின் தீண்டுதல் அவரது புண்ணிய தேகத்தை எப்படிப் புண்படுத்தியது என்பதிலிருந்து, புண்ணிய மார்க்கத்தில் செல்வோரெல்லாம் தீயோர் இணக்கத்திலிருந்து எவ்வளவு ஜாக்கிரதையாக விலகியிருக்க வேண்டும் என்ற பாடத்தைப் பெறுகிறோம்.

தூய குருதேவர் இப்படித் தாக்குண்டதையும்,............ அப்புறம் நடந்ததை இப்போதே சொல்வானேன்? அடுத்த கட்டுரையைப் படியுங்கள், தெரியும்.

Koviloor Digital Library

பதித பாவன ராம; மான ரக்ஷண கிருஷ்ண

சாந்தம் பூத்த சந்திப் பொழுது.

கடு வெயில் அடங்கும் வேளையில் தக்ஷிணேச்வரத் தவ நிதியின் ஸந்நிதியில் அச்சாந்தம் மும்மடங்காய் மலர்ந்திருந்தது.

பகல் கங்குலில் ஒடுங்கிக் கொண்டிருந்த அவ் வேளையில் வெள்ளை ராமகிருஷ்ணக் குழந்தை கருங்காளித் தாயில் ஒடுங்கிக் கொண்டிருந்தது.

பக்தியில் தோய்ந்த அதன் இனிய மோனம் உடனிருந்த சில அடியர் மீது பனி நீரில் தோய்ந்த மஸ்லின் சால்வையாகப் படிந்து கிடந்தது.

வேலைக்காரி மெல்ல வந்து தூபமிட்டாள்.

மென் மணம் மோன கானத்துக்கு சுருதி கூட்டியது.

அடுத்து வந்தாள் இன்னொருத்தி—இன்னாத ஒருத்தி.

இனிய தூபத்தோடு கரிப்புகையாக இவளுமா வர வேண்டுமென அடியார்கள் எண்ணியிருக்கலாம்.

தக்ஷிணேச்வர ஆலயம் எடுத்த ராஸமணி குடும்பத்தில் ஆதி காலத்தில் பணி மகளாயிருந்து, இன்று கிழவியாகி விட்டவள் அவள். எனினும் அவளுடைய பூர்வ கதை இன்னமும் உலகுக்கு மறந்துவிடவில்லை. எத்துணைக் கால மானாலும் தூய்மைக் குறைவான விஷயங்களை உலகால் மறக்க முடிவதில்லையே!

பானகம் பருகுகையில் அதில் ஒரு சிறு துரும்பு நெஞ்சிலே குத்துகிறாற் போல, அம்பிகையின் அருளமுதைப் பருகிக் கொண்டிருக்கும் நித்ய பாலர் ராமக்ருஷ்ணரை இவள்

Koviloor Digital Library

நெருஞ்சி முள்ளாக நெருடிவிடப் போகிருளே என்று அடியார்களுக்கு அச்சம் ஏற்பட்டிருந்தால் அது நியாயமே.

அவரோ? தன்னைக் குடைய வரும் மரங்கொத்தியையும் மட்டை அசைத்து வரவேற்கும் தென்னையாக இருந்தார்.

'வேசியிடமும் என் ஸர்வேசியையே பார்க்கிறேன்' என்றவர் அவர். பகவதி என்று பெயருள்ள இந்த மாதையும் அவர் மாதா பகவதியாகவேதான் பார்த்தார் போலும்.

எட்ட நின்றே அவரை வணங்கிய அவளை, "வாம்மா, உட்காரம்மா" என்று பரிவோடு வரவேற்ருர், உட்கார வைத்தார்.

நனைந்த ஸல்லாச் சால்வைக்கு எதிர்வெட்டாகக் குத்திப் புழுக்கும் கம்பளிப் போர்வையாக வந்தவளிடம் காசிப் பட்டாக இழைந்து உரையாடலானுர் குருமஹராஜ். அவளை இழிவாக நினைப்போரின் கருத்தில் அவளை உயர்த்த வேண்டும் என்று உத்தேசித்தவர் போலப் பேசலானுர்.

"உனக்கு ரொம்ப வயஸாயிண்டு வரதே அம்மா! வைஷ்ணவாளுக்கும், மத்த ஸாதுக்களுக்கும் பிக்ஷை, கிக்ஷை பண்ணிண்டு இருக்கியா?" என்று விசாரித்தார்.

(வங்காளத்தில் கணிசமான அளவில் உள்ள ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபுவின் அடியார்களை அங்கு 'வைஷ்ணவர்' என்று குறிப்பிடுவார்கள்.)

பாகவதர்களுக்கு பகவதி பிக்ஷா கைங்கர்யம் செய்கிருளென்று ஸ்ரீ ராமக்ருஷ்ணர் தெரிந்து வைத்துக் கொண்டேதான், பிறருக்கு அது தெரிய வேண்டுமென்பதற்காக இப்படிக் கேள்வி கேட்கிருரென்று அவர் கேட்ட பாவனையிலிருந்தே புரிந்து விட்டது.

பகவதி புத்திசாலினி. எனவே, பழிப்புக்குரிய தனக்கு அவர் புகழ் ஸம்பாதித்துத் தர இருக்கும் இப்போது அடக்க குணம் காட்டிப் புகழை மேலும் பெருக்கிக்கொள்ள எண்ணினுள்.

Koviloor Digital Library

எனவே அவர் கேட்டதற்கு, "ஆமாம்" என்று பதில் சொல்லாமல். "அதை எப்படிங்க நானே சொல்லிக்கறது?" என்றாள் நாணல் - கோணல் சிரிப்புடன்.

அதை குருமஹராஜ் ரஸித்திருக்க வேண்டும். எனவே, தொடர்ந்து, "பிருந்தாவனம், காசி முதலான ஸ்தலங்களுக் கெல்லாம் க்ஷேத்ராடனம் செஞ்சிருக்கியோல்லியோ?" என்று, முன்போலவே 'ஆமாம்' - விடையை உள்ளே தேக்கிய வினவான ஒரு 'லீடிங் க்வெஸ்ச்ச'னை விடுத்தார்.

அவளும் ஸாமர்த்தியத்தைத் தொடர்ந்தாள். "ஆமா"மை அப்பட்டமாக அவிழ்த்து விடாமல், உடம்பை யெல்லாம் கூனிக் குறுக்கிக் கொண்டு, "என்னமாங்க நானே சொல்லிக்கிறது?" என்று எதிர்க் கேள்வி கேட்டாள்.

தான் சென்ற க்ஷேத்ரங்களில் செய்த சாச்வத தர்மங் களைப் பற்றியும் டாகுர் ஸ்ரீ ராமக்ருஷ்ணர் அறிந்திருப்பார்; எனவே அடுத்து அதையும் கேள்வி ரூபத்தில் வெளியிடுவா ரென்று பகவதி எதிர்பார்த்திருக்க வேண்டும்.

ஆனால் டாகுர் கேட்கக் காணோம்.

புகழ் அரிப்பு யாரை விட்டது? அதனால், "எப்படிங்க நானே சொல்லிக்கறது?" என்று இவ் விஷயத்தை விட்டு விடாமல் பகவதியே ஆரம்பித்தாள் : "காசியிலே நாம்பளே கூட ஒரு படித்துறை கட்டியிருக்கோமுங்க...!"

"அடடே!" என்று அதை ஆர்வத்தோடு கேட்டு ஆர்ப்பரித்தார், குழந்தையின் 'பிரதாப'த்தைக் கேட்டுத் தட்டிக் கொடுக்கும் அம்மையப்பர்.

"ஆமாமுங்க! படித்துறையில் நம்ப பேரைக் கூடச் செதுக்கி வைச்சிருக்காங்கோ!"

குருமஹராஜ் பொன் முகத்தில் புன்னகை படர "பேஷ், பேஷ்!" போட்டார்.

'தன்னையும் மநுஷியாக மதிப்பார்களா?' என்று பின் தங்கி நின்றவளின் புகழாசை ஓங்கி ஓங்கி, 'தான்' நன்றாகத்

Koviloor Digital Library

தலைக்கேறி விட்டது. ''ஆமாங்கோ ஸ்வாமீ! கங்கா கட்டத்திலே 'ஸ்ரீமதி பகவதி தாஸி'ன்னு நம்ப பேரை நல்லாக் கல்லாலே பொறிச்சு வைச்சிருக்குங்கோ'' என்றாள்.

"பலே, பலே" என்று மந்தஹாஸம் செய்தார் மதுர விஷமர்! எத்தனை சமர்த்தையும் அசடாக்கிவிடும் தமது மஹா மாதாவான மஹா மாயாவுக்குத்தான் 'பலே' போட்டாரோ என்னவோ?

'தான் இனி இழிவுக்குரியவளல்ல; பெருமைக்குரிய புண்யசாலினியாக 'பேஷு'ம் 'பலே'யும் வாங்கியாயிற்று என்ற எண்ணம் பகவதியின் தலைக்கேறி விட்டது.

அவ்வளவுதான்! குருமஹராஜை மிகவும் நெருங்கிச் சடேரென்று அவரது பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்து விட்டாள்.

உட்குருத்தையும் குடைந்து கொண்டு மரங்கொத்தி தென்னையை ஆழக் குத்திவிட்டது!

குருமஹராஜின் திருவுடல் என்பதை ஒரு அற்புதப் புதிராகப் படைத்திருந்தாள் பராசக்தி. பக்குவர்களையும், பக்குவம் பெற விழைபவர்களையும் அவர் தீண்டிவிட்டாலே போதும், அவர்களுள் ஆன்மிக-தெய்விக மின்ஸாரம் பாய்ந்து விடும். பரம அபக்குவிகள் சிலரையும் அவர்களது பூர்வ ஸுக்ருதத்தாலோ, காரணமற்ற அதீத கருணையாலோ பக்குவராக்கப் பராசக்தியின் சங்கற்பம் ஏற்படுகையில் அவர்களை ஸ்ரீ ராமக்ருஷ்ணர் தொட்டு ஆன்மிய மின்சாரம் பாய்ச்சியிருக்கிறார். மாறாக, பொதுவில் அதே திருமேனியைப் பதிதர் தீண்டிவிட்டாலோ அவரது உடலுள் அவர்களது பாபக் கர்மம் மின்ஸாரமாகப் பாய்ந்து அவரைப் பதற அடித்துவிடும்.

இன்று அப்படித்தான் நடந்தது.

பகவதி பரமஹம்ஸரைத் தீண்டியதுதான் தாமதம், பாம்பு தீண்டினாற் போலப் பதைத்தெழுந்தார் அவர். "கோவிந்தா!" என்று அலறியவாறு அறையின் மூலைக்கு

Koviloor Digital Library

ஓடினார். அங்கு ஜாடியிலிருந்த கங்காதீர்த்தத்தைப் பாதத்தில் கொட்டிக்கொண்டு, அங்கே படிந்துவிட்ட பாதகத்தைக் கழுவிக் கொண்டார்.

"கோவிந்த! புண்டரீகாக்ஷ! ரக்ஷ மாம் சரணாகதாம்!" என்று பாஞ்சாலி அலறிய போதே பரமாத்மா அவளது துகிலை வளரச் செய்து மான ஸம்ரக்ஷணம் புரிந்தான்.

இன்று பரமஹம்ஸர் அதே கோவிந்த நாமம் கூறி அழைத்தபோது,

பகவதியின் மானம்...?

அவளை இழிந்தவளென அடியார்கள் அவமானம் செய்யக் கூடாதென்றே அவளுடைய தெய்வத் தொண்டுகளை குருமஹராஜ் வெளிப்படுத்தி பகுமானம் செய்ய எண்ணியும் முடிவிலே ஏன் இப்படித் தலைகீழாக வேண்டும்?

ஆம், தலை தாழ்ந்து கீழே அவன் தாளைத் தொடத்தான் வேண்டும். அல்லாமற் போனால் தொண்டும்கூட அஹந்தையைத்தான் கொழுக்கச் செய்யும். அவதார புருஷர்கள் அதற்கு இடம்தர முடியாது. அதன் தலையில் ஒரு போடு போட்டேனும் இறக்குவதே அவதாரப் பணி. பாஞ்சாலிக்குத் துகிலளித்த முகில் வண்ணனே, அஹங்கரித்து ஆடையின்றி நீராடிய ஆய்மகளிரின் ஆடைகளைக் கவர்ந்து அவர்கள் மானாபிமானம் விட்டுத் தன்னை சரண் செய்ய வைத்தவனல்லவோ? அவதாரத்தின் உச்சப்பணி ஒரு ஜீவன் மான, அவமான, அபிமான, அஹங்கார உடுப்புக்களையெல்லாம் களைந்து தன்னுடைய குழந்தைத் தூய்மையுடன் நிற்குமாறு செய்வதுதான்.

ராமகிருஷ்ண அவதாரத்திலோ ஒரு விசேஷம். ஒரு ஜீவன் மானாபிமானம் விட்டுத் தானாக நிற்கத் துணியவிடாமல் அதன் பாபகர்மா தடுக்கும்போது அவரே அந்தப் பாப கர்மாவை வாங்கிக்கொள்வதுண்டு. அந்தப் பரமத் தியாகத்தைத்தான் அவர் இன்றும் செய்தார். பகவதியின்

Koviloor Digital Library

பாபச் சுமையை வாங்கிக் கொண்டு அது தம்மைத் தாக்கித் தவிப்புறுத்தச் செய்தார். இம்மாதிரி ஒரு முறை ஓர் அடியாரின் பாபத்தில் ஒரு பகுதியை அவர் வாங்கிக் கொண்டு தீர்ப்பதே பிற்பாடு அவர்கள் மானுபிமானம் விட்டுத் தங்களைப் பரிசுத்தி செய்து கொள்வதற்குப் பெரிய தூண்டுகோலாகிவிடும்.

பகவதியின் பாபத்தில் ஒரு பகுதியைக் கழுவியபின் பரமஹம்ஸர் தன்னியல்பான தண்புனலாகக் குளிர்ந்தார். இனிமையாய்ப் பேச ஆரம்பித்துச் சூழலின் இறுக்கத்தை இளக்கத் தொடங்கினுர்.

குன்றிச் சவமாக உட்கார்ந்துவிட்ட பகவதிக் குழந்தை இனி இங்கே வராமலே இருந்து விடுமோ என்று எண்ணி ஒரு தாயின் பரிவுடன் அவளிடம் கூறினுர்: "வந்து கொண்டிரு அம்மா! ஆனுல் கொஞ்சம் தள்ளியிருந்தே நமஸ்காரம் பண்ணு. அதுவே போறும்."

இப்படிச் சொல்வதும் பிழையை அம்பலப்படுத்துவ தாகத்தான் இருக்கிறது. 'பேச்சு என்ருல் இப்படித்தான் இருக்கும். தனிமனிதர்களைத் தொடர்புறுத்தும் பேச்சில் தனிமனித அவலங்கள் சேரத்தான் சேரும். விச்வ உணர் வையே தழுவும் கானம்தான் எந்த அவலமும் சேராதது. அதுவே இப்போது இக்குழந்தைக்கு இன்மருந்தாகும்' என்று கருதினுர் போலும் அநுதாப அவதாரர்.

"கொஞ்சம் பாடறேன், கேளு" என்று கொஞ்சும் குழந்தையாக அவளிடம் கூறித் தமது சிறிய கட்டிலில் அமர்ந்தார்.

ஆதி பகவதியின் அன்பிலே சிக்கி, அழகிலே சொக்கி, அமுதாய் இசைத்தார்:

கருந்தா மரையாம் காளிப தந்தனில்
பொருந்திய தென்றன் புந்தித் தேனீ

Koviloor Digital Library

மேலும் பாடினார், பாபத்தின் பாழ்கதிக்குப் பரிதவித்துப் பாடினார்:

காற்ரு டியெனஎன் கருத்து காத்யாயனி
பதவிணை நோக்கிப் பறந்திட, அந்தோ!
ஆற்ரு வேகச் சூருவளியாய்
பாபச் சுமையதைப் பார்மிசை சாய்த்தது.

பின்னரும் பாடினார்—பாபம் தொடாப் பாவனப் பரம் பொருள் நம்முள்ளேயே நலமுறக் குலவுவதைக் காட்டி:

விரும்பிய யாவும் விருந்திடு வேந்தன்
இரும்புபொன் செய்யும் இரசவாதி—யுன்
இருதய குகையினுள் இரத்தின மாக
இருப்ப துணர்வாய்; உள்கி உன்னுளே!

எந்த ஞானோபதேசமும் செய்ய முடியாததை கானம் செய்துவிட்டது. மான அவமானங்களுக்கு அப்பாற்பட்ட வான விசாலத்தை பகவதியின் மீதும், மற்ற பாகவதர்மீதும் விரித்துவிட்டது ஹம்ஸ கீதம், பரம ஹம்ஸ கீதம்.

★

"ராமனுகவும் கிருஷ்ணனுகவும் எவன் இருந்தானே, அவனே ராமகிருஷ்ணனுக இவ்விடத்தில் இருக்கிருன்" என்று எளிமையின் எல்லை நிலமான ஸ்ரீ ராமகிருஷ்ணரே தம்மை விவேகாநந்தருக்குத் தெரிவித்துக் கொண்டதுண்டு. பழைய அவதாரங்களில் ஒரு புதுமை கூடினுல்தானே புதிய அவதாரம் ருசிக்கும்? பதித பாவன ராமன் அஹல்யையின் பாவத்தைப் பாத ஸ்பரிசத்தாலேயே போக்கினுலும், புது அவதாரத்தில் ஒருபுறம் பதிதரின் ஸ்பரிசத்தையே தாங்க முடியாதவனுகவும், மறுபுறம் பதிதரின் பாவத்தைத் தானே வாங்கித் தீர்ப்பவனுகவும் விளையாடினுன். த்ரௌபதி மான ஸம்ரக்ஷகன் புது அவதாரத்தில் மானம் காத்தவருக்கே மானம் நீத்த மாண்பு நிலைக்கும் வழிகாட்டினுன்.

Koviloor Digital Library

அவதாரரும் ஆசார மரபும்

அம்மாவுக்கு (ஸ்ரீ சாரதாமணி தேவிக்கு)ச் சின்னம்மை வார்த்தது......தினமும் சீதளா (மாரியம்மன்) கோயில் அர்ச்சகர் வந்து வேப்பிலை போட்டார். அம்மா கழுத்தைச் சுற்றிப் புடைவைத் தலைப்பை முடிந்து சம்பிரதாயப்படி அவரை நமஸ் கரிப்பாள்.

ஒரு பக்தர், "அம்மா, நீங்க ரொம்ப எளிமை யானவர் என்பது உண்மை. ஆனாலும் குரு மஹராஜின் பத்தினி என்கிறதுக்காகவாவது நீங்க இந்தப் பூசாரிக்கு விழுந்து நமஸ்காரம் பண்ணும இருக்கணும். இவன் சாமானிய ஆள்" என்றார்.

"அது எப்படி வேணுமானு இருக்கட்டும். அவர் அம்பாளைத் தொட்டுப் பூஜை பண்ணுகிற பிராம்மணர். அவாளை நமஸ்காரம் பண்ணுவது சம்பிரதாயம். அவாவாளுடைய ஸ்தானத்துக் கான மரியாதையைத் தரத்தான் வேணும். குரு மஹராஜ் பழைய ஆசாரங்களை அழிக்கிறதுக்காக வரலைன்னு புரிஞ்சுக்கோ" என்றாள் தேவி.

அம்மா: அத். 39

நிலா பெய்து கொண்டிருக்கிறது. நிலா போலவே இனிமையாக, இத சீதமாக, இலேசாக, வெள்ளையாக ஸ்ரீ பரம ஹம்ஸ ராமகிருஷ்ணர் யதுமல்லிக் வீட்டுக்குச் செல்கிறார். பக்தர் பரிவாரம் உடன் செல்கிறது.

அன்பு அச் சூழலில் மல்லிகையாக வெண்மணம் பரப்பு கிறது.

Koviloor Digital Library

அன்பின் ஆதாரமான ஆதி மாதா ஸிம்மவாஹினியாக அழகுக் கோலம் கொண்டுள்ள பூஜையறைக்கு அவளுடைய ஆருயிர்க் குழந்தையார் எழுந்தருளுகிறூர்.

அன்னையின் அன்பழகை அடியார் நெஞ்சில் நன்கு மணக்கவிடும் விதத்தில் மலரலங்காரம் செய்திருக்கிறது. சுடர்த்தீபம் அன்புணர்ச்சிக்கு ஒளி கூட்டுகிறது. எல்லோர் இதயமும் தன்னுல் ப்ரேம பக்தியில் குவிகிறது. தன்னுல்! சடங்கும் துதியும் தூண்டுவித்துத் தூய்மை செய்யத் தேவையின்றி எல்லா பக்தர் உள்ளமும் தாளுகவே அன்பின் பரிபூர்ண பரிசுத்தியில் குவிகிறது.

குவிவது என்றுலென்ன? கட்டுப்பாடின்றிச் சிதறுவதையே இயல்பாகக் கொண்ட மனம் அப்படியின்றிக் கட்டுப்பட்டு ஒருமையுறுவதுதானே குவிதல்? சிதறும் சித்தத்தைக் கட்டுப் படுத்த உதவியாகவே ஆன்றோர் சடங்குகள், தோத்திர பாராயணம் முதலியவற்றை வகுத்துத் தந்தனர். இன்று இங்கு அவற்றின் அவசியமில்லாமல் பாவனமான ப்ரேமை எழுச்சியிலே தாளுக மனங்கள் குவிகின்றன. அதற்கேற்க அவர்கள் அறியாமலே அவர்தம் கைகளும் குவிகின்றன.

மற்ற அடியாருக்கே இப்படிப்பட்ட பக்தி ஈடுபாடு ஏற்படும்போது, பக்தித் தத்துவமே புருஷாகாரமாக வடிந்த டாகுர் எத்தகைய உணர்வை அடைந்திருப்பார்? ஸமாதி நிலேக்கே சரசரவென இழுப்புண்டு, அதிலே சொருகிப் போயிருப்பார் என்று ஊகிக்கிறீர்களல்லவா?

உங்கள் ஊகம் சரிதான். இன்னும் சில விநாடிகளுக்கப் புறம் அவர் ஸமாதியில் ஆழ்ந்து விடத்தான் போகிறூர்.

ஸமாதி விளிம்பில் அவர் உள்ள இந்த விநாடி அவருடைய பார்வை அன்னேக்கு அருகே அமர்ந்திருந்த அர்ச்சகரின் மீது படுகிறது. அதன்பின் பாலான பார்வை உடன் வந்த அடியார் ஒருவர்மீது திரும்புகிறது. அந்த அடியாரிடம் டாகுர், "ஒரு ரூபாய் தக்ஷிணே போடப்பா!

Koviloor Digital Library

அம்பாளை தரிசிக்க வந்தால் தக்ஷிணை செலுத்த வேண்டும்" என்கிறார்.

என்ன ஆச்சரியம்! பொதுவாக நம் போன்ற சாமானியர் தாம் தக்ஷிணை தருவது போன்ற விஷயங்களைப் பெரிதாக நினைப்போம். தெய்வ ஸந்நிதானத்துக்குப் போனாலும் மூர்த்தியை ஆழ்ந்து நோக்கி நெஞ்சில் இறக்கிக் கொள்ள எந்த முயற்சியும் செய்யாமல், குருக்களின் பார்வையைக் கவர முடியுமா, அவருடைய தட்டில் நாம் கொண்டு வந்திருக்கும் சூட வில்லையையோ, காசையோ போட முடியுமா என்பதிலேயே முனைப்பாயிருப்போம். இந்தக் காணிக்கையைச் செலுத்தி ஏதோ இரண்டு முறை கன்னத்தில் போட்டுக் கொண்டுவிட்டால் வழிபாடு முடிந்து விட்டதாகக் கருதி நகர்வோம். சமயச் சீர்திருத்தவாதிகள், நவகால வேதாந்தியர் ஆகியோர் இது காரணமாகவே சடங்குச் சக்கைகளை விட்டு, தாத்பரியமான ஸாரத்தை கிரஹிக்க வேண்டுமென நமக்கு 'உபதேசித்த'படி இருக்கிறார்கள். ஆனால் தக்ஷிணைச் சடங்கைப் பற்றிய எண்ணம் எழாமல், தன்னியல்பாகவே ஸார ஸாரமான பக்தியில் தம்முடன் வந்த சாமானியரும் ஈடுபட்டு நின்ற சமயத்தில், தாமோ ஸமாதி நிலைக்கே நழுவ இருந்த தருணத்தில், எந்தச் சடங்கும் தேவையற்ற அவதார குருமஹராஜர் தக்ஷிணையை நினைவூட்டுகிறார்!

நெடுங்காலமாக நம் நாட்டிலே வழக்கத்திலிருந்து அதனாலேயே வஜ்ரம் பாய்ந்துவிட்ட ஆசார சம்பிரதாயத்துக்கு அவதாரர்களும் தரும் மதிப்பைக் காட்டுவதே இது! தெய்வமும் நர தேகம் கொள்கையில் வழி வழி வந்த மரபு அதன் ரத்தத்தோடு சித்தத்தோடு கரைந்து ஓடுவதற்கு எடுத்துக்காட்டு.

★

மானுடருக்கு ஆதரிச வாழ்நெறி காட்டிய ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி ஆசார முறைகளை அணு அணுவும் பின்பற்றியவர்.

Koviloor Digital Library

கானகத்தில் தந்தைக்கு அன்ன பிண்டமிட முடியாவினும் அதற்காகப் பிதிரர் கடனை விட மாட்டார். காட்டிலே தாம் உண்டு வந்த இங்குதிப் பிண்ணுக்கையேனும் பிண்டமாகப் போடத்தான் செய்வார்!

ஸ்ரீ ராமகிருஷ்ணரும் தாயார் சந்திரமணி தேக வியோகமான பின் அவளுக்கு நீர்க் கடன் வார்ப்பதற்காக கங்கை நதிக்குச் சென்றார். இது நமது தேச ஆசாரமாயிற்றே என்பதால் தாம் துறவியாயினும் இப்படிச் செய்தார். ஆனால் துறவியின் ஆசாரம் வேறு ஆயிற்றே என்று அம்பிகை கருதினாள். இவர் என்னதான் முயற்சி செய்தாலும் கையிலே கங்கை நீரை எடுக்கவே முடியாமல் செய்தாள்! கிருஹஸ்தரான ராமபிரான் பிதிர்க் கடன் செய்ய முடிந்ததே தவிர சந்நியாசி ராமகிருஷ்ணர் அப்படிச் செய்ய இயலவில்லை! அவதாரர்கள் மட்டுமின்றி ஆதி பராசக்தியுமே ஆசார வியவஸ்தைகளை முறை மீறாமல் அமல் செய்யும் அருமை எனலாமோ?

ஒரேயடியாகச் சடங்குகளையும் சம்பிரதாயங்களையுமே பிடித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று எந்த மஹா புருஷரும் சொன்னதில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணரும் நிச்சயமாக அப்படிச் சொல்லவேயில்லை என்று அழுத்திக் கூற விரும்புகிறோம். இந்தக் கட்டுரையில் அவர் எப்படி நமது ஆசாரங்களையும் நம்பிக்கைகளையும் அநுஷ்டித்துக் காட்டினார் என்பதை மட்டுமே தொகுத்துக் கூறுவதால் அவர் கடுமையான ஓர் ஆசாரவாதி, பழைய வழக்குகளையே கட்டிக் காத்தவர் என்ற தப்பபிப்பிராயத்துக்கு ஆளாகிவிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறோம். அப்படி அபிப்பிராயப்பட்டால் அது பொரியலில் தாளிதமான கடுகுகளை மட்டும் தனியே பொறுக்கி எடுத்துக் காட்டுவதைப் பார்த்துப் பொரியலே கடுகினால் ஆனதுதான் என்று எண்ணினாற் போலாகும்!

பண்டைய பழக்க வழக்க ஆசாரம்தான் மதஸாரம் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லவுமில்லை, காட்டவுமில்லை.

Koviloor Digital Library

அதே போதில் அதை அப்படியே கழித்துக் கட்டிவிட வேண்டும் என்றும் சொல்லவோ காட்டவோ இல்லை. பொரியலுக்குக் கடுகு போல சமய வாழ்க்கைக்கு ஆசாரங்களும் பண்டைய நம்பிக்கைகளும் வேண்டும் என்பதே அவரது உயிருதாரணத்திலிருந்து நாம் பெறுவது. கடுகே இல்லாத பொரியலில் சுவை ஏது? கடுகு அதிகமாகிவிட்ட பொரியலில் ஸத்து ஏது?

ஸ்ரீ ராம சரிதத்தில் மட்டுமின்றிக் கண்ணன் கதையிலும் இந்தக் கடுகுகள் உண்டு என்பதிலிருந்து நமது நாட்டினரின் வழக்க, பழக்க, நம்பிக்கைகளுக்கு உள்ள வலிவை உணரலாம். ராமனைப் போல மானுட ஆதர்சமாக மட்டும் வாழாமல் அதிமானுடமாகவும் தன்னை நன்கு காட்டிக் கொண்டவன் கண்ணன். யாகம் முடியுமுன்பே ஆயப் பிள்ளைகளுக்கு அன்னம் கேட்பது, நெடுநாள் வழக்கான இந்திர பூஜையை நிறுத்திப் புது வழக்காக கோவர்தன மலைக்குப் பூஜை தொடங்குவது என்றிப்படிப் பல, சம்பிரதாயத்துக்கு மாறாகவும் செய்தவன் கண்ணன். ஆனால் பாகவத, பாரதங்களைப் பார்த்தால் எத்தனை விஷயங்களில் அவன் சம்பிரதாயத்தை மதித்து அதற்கு அடிபணிந்து நடந்திருக்கிறானென்றும் காண்போம். குறிப்பாக, ஸ்ரீ ராமகிருஷ்ணர் தேவிக்கு தக்ஷிணைச் சடங்கு செலுத்தச் சொன்னதை எண்ணுகையில் கண்ணன் அவளுக்கு ஸ்தோத்திரச் சடங்கு செலுத்தப் பணித்தது நினைவு வருகிறது.

பாரதப் போர் தொடங்கவிருக்கும் சமயம். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மனே சாரதியாகத் துணை நிற்க, ஐயத்துக்கிடமின்றி தெய்வ பலம் பெற்றுவிட்ட பார்த்தன் வெகு உற்சாகத்துடன் பீஷ்மரைத் தாக்க ஆயத்தமாகிவிட்ட சமயம். அப்போது அந்தப் பரமாத்மன்—இந்த பாரத யுத்தத்தின் முடிவைத் தான் ஏற்கெனவே சங்கற்பித்துவிட்டதை கீதோபதேசத்தினிடை வியக்தமாகக் காட்டப்போகும் பரமாத்மன்—சாமானிய மானுடனாகி மானுடர் மரபை நினைவு கொள்கிறான். பார்த்தனிடம், "யுத்த ஜயத்துக்கு துர்க்கா

Koviloor Digital Library

தேவியைப் பிரார்த்திக்க வேண்டும். அவளைத் தோத்திரம் செய். அதன் பிறகு போர் தொடங்கு" என்கிறுன்.

ஸாத்விகமாக திரவிய தக்ஷிணை தந்து தேவியின் பிரீதியைப் பெறுவதை மட்டுமா டாகுர் சொன்னுர்? இக் காலத்தில் நம்மால் தாங்கவே முடியாததாக, உயிர்ப் பலி தந்தும் அவளை உகப்புறச் செய்வதாக உள்ள நம்பிக்கைக்கும்கூட அவர் கட்டுப்பட்டிருந்தார். வங்காளத்தில் காளி பூஜையில் இன்றும் அவ்வழக்கம் நின்றுபோன பாடாக இல்லை. நூருண்டு முன் குரு மஹராஜ் வாழ்ந்த காலத்திலோ அது தண்ணீர் பட்ட பாடாகவே இருந்தது.

ஒரு பெரிய சமய நாகரிகத்திலே நல்ல வழக்கு, தீய வழக்கு இரண்டும் கலந்துதானிருக்கும். மனித வாழ்க்கையில் நன்மை தீமையும், இன்ப துன்பமும் கலந்தே வருவது போலத்தான் இது. இப்படிப்பட்ட வழக்குகளில் நல்லதோ அல்லதோ எதுவாயினும் மிகப் பரவலாகவும் ஆழமாகவும் படர்ந்துவிட்ட ஒன்றினை ஒரு மஹாபுருஷர் மறுக்கிருர், முறிக்கிருர் என்னும்போது என்னவாகி விடும் தெரியுமா? அந்தப் பெரிய சமய நாகரிகத்திலேயே மக்கள் நம்பிக்கையும், மதிப்பும் இழந்து விடுவார்கள். அப்புறம் கொழு கொம்பற்றக் கொடி ஆகிவிடுவார்கள். இவ்விதம் நேராமலிருக்கவே மஹாபுருஷர்கள் மாந்தருக்கு மிகவும் விட்டுக் கொடுத்து, அவர்களுடைய தீவிரமான வழக்குகளை அநுசரித்தே காட்டுவார்கள். சிறிது சிறிதாக அவர்களே நல்லறிவு பெற்று இவற்றில் கொடுமையானவற்றை விடுவதற்கு ஊக்குவார்களே யல்லாமல், ஒரே போட்டில் அவற்றை வெட்டி வீழ்த்தமாட்டார்கள். பாமரரைப் பக்குவமாகப் பக்குவராக்குவதற்காகவே பக்குவரும் பாமரரின் நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தைக் கண்ணன் கீதையின் மூன்ருவது அத்தியாயத்தில் (குறிப்பாக 25, 26 ச்லோகங்களில்) வெகு அழகாகவும் அழுத்தமாகவும் எடுத்தியம்பியிருக்கிறுன். அவ்விதம்தான் அவன் பாரதப் போரில் களப்பலி கொடுக்கச் செய்ததும்.

Koviloor Digital Library

உயிர்ப்பலி குறித்து நம் டாகுர் சரிதையில் உள்ளத்தைத் தொடும் ஒரு நிகழ்ச்சி உண்டு. தம்மளவில் சகித்துக் கொள்ள முடியாத பிராணி வதையை சமூக வழக்கை யொட்டி அவரே நினைவூட்டிய நுட்பமான தியாக நிகழ்ச்சி;

1884 காளி பூஜை இரவு. தக்ஷிணேச்வர அர்ச்சகரான ராம்லால் நமது குருதேவரைப் பணிந்து, பாத தூளியை அணிந்து, வழிபாட்டுக்குப் புறப்பட அநுமதி கோரினார்.

காளி என்ற மாத்திரத்தில் உட்களிப்பில் ஆழ்ந்த குருதேவர், "ஓம் காளி! ஓம் காளி!" என்று சாந்த மயமாய் சொன்னார். அதோடு நில்லாமல், "கவனமாகப் பூஜை பண்ணு" என்று ராம்லாலைப் பணித்தார்.

ஸம்பிரதாய ஆசரணைகளின்படி பூஜை செய்யவே முடியாத பராபக்தி ராமகிருஷ்ணருக்குப் பெருக்கிட்ட பின்தான் அவர் அர்ச்சகர் கடமையை விடும்படி ஆயிற்று. ஆயினும் அந்த ஆசரணைகளை இவர் விடாமல், அவையே இவரை விட்டனவல்லவா? அந்த நிலையை ராம்லால் அடைய வில்லையே! அதனால்தான் பூஜை மரபு வழுவாமல் அவர் ஜாக்கிரதையுடன் எல்லா அம்சங்களையும் யதோக்தமாகச் செய்ய வேண்டும் என்ற கருத்தில், "கவனமாகப் பண்ணு" என்றார்.

அதோடும் நிற்கவில்லை. அவருடைய கவனத்தில் ஒரு விஷயம் தப்பிவிடக்கூடாது என்று குறிப்பாக அதை நினைவு படுத்தினார். நமக்கு ஏற்பாக இல்லாத உயிர்ப் பலிதான் அது. "பலிக்காக ஒரு ஆடு இருக்கிறது" என்றாக்கும் ஆட்டுக் குட்டியாக மகா அம்மாவிடம் ஒட்டிக் கொண்டிருந்த மென் மனத்தவரே ராம்லாலுக்கு நினைவூட்டினார்!

பூஜை ஆரம்பித்த பின் தாமும் அடியார் சூழ அதற்குச் சென்றார்.

ஆடு பலி பீடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டது.

Koviloor Digital Library

அதை நினைவூட்டிய மென்மனத்தவருக்கோ அங்கே நிற்கவே இயலவில்லை. அறைக்குத் திரும்பி விட்டார்.

மரபை மதிக்கும் மாண்புக்கு இதைவிட ஒன்று வேண்டுமா?

மறுதினம் ஸிந்தி பிரம்ம ஸமாஜத்துக்கு டாகுர் விஜயம் செய்த போதும்கூட பலி விஷயம் அவர் சிந்தனையை விட்டு அகலவில்லை. பின் ஏன் அவர் அவ்வழக்கத்தை அகற்ற வில்லை என்பதற்கும் அப்போது அவர் கூறியதில் பதில் இருக்கிறது. கூறினார்: "ஒவ்வொரு பக்தனும் தன் நிலைக்கு ஏற்க பக்தி செய்கிறான். ஸாத்விகன் பாயஸம் நிவேதிக்கிறான். ராஜஸிகன் ஐம்பது விதக் கறிகாய்களுடன் படைக்கிறான். தாமஸிகன் ஆட்டையோ வேறு மிருகத்தையோ பலி கொடுக்கிறான்."

தாமஸிக மரபை ஏற்கவும் தாமதிக்கவில்லை நம் தயாவதாரர்.

ஆயினும் காலக்ரமத்தில் அம்மரபு எப்படி ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்திலும், அவரது அடியார்களிடையும் எடுபட்டுப் போய்விட்டது பாருங்கள்! இன்று அவரது திரு நாமம் கொண்ட மடங்களில் ஜீவ பலியை எண்ணியும் பார்க்க முடியுமா? அவரது பக்தர்கள் ஜீவ பலியைக் கனவிலும் கருதுவார்களா? ஸ்வாமி விவேகாநந்தர், பூஜ்ய பிரம்மாநந்தர் ஆகியோரின் காலத்திலும் கூட பலி நடந்தது. அது மட்டுமின்றி அவ்விருவரும் அசைவ போஜனத்தையுங்கூட ஆதரித்திருக்கிறார்கள். ஆயினும் இன்று ஸ்ரீ ராமகிருஷ்ணரை குருமஹராஜாகக் கொண்டவர்கள் இவற்றை ஏற்பதில்லை என்பதிலிருந்தே ஸூக்ஷ்மமாகவும் ஒரு மஹாபுருஷரின் அளாவல் மெல்ல மெல்லப் பக்குவப் படுத்துகிறதென்பது விளங்குகிறதல்லவா?

தம் காலத்துக்குப் பிறகு அவர் ஸூக்ஷ்மமாகச் செயற்பட்டு பக்தர்கள் கடும் ஆசாரத்தைவிடச் செய்தது இருக்

Koviloor Digital Library

கட்டும். இதைவிட முக்கியமானது, அவர் ஸ்தூலமாக வாழ்ந்த காலத்தில் ஆன்மியப் பயனுள்ள ஸதாசாரங்களை ஏற்குமாறு அநேகரை ஊக்கியதுதான். அக்காலத்தில் படித்த மக்களிடையே மேனாட்டு மோஹத்தினால், 'நம் முன்னோரின் மத வழக்குகள் யாவுமே அர்த்தமற்றவை' என்ற கருத்து ஓங்கி வந்தது. அவர்கள் எல்லா சாஸ்திரீய விதிகளையும், நெறிகளையும் விடத் தொடங்கியிருந்தனர். இச் சமயத்தில் டாகுர் அவதாரம் நிகழ்ந்தே இவற்றைக் காத்துத் தந்தன. வெறும் புற விஷயங்கள்தாம் என்று மேனாட்டுமோஹிகள் அடி நிலையிலேயே தள்ளிய சடங்கும், வழக்கும் நெல்லுக்கு உமி போலவாகும்; அரிசி உருவா வதற்கும், அரிசிக்குக் காப்பாகவும் உமி இருந்தேயாக வேண்டும்; ஆன்மிய அநுபவ அரிசி உருவாகி அதை உணவாக்கிப் புசிக்கும் போதுதான் இந்த உமியைத் தள்ள வேண்டும் என்று நம் டாகுரே காட்டிக் கொடுத்தார்.

இதில் அவர் பெற்ற வெற்றிக்குப் பெரிய அடையாளம் கேசவ சந்திர ஸேனரின் அதிசய மனமாற்றம். கிறிஸ்துவ பாணியில் ஹிந்துக் கருத்துக்களையும் கலந்து பரப்பிய ப்ரம்ம ஸமாஜத்தின் பெருந்தலைவரான கேசவர் எளிய ராமகிருஷ்ண ரின் இனிய பழக்கத்தால் விக்ரஹ ஆராதனையை ஏற்றது மட்டுமின்றி, க்ஷேத்ர - தீர்த்தாடனம் செய்வது, துறவி துவராடை அணிவது, தலையை மொட்டை அடித்துக் கொள்வது போன்றவற்றையும் ஒப்பிவிட்டது அதிசயமாகும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தாமஸிகப் புலால் படையலையும் ஒப்புக் கொண்டதை எண்ணுகையில் ஸ்ரீ ராமனின் காருண்ய சக்தியேயான ஸீதா தேவியும் இப்படிச் செய்தது நினைவு வருகிறது. வன வாஸத்துக்குச் செல்கையில் ஓரிடத்தில் கங்கையைக் கடக்கிறார்கள். ஆற்றின் மத்திக்குப் படகு வருகையில், 'புண்ய தீர்த்தத்தைக் கடக்கும் போது அதற்குக் காணிக்கை அளிக்க வேண்டுமே! ஆண்டிச்சியான என்னிடம் காணிக்கை தரப் பொருளேதும் இல்லையே!' என்று சாமானிய மாந்தரின் ஆசரணையை நினைத்து வருந்து

Koviloor Digital Library

கிருள் மஹாலக்ஷ்மியான பிராட்டி. "கங்கே! என் நாதன் பதிநான்காண்டுகளுக்குப் பின் ராஜ்யம் பெறுகிறபோது உனக்கு யதேஷ்டமாகக் காணிக்கை தருகிறேன்" என்று நம் ராமகிருஷ்ணக் குழந்தை போலவே சொல்கிருள். அவர் சொன்னுற் போலவே ஸத்வ, ரஜோ, தமோ ஆராதனை களைச் சொல்லி, தானே அந்த மூன்று மட்டத்திலும் பிற்பாடு கங்கையை வழிபடுவதாக வாக்குத்தருகிருள். "கங்கே! உன் கரையிலுள்ள எல்லா தேவாலயங்களிலும் தரிசனம் செய்து கொள்வேன்" என்று ஸத்வபக்தியும், "அந்தணுளருக்கு அபரிமிதமாக அன்ன, வஸ்திர, கோ தானங்கள் செய்வேன்" என்று ராஜஸ பக்தியும், "ஆயிரம் கள்ளுக்குடங்களும் மாமிஸமும் வைத்து உன்னைப் பூஜிப்பேன்" என்று பரம பாமர ஸ்திரீயாகித் தாமஸ பக்தியும் காட்டுகிருள்.

★

எத்தனை உதாரணம் பார்க்கிறேம் சராசரி மாந்தரில் ஒருவராக ஸ்ரீ ராமகிருஷ்ணர் சம்பிரதாய வழி முறைகளையும் நம்பிக்கைகளையும் பின்பற்றியதற்கு!

நந்தபோஸின் வீட்டிலுள்ள சித்ரசாலையில் தச மஹா வித்யைகளில் தூமாவதி, காளி ஆகியவர்களின் ஓவியங் களைப் பார்த்தவுடன், "இம்மாதிரி உக்ர மூர்த்திகளை வைத்திருந்தால் அவற்றுக்கான பூஜைகள் போட வேண்டும். அப்படிச் செய்யாமல் நீங்கள் இந்தப் படங்களை வெறுமே மாட்டி வைத்தும் உங்களுக்கு எந்த ஆபத்தும் நேரவில்லையென்ருல் அதை உங்கள் நல்ல காலமென்றுதான் சொல்ல வேண்டும்" என்கிருர்.

நிவேதனமான பண்டம் புனித ப்ரஸாதமாகி விடுவதால் அதை உட்கொள்ள மறுப்பது தவறு என்பது மரபு வழி வந்த ஒரு நம்பிக்கையல்லவா? அதை டாகுர் அவமதிப்பாரா? ஆயினும் அன்னைக்கு நிவேதனமான புலாலை உண்ண அவரது மனம் இடம் கொடுக்க வில்லையே!

Koviloor Digital Library

அதே போதில் ப்ரஸாதம் ஏற்காவிட்டால், "அம்மா கோவிச்சுண்டுடப் போறுளே!" என்று குழந்தைக்கு பயம்! பரம எளியராக அவரே இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிருர். கடைசியில் ஒரு மாதிரி அவளுடன் 'காம்ப்ரமைஸ்' செய்து கொள்கிருர். எப்படி? "மாம்ஸப் பிரஸாதத்தை விரல் நுனியால தொட்டு நாக்கிலே வெச்சுக்கறேன்" என்கிருர்.

பிரியப் பிள்ளை ராகாலுக்கு உடல் நிலை சரியில்லையா? ஸித்தேச்வரி ஆலயத்தில் மட்டைத் தேங்காயும் சீனியும் நேர்த்திக் கடன் செலுத்துகிருர்.

அருமை நண்பர் கேசவ ஸேனர் படுத்த படுக்கையாயிருக்கிருரா? அவருக்காகவும் அம்மாவிடம் இதேபோல நேர்ந்து கொள்கிருர், அன்ருடம் அவளோடு முகமுகமாகப் பேசும் செல்ல பாலர்.

சொந்தத் தாயாக அவர் நேரிலே உணர்ந்த காளி விஷயமாகவே மரபுக்கு அடங்கி அவர் நடந்த இன்ஞென்று: புற்று நோயுற்றபின் அவர் சியாம்புகுரில் இருக்கை கொண்ட போது காளி பூஜைத் தினம் வருகிறது. அவரால் கோயிலுக்குச் செல்ல இயலவில்லை. அதனுலென்ன? அவரிருக்கும் இடத்தையே கோயிலாக்கியிருக்கிருர். காளி நினைவில் அவர் ஸமாதியில் ஆழ்ந்திருக்க அடியார் எந்தக் கோயிலிலும் காண இயலாத அளவுக்கு இங்கேயே அவளுடைய ஸாந்நித்யத்தை உணருகிருர்கள். ஆனுலும் "அதனுலென்ன?" என்று நாம் தான் சொல்கிருேமே தவிர, சம்பிரதாயப்படி அன்று ஒரு கோயிலில் வழிபாடு நடத்தாவிடில் தோஷம்தான் என்றே குருமஹராஜ் எண்ணியிருக்கிருர். எனவே கல்கத்தா மத்தியில் டந்தனியா என்ற இடத்திலுள்ள ஸித்தேச்வரி ஆலயத்தில் நைவேத்தியம் செலுத்திவர முன்கூட்டியே "ம"வின் மூலம் ஏற்பாடு செய்திருக்கிருர்!

ஒரு பெரியவரைப் பார்க்கப் போகும்போது கையுறை ஏதேனும் கொண்டு போய் ஸமர்ப்பிப்பது நம் மரபு. தம்மைப் பெரியவராக லவலேசமும் நினைக்காதவர் ஸ்ரீ ராம

Koviloor Digital Library

கிருஷ்ணர். ஆயினும் தம்மைப் பார்க்க வருவோர் அப்படி எண்ணித்தான் வருகின்றனர் என்றும் அறிந்தவர். அவர் களில் "ம"போலச் சிலர் அன்பிதய ஸமர்ப்பணம் தவிர வேறென்றும் இவருக்குச் செய்ய வேண்டுமா என்றெண்ணி வெறும் கையுடன், ஆனல் நிரம்பிய இதயத்துடன் வருகின்ற னர். 'இந்தக் குழந்தைகள் பெரியவராக மதிக்கும் ஒருவரைப் பார்க்கக் கையுறை இல்லாமலே வருகிருர்களே! இது தோஷ மாகிவிடுமோ?' என்று கரிசனத்தோடு எண்ணுகிருர் டாகுர். அப்படிப்பட்ட குழந்தைகளில் "ம"விடம் தாயினும் மனம் விட்டு, "இனிமேல் என்னைப் பார்க்க வரும்போது ஏதாவது அல்பக் காணிக்கையாவது கொண்டு வா. நான் இப்படிச் சொல்லலாமோ, கூடாதோ? இது அஹம்பாவமாகத் தோன்றுமோ என்னவோ?" என்கிருர். பவநாத்திடம், "ஒரு தம்படிக்கு வெற்றிலையாவது வாங்கிக் கொண்டு வா, வெற்றுக் கையாய் வராதே" என்கிருர்.

நந்த போஸின் வீட்டுக்குச் சென்றபோது, 'இவன் நாம் உண்ண ஏதும் கொடுக்கக் காணேமே! அதிதி ஸத்காரம் பண்ணுத தோஷம் இவனுக்கு வந்துவிடப் போகிறதே!' என்று கவலைப்படுகிருர். தமக்கே உரிய உள்ளம் திறந்த வெள்ளை குணத்தோடு, "இதோ பார், நான் சாப்பிட நீ ஏதாவது கொடுக்கணும். இதே மாதிரி யதுவின் அம்மா விடம்கூட ஞாபகப்படுத்தினேன். இல்லாவிட்டால் கிருஹஸ் தர்களுக்குக் கெடுதல் வந்துவிடும்" என்கிருர்.

அப்புறம் நந்த போஸ் அளித்த இனிப்பை மட்டுமே டாகுர் ஏற்றுக்கொண்டு, தாம்பூலத்தை ஏற்க மறுத்து மற்றொரு மரபை நிலைநாட்டுகிருர். அது என்னவென்ருல், அந்தத் தாம்பூலம் நிவேதனம் செய்யப்பட்டதல்ல. நிவேதன மாகாத பொருளை உண்ணலாகாது என்ற ஆசாரத்தைக் காட்டுகிருர். எப்படிப்பட்டவர்? தாம் எதை உண்டாலும் அதைத் தம் உள்ளே வைச்வாநரனுக எழுந்தருளியுள்ள இறைவன் அவியாகக் கொள்கிருனென நன்குணர்ந்த மஹான்!

Koviloor Digital Library

தம்மை உண்பியாவிட்டால் ஒரு கிருஹஸ்தருக்குக் கெடுதல் என்பதால் எந்த கிருஹஸ்தர் எவ்வித உணவு படைத்தாலும் ஏற்றுவிடுவாரா? மாட்டார். தைல பாகம், இனிப்பு, வேகவைத்த அன்னம் என்றெல்லாம் இனம் பிரித்து ஓர் அந்தணர் எவரெவர் வீட்டில் என்ன புசிக்க லாமோ அதன்படிதான் அதிவர்ஞச்ரமிகளின் முடிமணி யாயிருந்த டாகுர் ஏற்பார். அவரது வாலிபத்தில் காளியைப் பிரத்யக்ஷமாக தரிசிப்பதற்கு முன் தமது தமையனுர் ராம குமாரர் தக்ஷிணேச்வரக் கோயிலில் அர்ச்சகராவதற்கும், அக் கோயிலின் பிரஸாதத்தை உண்பதற்கும்கூட அவர் மறுப்புத் தெரிவித்திருக்கிறுர். காரணம் கோயிலேக் கட்டிய ராஸமணி கரையர் குலத்தவள் என்பதே. காளி தர்சனத்துக்குப் பின் இது போன்ற கடுமையான, கொடுமையான ஆசாரங்களே அவர் விட்டே விட்டாரெனினும் அப்போதும் கூடத் தமது திருவுதரப் போனக விஷயத்தில் மட்டும் மரபு நெறிகளே விட்டாரில்லே. பலராம் போஸ் போன்ற சுத்த ஸத்வ பக்தர் விஷயத்திலேயே குலத்தைப் பாராமல் எவ்வித உணவும் கொள்வார். நரேன் போன்றவர் விஷயத்திலோ எச்சிலும்கூடப் பார்க்க மாட்டார்.

உணவு குறித்த நெறிமுறையை அவர் புத்திபூர்வமாகப் பின்பற்றினுர் என்பதுகூடச் சரியில்லே. அந்த நெறிமுறை புத்தி மட்டத்துக்குத் தெரியாமலுங்கூட, அதற்கும் ஆழ மான அவரது உயிரணுவிலேயே கருக்கொண்டிருந்திருந்தது. அதனுல் அவருக்கு உணவுக் காணிக்கை படைத்த சிலரைப் பற்றி அவருக்கு புத்தி மட்டத்தில் தெரியாதபோதுகூட, அவர்கள் மிகவும் ராஜஸ, தாமஸ குணமுள்ளவர்களாக இருந்தால் அவர்களுடைய அந்த உணவு தன்னுலேயே அவருடைய தொண்டைக்குள் இறங்க மறுத்தது! ஏன், இப்படிப்பட்ட உணவுத் தாலத்தைக்கூடத் தொட முடியா மல் அவருடைய கை 'ஷாக்' அடித்தாற்போலப் பின்னுக்கு இழுத்துக் கொண்டுவிடும்!

Koviloor Digital Library

இவ்வாறே, துறவிக்கு உடைமை உதவாதென்பது அவரது உயிரில் கரைந்த இயற்கை நியதியாகியிருந்தது. அவரது படுக்கையடியில் நாலு காசு ஒளித்து வைத்திருந்தால் போதும், அச் சயனத்தில் சாய்ந்த மாத்திரத்தில் அவர் பாம்பு தீண்டிஞற்போலப் பதறி எழுவார்! அடுத்த வேளைக்கு என்று இரண்டு ஏலக்காயை ஜேபியில் போட்டுக் கொண்டாரா, வந்தது விபரீதம்! அந்த "துராசார"த்துக்குக் கழுவாயாக அவரை கங்கையில் முழுக்கி விடுவதற்காக அவரது கால்கள் தம்வசமற்ற வெறி வேகத்தில் அவரை இழுத்துச் செல்லும்!

★

வடதேச ஸாதுக்களின் வழக்கப்படி நம் டாகுர் ஹுக்கா பிடிப்பார். அப்படி அவருக்குப் புகை போடுவதற்கு ஏற்பாடாகியிருந்த ஒரு மாலை வேளையில் அவர் தம்முடைய பின் கையைப் பார்த்துக் கொண்டார். எதற்காக? சரியாக நேரம் தெரிந்து கொள்வதற்காகத்தான். அப்படியாஞல் அவர் ரிஸ்ட் வாட்ச் கட்டியிருந்தாரா என்ன? அல்ல. கையிலுள்ள ரோமங்களைப் பிரித்து எண்ணுமளவுக்கு இயற்கை வெளிச்சம் இருந்தாலே ஸந்தியாகாலம் வரவில்லை என்று அர்த்தம். அவ்வளவு தெளிவாகக் கையுரோமம் தெரியாவிடில் ஸந்தி வந்துவிட்டதென்று கொள்வார்கள். புனித ஸந்தி வேளையில் புகைக்கக் கூடாது என்ற ஆசாரத்துக்குக் கட்டுப்பட்டே இப்போது டாகுர் கையைப் பார்த்துக் கொண்டார்.

ஏதுமே உண்ணுமல் ஏகாதசி உபவாஸமிருப்பதை டாகுர் ஏற்று உபதேசித்திருக்கிருர். "ம"விடம், "கொஞ்சம் ஸாதனை செய்யத் தொடங்கிஞயாகிலும் உனக்கு மார்க்கம் காட்ட ஒரு ஆசாமி வந்து விடுவான். ஏகாதசி விரதம் இரேன்" என்று கூறியிருக்கிருர். ஏகாதசி திதியான இன்னெருநாள், அன்று உபவாஸமிருப்பது சித்தத்தை சுத்தி செய்து பக்தியை வளர்த்துக் கொள்ள உதவும் என்று கூறிஞர். தமக்கே உரிய தாக்ஷிண்யத்துடன், "கொஞ்சம்

Koviloor Digital Library

பாலும் பொரியும் சாப்பிட்டால் பரவாயில்லை" என்றும் சொன்னார்.

தாக்ஷிண்யத்துடன் தயை பொங்கிக் கலந்த நிகழ்ச்சியொன்றை இங்கு சொல்லாதிருக்கலாகாது. அன்புத் தத்துவத்துக்கு உபவாஸம் கிடையாது, அது ஆசாரத்தையும் விழுங்கி ஏப்பமிடும் ஸந்தர்ப்பங்கள் உண்டு என்று காட்டும் உதாஹரணம் இது. இருபத்தைந்து வயதுக்குட்பட்ட இரு ஓரகத்திகள் டாகுரிடம் மந்த்ரோபதேசம் பெறுவதற்காக வருகிறார்கள். வெறும் வயிற்றோடேயே உபதேசம் வாங்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆசாரப்படி உணவு கொள்ளாமல் வந்திருக்கிறார்கள். "ஏன் பட்டினி கிடந்தீர்கள்?" என்று பதைக்கிறார் தயாளுவான டாகுர். "பெண்ணாகப் பிறந்தவர்கள் இங்கே வரும்போது வயிறு நிறைந்து வரவேண்டும். நீங்களெல்லாம் அம்பாள் ஸ்வரூபம் அல்லவா? நீங்கள் பட்டினி கிடந்து பார்க்க எனக்குத் தாங்காது" என்று பரிவொழுகக் கூறுகிறார். ராம்லாலிடம் சொல்லி ஆலயப் பிரஸாதங்கள் தருவித்து அவர்களை உண்பிக்கிறார். "ஏதோ கொஞ்சமாவது உங்கள் வயிற்றில் போயிற்று. இப்போதுதான் எனக்கு மனசு நிம்மதியாச்சு" என்கிறார்.

டாகுர் அவர்களுக்கு மந்த்ரோபதேசம் செய்யவில்லை என்பது வேறு விஷயம்.

★

பெண்கள் விடுதலை வெகுவாகப் போற்றப்படும் காலம் இது என்பதற்காக இந்த அம்சத்தில் டாகுரின் பழமைக் கருத்தைச் சொல்லாதிருக்க முடியவில்லை. பெண்கள் அடங்கியிருப்பதையே அவர் வெகுவாகப் போற்றினார். உதாரணத்துக்கு ஒன்று:

ஒரு நாள் ஒன்பது, பத்து வயதான இரு சிறுமிகள் தேவி கீதங்கள் பல பாட, வெகுவாக மகிழ்ந்து ரஸித்தார் டாகுர். ஆயினும் உடனேயே அவர்களை அழைத்து வந்தவ

Koviloor Digital Library

ரிடம், "இன்னும் பாட்டுச் சொல்லிக் கொடுத்துக்கொண்டே போகாதீர்கள். இவர்கள் தாமாகவே பாடினுல் அது வேறு விஷயம். நிறையப் பாட்டுத் தெரிந்து கொண்டு கண்ட கண்ட இடங்களில் பாட ஆரம்பித்தார்களானுல் நாண உணர்ச்சிப் போய்விடும். ஸ்திரீகளுக்கு நாணம் அத்யாவசியம்" என்ருர்.

டாகுரின் தமையனுர் மகளான லக்ஷ்மிமணி, அவரது முக்கிய பக்தைகளில் ஒருவரான கௌரி மா ஆகியவர்கள் எல்லோருடனும் கலகலவென்று பழகிக் கொண்டு கம்பீரமாகக் காரியம் செய்பவர்கள். கௌரி மா ஸாதனையிலும் பரவச ஆட்டங்கள் கண்டவள். இவர்களிடம் குரு மஹராஜ் வெகுப் பிரியத்துடனேயே இருந்தாரெனினும், நம் அன்னை சாரதை இவர்களைப் போல் ஆகாமல் உலகியல், ஆன்ம இயல் இரண்டிலுமே உள்ளடங்கி உள்ளுயர்வில் ஓங்குவதைத்தான் தீர்மானமாக விரும்பினுரென்பதை அடிக்கோடிட்டுக் காட்ட வேண்டும்.

இந்நூலின் தொடக்கக் கட்டுரையில் துன்மார்க்கனுன கணவனுடன் சேர்ந்து வாழ முடியாமல் யோகின்மா தாய் வீடு திரும்பியதாகக் கண்டோமல்லவா? டாகுர் அவளது மனப் புண்ணை ஆற்றி, மனப் பண்பையும் மேன்மேலும் உயர்வாக மாற்றிவந்தார். அவள் பக்குவப்பட்டபின், துன்மார்க்கனுனுலும் பதியைத் துறந்து பத்தினியர் வாழ்வது பாரத தர்மமல்ல என்று அவளுக்கு டாகுர் எடுத்துக் காட்டினுர். பத்தினி தன் அன்பு வழியினுலேயே பதியையும் ஸன்மார்க்கத்துக்குத் திருப்ப வேண்டுமென்று உபதேசித்தார். பதப்பட்ட பக்தையின் உள்ளத்தில் அவ்வுபதேசம் பதிந்தது. அதன்படியே பதியின் கடைசிக் காலத்தில் அவனைத் தன் வீட்டுக்கு அழைத்து வந்து பணிவிடை செய்தாள் அன்பு வழியால் அவனை மெள்ள மெள்ளத் திருப்பித் தன்னேடு அவனும் குருமஹராஜின் தாள் பணியச் செய்தாள்.

★

Koviloor Digital Library

ஜாதி, மத அடிப்படையின் மேலன்றி, முக்குண அடிப்படையில் ஸ்ரீ ராமக்ருஷ்ணர் பேதம் பார்த்துப் பின் பற்றிய ஓர் ஆசாரம் கவனத்துக்குரியது.

ஸமத்துவம் என்ற பெயரில் எல்லோரும் தொட்டுக் கொண்டு, கட்டிக்கொண்டு புரளவேண்டும் என்று "முற்போக்குவாதி"கள் நினைக்கிறார்களாயினும், எவரைவிட அனைத்துயிரையும் அன்னையின் குழந்தைகளாகவே கண்டு ஸமமாய் அன்பு செய்தவரில்லையோ அந்த டாகுர் இவ் விஷயத்தில் எத்தனை பேதம் பார்த்திருக்கிறார்? "பேதம் பார்த்தார்" என்பதாக இதை அவர் புத்தி பூர்வமாக உத்தேசித்துச் செய்ததுபோலச் சொல்வதே சரியில்லை. ராஜஸிக, தாமஸிக மக்களின் ஸ்பரிசம் சற்றே பட்டாலும் அவரது பூவுடல் தன்னால் சுருங்கிவிடும். சிலர் அவரது பாதம் தீண்டிய மாத்திரத்தில் அவர் மின்னதிர்ச்சியுற்றது போலத் துடித்திருக்கிறார். பகவதி தாஸியின் கதை பார்த் தோமே!

அவளைப் போல நடத்தை கெட்டவர்தான் என்றில்லை. நன்னடத்தை வாய்ந்தவரும்கூட தேக ஆரோக்யம் கெட்டுள்ளபோது திவ்விய அநுபவத்திலுள்ளவர்களையும், மதாநுஷ்டானம் செய்கிறவர்களையும் தீண்டலாகாது என்ற சாஸ்திர விதியைக்கூட டாகுரின் சரித்திரம் நிரூபித்திருக் கிறது என்றால் ஆச்சரியமாயிருக்கலாம். சான்று பாருங்கள் :

சின்ன நரேன் பரம ஸாத்விகமான சிஷ்யப் பிள்ளை. ராமக்ருஷ்ணரின் உபரியன்புக்குப் பாத்திரமான அருமந்தப் பிள்ளை. அப்படிப்பட்டவன் ஒருமுறை அவர் பரவசக் களியாட்டத்தில் எங்கே விழுந்துவிடுவாரோ என்று பயந்து அவரைத் தாங்கிக் கொள்ளப் போனால்......அப்பப்பா, அவனுடைய ஸ்பரிசம் தாங்காமல் அவர் வீறிட்டலறியது உண்டே!

ஏன் அப்படி? சொன்னால் ஆச்சரியமாயிருக்கும்! அப்போது சின்ன நரேனின் உடம்பில் ஒரு கட்டி வந்திருந்

Koviloor Digital Library

தது. இந்த அற்ப உடற் பாதிப்புத்தான் மஹா பெரிய டாகுரின் அற்புத பரவசத்தைப் பாதித்து விட்டது!

உடலின் ஆரோக்கியம், பிணி ஆகியவையும், உள்ளத்தின் உயர்நிலை தாழ்நிலைகளும் நம் கண்ணுக்குத் தெரியாத நல்ல - கெட்ட அலைகளைப் பரப்புகின்றன. கம்யூனிஸ ருஷ்யாவே இந்த அலைகளை கிர்லியன் புகைப்படத்தின்மூலம் கண்ணுக்கும் காட்டுகிறது. இந்த அலைகளின் நல்ல, கெட்ட பாதிப்புக்களை ஸாதகர்கள் மதிக்கத்தான் வேண்டும்; மதிக்காமல் ஸமத்துவம் கொண்டாடிக் கொண்டு தன் ஜீவனின் மேம்பாட்டைக் குலைத்துக் கொள்ளக்கூடாது என்பதே ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வாழ்வு நமக்குச் சொல்லாமல் சொல்லும் உபதேசம். பிற ஜீவர்களிடம் உள்ளத்தளவில் ஏற்றத் தாழ்வில்லாத அன்பு பொழிவதையும் இதையும் போட்டுக் குழப்பிக்கொள்ள வேண்டியதில்லை என்பதற்கும் அந்தப் பிரேம மயரின் வாழ்வே பாடம்.

இதற்கு மறுபுறமாக, தியாகப் பிரேமையோடு பணி புரியும்போது இந்த ஆசாரம் அடியோடு எடுபட்டுப் போகிறது என்பதையும் அவரது வாழ்வே அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. அவர் புரிந்த பிரேமப் பணி ஒரு ஜீவனை ஆன்மியத்தில் உயர்த்துவது. இந்தப் பணிக்காக அவர் ஒரு முரட்டு மன்மதையோ, வரட்டு ஹரிவல்லபையோ தாமாகச் சென்று தீண்டினர் அல்லவா? அப்போது அவர்களுடைய கெட்ட அலையால் இவர் பாதிப்புறமல் இவரது நல்ல அலையாலேயே அவர்கள் சீர்திருந்தினர் அல்லவா? அவர் ஆன்மியப் பணி செய்தாரெனில் நாமும் உடல் நலனுக்குப் பணி செய்கையில் நோயாளி போன்றோரிடம் நிறையன்புடன் தொட்டுத் தொண்டு செய்தால் அப்போது ஸ்பரிச தோஷம் ஏற்படாது என்பது நிச்சயம். இவ்வாறே மனப்பிணி உற்றுத் துயரில் அழுந்திய ஒருவருக்கு நாம் செய்யும் மனப் பணியாக ஆழ்ந்த அன்புடன் அவரைத் தொட்டுத் தடவி ஆறுதல் தரும்போதும் ஸ்பரிச தோஷம் சம்பவிக்காது. மற்றபடி

Koviloor Digital Library

வெறும் உலகாயத உறவாடலில் கட்டிக் கொண்டு புரள்வது பாதிப்புக்களை ஏற்படுத்தத்தான்செய்யும்.

தொற்று நோய்தான் உண்டே தவிர, தொற்று ஆரோக்யம் என்பது கிடையாது. இப்படித்தான் கெட்ட எண்ண அலைகளின் பாதிப்பே அதிக வீரியத்துடன் செயற் பட்டு நல்ல எண்ணங்களை நலிவித்துவிடும். இதை மெய்ப் பிக்கத்தான் ஸத்புருஷர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பெரும்பாலும் கீழ்க்குணத்தாரின் தீண்டுகையால் தாம் பாதிப்புற்றும், அபூர்வமாகவே தமது தீண்டுகையினால் அப்படிப்பட் டோரைப் பண்படுத்தியும் காட்டியிருக்கிறார்.

★

எத்தனை விதமான சாஸ்த்ர விதிகளுக்குத்தான் இலக்கிய மாக இருந்திருக்கிறது இந்த அவதார சரீரம்! மூடநம்பிக்கை என்றே தோன்றுபவற்றையும் மூடி மறைக்காமல், அவர் பின்பற்றியிருக்கிறார்.

"அலமாரியிலிருந்து பக்ஷணம் எடுக்கலாமென்று போனேன். அதிலே கை வைத்தேனோ இல்லையோ ஒரு பல்லி மேலே விழுந்தது. பக்ஷணம் எடுக்கப்படாது என்று கையை இழுத்துக் கொண்டுவிட்டேன். என்ன சிரிக்கிறீங்க? இந்த மாதிரி சகுனம், நிமித்தம் முதலானதெல்லாம் பார்க்கத்தான் வேணும். இதோ ராகால் உடம்பு சரியில்லாம லிருக்கிறான், எனக்கும் ஒரே உடம்பு வலி. காரணம் என்ன தெரியுமா? இன்று விடிந்து எழுந்ததும் நான் எவனோ ஒருத்தன் முகத்தில் விழித்ததுதான். அதோடு அவனை ராகாலாக்கும் என்று நான் நினைத்ததால்தான் அவனுக்கும் உடம்பு சுகமில்லை"—என்றிப்படியெல்லாம் பேசுமளவுக்கு மக்களின் நம்பிக்கைகளை மதித்திருக்கிறார் தெய்வ புருஷர்.

வெகு எளிதாக சித்தத்தை ஒருமுகப்படுத்தி, பராசக்தி யுடன் முகமுகமாகப் பேசி அவள் சித்தத்தை நேரே அறியக்

Koviloor Digital Library

கூடிய அவரே "தர்மபத்திரம்" என்பதாகத் திருவுளச் சீட்டுப் போட்டு அதன்படி நடக்கும் அதிசயத்தையும் பார்க்கிறோம்! எத்தனை எளிய ஸ்வபாவத்தோடு அவர் இருந்திருக்கிறு ரென்றும் இதிலே கண்டு இன்புறுகிறோம்.

சிஷ்யப் பிள்ளையாண்டான் புது மணமாகி மனைவியை அழைத்து வந்திருக்கிருனு? அம்மா சாரதை இளம் தம்பதிக்கு ஆசி வழங்க வரவேண்டுமென்று அப்பா ராமகிருஷ்ணர் எண்ணுகிருரா? ஆசியே வடிவமான அம்மா வானுலும் மரபுப்படிதான் ஆசி வழங்க வேண்டுமென்று பணிப்பார். வங்காள மரபில் மருமகள் முகத்திரையுடன் இருப்பாள். மாமியார் அவளுக்கு அன்பளிப்பு செய்து விட்டே முகத்திரையை விலக்கி, முகம் பார்த்து முத்தமிடு வாள். இவ் வழக்கப்படி சாரதையும் சிஷ்யப் பிள்ளையின் மனைவிக்கு ஒரு ரூபாய் கொடுத்து, முக்காட்டை விலக்கிப் பார்த்துக் கொஞ்ச வேண்டுமென்பார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

தீக்கனு என்றும் சுப ஸ்வப்னம் என்றும் கனவுகளைக் கெட்ட, நல்ல சகுனமாகக் கொள்ளும் நம்பிக்கையும் அவருக்கு உண்டு. எவரேனும் தீபம் ஏற்றுவது போலவோ, எதுவேனும் தீப்பற்றிக் கொண்டதாகவோ கனவு கண்டால் அது சுப சூசகம் என்பார். ஒருவர் தம் பெயரைத் தாமே சொல்லி அழைத்துக் கொள்வதாகக் கனுக் கண்டால் பரம சுபமாகும் என்பார்.

மாலை மங்கிய பின் வாசலில் விளக்குப் போடாத வீட்டில் மூதேவி குடிகொள்வாள் என்று வலியுறுத்துவது அவர் வழக்கம்.

நாள், நக்ஷத்திரம் பார்ப்பது என்ற வழக்கையும் நன்ருகப் பின்பற்றியிருக்கிருர்.

தக்ஷிண தேசத்தவரான நமக்கு விசித்ரமாகப் பட்டாலும் வங்காளியரில் சிலர் செவ்வாய்க் கிழமையையும் சனிக்

Koviloor Digital Library

கிழமையையும் தெய்வ காரியங்களுக்குச் சிறப்பாக உரிய மங்கல தினங்களாக்க் கருதுவதுண்டு. அதன்படி குரு மஹராஜர் அவ்விரு கிழமைகளில் ஒன்றில்தான் பெரும் பாலும் மந்திரோபதேசம் செய்வார். அத் தினங்களில் தனிக் கவனத்தோடு ஆலயவழிபாட்டுக்குப் போவார். அடியார்களேயும் அன்று அவ்விதமே செய்யப் பணிப்பார்.

தேவி வழிபாட்டுக்கு நாம் வெள்ளிக்கிழமை மாலையை விசேஷித்துச் சொல்வது போல அவர்கள் வியாழன் மாலையைச் சொல்வார்கள். இந்த வழிபாட்டிலும் தனித்த தொரு சிரத்தை காட்டினர் டாகுர்.

ஆனுல் அதே வியாழன் பகல் வேளையின் நாலாம் ஜாமம் (பிற்பகல் மூன்று மணி) தொடங்கிவிட்டால் அது லெளகிக காரியங்களுக்கு உகாத "கனத்த" நாளாகக் கருதுவர். இந்த நம்பிக்கையை மனதார மதித்தார் மரபு வழி செல்லும் மஹனீயர். தமக்கு "ம" முக்கால் ரூபாய் பெறுமானமே உள்ள ஒரு முக்காலி வாங்கி வருவதானுல் கூட, "வியாழனுச்சே! மத்தியானம் மூன்று மணிக்குள் கொண்டு வந்துவிடு" என்று மறக்காமல் சொல்வார்.

மார்கழி மாதத்தை "ஆக்ரஹாயனம்" என்றும், தை மாதத்தைப் "பௌஷ்யம்" என்றும் சொல்வார்கள். நம் முடைய சித்திரை வங்காளியரின் வைகாசி ("பைஷாகி"). இப்படி நம் மாதப் பெயர்கள் அவர்களுக்கு ஒவ்வொரு மாதம் முன்னேயே வந்துவிடும். ஆதலால் நாம் ஆக்ரஹா யனத்தில் வீடு மாற்ருதது போலவே அவர்கள் பௌஷ்யத்தில் மாற்ற மாட்டார்கள். இந்த வழக்கை எப்பேர்ப்பட்ட நெருக்கடியில் கூட டாகுர் விடமாட்டாரென அவரை நன்கறிந்த சீஷப்பிள்ளைகள் முடிவு செய்தார்களென்பதைப் பார்த்தால் ஆச்சரியமாயிருக்கும்.

1885 டிஸம்பரில் அவரது புற்றுநோய் உக்ரமாகத் தொடங்கிவிட்டது. அப்போது அவர் கல்கத்தாவில் சியாம்புகுரில் இருந்த வீடு நோயாளிக்கு ஏற்றதாக

Koviloor Digital Library

இல்லாததால் நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் உள்ள இடத்துக்கு அவரை மாற்ற வேண்டுமென்று டாக்டர் கூறினர். டாக்டர் சொல்வதற்கு முந்தியே, டாகுருக்கே அந்த வீடு பிடிக்கவில்லை ஆயினும் பாருங்கள், டிஸம்பர் பாதிக்கு மேல் அவர்களது பௌஷ்யமான பீடை மாதம் பிறந்துவிட்டால் அப்புறம் அம்மாதம் முடிய அவர் இடம் மாற நிச்சயமாக மறுப்பார் என்று சீடர்கள் பயப்பட்டிருக் கிருர்கள். அதனுல் அலையாக அலைந்து திரிந்து அம்மாதம் பிறக்கு முன்பே காசிப்புர் தோட்ட மாளிகையை வாடகைக்கு அமர்த்தி அவரை அங்கு மாற்றியிருக்கிருர்கள்.

ஒன்றுக்கொன்று வெகு அண்மையிலுள்ள தக்ஷிணேச் வரத்துக்கும் கல்கத்தாவுக்குமிடையே பயணம் செய்யக்கூட நாள் பார்த்துக்கொண்டுதான் அவர் செல்வார். ஒரு தக்ஷிணுயனத்தன்று அவர் கல்கத்தாவிலிருந்து தக்ஷிணேச் வரம் திரும்ப நேரிட்டது. அது பிரயாணத்துக்கு "எடுத்த" நாளாக இல்லாததால், இதை முன்னிட்டே அவர் ஒரு வாரத்துக்குள் மறுபடி சல்கத்தாவுக்கு வந்து நல்ல நாளில் தக்ஷிணேச்வரம் திரும்பியிருக்கிருர்!

இப்படி இவர் ஏதோ சொல்ப தூரம் மறுபடி கங்கையில் ஜம்மென்று படகுச் சவாரி செய்தது மட்டும்தானு? இந் நாளில் தென்துருவ பயணத்தைவிட அந்நாளில் தக்ஷிணேச் வரத்திலிருந்து (அன்னை சாரதையின் பிறந்தவூரான) ஜயராம்வாடிக்குச் சென்று வருவது சிரமமாயிருந்தது. அப்படியிருந்தும் தமது பரமப் பிரிய சக்தியான சாரதைக்கு இந்த சிரமத்தை டாகுர் ஒரு முறை அளித்ததே மரபு வழி மதிக்கும் அவரது மாண்புக்குத் தலையாய உதாரணம் எனலாம். அதோடு இக்கட்டுரையைத் தலைக்கட்டலாம்.

1881-ல் எத்தனையோ சிரமப்பட்டுப் பிறந்தகத்திலிருந்து தக்ஷிணேச்வரம் வந்த நம் தாய் ராமகிருஷ்ணரின் கிங்கர ரான ஹிருதயரின் ஹிருதயமற்ற கடும் சொல்லால் உடனுக் குடனே பெருத்த அவமானத்துடன் மறுபடி ஜயராம்

Koviloor Digital Library

வாடிக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. அந்தப் பாபம் ஹிருதயரை விடுமா? சிறிது காலத்திலேயே தக்ஷிணேச்வர ஆலய நிர்வாகத்தினர் அவருக்குச் சீட்டுக் கிழித்து வெளியேற்றி விட்டனர். அடுத்து டாகுர் அம்மாவை வருமாறு கோரிச் செய்தி அனுப்பினுர். அம்மாவும் வந்தாள் 1882 தொடக்கத்தில்.

இதனிடையே டாகுர் ஸமாதிப் பரவசத்தில் தடுக்கி விழுந்தார். அப்போது அவரது இடது கை எலும்பு பிசகிக் கொண்டதால், அம்மா வந்தபோது அவளுடைய சேவை அவருக்கு முன்னிலும் அத்யாவசியமாயிருந்தது.

அவமானத்துடன் ஊர் திரும்பிய பரமப்பிரிய சக்தி அத்தியாவசியப் பணிவிடை புரிய வந்தபோது டாகுர் எத்தனை தூய ஆவலுடன் வரவேற்றிருக்க வேண்டும்? அந்த உத்தம ஸதியும் உபாஸதையுற்ற கணவரின் தொண்டில் தன்னை இழைத்துக் கரைத்துக் கொள்ள எத்தனை ஆர்வமாக இருந்திருக்க வேண்டும்?

ஆயினும் இந்த தெய்விகப் பிரேமை வேகத்தையும்விட நாள் நக்ஷத்திரத்தின் வேகத்தையே டாகுர் பெரிதாக மதித்து, அதனுல் தங்களது ஆர்வ ஆவல்களுக்குத் தாற்காலிகமாக அணை போட்டுத் தடுத்து விட்டாரெனில் அதை என்ன சொல்ல?

வந்தவுடன் வந்தனம் செய்த சாரதா தேவியிடம் "ஊரிலிருந்து எப்போது புறப்பட்டாய்?" என்று டாகுர் கேட்டார்.

"வியாழக்கிழமை ஸாயங்காலம்" என்றுள் அம்மா.

உடனே டாகுர், "அகத்தில் பிறந்த பெண் குரு வார ஸாயங்காலத்தில் வீட்டை விட்டுப் புறப்படலாமோ? அது தான் என் கையில் அடிபட்டிருக்கிறது. சரி, திரும்பி ஊருக்கே போய்விட்டு, நல்ல நாள் பார்த்துக் கொண்டு மறுபடி வா" என்ற நம்ப முடியாத வார்த்தைகளை வெகு சஹஜமாகச் சொன்னுர்.

Koviloor Digital Library

அவருக்கேற்ற பத்தினியாளும் "அப்படியே" என்று அப்போதே சகஜமாகப் புறப்பட்டாள்.

தயாளருக்குத்தான் பொறுக்கவில்லை. "இப்போதே போகாதே அம்மா. ஒரு நாள் இங்கே சிரம பரிகாரம் செய்து கொண்டு அப்புறம் போய் வா" என்றார்.

நாளும் கோளும் தமது அடியரைத் தொடாமல் இன்றும் காத்து வரும் சிவ - சக்தியர் இப்படி நாளுக்கும் கோளுக்கும் பணிந்து நடந்தது நமது மரபுக்கு அவர்கள் பணிந்த எளிமைக்கு அதி உன்னத எடுத்துக்காட்டுத்தான். அந்த உன்னதர்களைப் போல எளியர் எவருண்டு?

Koviloor Digital Library

பரமஹம்ஸர் பரமஹாஸ்யரும்தான்!

உலகையே ஒரு தமாஷ் நாடகமாகப் பார்ப்பதனுல் தானே என்னவோ, எந்த மஹாபுருஷருமே நயமான நகைச் சுவையாளராக இருக்கக் காண்கிறேம். ஸ்ரீ ராமகிருஷ்ண ரிடம் ஹாஸ்யப் பண்பு அற்புதமாக, அபரிமிதமாகக் கூடி யிருந்தது. அவர் சகல ஜனங்களுடனும் ஒன்றுபட்டு உறவாடியதில் அவரது நகைச்சுவை ஒரு மதுரமான ஊக்கியா யிருந்தது. ஹாஸ்யம் ததும்ப அவர் நடித்துக் காட்டும் போதும், ஹாஸ்யக் கருத்துக்களையும் கதைகளையும் அடிக்கடிச் சுடர் தெறிக்கும் போதும் சிரிப்பின்பத்தின் மூலம் அந்தப் பேரன்பனிடம் அடியாருலகம் நெருக்கமாக ஈர்க்கப் பட்டது. மானுட இயல்புகளை இண்டு இடுக்கு விடாமல் எவ்வளவு நுணுக்கமாக அவர் அறிந்திருந்தாரென்பதற்கு அளவு கோலாகவும் அவரது இந்த ஹாஸ்ய நடிப்பும், கதை யும், கருத்தும் இருந்தது.

நகைச்சுவை மைதானத்தில் ஞான - பக்தி ராஜனின் விளையாட்டுப் பார்க்க வாருங்கள்!

★

நுண்ணிய உட்சிரிப்பு பொருந்திய ஒரு வாக்கியத் தாலேயே அவர் ஒரு நபரின் மன விசித்ரம் முழுமையையும் வெளியிட்டு விடுவார். அப்படி ஒன்றுடன் இந்த ஹாஸ்ய விளையாட்டு மைதானத்தில் பிரவேசிப்போம்.

மஹிமா சரண் சக்ரவர்த்தி சில சிறப்புக்கள் பொருந்திய வர் என்பதில் ஐயமில்லை. பரமஹம்ஸத்தைச் சுற்றியிருந்த அன்னக்குஞ்சுகளில் ஒன்ருக அவர் இல்லாவிடினும் ஹம்ஸ ஜாதிக்கு அடுத்தபடியான உயர் ரக வாத்துக்களில் ஒன்று என்று சொல்லலாம். ஆனுலும் என்ன செய்யலாம்?

Koviloor Digital Library

இம் மனிதருக்குத் தாம் எல்லாச் சிறப்புக்களுமே பொருந்திய பரமஹம்ஸம் என்று உலகை எண்ணவைக்க வேண்டுமென்ற அரிப்பு பெரிதாக இருந்தது. ஆம், மஹிமா சரணருக்குத் தமது (இல்லாத!) மஹிமைகளுக்காக உலகின் போற்றுதலைப் பெறுவதில் அசட்டுத்தனமான ஆர்வம். அதற்காக இவர் அடிக்கிற கூத்தைப் பார்த்து புத்திசாலியான எவரும், 'ஐயோ பாவம், அசடு!' என்றுதான் நினைப்பார்கள்.

ஆனால் உலகோர் எல்லோருமே புத்திசாலிகள் அல்லவே! ஆகையால் மஹிமா சரணரைப் பெரிய மஹானுக்கும் என்று நினைத்து பிரமித்து நமஸ்கரித்தவர்களும் இருந்தார்கள். ஆஜாநுபாஹுவான தோற்றம், ஆரஞ்சு ஆடையின் பொலிவு, அமர்க்களமான பேச்சு வார்த்தை—இவற்றால் இவர் அவர்களை பிரமிக்க வைத்தார். ஏக்தார் என்ற ஒற்றைத் தந்தித் தம்பூராவை மீட்டிக்கொண்டு அவர் 'ஓம்' 'ஓம்' என்று கோஷிப்பதையும், தமக்குத் தெரிந்த 'உத்தர கீதை' போன்ற இரண்டொரு நூல்களின் சுலோகங்களை முழக்குவதையும் கேட்டு சாமான்ய மக்கள் பலர் அவரை மஹா மான்யராக நினைத்து வணங்கினார்கள்.

குருமஹராஜும் நன்றாக வேடிக்கை பார்த்து மஹிமா பாபுவைத் தூண்டிவிடுவார். 'கிண்டி விடுவார்' என்பது இன்னம் பொருத்தம். "வந்திருக்கிற எல்லாருக்கும் பெரியவா ஏதாவது உபதேசம் பண்ண வேண்டும்" என்று அவரைக் கேட்டுக் கொள்வார். மஹிமா சரணர் விரும்பியதும் அதுதானே? உடனே அவதார புருஷரின் முன் அரை வேக்காட்டு அவசரக் குடுக்கையாக மஹிமா சரண் தம் ஞானத்தை, அஞ்ஞானத்தையுந்தான், அம்பலப்படுத்தி உபந்நியாசம் செய்யத் தொடங்கி விடுவார்.

தம்புரா சுருதியுடன் ஓங்கார கோஷம் செய்தாலே போதும், குண்டலினி எழும்பி, திவ்விய ஸாக்ஷாத்காரத்தில் கொண்டு விட்டுவிடும் என்பது மஹிமா சரணரின் கொள்கை. இதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால் தவறு எதில் இருந்த

Koviloor Digital Library

தெனில், இது ஒன்றுதான் மார்க்கம், மற்ற எந்த வழியையும் பின்பற்றலாகாது என்று அவர் சாதித்ததில்தான். குருமஹராஜ் குறும்பாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாலும் ஸத்ய தீரரான நரேன் பொறுத்துக்கொள்ள மாட்டார். அவர் ஒரு நாள் மஹிமாசரணரை வாங்கு வாங்கு என்று வாங்கி வாயடைக்க வைத்துவிட்டார்.

★

படாடோப வெளி வேஷத்தில் 'படு' நமது மஹிமா பாபு. தம் வீட்டுக் குழந்தைக்குப் பேர் வைப்பதானாலும்கூடச் 'சந்திரசேகரன்' என்ற பெயரையே பொருள் விளங்காத முறையில் 'ம்ருகாங்க மௌளி பூததுண்டி' என்றுதான் நாமகரணம் செய்வார்.

இந்தப் பகட்டின் ஓர் அம்சம் பாருங்கள்: தம் வீடு நிறைய ஆங்கில, ஸம்ஸ்க்ருத நூல்களை வாங்கி நிரப்பிக் கொண்டிருந்தார். அத்தனைப் புத்தகங்களையும் தாம் கரைத்துக் குடித்ததாகவும் சொல்லிக் கொண்டார். "அப்படியா?" என்று கேட்டு நரேன் ஏதோ சில புத்தகங்களை எடுக்க, அவை ஒவ்வொன்றிலும் ஏராளமான பக்கங்கள் 'பைண்டிங்'கில் வெட்டப்படாமல் ஒட்டப்பட்டிருந்த தங்களது ஒரிஜினல் ரூபத்திலேயே காட்டி தந்தன! ஆயினும் சளைக்கவில்லை மஹிமா பாபு. "ஏன் இப்படி இருக்கிறது தெரியுமோ? படிப்பதற்கு என்று யார் கேட்டாலும் நான் புஸ்தகங்கள் கொடுத்து விடுகிறேன். 'நாம்தான் வாங்கியவுடன் படித்துவிடுகிறோமே, மற்றவர்களும்தான் படித்துப் பயனடையட்டுமே' என்று கொடுத்துவிடுவேன். அவற்றில் சில என் கைக்குத் திரும்புவதேயில்லை. மறுபடியும் நான் அவற்றை விலை கொடுத்து வாங்கி வைக்கிறேன். அப்படி, நான் ஏற்கனவே படித்த புத்தகங்களில் இரண்டாம் தடவையாக வாங்கிய பிரதிகள்தான் இப்போது நீ எடுத்திருக்கிற 'கட்' ஆகாத புத்தகங்கள்" என்று ஒரு போடு போட்டார்.

Koviloor Digital Library

என்ன போடு போட்டு என்ன? நரேனின் சத்திய தீரத் துக்கு முன் அது நிற்க முடியவில்லை. அதன்பின் நரேன் அவரது அலமாரியிலிருந்து எடுத்த அநேக நூல்களும் இப்படிப் பக்கங்கள் வெட்டாமல் ஒட்டிய திருக்கோலத்தி லேயே விளங்கி மஹிமா பாபுவின் பாண்டித்ய மஹிமையை வெட்ட வெளிச்சமாக்கின!

★

இந்தப் பகட்டுக்கெல்லாம் எல்லையாக ஒன்று செய்வார் மஹிமா சரணர். பரமஹம்ஸதேவர் இதிஹாஸப் பெருமைக்கு உரிய த்யான யோகம் பயில்வாரே, அந்தப் பஞ்சவடியின் அடியிலேயே இந்தப் படாடோபரும் பிரமாத மாகச் சாதனை செய்வதாகக் காட்டிக் கொள்வார். பெரிதாகப் புலித்தோல் விரித்து, அதன்மேல் காஷாய ருத்ராக்ஷதாரியாக அமர்ந்து கொண்டு, ஏக்தாரை மீட்டியபடி ஓம்கார கோஷம் செய்வார். ஜபயோகம் முடித்தபின் அந்தப் புலித்தோலைக் கொண்டு வந்து குருமஹராஜின் அறையிலேயே மாட்டிவிட்டு வீடு செல்வார்.

இங்கேதான் அவர் தமது குணசித்திரம் முழுவதையும் குருமஹராஜ் ஒரு நுண்ணிய நகைச்சுவை மாத்திரையாக இறுக்கிக் கொடுக்க இடம் தந்துவிட்டார்!

குருமஹராஜைத் தரிசிக்க வருபவர்களில் பலர் அந்தப் புலித்தோலைப் பார்த்துவிட்டு, "இது யாருடையது?" என்று கேட்பார்கள்.

உடனே குருமஹராஜ், "இப்படி நீங்கள் என்னைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றே இங்கே இதை மாட்டியிருக்கிற ஒருவருடையது; மஹிமா சக்கரவர்த்தி என்று பெயர்" என்பார், பொன் முகத்தில் புன்னகை தவழ.

ஒரே வாக்கியத்தில் ஒரு மானுட மன விசித்ரத்தைத் தீட்டிவிட்ட ஹாஸ்ய சக்ரவர்த்திதானே நம் குருதேவர்?

★

Koviloor Digital Library

வியாபாரிகளின் தொழில் சாதுரியத்தைப் பற்றி ஸ்ரீ ராமக்ருஷ்ணர் ஒரு வேடிக்கைக் கதை சொல்வார். பொற்கொல்லர்களைக் குறித்தது. வேடிக்கையாக எடுத்துக் கொண்டு, சிரித்துவிட்டு, விடவேண்டிய கதை.

ஒவ்வொரு ஜாதியாரைக் குறித்தும், ஒவ்வொரு சீமையினரைக் குறித்தும் ஜனங்கள் கேலியாகச் சில சொல்வதுண்டு. இது அன்பு ஸ்வாதீனத்தால் விளையாட்டாகச் சொல்வதேயன்றிக் காழ்ப்பில் சொல்வதில்லை. ஜனங்களோடு கைகோத்து நிற்கும் மஹான்களும் இந்தக் கேலிகளில் களிப்பதுண்டு. கேலிக்கு ஆளாகிறவர்கள் தங்கள் கைகளையும் கோத்துக் கொண்டே அம் மஹான் பேசுகிறுர் என்று புரிந்து கொண்டு, தாங்களும் மற்றவர்களுடன் சேர்ந்து சிரிப்பார்கள். 'எங்கள் வர்க்கத்தை அவர் பழிக்கிறுரா?' என்று இதற்கு யாரும் கோபம் கொள்வது அழகல்ல. பாகற்காய் வடிவத்தில் பால்கோவா மிட்டாய் இருப்பதால் அது கசப்பானதெனக் கொள்வது அழகா? பாகற்காய்க்கும் உள்ள வடிவழகுக்காகவே பால்கோவாவை அப்படி உருவாக்கியுள்ளதெனத் தெளிவதுதானே அழகு?

விச்வ கர்ம வகுப்பினரைக் குறித்த இந்தக் கேலிப் பால்கோவாவை ஸ்ரீ ராமகிருஷ்ணர் பரிமாறுகையில், அதன் இன்சுவையை மனமார ரஸித்தவர்களில் அவ்வகுப்பினரேயான அதர்சந்த்ர ஸேனர் என்ற மாவட்ட உதவி நீதிபதியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த அடியாரின் வீட்டில்தான் ராமக்ருஷ்ணர் இக்கதை கூறினுரென்பதிலிருந்தே எவ்வளவு நிஷ்கபடமாகவும், பிரேமையோடும் அவர் கதை கூறியிருக்க வேண்டுமென்று புரிந்து கொள்ளலாம்.

கதையில் கேலிக்கு ஆளானது பொற்கொல்லர் ஸமுதாயம் எனில், அதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேலி ஆயுதமாகப் பிரயோகித்ததோ மகாபட்டவரான பங்கிம் சந்த்ர சட்டர்ஜியின் மேலாகும். அந்த மகாபட்டவரும் இதைத்

Koviloor Digital Library

த்மாஷாகவே எடுத்துக்கொண்டு ரஸித்தாரென்பதிலிருந்து குத்தல் அறியாதது ராமகிருஷ்ணரின் அன்புள்ளம் என்பதை மேலும் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

அதிப் பிரபல வங்க நாவலாசிரியரும், 'வந்தே மாதர' கீதத்தைப் படைத்தவருமான பங்கிம் சந்திரர் ஸ்ரீ ராம கிருஷ்ணரை அதர்சந்திர ஸேன் என்ற அந்த பக்தரின் வீட்டில்தான் சந்தித்தார்.

பங்கிம் சந்திரர் நாஸ்திகரைப் போல ராமகிருஷ்ணரிடம் என்ன என்னவோ குறுக்குக் கேள்விகள் போட்டார்.

குருமஹராஜ் அயராமல் அற்புதமாய் விடைகள் பகர்ந்துவிட்டு, "பெயரில் மட்டுமல்லாமல் காரியத்திலும் நீர் 'பங்கிமா'க இருக்கிறீரே!" என்றார்.

'பங்கிம்' என்றால் 'கோணல்' என்று பொருள். வளைந்துள்ள பிறைமதியத்தை பங்கிம் சந்த்ர என்பார்கள்.

கல்மஷமில்லாமல் சிரித்தவாறு ஸ்ரீ ராமக்ருஷ்ணர் இப்படிச் சொன்னதை பங்கிம் சந்திரர் நல்லபடியாகவே எடுத்துக் கொண்டார்.

குருமஹராஜ் அளித்த பதில்களினால் வெகுவாக மனம் கவரப்பட்டிருந்த அவர், "தாங்கள் கண்டால்பாராவில் உள்ள எங்கள் இல்லத்துக்கு விஜயம் செய்யவேண்டும். அங்கே நாங்களும் பூஜைக்கு யதோக்தமான ஏற்பாடுகள் செய்து, ஹரிநாம கீர்த்தனம் புரிந்து வருகிறோம்" என்றார்.

மீண்டும் தமக்கே உரிய நிஷ்கல்மஷப் புன்னகையோடு பரமஹம்ஸ தேவர், "எந்த முறையில் ஹரிநாமம் சொல்கிறீர்கள்? தட்டார்கள் சொன்ன அந்தப் பாணியிலா?" என்றார்.

பங்கிமுக்கும் ஏனையோருக்கும் புரியவில்லை. பிரபல நாவலாசிரியருக்கு நம் எளிய பகவான் நகைச்சுவைச் சிறுகதை கூறி அவரைப் பெரிதாகச் சிரித்து மகிழச் செய்தார். அந்தக் கதைதான் இது—

Koviloor Digital Library

ஓர் ஆசாமிக்குத் தன்னுடைய தங்க நகையொன்றை விற்க வேண்டியிருந்தது. நாணயமான பொற்கொல்லர் எங்கே கிடைப்பார் என்று நண்பர்களோடு தேடிக்கொண்டு போனார். அப்படி ஒரு கடை கண்ணில் பட்டது. அதில் முதலாளியாக இருந்தவர் ஒரு கிழவர். தலையில் குடுமியும், கழுத்து நிறைய ஜபமாலையும், உடம்பெல்லாம் குழைத்துப் போட்ட ஊர்த்வ புண்ட்ரமுமாக உட்கார்ந்திருந்த அவரைப் பார்த்தவுடனேயே, 'நல்ல தெய்வ பக்தியும், மத விசுவாசமும் உள்ளவர்; ஏமாற்றமாட்டார்' என்ற நம்பிக்கை தோன்றியது. ஹரிநாமம் சொன்னவாறு வாசற்புறம் அமர்ந்திருந்தார். அவரது சிப்பந்திகளும் சமயச் சின்னங்களுடன் மிகவும் ஸாத்விகர்களாகக் காணப் பட்டார்கள். நகை வேலையின் பல கட்டங்களில் ஒவ்வொருவர் ஒரு பணியில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தார்.

நகை விற்க விரும்பிய நமது ஆசாமியும் நண்பர்களும் இங்கேயே விற்பது என்று முடிவு செய்தனர். கிழவனாரின் முன்னால் அதை வைத்து, "சரியாக விலை போட்டுக் கொடுக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர்.

கிழவனார் வெகு அன்போடு அவர்களை உட்காரவைத் தார். ஒரு பணியாளை அழைத்து, "சாமிங்களுக்குத் தமாக்கு போடப்பா" என்றார். (தமாக்கு என்பது ஹுக்கா புகை. வடதேசத்தில் இது ஆசாரக்காரர்களுக்கும் விலக்கு அல்ல.)

அப்புறம் உரைகல்லில் நகையைத் தேய்த்துப் பார்த் தார். அது எத்தனை மாற்று என்று ஏமாற்று இல்லாமலே சொன்னார். "உருக்கி, இதில் எவ்வளவு சுத்தப் பொன் என்று எடை பார்த்து நியாயமான விலை தருகிறோம்" என்றார். விற்கப் போனவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

உருக்குவதற்காக அதை ஒரு சிப்பந்தியிடம் கொடுத் தார். அவன் அதை உருக்கியவாறே, "கேசவா, கேசவா!" என்று நாமோச்சாரணம் செய்தான்.

Koviloor Digital Library

அது அக் கிழவனாரிடமும் பக்தியாவேசத்தைக் கிளறி விட்டது. அவர், "கோபாலா கோபாலா!" என்று கூவினார்.

பக்தி போதை ஒவ்வொருவராகத் தொற்றிக்கொண்டே போக, உள்ளே இருந்த இன்னொரு சிப்பந்தி, "ஹரி, ஹரி, ஹரி" என்று ஆர்ப்பரித்தான்.

தமாக்கு தயார் செய்தவன் புகைக் குழாயைக் கொண்டு வந்து விற்க வந்தவர்களிடம் கொடுத்துவிட்டு, "ஹர ஹர ஹர" என்று சொல்லிக்கொண்டே உள்ளே போனான்.

அவன் அப்படிச் சொன்னதுதான் தாமதம், முதல் சிப்பந்தி வெகு ஜாலக்காக உருக்கிய பொன்னில் ஒரு பகுதியைத் தன் பக்கத்திலிருந்த ஒரு பானை ஜலத்துக்குள் சரித்துக் கொண்டுவிட்டான். ஜலத்துக்குள் அது கெட்டித் தங்கமாக இறுகி, அப்படியே அந்தப் பொற்கொல்லர்களால் 'ஜீரணித்து'க் கொள்ளப்பட்டது! மீதித் தங்கம் கெட்டியான பின், ஸர்வநியாயமாக அதை எடை போட்டு, பரம நியாய மாக அதற்கான விலையைக் கொடுத்தார் பெரியவர்!

விற்க வந்த ஆசாமியும் நண்பர்களும் மிகவும் திருப்தி யுடன் போய்ச் சேர்ந்தார்கள். அவர்களுக்குப் பாவம், அந்த நகை வேலைக்காரர்களின் சங்கேத பாஷையும் 'வேலைத் தன'மும் எப்படித் தெரியும்? பொற்கொல்லர்கள் பொன்னை பகவந்நாம மந்திரத்துக்குள்ளேயே தங்கள் தந்திரப் பித்தளையையும் கலந்து இழைப்பு வேலை செய்திருந்ததை அவர்கள் எப்படி அறிவார்கள்?

நகையை உருக்கியவன் 'கேசவ' என்றானே, அது நாம உச்சாரணமில்லை, வங்காளியில், "கே—சவ" என்றால் "அவர்கள் யார்?" என்று அர்த்தம். விற்க வந்திருப்பவர்கள் சாமர்த்தியசாலிகளா, அசட்டு மத்ஸ்யங்களா என்று தெரிந்து கொள்வதற்காக அவன் இப்படிக் கேட்டான்.

கிழவனார் நகையை மாற்றுப் பார்த்து எடை போடுவது போலவே வாடிக்கைக்காரர்கள் எத்தகையவர்கள் என்பதை

Koviloor Digital Library

யும் பார்வையினாலேயே எடை போடும் சதுரர். அம்மாதிரி இவர்களைக் கணித்துத்தான், "கோபாலா" என்றார். இடையர்கள் யாவருமே 'கோ - பாலர்' தாமே? இடையர்கள் பொதுவில் வெகு அப்பாவிகளாக நினைக்கப்பட்டனர். "ஏமாளிகள் வந்திருக்கின்றன" என்பதைத்தான் கோபால கோஷத்தால் கிழவர் தெரிவித்தார்.

உள்ளே இருந்தவன் "ஹரி" என்றதற்கு அர்த்தம், "திருடலாம்" என்பது. ஹரணம், அபஹரணம் என்பதெல்லாம் 'ஹர்' என்னும் தாதுவிலிருந்து வந்தவைதாம். உள்ளம் கவர் கள்வனுதலாலேயே இறைவனுக்கு ஹரன், ஹரி என்று பெயர்கள்.

கண்ணில் மண்ணைத் தூவி சாமர்த்தியமாகத்தானே திருடுவதைச் செய்யவேண்டும்? அதற்கேற்ற சரியான தருணத்தில்தான் நாலாவது பணியாள் "ஹர", அதாவது "திருடு!" என்றான்.

இவன் புகை போட்டவுடன் வந்தவர்கள் ஹுக்காவின் ஜோரில் மயங்கி கவனம் குறைந்தவர்களாக ஆகியிருப்பார்கள் அல்லவா? அப்போது "இதுதான் சமயம்" என்று 'ஸிக்னல்' கொடுக்கும் விதத்தில் 'ஹர' என்றான்.

உடனே உருக்கும் பணியாளும் திரவப் பொன்னில் ஒரு பகுதியைத் தண்ணீர்ப் பானைக்குள் ஊற்றிக் கொண்டு விட்டான்.

விற்க வந்தவர்களோ பெருமை பெருமையாகப் புகை பிடித்துவிட்டு, பேரத்தில் தாங்கள் புகைந்து போனதறியாமல் பெரிய லாபம் அடைந்த ஸந்தோஷத்தோடு போனார்கள்!

★

மர்மமேதையான நாவலாசிரியர் பங்கிம் சந்திரரையும் ஒரே வாக்கியத்தில் நமது குழந்தை குருதேவர் வெயிலில் வாரிப் போட்டதுண்டு; இல்லை, சிரிப்புப் பூந்தூறலில்தான் வாரிப் போட்டார்!

Koviloor Digital Library

''காமம் முதலியன மானுட வாழ்க்கைக்கு அவசியம் தான் என்பதில் பங்கிம் நம்பிக்கை கொண்டிருக்கிறார். ஆனால் ஆண்டவனே கண்ணன் போன்ற ஒரு அவதாரம் எடுத்து ஆய்மகளிருடன் லீலையாக ரமிக்க முடியும் என்பதில் அவருக்கு நம்பிக்கை இல்லை'' என்று கர்னல் விச்வநாத உபாத்யாயர் குருதேவரிடம் கூறினார்.

அவர் வாய் மூடுமுன் குருதேவர் ஹாஸ்ய மின் வெட்டினார்—''எப்படி நம்புவாராம்? இந்த விஷயம் நியூஸ் பேப்பரில் வரவில்லையோல்லியோ?''

ஒரு நபரின் உள் மனப் போக்கை நொடியிலே காட்டி விடும் தமாஷ் மின்னல்!

★ கேசவ் சந்திரரும் விலக்கல்ல, இப்படி வெயிலில், அல்ல, சிரிப்பு வர்ஷத்தில், வாரிப் போடப்படுவதற்கு.

பிரம்ம ஸமாஜம் இரண்டாக உடைந்த பிறகு கேசவ் தலைமை தாங்கிய பிரிவில் சிறப்பு வாய்ந்த எவருமே இல்லை என்றும், விஜய கோஸ்வாமி, சிவநாத் போன்ற குறிப்பிடத் தக்க புள்ளிகள் யாவருமே மறுபிரிவில்தான் இருக்கிறார்கள் என்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் ''ஸுரேந்தர்'' கூறினார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் இதழ்க் கடைகளில் குறுகுறு எனக் குறும்புநகை அரும்பு கட்டியது. ''ட்ராமா கம்பெனிக்காரன் கோவிந்த அதிகாரி இருக்கானே, அவனிடம் நல்ல நடிகர்கள் யாரும் இருப்பதில்லை. நன்னா நடிச்சுப் பேர் வாங்கிட்டான்னா எங்கே ஒரு நடிகன் லாபத்திலே பங்கு கேட்டுடுவானோ-ன்னு கோவிந்தாவே அப்படி வரக் கூடியவங்களை வெளியிலே அனுப்பிச்சுடுவான்'' என்றார். அதோடு வியங்கியமாக விட்டு விட்டார். ஆயினும் அத்தனை பேரும் 'கொல்'லென்று சிரித்து விட்டார்கள்.

அடடா, ஆன்மியப் பிரசாரத்தில்கூட ஒருவித ''லாபக் கணக்கு''ப் பார்த்து பயப்படுகிற அசட்டுத்தனம் கேசவ சந்திர..ரையும் விடவில்லையா?

Koviloor Digital Library

★ அதர்ஸேனைக் குறித்தும் ஒரு குத்தல் ஹாஸ்யம் பரமஹம்ஸர் செய்திருக்கிறார். தப்பு, தப்பு, மழமழ ஹம்ஸம் எப்படிக் குத்தும்? அதன் இறகு குறுகுறுதான் செய்யுமே யொழியக் குத்துமா என்ன?

ஒரு நூற்றுண்டுக்கு முன் ஓர் இந்தியர் உபநீதிபதியாவது பெரிய விஷயமாகும். எனவே அதர்ஸேனைக் கண்டவுடன் ஸாமானிய மக்கள் எழுந்து நின்று கைகட்டி நிற்பார்கள். அப்படிப்பட்டவருக்கோ தினமும் பரமஹம்ஸரிடம் வந்து கைகட்டி நின்ருலொழிய மன நிறைவு இராது. நீதிமன்றத்தில் பணி முடிந்ததும் வீடு செல்லாமல் நேரே குரு மஹராஜிடம்தான் செல்வார்.

ஆனுல் பகலெல்லாம் பணி செய்தது அலுப்பாயிருக்கும். அலுத்து வந்த ஆவிக்கு அமுதமாய் விச்ராந்தி தரும், நமது அம்மையப்பரின் ஸந்நிதானம். அன்பும் ஆன்மியமும் அலை மோதும் டாகுரின் உரையாடலிலோ, அல்லது பக்தியும் பரவசமும் பிரவஹிக்கும் அவரது ஆடல் பாடலிலோ அதர் சிறிது நேரம் சொக்கியிருந்து அப்படியே கண்ணயர்ந்து விடுவார். குருநாதனின் முன், புனித ஸத்ஸங்கத்தில் தூங்கலாமா என்று யோசியாமல், எவரையும் ஸஹஜமாக இருக்கச் செய்யும் அந்த இதக் கருவறையில் அவர் பாட்டுக்கு ஒரு பாயில் படுத்துக்கொண்டு சொஸ்தமாக நித்திரை போய் விடுவார். மற்ற பக்தர்கள் டாகுரின் ஸம்பாஷணை, ஸங்கீர்த்தனம் முதலியவற்றில் ஈடுபட்டு ஜாக்ரத்திலேயே துரீய இன்பம் காண்கையில், அதர் மாத்திரம் ஸ்வப்ன, ஸுஷுப்தி இன்பம் கண்டுகொண்டிருப்பார்.* இரவு யாவரும் விடை கொள்கையில் அதரை எழுப்புவாகள். அவர் எவ்வித அபசார உணர்வும், கூச்சமும் இல்லாமல் நிதானமாக எழுந்திருந்து டாகுரை நமஸ்கரித்துவிட்டுப் புறப்படுவார்.

---

* ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி, துரீயம் என்ற நான்கு நிலைகள் முறையே விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம், தூங்காமற் தூங்கும் ஆன்மநிலை ஆகியவற்றைக் குறிக்கும்,

Koviloor Digital Library

அவர் ஸத்குரு ஸந்நிதியை நித்ரா கிருஹமாக்கிக் கொள்வதில் பல அடியார்களுக்கு ஆக்ஷேபமிருந்தது. ஆனாலும் டெபுடி மாஜிஸ்ட்ரேட் பாபுவிடம் அவர்கள் கண்டனம் தெரிவிக்க முடியுமா? எனவே டாகுரிடம் முறை யிடுவார்கள். டாகுர் அதைக் காதில் போட்டுக் கொள்ள மாட்டார். அல்லது குறை சொல்பவர்களிடமே குறை கண்டு கண்டிப்பார். "உங்களை மாதிரி இங்கே வந்தும் ஊர் வம்பு பேசாமல், அதர்தான் இது அம்மா காளியின் சொந்த வீடு என்று கண்டுகொண்டு இவ்விடத்தை உரியபடிப் பயன் செய்து கொள்கிறார். எப்படியென்றால் அம்மாவின் திவ்ய சக்தியெல்லாம் சாந்தியில்தானே நிறைகிறது? அந்த சாந்த ஸௌக்கியத்தைத்தான் அதர் தூக்கத்தில் அநுபவிக்கிறார். தாம் நிம்மதியாய் தூங்குவதோடல்லாமல், வம்பு தும்பில் இறங்காததால் நம் நிம்மதியையும் குலைக்காமலிருக்கிறார்" என்று விந்தையாக அதருக்கு வக்காலத்து வாங்கிப் பேசுவார்!

மறுநாளும் அதர் வருகையில் "இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தரு"வாக அவரை அன்பு கனிய வரவேற்பார். தரு நிழலில் அதர் நிம்மதியாய் உறங்குவார். விளையாடிக் களைத்த குழந்தை துயில்வது கண்டு மகிழும் தாயாக அவரைப் பார்த்து டாகுர் ஸந்தோஷப்படுவார்.

இப்படி டாகுர் அதரின் நித்திரை குறித்து அநுதாபக் கண்ணோட்டம் கொண்டிருந்தாலும், அவரது மனத்தின் ஒரு மூலை இதனை ஒரு நகைச்சுவைக் கோணத்திலும் ரஸித்துக் கொண்டுதானிருந்திருக்கிறது! ஒருநாள் அந்த ஹாஸ்ய ரஸச் சொட்டுக்கள் வெளியிலும் தெறித்து விட்டன.

அன்று அதர்ஸேன் டாகுரிடம் வந்து, "தங்களுடைய தெய்விக சக்தியை எனக்குக் காட்டியருள வேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொண்டார்.

டாகுரின் அடியரில் பலர் இவ்விதம் வேண்டியிருக்கிறார் கள். அதற்குக் காரணமுண்டு. "மஹான்" எனப்படும் மற்ற

Koviloor Digital Library

எவரையும்விட டாகுர் வெகு எளியராக இருந்துகொண்டு, அடியார்களிடம் அவர்களுக்கு ஸம ஸ்தானத்தில் உள்ளவர் போலவே கலந்து பழகுபவர். இப்படித் தம்மோடு சாமானியர் போல ஒட்டி உறவாடினுலும் அவர் அசாமானியமான பிறவி என்பதையும் அவர்கள் உள்ளூர அறிவார்கள். அந்த அசாமானியத்துவத்தை ஓரளவு அவரது ஸமாதிப் பரவசங்களில் அவர்கள் கண்ணுக்கு முன் கண்டுமிருந்தார்கள். அதனுலேயே தங்களில் ஒருவராக மாய வேஷம் போடும் அவரது வாஸ்தவமான தெய்விகத்தை மேலும் வியக்தமாகக் காண அவர்களுக்கு அவா எழும். அப்போதுதான் அவரது திவ்ய மகிமையைக் காட்டுமாறு அவரிடமே வேண்டுவார்கள்.

ஏதோ ஒரு ஸந்தர்ப்பத்தில் அதரும் இப்படி வேண்டினுர்.

திரு அதரத்தில் புன்னகை நெளிந்தது. திரு இதயத்தின் ஒரு மூலேயில் இருந்த ஹாஸ்யச் சுவையின் நிமிண்டலில்தான் அதரம் அந்த நெளிப்பைக் காட்டிற்று. ஹாஸ்ய பாவமும் தமது தெய்விக மாண்பின் ஓர் அம்சம்தான் என்று சொல்லாமற் சொல்வதுபோல டாகுர் சொன்னுர்; நகைச் சுவை மன்னராகச் சொன்னுர்.

"என்ன அதர், என் சக்தியை இனிமேல்தானு நான் உனக்குக் காட்டவேண்டும்? எனச்கு என்ன சக்தி இருக்கிறதென்று எனக்கே தெரியாமல்தானிருந்தது. அப்புறம்தான் தெரிய வந்தது—'ஊரெல்லாம் பயபக்தி மரியாதை காட்டுகிற ஒரு டெபுடி மாஜிஸ்டிரேட் கப்சிப் என்று தாம் இருக்கிற இடம் தெரியாமல் ஒரு நாளேப் போலத் தூங்கிப் போய்விடும்படியாகப் பண்ணிவிடும் மஹா சக்தியாக்கும் நமக்கு இருக்கிறது' என்று தெரிந்து கொண்டேன்!" என்றுரே பார்க்கலாம்.

★

Koviloor Digital Library

அதர் போன்ற அத்யந்த பக்தர்களைக் குறித்த டாகுரின் தமாஷும் கேலியும் தனியானதொரு இன்சுவை கொண்டவைதாம். உதாரணமாக, ஸ்தூல சரீரியான ப்ராண க்ருஷ்ணரை "குண்டு ப்ராமணு!" என்று அவர் கூப்பிடும் அருமையொன்றே போதும்!

இந்த அருமைக்கு ஈடாக இன்னொன்று சொல்லவேண்டுமென்றால் அது அவரது சிஷ்ய ரத்னங்களான செல்லப் பிள்ளைகளைப் பற்றி, "எங்கே அந்த ராஸ்கோல்கள்?" என்று அவர் விசாரிப்பதுதான்.

கோபால என்ற பெயர் கொண்ட இரண்டு சீஷர்கள் குருதேவருக்கு உண்டு. அவர்களில் ஒருவர் குருதேவரையும் விட வயதில் பெரியவராதலால் 'மூத்த கோபால்' என்று குறிப்பிடப்பட்டார். மற்றவர் இளைஞர். ஆனால் இவரை குருதேவர் இளைய கோபால் என்று அழைக்க மாட்டார். "ஹட்கோ கோபால்" என்றோ, அல்லது வெறுமே "ஹட்கோ" என்று மட்டுமோதான் அழைப்பார். அவரிட்ட அந்த நாமகரணத்தாலேயே மற்றவர்களும் அவரை அழைக்க, 'ஹட்கோ' என்பதே அவர் பெயராகிவிட்டது. அப்படியென்றால் என்ன அர்த்தம் தெரியுமா? திடீரெனத் தோன்றி மறைவது. இவ் விளைஞர் திடுமென வந்து குதிப்பார், அப்படியே காணாமலும் போய்விடுவார். அதனால் தான் அவருக்கு டாகுர் 'ஹட்கோ' என்று செல்லமாகக் கேலிப் பெயர் வைத்தது.

நம் அம்மா சாரதைக்கு இப்படியெல்லாம் அவர் ஹாஸ்யமாகப் பெயர் வைக்கவில்லை. ஆனால் அவள் பெயரைச் சொல்லாமல் ஹாஸ்யமாக ஓர் அபிநயம் பிடித்தே 'அம்மாவைத்தான் குறிப்பிடுகிறார்' என்று புரிய வைத்துவிடுவார். அம்மா அக் காலத்தில் நத்து அணிந்திருந்தாள். அதனால் ஐயா சிரிப்பு வழியும் முகத்துடன் தம் மூக்கு நுனியிலே விரலால் வளையம் போட்டுக் காட்டி, அந்த அபிநயத்தாலேயே நத்துக்காரப் பத்தினியைக் குறிப்பிட்டு விடுவார்!

Koviloor Digital Library

(பிறர் எப்படியெப்படிச் செய்கிறார்களோ அப்படியே அபிநயிக்கும் 'மிமிக்ரி'யிலும் படு நமது டாகுர். அவரது நகைச்சுவை லீலைக்குக் குங்குமப்பூவாக மணமூட்டுவது இந்த மிமிக்ரியேயாகும்.)

★ பலராம் வஸு பக்தச்ரேஷ்டர்தாம் ஆனாலும் மனிதர்தாமே? "வெள்ளையப்ப"னின் வேலைத்தனம் எந்த மனிதரை விட்டு வைத்தது? டாகுருக்கும் டாகுரின் அடியாருக்கும் தம் உள்ளக் கதவையும் இல்லக் கதவையும் அகலத் திறந்து வைத்திருந்த பலராம் போஸின் உள்ளத்திலும் அவ்வப்போது "வெள்ளையப்ப"னின் வேலைத்தனம் புகுந்து அகலத் திறந்த கதவைச் சற்றுச் சாத்தும்படிச் செய்வதுண்டு. அச் சமயங்களில் அவர் தமது கையை அதிகம் "கடிக்காமலே" டாகுரும் அவரது பக்தர்களும் வந்து போகட்டும் என்பதுபோல நடந்து கொண்டு விடுவார். இதைப் பற்றி உட் சிரிப்பு பொங்கப் பொங்க டாகுர் பேசியதுண்டு.

ஒருமுறை அவர் பலராமரின் வீட்டில் நடந்த குட்டி ரதோத்ஸவத்துக்குச் சென்றிருந்தபோது நரேனைப் பாடச் சொன்னார். பக்க வாத்தியங்களுடன் பாடினாலே தமது பக்தியிசை முழு மெருகோடு விளங்குவதாகக் கருதியவர் நரேன். அன்று பலராம் பக்க வாத்தியங்களுக்கு ஏற்பாடு செய்யவில்லை. எனவே நரேன், "வாத்தியமேதும் இல்லையே! நான் மட்டும் வெறுமனே பாடட்டுமா?" என்று கேட்டார்.

அப்போதுதான் பக்த சிரேஷ்டரான பலராமிடம் இப்படியொரு குறை இருக்கிறதே என்பதில் குருதேவர் கொண்டிருந்த வருத்தத்தையும் கோபத்தையும் உட் சிரிப்பில் தோய்த்து, எல்லோரும் சிரிக்கச் சிரிக்க அவர் பேசினார்.

"அப்பா மகனே! இங்கே நமக்குப் பிராப்தி இவ்வளவு தான். இது உனக்குப் போதுமானால் பாடு. பலராமின் ஏற்பாடு எப்படி என்பது உனக்குத் தெரியவேண்டும். 'தயவு

Koviloor Digital Library

பண்ணி அகத்துக்கு வாருங்கள்' என்று கூப்பிடுவான். உடனேயே, 'படகில் வந்து விடலாம்; ஆனால் உங்களுக்கு அத்தியாவசியம் ஏற்பட்டால் வண்டியில் வேண்டுமானாலும் வரலாம்' என்பான்*. இப்போது நமக்கு மத்தியானச் சாப்பாடு போட்டுவிட்டானல்லவா? அதற்காக ஸாயங் காலம் நாம் (பஜனையில்) டான்ஸ் பண்ண வைத்து விடுவான்.

"ஒரு நாள் நான் இங்கிருந்து திரும்பும்போது வண்டி ஏற்பாடு செய்திருந்தான். வண்டிச் சத்தம் முக்கால் ரூபாய் என்றான். 'முக்கால் ரூபாய்க்கு எந்த வண்டிக்காரனாவது தக்ஷிணேச்வரத்துக்கு வருவானா?' என்று கேட்டேன். அதற்கு, 'முக்கால் ரூபாயே ஜாஸ்தி' என்றான். அந்த வண்டி எப்படியிருந்தது தெரியுமா? நாங்கள் தக்ஷிணேச்வரம் போய்ச் சேருவதற்குள்ளேயே அதில் பாதி உடைந்து விழுந்து விட்டது! அது மட்டுமில்லை. நாலடிக்கு ஒரு தடவை குதிரை மக்கார் பண்ண ஆரம்பித்துவிடும். நகரவே நகராது. வண்டிக்காரன் வீறுவான். மறுபடி நாலடி ஓடும்...

"சரி, இன்னிக்கு ஸாயங்காலம் பஜனைக்கு ராம் தான் மிருதங்கம் தட்டியாகணும். அவன் தட்டலுக்குச் சரியாக நாம் ஆடணும்! ராமுக்கு லயஞானமே கிடையாதே என்று நாம் நினைத்தால் என்ன? பலராமின் நினைப்பு, 'வருகிறவங் களே தாங்களாக ஆடிக்கட்டும், பாடிக்கட்டும், தங்களைத் தாங்களே ஸந்தோஷப்படுத்திக்கட்டும்' என்பதுதான்!"

★ தப்புதாள மத்தளக்காரராக டாகுர் குறிப்பிட்ட ராம் யாரெனில் டாகுரின் இல்லறச் சீடர்களில் மற்றொரு முக்கியஸ்தரான ராமசந்திர தத்தர்தாம். வள்ளலாக டாகு ரின் வட்டத்துக்கு வாரிவிட்ட அவர் ஆதிகாலத்தில் பலராம்

---

* ஸ்ரீ ராமகிருஷ்ணர் வஸித்து வந்த தக்ஷிணேச்வரத்திலிருந்து பலராம் முதலிய பல பத்தர்கள் வாழ்ந்த கல்கத்தாவுக்கு கங்கை வழியாகப் படகில் வந்தால் சத்தம் குறைவு. சாலைவழி வந்தால் வண்டிச் சத்தம் அதிகம்.

Koviloor Digital Library

போன்ற வெறும் சிக்கனக்காரராக மட்டுமின்றி அசல் கஞ்சராகவே இருந்தவர். "அந்த நாளில் நான் அவனிடம் ஏலக்காய் கேட்டால் ஒரு பைசாவுக்குத்தான் வாங்கிக் கொண்டு வருவான். அந்த நாலு ஏலக்காயை எனக்கு முன்னால் பவ்யமாக வைத்துவிட்டு நமஸ்காரம் மட்டும் நீள நெடுகப் பண்ணுவான்" என்று குறும்புடன் கூறுவார் குருதேவர். கஞ்சரை வள்ளலாகக் கரைத்த குருதேவரின் வித்தகத்தில் இந்த ஹாஸ்ய இடித்துரைப்பும் ஓர் அம்சமா யிருந்திருக்க வேண்டும்.

எழுத்துலகம் உண்டாக்கிவிடும் சுயப் பிரதாப மயக்குக்கு இந்த நல்ல பக்தர் ராம் ஆளாகிவிடப் போகிறாரே என்பதில் குருதேவர் கொண்டிருந்த கவலை ஒரு ஹாஸ்யச் சுடரின் மூலம் வெளியாயிற்று.

"ராம்பாபு உங்களைப்பற்றி, 'பரமஹம்ஸரின் பக்தி' என்ற தலைப்பில் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கிறார்" என்று ஓர் அடியார் தெரிவித்தார்.

"பேஷ்! அதனால் ராம் பாபு பிரசித்தி பெறுவார்" என்று சுடர் தெறித்தார் நகைச்சுவை ஜோதியர்!

(பிற்காலத்தில் ராமசந்திர தத்தர் "ஸ்ரீ ஸ்ரீ ராமக்ருஷ்ண தேபேர் ஜீவன் வ்ருத்தாந்த" என்பதாக டாகுரின் சரிதையை எழுதினார். ஆனால் அதனால் எவ்வித எழுத்தாள அஹம்பாவ மயக்குக்கும் அவர் ஆளாகாதபடி டாகுரின் அருள் அவரைப் பக்குவம் செய்திருந்தது.)

கேலியும் பரிஹாஸமுமில்லாமல் குழந்தைபோல டாகுர் இதே ராமிடம் செய்த குறும்பொன்றைச் சொல்லவேண்டும்.

டாகுரின் இன்னுயிரைக் குடித்த தொண்டைப் புண் உண்டாகிக் கடுமையாகத் தொடங்கிய சமயம். அப்போதும் அவர் மகிழ்ச்சியாகவே பக்தர்களோடு உறவாடி உரையாடி வந்தார். பேச்சின் இடையே, "அம்மாவிடம் வியாதியைப் பற்றிச் சொல்ல எனக்கு வாய் வரவில்லை. இதைப் போய் சொல்லவா என்று வெட்கமாக இருக்கிறது" என்றார்.

Koviloor Digital Library

"ஆமாம், அவளாகவே உங்களை சொஸ்தம் செய்வாள்" என்றார் கிரிஷ்.

"ஆமாம், ஆமாம், நீங்கள் முற்றும் குணமாகி விடுவீர்கள்" என்று ராமும் கூறினர்.

உடனே குருதேவர் குறும்புக் குறுநகை தவழ, ராமிடம், "பெரியவா அப்படியே ஆசீர்வாதம் பண்ணுங்கோ!" என்றார்.

சிறு சுடர் ஒரு வைக்கோற் போரின் மேல் விழுந்து பெரும் ஜ்வாலை மூட்டி விடுகிறதல்லவா? அதுபோல இச் சிறு நகைச் சுடர் வாசகம் கூடியிருந்த அடியார்களின் மீது விழுந்து, அவரது உடல்நிலை பற்றிய கவலை மறந்து அத்தனை பேரும் சிரித்த கலீர் ஒலியாக ஜ்வாலையில் ஓங்கியது!

★ பரமஹம்ஸரின் அணுக்கப் பரிவாரத்திடை மயில் வேஷம் போட்ட வான்கோழி போல—அல்லது இன்னும் பொருந்தச் சொல்லவேண்டுமானல், அன்ன வேஷம் போட்ட கறுப்பு வாத்துப் போல—இந் நூலாசிரியருக்குத் தோன்றுபவர் பிரதாப் சந்த்ர ஹாஸ்ரா. தலைக்கனம் மிக்க அந்த கறுப்பு வாத்து பரமஹம்ஸத்தைக் கிள்ளுக்கீரையாக எள்ளி நகையாடிப் பேசும். தலை மட்டுமின்றி ஸர்வாங்கமும் கனமே இன்றிப் பரம லேசான பரமஹம்ஸம் அந்தக் கறுப்பு வாத்தின் கனத்தையும் லேசாகத் தாங்கித் தன்பாட்டில் நீந்திக் கொண்டிருக்கும் அற்புதத்தைச் செய்துவந்தது. மற்றவர்களிடம் போல் ஹாஸ்ராவிடமும் ஹாஸ்யம் செய்து களிப்பார் பரமஹம்ஸர்.

ஒரு நாள் பரமஹம்ஸரிடம் திடீர் கரிசனம் கொண்ட ஹாஸ்ரா ஹட்கோ கோபாலிடம், "குருமஹராஜுக்குத் தமாக்கு போடப்பா" என்றார்.

பக்கத்து இலைக்குப் 'பந்தி விசாரிக்கும்' சாமர்த்தியந்தான் என்பது புரிந்து கொண்டுவிட்டார் சூக்ஷ்மம் மிக்க குருமஹராஜ்.

Koviloor Digital Library

ஹாஸ்ராவை இன்னகையுடன் பார்த்து, "உனக்குத் தமாக்கு வேணும், அப்படித்தானே?" என்ருர்.

ஹாஸ்ராவின் செருக்கையும் அஞ்ஞானத்தையும் அறியாத ஒருவர் அவரிடம், "குருமஹராஜிடம் வந்த நாளாக நீர் நிரம்ப ஞானம் பெற்றிருக்க வேண்டும்" என்ருர்.

இதற்கு ஹாஸ்ரா அஞ்ஞானச் செருக்கில் என்ன விஷமமான பதில் சொல்லியிருப்பாரோ? ஆனுல் அவரைச் சொல்லவிடாமல் அதைவிட விஷமமாக—அஞ்ஞானச் செருக்கை ஒரு போடு போடும் அருள் விஷமமாக—ராமகிருஷ்ணர் முந்திக் கொண்டார். "நன்ருகச் சொன்னுய் போ! இங்கே வந்த நாளாகவா? இவர் இப்போது இருக்கிற மாதிரி ஞானியாகப் பிறந்ததிலிருந்தே இருக்கிருராக்கும்" என்ருர்!

பிறவிக் கோணலை இதைவிட அழகாக எடுத்துக் காட்ட முடியுமா?

★ "இளையாரொ(டு) ஆடிக் குதிப்பான்" என்று தீராத விளையாட்டுக் கண்ணனைப் பற்றி பாரதி பாடியதுபோல நமது விளையாட்டு வேடிக்கை குருதேவரும் தம்மோடு ஆடிக் கூடிக் களிக்க அருமையானதொரு வாலிப வட்டம் வைத்திருந்தாரல்லவா? அவர்களோடு ஒவ்வொரு ஸமயத்தில் கொச்சை ஜோக்குகள்கூட அடிக்கத் தயங்கவில்லை, எப்படியேனும் அவர்களை ஈர்த்து, ஆயாஸமின்றி மேம்படுத்த விரும்பிய நம் அதிசய குருதேவன்.

சிஷ்ப் பசங்களிடம் ஒரு குரு இப்படிப் பேசலாமா என்று உள்ளூர ஐயுற்ற மற்ற அடியார்களைப் பார்த்து, "பசங்களுக்கு ரொம்பவும் மடிச் சமையலா உப்பு காரமில்லாம போட்டா எப்படி வருவாங்க? அதுதான் அப்பப்ப கொஞ்சம் மஸாலாவும் வெச்சுத் தீட்டறேன்" என்று இன்னெரு ஜோக் அடித்தார்!

Koviloor Digital Library

★ பகவானுக்கும் பக்தருக்குமிடையில் தாரதம்மியம் மறந்த எத்தகு ஸம ஸ்வாதீன அன்புத் தமாஷ் பாருங்கள் :

ஒரு நாள் பகல் பதினேரு மணிக்கு தக்ஷிணேச்வரம் வருகிறார் ஞான் பாபு. அவர் ஒரு மஹாபட்ட மநுஷ்யர் - பல்கலைக் கழகத்தின் நான்கு பட்டங்கள் பெற்றவர்! அரசு அதிகாரியாயிருப்பவர். அவர் எவரைப் பார்க்க வந்தாரோ அவர் மஹா அவதாரமாகவே மதிக்கப்படும் குருமஹராஜர், பரமஹம்ஸர். ஆனல் இருவரும் எப்படி சாமானியத் தோழர்களாக ஹாஸ்யம் செய்து கொள்கிறார்கள் பாருங்கள்:

அந்த வேளைக்கு ஞானை எதிர்பார்க்காத ராமகிருஷ்ணர், "பலே, பலே! நமக்குத் திடீர் ஞானோதயம்!" என்கிறார்.

"பூர்வ புண்யமிருப்பதால்தான் இப்படி ஞானோதயம் காணமுடிகிறதென்று ஒப்புக்கொள்ளுங்கள், ஸ்வாமிகளே!" என்று பதிலுக்கு ஹாஸ்யம் கூட்டுகிறார் ஞான்.

★ கொன்னகரிலிருந்து வந்த ஒரு கோஷ்டிக்குத் திடுமென ராமகிருஷ்ணர் ஸமாதி நிஷ்டையில் ஆழ்ந்ததும் என்ன ஏது என்று புரியவில்லை. உடனே அவர்கள் புறப்பட்டு விடுவதுதான் நல்லதென்று எண்ணிக் கிளம்பினார்கள். அப்போது டாகுரின் பிரியப் பசங்களில் ஒருவரும், நரேனிடம் உயிர்த் தோழமை கொண்டவருமான பவநாத் அவர்களுக்கு டாகுரின் ஸமாதியைப் பற்றிச் சொல்லி அவர்கள் புறப்பட்டு விடாமல் தங்குமாறு செய்தார். இதை அவர் பிற்பாடு டாகுரிடம் தெரிவித்துக் கொண்டபோது டாகுர் அந்த அன்புப் பிள்ளையைக் கொஞ்சம் கேலி செய்து மகிழ்ந்தார். "தெரியுமே உன் கைங்கர்யம்! இங்கே வருகிறவர்களைத் துரத்துவதிலேயும், இங்கேயிருந்து போகிறவர்களைப் பிடித்து வைத்துக் கொள்வதிலேயும் நீ மஹா கெட்டிக்காரனாச்சே!" என்றார்.

★ நம்முடைய சாரதையம்மாவை சிலாகித்து அவளது பதி தேவரான நம் குருதேவர் செய்த இரு தமாஷ்கள் என்றும் மறக்க முடியாது.

Koviloor Digital Library

அவருக்குப் பார்த்துப் பார்த்து அமுதாக்கிப் படைத்தவள் அம்மா. அவர் பூஞ்சைக் குடல்காரர். அதோடு எதைச் சாப்பிட்டால் அஜீர்ணம் வந்துவிடுமோ என்று குழந்தை போல் பயப்படுபவர். அந்தக் குடலுக்கு ஏற்றதாக ஆக்கி, அவரைத் தாஜா பண்ணி உண்ணவைக்கும் ஸாமர்த்தியம் அம்மாவுக்குத்தான் உண்டு. ஒரு பக்கம் சாப்பிட பயந்தாலும் இன்னொடு பக்கம் வக்கணையான ரஸனையும் டாகுருக்கு உண்டு. அதற்கேற்க சுவைக் குவையாய் சமைக்கும் அலாதி கை மணம் சாரதைக்கு உண்டு. அவளது சமையலை சிலாகித்துச் சிரித்தபடி அவர் சொல்வார்: "நான் மட்டும் கல்யாணம் பண்ணிக் கொள்ளாத ஸந்நியாஸியாகவே இருந்திருந்தால் இப்படி என் வயிற்றுக்கும் வாய்க்கும் ஏற்றபடி யார் சமைத்துப் போடுவார்கள்?"

இங்கிதமறிந்து அம்மா எத்தனை புத்திசாலினியாக நடந்துகொள்கிறாள் என்பதை சிலாகித்து ஐயனார் செய்த ஹாஸ்யமொன்று பார்க்கலாம்.

பாணிஹாடி என்ற இடத்தில் நடந்த தண்ட மஹோத்ஸவத்துக்கு ஏ க ப் ப ட் ட அடியார் சூழ ஸ்ரீ ராமகிருஷ்ணர் செல்வதற்கு ஏற்பாடாகிக் கொண்டிருந்தது. தானும் வரலாமா என்று அம்மா அதிசயக் கணவரைக் கேட்டனுப்பினாள். அதற்கு அவர், "அவளுக்கு ஆசையாயிருந்தால் வரட்டுமே" என்று உத்தரம் அனுப்பினார். இங்கிதமறிந்த அம்மா இதிலிருந்தே டாகுருக்குத் தான் வரவேண்டுமென்ற ஆசையில்லை என்று புரிந்துகொண்டாள். கற்பரசியாதலால் அவர் ஆசைப்படாத விஷயத்தில் அவளது ஆசையும் அப்போதே பஸ்மமாகிவிட்டது. தான் வரவில்லை என்று கூறி அனுப்பிவிட்டாள்.

மற்றவர்கள் மூன்று படகுகளில் பாணிஹாடிக்குப் புறப்பட்டனர். அங்கு திருவிழாவில் ராமகிருஷ்ணரே விழா நாயகராகிவிட்டார். அப்படிப்பட்ட ஒரு பாவ பரவசக் களியாட்டமாடி எல்லோருக்கும் கிருஷ்ணானந்த ரஸத்தை முட்ட முட்ட ஊட்டிவிட்டார்.

Koviloor Digital Library

தக்ஷிணேச்வரம் திரும்பியபின் விழாவில் டாகுர் பரப்பிய தெய்விக அற்புதத்தை அம்மாவிடம் தெரிவிப்பதற்காக அவளறைக்குப் பெண்டுகள் புறப்பட்டனர். அப்போது அவர்களுக்கு, 'சாமானிய பக்தைகளான நாம் டாகுருடன் பாணிஹாடி போய்ப் பேரநுபவம்பெற்று வந்திருக்கிறோம். ஆனால் ஸாக்ஷாத் அம்மா, அவர் கைப்பிடித்த தர்மபத்னி, அதில் பங்கு பெறுமல் இங்கே தன் அறையிலேயே அடைபட்டுக்கிடந்திருக்கிறுளே!' என்ற எண்ணம் எழுந்து வேதனை செய்தது.

அப்போது டாகுர் அம்மாவை மெச்சிச் சொன்னுர். "எத்தனை புத்திசாலினியாக அம்மா வராமலே இருந்து விட்டாள்! அங்கே அத்தனை ஜனங்களின் கண்ணும் என் மேலேயே இருந்ததாமே! இம்மாதிரி ஸந்தர்ப்பத்தில் பரமஹம்ஸன் என்கிற ஒருத்தனேடுகூடப் பெண்டாட்டி என்று ஒருத்தி இருந்திருந்தால் சாதாரண ஜனங்களுக்கு அது எத்தனை கேலிக் கூத்தாக இருந்திருக்கும்! 'பரமஹம்ஸர் - ங்கிறுங்களே, அந்த ஹம்ஸத்துக்கு ஒரு ஹம்ஸி வேறே இருக்குடோய்!' என்று பரிஹாஸம் பண்ணியிருப்பார்கள்!"

பொதுமக்களின் மனப்போக்கு, பேச்சுமுறை இரண்டையும் எவ்வளவு நகைச்சுவையோடு படம் பிடித்துக் காட்டி விட்டார்!

★ தம்மைப் பற்றியே செய்து கொண்ட இரண்டு தமாஷ்களில் ஒன்றில் இந்த ஹம்ஸம் தன்னை விஷப் பாம்பாகச் சொல்லிக் கொள்கிறது; இன்னென்றில் அந்தப் பாம்பைப் புசிக்கும் மயிலையும் மயக்குகிற வஸ்துவாகத் தன்னை வர்ணித்துக் கொள்கிறது.

தாம் சேர்த்துக் கொள்ள விரும்பும் ஒருவர் எத்தனை பாடுபட்டாலும் தம்மிடமிருந்து விலகி ஓட முடியாது என்பதைப் பற்றி டாகுர் இப்படிச் சொல்வார். "ஏ மண்டூகமே! இதை (தம்மைத்தான் 'இது' என்று குறிப்பிடுகிறுர்) என்ன, வெறும் நீர்ப்பாம்பு என்று நினைத்துக் கொண்

Koviloor Digital Library

டிருக்கிறயா? நீர்ப் பாம்பாயிருந்தால் அதன் வாயில் சிக்கிய மண்டூகம் (தவளை) ஆயிரம் தடவை கத்திவிட்டு அப்புறம் அதற்கு இரையாகலாம்; அல்லது அதன் வாயிலிருந்து தப்பித்தும் ஓடலாம். இதுவோ நல்ல பாம்பாக்கும். கரு நாகமாக்கும். மூன்று தடவைக்கு மேல் கத்த முடியாமல் மண்டூகம் இதன் வாயில் மாண்டுபோகத்தான் வேண்டும். தப்பித்துக் கொண்டதாக நினைத்துத் தவளை ஓடினால்கூட தன் வளைக்குள் பதுங்குவதற்குள் நல்ல பாம்பின் பல் பட்ட விஷவேகத்தில் மாண்டுபோக வேண்டியதுதான்'' என்று கூறிப் பெரிதாகச் சிரிப்பார்.

வெகு நல்ல பாம்பு! அநுக்ரஹம் செய்யவேண்டும் என்ற ஆராப் பசியில் அடியாரைப் பிடித்துக் கொள்ளும் வெகு நல்ல பாம்பு! பிரேமாமிருதத்தையே விஷமாகச் செலுத்தி, பக்தர் இகலோகத்தில் மாண்டு, ஆத்ம லோகத்தில் மீண்டு அமரமாவதற்கு உதவும் அவ்வளவு நல்லதான பாம்பு! இப்போதைக்கு இந்த அன்பமுதம் பிடிக்காமல் அதனிடமிருந்து தப்பிப் புலன் விஷத்துக்கே திரும்புபவர்களும்கூட மரித்தபின் மறுபடி ஜனன மரண வளைக்குத் திரும்பாதபடி காக்கும் மகா நல்ல பாம்பு!

இங்கே தம்மிடமிருந்து தப்ப விரும்புபவர்களை வைத்துத் தம்மைப் பாம்பாக்கிக் கொண்டு ஹாஸ்யம் செய்தார். மாறாக, ஒருமுறை தம்மிடம் வந்து, கண்டதும் காதல் கொண்டு, திரும்பத் திரும்ப வருபவர்களை மயிலாக ஆக்கி ஹாஸ்யம் செய்தார்.

1882 பிப்ரவரி 26-ந் தேதி "ம" டாகுரை முதன் முறை சந்தித்தார். கண்டதும் காதல் கொண்டார். அதற்குப் பின் ஓரிரு நாட்களுக்குமேல் பிரிவைத் தாங்க முடியாமல் இரண்டாம் முறை வந்தார். அடுத்து மூன்றாம் முறையாக மார்ச் 5-ந் தேதி வந்த "ம" அதற்கு மறுநாளே மறுபடியும் தக்ஷிணேச்வரத்துக்கு வந்து அறையுள் நுழைந்ததும் டாகுர் பலக்கச் சிரித்துவிட்டார். உடனிருந்த பசங்களிடம், "பார்த்தீங்களா? மறுபடி வந்துட்டான்!" என்று

Koviloor Digital Library

குழந்தையாக ஆர்ப்பரித்தார். "ஒரு மயில் இருந்ததாம். அதுக்கு ஒருத்தன் அபினி கொடுத்தானும். அப்போ ஸாயங்காலம் நாலு மணி. மறுநாளும் ஸரியா அதே நாலு மணிக்கு அந்த மயில் 'டாண்'ணு அந்த ஆசாமிகிட்டே வந்து நின்னுடுத்தாம். போதையோட வச்யம் அப்படி இழுத்துண்டு வந்துடுத்து" என்று சிரித்துச் சிரித்துச் சொல்லி எல்லோரையும் சிரிக்க வைத்தார்.

ஸாதாரண அபினி போதையா? திவ்விய போதம் என்பதன் போதை!

★ கண்டதும் காதல் என்றும். இப்படிக் காதலி லேயே தாம் அடியார்க்காக மறுகுவதைப் பற்றி அவர் தமாஷ் பண்ணுவது உண்டு.

தமக்கென்றே உள்ள பக்தர் வட்டத்தை அவர் ஆதியி லேயே அம்பாள் காட்டிய அதீதக் காட்சியில் கண்டு கொண்டார். அப்புறம் அந்த வட்டத்தைச் சேர்ந்தவர்கள் எப்போது வருவார்கள், எப்போது வருவார்கள் என்று தவியாகத் தவிக்கலானார். காலக்ரமத்தில் அவர்களும் ஒவ்வொருவராக வரலானார்கள். பிறகு நடு நடுவிலே அவர் களில் எவராவது அவரிடம் சில பல காலம் வரமுடியாமல் ஆவதுண்டு. அச்சமயங்களில் அவர் துடித்த துடிப்புண்டே! மடியிலே பால் கட்டிக்கொண்டு கன்றுக்காகத் தவிக்கும் தாய்ப் பசுதான். ஞானப்பாலூட்ட விழையும் காமதேனுவின் தவிப்புத்தான்.

இப்படி சோக உவமை சொல்லாமல், வாத்ஸல்யத்தைக் காதலாக்கி, கன்றுக்காகத் தாய்ப் பசு தவிப்பதையே விரஹ தாபமாக்கித் தமாஷ் செய்வார் ஸ்ரீ ராமக்ருஷ்ணர்! தமது உள்வட்டப் பசங்களில் சேராமல், அதற்குச் சற்றே வெளி வட்டத்திலிருந்த அன்பர் கேசவ சந்திர ஸேனர் குறித்தும் அவர் இப்படி வேடிக்கை - வேதனை நடிப்பு நடித்ததுண்டு.

ஒரு நாள் கேசவரின் வரவை டாகுர் வெகுவாக எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். "கேசவ் வரானு, பாரு" என்று கூறி, உடனிருந்த அடியாரை வாசலுக்கு அனுப்பினார்.

Koviloor Digital Library

"காணோம்" என்று சொல்லிக்கொண்டு அவர் திரும்பினார்.

சிறிது போதுக்குப் பின் வெளியே காலடிச் சத்தம் போல ஏதோ அரவம் கேட்டது. "தயவு பண்ணி கேசவ்தானான்னு பாரேன்" என்று அன்பில் இறகு கட்டிப் பறந்தார் டாகுர்.

பழைய பதிலே மீண்டும் வந்தது.

வேதனை விளிம்பிலே வேடிக்கையாக அபிநயம் பிடித்துப் பாடினார் நகைச்சுவை வேந்தர்:

அரவம் கேட்ட அரசி ராதை
"வந்தான் என்கே சவனே" என்றாள்.
அரவம் உண்மையில் மாருத அசைப்பில்
மரஇலை எழுப்பிய மர்மர ஒலியே!

★ காதல் ஹாஸ்யம் மட்டுமின்றி நேர் எதிரான பிசாசு ஹாஸ்யமும் இவ்விஷயமாகவே அவர் செய்ததும் உண்டு. தம் உள்வட்டத்தினராக அவர் உணர்ந்தவர்களில் எவரேனும் ஓரிரு நாள் வராவிட்டாலும் அவர்கள் தம் திசைக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டுக் கழன்றுவிட்டதாகவே அவருக்கு ப்ரேமவேகத்தில் தோன்றிவிடும். கிடைக்குமா, கிடைக்குமா என்று தாம் தவித்துத் தேடிப் பிறகு கிடைத்த மணி கை நழுவியதாக வருந்தும் அந்த நிலையிலும் அவர் ஜோக் அடிப்பார்.

"ஒரு பிசாசு இருந்தது. அது தான் நட்புக் கொண்டாட இன்னொரு பிசாசு கிடைக்குமா என்று தேடிக்கொண்டேயிருந்தது. சனிக்கிழமையிலோ செவ்வாய்க் கிழமையிலோ விபத்திலே செத்துப் போகிறவர்கள் பிசாசாகி விடுவார்களென்று ஒரு வசனம் உண்டு. அதனால் அந்தக் கிழமைகளில் எவனாவது ஒரு கூரையிலிருந்து விழுந்தாலோ, அல்லது தெருவிலே தடுக்கிக் கொண்டு மயங்கிச் சாய்ந்தாலோ நம் பிசாசு ஆவல் ஆவலாக அங்கே ஓடும். 'இன்னிக்கு இன்ன கிழமை. இவன் இப்போ விபத்திலே செத்தா பிசாசாயிடு

Koviloor Digital Library

வான். நாம அவனை ஸ்நேஹம் பிடிச்சுக்கலாம்' என்று எதிர்பார்த்துக்கொண்டு ஓடும். ஆனால் அதன் துரதிருஷ்டம், விழுந்த ஆசாமி செத்துப் போகாமல் பிழைத்து விடுவான். பாவம், பிசாசுக்குத் தோழன் அகப்படவேயில்லை'' என்று சொல்லி, அதோடு சூக்ஷ்மமாக விட்டு விடுவார்.

நாமும் நல்ல பாம்பாக அவரைச் சொன்னதற்கு அதிகமாகப் போகாமல் அவர் சொன்ன அளவோடேயே விட்டு விடுவோம்!

★ குரு மகராஜுக்குத் தொண்டைப் புண் கண்ட பிறகு ஒரு நாள். காடுவா என்ற இடத்தைச் சேர்ந்த ஒரு வைஷ்ணவர் (அதாவது சைதன்ய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்) அவரைப் பார்க்க வந்தார். டாகுர் புண்ணினால் படும் அவஸ்தையையும் கவனியாது அந்த வைஷ்ணவர் ஏதோ கேள்விகள் கேட்டுக் கொண்டே போனார். அவற்றிலொன்று ''மறுபிறவி உண்டா?''

உண்டு என்பதுதான் நமது மதக்கொள்கை என்று பதில் சொன்ன குரு மஹராஜ், ''மரண காலத்தில் எத்தகைய சிந்தனையோடு உயிர் விடுகிறார்களோ அதற்கேற்க மறுபிறவி கொள்கின்றனர் என்று கீதையில் சொல்லியிருக்கிறது. இதற்குச் சான்றாக, மரணகாலத்தில் மானையே நினைத்துக் கொண்டிருந்த பரதர் மானாகவே புனர் ஜன்மம் எடுத்த கதையும் புராணத்தில் இருக்கிறது'' என்றார்.

இப்படி கீதை வாசகத்தையும் பாகவதக் கதையையும் அவர் மேற்கோள் காட்டிச் சொன்னது மட்டும் வைஷ்ணவருக்குப் போதவில்லை. மறுபிறவி உண்டு என்பதை டாகுர் பிரத்தியக்ஷமாகத் தெரிந்து கொண்டு சொல்ல முடிந்தால் தான் நம்ப முடியும் என்றார்.

அப்போது அழகாக ஒரு நகைச்சுவை முத்தை உதிர்த்தார் நமது எளிய பெருமாள். ''நீதான் பார்க்கிறாயோல்லியோ, என் தொண்டை வியாதியையே குணப்

Koviloor Digital Library

படுத்திக் கொள்ள முடியாமல் நான் அவஸ்தைப் படுவதை? அப்படியிருக்க, செத்துப் போன பின் ஒரு உயிர் என்ன வாகிறது என்று என்னைப் போய் கேட்கிறாயே!" என்றார்.

★ இசைக்கலைஞரும் நாடக இசையமைப்பாளருமான நீலகண்டர் குருமஹராஜிடம், "என்னைச் சரி செய்யுங் களேன்" என்று கை குவித்து வேண்டினார்.

உடனே ஐயனின் அதரத்தில் நகைச்சுவை மொட்டு வெடித்தது. "ஏன், இப்பவே நீ சரியாய்த்தானே இருக்கிறாய்? உன்னை எப்படி சரி பண்ணுவது? வெறும் 'க'வாக இருந்தால் அதற்குக் கால் வாங்கி 'கா'வாகப் பண்ணலாம். முதலுக்கே 'கா'வாக இருந்தால் அதற்குக் கால் வாங்கினாலும் 'கா'வாகவேதானே இருக்கும்?" என்றார்.

இன்னும் பல பேரிடமும் இப்படித்தான் அவர்கள் அருள் பாலிக்க வேண்டும்போது, "நீ 'க' பேர்வழியில்லை, சுய மாகவே 'கா'வாக இருப்பவனாச்சே! உனக்கு நான் எதற்குக் கால் வாங்கணும்?" என்று சிரிப்புக் கொழிக்கக் கேட்டிருக் கிறார்.

★ கடைசிக் காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு வைத்தியம் பார்த்த ஹோமியோபதி நிபுணரான டாக்டர் மஹேந்த்ரலால் ஸர்க்கார், ஒருவனின் வியாதிக்கு மூல காரணத்தை ஆராய்ந்து கண்டு பிடிக்கும்போது சில சமயங் களில் ஆச்சரியமான உண்மைகள் தெரிவதாகச் சொல்லி, ஓர் உதாரணம் கொடுத்தார்: "பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ஏழு மாஸக் குழந்தை. அதற்குக் கக்குவான் இருமல் கண்டது. என்னை 'கன்ஸல்டேஷ'னுக்குக் கூப்பிட்டார் கள். வியாதிக்குக் காரணம் கண்டுபிடிக்க நான் எவ்வளவோ முயற்சி செய்தும் பிடிபடுவதாயில்லை. கடைசியில்தான் தெரிந்தது—மழையில் நன்றாய் நனைந்த ஒரு கழுதையின் பாலைக் குழந்தைக்குக் கொடுத்ததுதான் காரணம் என்று."

இதைக் கேட்ட குருதேவர், "விசித்ரமாயிருக்கே! இது எப்படியிருக்குன்னா— ஒருத்தன் புளிய மரத்துக்குக் கீழே

Koviloor Digital Library

வண்டியிலே போனனும், அதனலே அவன் வயத்திலே ஆஸிட் ஜாஸ்தியாயிடுத்து என்கிற மாதிரின்ன இருக்கு!" என்ருர்!

★ பலதரப்பட்ட மக்களின் மன விசித்ரங்களை அவர் களது செயல்களுக்கான அபிநயத்தோடு நம் குரு மஹராஜ் சொல்லிக் கொண்டு போகும்போது மிமிக்ரி மன்னனக நகைச்சுவை வெள்ளம் பரப்புவார். இங்கே வெறும் கறுப்பு மசியில் காணும் வசனங்களுக்கு உங்கள் மனக் கண்ணல் அந்த அபிநய நயத்தையும் கூட்டிக் கொண்டாலே இந்தக் கறுப்பு மசி ஹாஸ்யச் சாருகிச் சுவை தரும்.

"மநுஷன் மரணப் படுக்கையில் கிடக்கிருன். அப்போது கூட லோக பாசங்கள் போகிறதா என்ன? ஊஹூம்! 'விளக்கைக் கொஞ்சம் குறையுங்கள். நிறைய எண்ணெய் குடிச்சுடும்' என்கிருன்!"

புருஷரிஷபமான நரேனைப் புகழ்ந்து பேசுகையில் காளை உதாரணமே கொடுத்துச் சொன்னர்: "விவசாயிங்க சந்தைக் குப் போய் உழவுக் காளை பிடிக்கறச்சே வாலைத் தொட்டே எது நல்லது, எது உதவாததுன்னு தெரிஞ்சுப்பாங்க. வாலைத் தொட்டவுடனே ஸாதுவாக் கீழே படுத்துக்கிறது சோப்ளாங்கின்னு தள்ளிடுவாங்க. தொட்டவுடனே குபீல்னு துள்ளிக் குதிச்சு வீர்யத்தைக் காட்டற காளையைத் தான் நல்ல ஜாதின்னு தேர்ந்தெடுப்பாங்க. நரேன் அந்த துடிப்பு ஜாதிக் காளை மாதிரியாக்கும்" என்று கூறிப் பொருள் பொதியப் புன்னகை பூத்தார், ஜீவர்களின் 'வாலைப் பிடித்து வாங்கும்' ஆத்ம விவசாயி.

வெறுமே இந்த வாக்கியங்களைப் படித்தால் சிரிப்புச் சுவை தெரியாமற் போகலாம். ஆனல் நடிகர் திலகமாக நமது டாகுர், ஒரு விவசாயி எதிர்பார்ப்புடன் காளை வாலைத் தொடுவது, உடனே சோப்ளாங்கி ரகம் சுருண்டு படுப்பது, அதில் விவசாயிக்குச் "சை" தட்டுவது, வீர்யக் காளை குபீ லெனத் துள்ளுவது, அதிலே விவசாயியின் "பலே பலே"

Koviloor Digital Library

பாவனை ஆகியவற்றை அபிநயித்துக் காட்டுகையில் இதில் எழுத்துக்கெழுத்து ஹாஸ்ய ரஸம் சொட்டும்.

லௌகிகத்தில் வேலைகள் முறைப்படி நடப்பதற்காக இல்லறத்தினர் உடைமைகளைத் தம்முடையதாகக் காட்டிக் கொள்ளத்தான் நேரும். அதனால் பரவாயில்லை. ஆனால் உள்ளத்தளவில் ஒருவருக்கு அவ்வுடைமை எதுவும் தமதல்ல, அனைத்தும் ஆண்டவனுடையதே, அந்த மஹா முதலாளியின் சிப்பந்தியாகவே தான் இவ்வுடைமைகளைப் பராமரிக்கிறோம் என்ற உணர்வு இருக்க வேண்டும் என்று உபதேசித்த குருராயர் தொடர்கிறார்: "ஒரு பெரிய தனிகர் தம்முடைய தோப்புக்கு ஒரு ஸூப்ரன்ட் போட்டிருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். தோப்பைப் பார்வையிடப் போகிறவர்களிடம் ஸூப்ரன்ட் 'இது நம்ம தோட்டம்,' 'இது நம்ம நீச்சல் குளம்' என்றெல்லாம் சொல்லித்தான் காட்டிக்கொண்டு போவார். இப்படி 'நம்ம' போட்டாலும், அவர் ஏதோ தப்பு தண்டா பண்ணி தனிகர் அவர் சீட்டைக் கிழித்து விடுகிறாரென்று வைத்துக் கொள்ளுங்கள், அப்புறம் அத்தனும் பெரிய தோப்பைத் தம்முடையதாகச் சொல்லிக் கொண்ட அவர் ஒரு சொத்தை மாம்பலகைப் பெட்டியைக் கூடக் கொண்டு போக முடிவதில்லை." இந்த ஹாஸ்யத்துக்கு மேலும் சுவையூட்டுவதாக டாகுர் ரஹஸ்ய சங்கேதத்துடன் குரலைத் தாழ்த்தி முடிக்கிறார்: "வாசல் காவலாளியை மசித்துத் திருட்டுத்தனமாகத்தான் சொத்தைப் பெட்டியை வீட்டுக்கு அனுப்புகிறார்."

பிறருக்குக் காட்டாமல் மாம்பழத்தைத் தான் மட்டும் தின்றுவிட்டு, வாயைத் தடயம் தெரியாமல் துண்டால் அழுந்தத் துடைத்துக் கொண்டு வெளியில் வருகிறவர்; ஒருவருக்குக் கொடுப்பதற்காக மிட்டாய் கொண்டு போகும் போதே அதைத் திருட்டுத்தனமாக ஒரு நக்கு நக்குபவர்; பெண்டாட்டிக்கு "எண்ணிக்கொள்" என்று ஸலாம் போடுகிறவர்—என்றிப்படி ரஜோகுணத்தவர்களை உயிரோவிய

Koviloor Digital Library

மாக வர்ணித்துக் காட்டும் நமது ஸத்வ ஸத்வர் இதற்கெல்லாம் சிகர ஹாஸ்யமாக, கணவன் இறந்தபொழுது அழுது புலம்பி மூக்கைச் சிந்துவதில் புல்லாக்குக் கல் வீணாகிவிடப் போகிறதே, அல்லது அது மூக்கில் குத்திவிடப் போகிறதே என்பதற்காக ஜாக்கிரதையாக அதைக் கழற்றிவிட்டுக் "குய்யோ முறையோ" என்று கூப்பாடு போடும் 'பதிவிரதா திலகத்'தையும் படம் பிடித்துக் காட்டுவார்!

'ஸாது' ச்ரேஷ்டரிடம் இதைவிடவும் போக்கிரித்தனம் என்றே நாம் செல்லமாகச் சொல்லுமளவுக்கு ஹாஸ்யம் போவது அவர் ஆடல் மகளிரின் மயக்குப் போக்குக்களை அபிநயித்துக் காட்டும் போதுதான்! பாவன பாவனரின் அபிநயமாதலால் எள்ளளவும் விரஸ விகார எண்ணங்களை எழுப்பாது. வெள்ளை வேடிக்கையாகவே இருக்கும்.

வெற்று உலகியல் மனிதர்களைப் பற்றி மேலும் சில வர்ணனை பாருங்கள்:

"இங்கே வருகிற சில பக்தர்களோடு வெறும் லௌகிகத்திலேயே புரள்கிறவர்களும் வருகிறார்கள். இவர்களுக்குப் பாரமார்த்திகமான பேச்சு கொஞ்சங்கூட ருசிப்பதில்லை. பக்தர்களாயிருப்பவர்களானால் நேரம் காலம் போவது தெரியாமல் இங்கே தெய்வ விஷயமாகப் பேசிக் கொண்டு போகிறார்களா, இதில் அந்த ரஜோகுணிகள் பொறுமையிழந்து தவியாய்த் தவிக்க ஆரம்பிப்பார்கள். ஒரு கட்டத்துக்கு மேல் அவர்களால் பொருந்தி உட்கார்ந்திருக்க முடியாது. மெதுவாக உடன்வந்த பக்தரின் காதில், 'கிளம்ப இன்னும் நாழியாகுமோ?' என்று கேட்பார்கள். பக்தர், 'கொஞ்சம் இருங்கோ, சித்த நாழியில கிளம்பிடலாம்' என்பார். 'சித்த நாழி'யும் ஆகிவிடும். லௌகிகர் ஒரேயடியாய் அலுத்துச் சலித்துப்போய், 'ஸரி, அப்படின்னா நீங்க பேசிண்டிருங்கோ. நான் போய்ப் படகுலே காத்திண்டிருக்கேன்' என்று புறப்படுவார்."

Koviloor Digital Library

"லௌகிகத்திலேயே ஈடுபட்டவர்களில் ரஜோகுணம் நிரம்பப் பெற்றவர்கள் எப்படியிருப்பார்கள் தெரியுமா? வாட்ச், அதற்கு தங்க செயின், மூன்று அல்லது இரண்டு விரல்களிலாவது மோதிரம் என்று அலங்காரம் பண்ணிக் கொண்டிருப்பார்கள். பளீரென்று, மொட மொடவென்று மஸ்லின் உடுத்தியிருப்பார்கள். வீடு அப்படியே பளிச்சென்று வெள்ளையடித்துத் துப்புரவாயிருக்கும். பிரமாதமாக நாற்காலியும் மேஜையும் போட்டிருக்கும். சுவர்களில் ராணி (விக்டோரியா), ராஜகுமாரர் (ப்ரின்ஸ் ஆஃப் வேல்ஸ்), மற்ற பிரமுகர்கள் படங்கள் தொடங்கும். அவருடைய பீரோ நிறைய தினுசு தினுசான உடைகள் அடுக்கியிருக்கும். வேலைக்காரர்கள்கூடப் பகட்டாக யூனிஃபார்ம் கீனிஃபார்ம் எல்லாம் போட்டிருப்பார்கள்.

"விருந்தாளிகள் வரும்போது யஜமானரேதான் பெருமை பெருமையாக மாளிகையைச் சுற்றிக் காட்டுவார். 'இந்த வழியா வாங்கோ, இன்னும் நிறையப் பார்க்கவேண்டியது இருக்கு. தரையெல்லாம் ஜய்ப்பூர் சலவைக் கல் இழைச்ச ஹால் இருக்கு. நூதனமான சில்ப சித்ரங்களோட நட் மந்திர் (ஆடல்சாலை) இருக்கு" என்றெல்லாம் சொல்லித் தாமே 'கெய்டா'க அழைத்துப் போவார்.

"தான தர்மம் பண்ணும்போது இம்மாதிரி மநுஷ்யர் செய்யும் படாடோபக் காட்சி சொல்லி முடியாது.

"இப்படிப்பட்டவர் பூஜை பண்ணும்போது பார்க்க வேண்டுமே! பட்டுப் பீதாம்பரம் கட்டிக் கொண்டு, கழுத்திலே தங்கம் கட்டின ருத்ராக்ஷமாலை போட்டுக்கொண்டு அமர்க்களமாக இருப்பார்."

மாயையில் இறுக பந்தப்பட்ட ஜீவனைக் குறித்து குருமஹராஜரின் இன்னொரு வர்ணனை: "இவன் ஒரு பிள்ளையைப் பறிகொடுத்து சோகத்தில் துடித்திருப்பான்; ஆனால் அப்புறமும் வருஷத்துக்கொரு பிள்ளை பிறப்பித்துக் கொண்டிருப்பான். பெண்ணுக்கு கல்யாணம் செய்த செலவினால் திவால்

Koviloor Digital Library

ஆகியிருப்பான்; அப்புறமும் பெண் குழந்தைகளுக்குத் தகப்பனுகிக் கொண்டிப்பான். 'நான் என்ன பண்ண? இப்படித்தான் தலையில் எழுதியிருக்கு' என்று வேறு சொல்லிக் கொள்வான். எங்கேயாவது புண்ய க்ஷேத்ரத்துக்குப் போகிருனென்று வைத்துக்கொள்ளுங்கள். அங்கேயும்கூடத் தன்னளவில் அக்கடா என்று பகவத் தியானம் பண்ண இவனுக்குப் பொழுது அகப்படாது. அங்கேயும் பெண்டாட்டிக்கு மூட்டை தூக்குவதிலேயே முதுகை முறித்துக் கொள்வான். கோவிலுக்குப் போனால், தான் மனஸ் குவிந்து தீர்த்தப் பிரஸாதத்தை ஆசமனம் செய்ய மாட்டான். ஒழுங்காக முழுங்கத் தெரியாத குழந்தைக்கு அதை எப்படியாவது ஊட்டி விடுவதற்கே மல்லுக் கொடுத்துக் கொண்டிருப்பான். இல்லாவிட்டால், முரண்டு செய்யும் அந்தக் குழந்தையை அங்கப் பிரதக்ஷிணம் பண்ணுவிப்பதற்குப் போராடுவானே தவிர, தன்னளவில் கும்பிடுகூடப் போட மாட்டான்.''

★

அரிய உபதேசங்களிலும் அன்றூட உலகியல் தொடர்பான அருமையான ஹாஸ்யத்தைக் கலந்து ருசிக்கச் செய்வதில் டாகுருக்கு ஈடு டாகுர்தான்! முடிவில்லாமல் திருஷ்டாந்தங்கள் காட்டலாமாயினும் ஒரு சிலவே பார்ப்போம்.

ஸாதனையில் மேலே போகப் போக வாதங்கள், பரபரப்பு அநுபவங்கள் எல்லாம் அடங்கி சாந்தியில் தோய்வது குறித்த அவரது இரு உவமைகளை மறக்க முடியுமா?

ஒன்று— விருந்து நடக்கிறது. விருந்தினர் பங்க்தியில் இடம் பிடித்து, 'அடேய் சேஷா! குப்பா! இப்படிப் பக்கத்திலே வாங்கோடா!' என்று வேண்டியவர்களைப் பக்கத்தில் அமர்த்திக் கொள்கிற போது எத்தனை சந்தடி இருக்கிறது? அன்னம் வரும் வரையில் பலவிதமான குசல ப்ரச்னம், சமையல் வகைகளைப் பற்றியும் சமையற்காரர் திறனையும்

Koviloor Digital Library

பற்றிப் பேச்சு என்று ஒரே சத்தமாயிருக்கிறது. சாப்பிட ஆரம்பித்ததும் சத்தம் சடக்கென்று குறைய ஆரம்பிக்கிறது. பக்ஷணம் பரிமாறுகிற கட்டத்தில் பரிமாறும் ஓசைகள் தவிர மற்ற இரைச்சல் யாவும் அநேகமாக ஓய்ந்தே போகிறது. தயிர் போடும் போது அதைச் "சுர்ர் சுர்ர்" என்று உறிஞ்சுகிற சப்தம் தவிர எல்லாமே அடங்கிப் போகிறது. அப்புறமோ வயிறு ரொம்பச் சாப்பிட்டவர்கள் அப்படியே படுத்துத் தூங்கி விடுகிறார்கள்.

இரண்டு— அதிரஸம் பண்ணுவதற்காக மாவையும் வெல்லத்தையும் பிசைந்து நெய்ச் சட்டியில் போட்டால் முதலில் ஏகப்பட்ட பட படா ஓசை எழும்புகிறது. பணியாரம் பக்குவம் ஆக ஆக ஓசை அடங்கிக் கொண்டே வந்து அது பூர்ண பக்குவம் பெறும்போது ஓசை அடியோடு அடங்கி விடுகிறது.

★ ஈச்வரனின் அநுக்ரஹ சக்தியைவிட அவனுக்கு அடங்கியதாகவே சொல்லப்படும் மாயையின் மயக்குச் சக்தியே பெரிதாகக் காண்பதை எத்தனை எளிய உவமையால் பளிச்சென விளக்கி விடுகிறார்? ஜட்ஜை விட அவருடைய சேவகனுடைய உடுப்புத்தான் படாடோபமாயிருக்கும்; ஜட்ஜைவிட அந்தச் சேவகன்தான் அதிகம் மிரட்டி உரட்டுவதும் என்கிறார்.

★ பக்தர் : கங்கா ஸ்நானம் பண்ணினால் பாவமெல்லாம் போய்விடும் என்கிறார்கள். ஆனால் அப்படிப் பண்ணிவிட்டு வந்தபின்னும் பாப எண்ணங்கள் தோன்றுகின்றனவே! ஸ்நானத்துக்குப் பலன் இல்லையா?

பரமஹம்ஸர் : ஏன் இல்லாமல்? கங்கையில் ஒருவன் இறங்கும்போது அவனுடைய பாபங்கள் அவனைவிட்டு, கங்கைக் கரை மரங்களுக்குப் போய்த்தான் விடுகின்றன. அப்புறம் அவன் ஸ்நானம் முடித்துப் படி ஏறுகிறான் பாருங்கள், அப்போது அவனை அதுவரைவிட்டு மரத்துக்குப் போயிருந்த அந்தப் பாபங்கள் மறுபடி அவனிடமே வந்து பிடித்துக் கொண்டுவிடுகின்றன!

Koviloor Digital Library

முடிவுரை

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் காலத்தில் அரசியல் முனிவர்களில் ஒருவராகப் போற்றப்பட்டவர் அச்வினி குமார் தத்தர். ஒரு நாள் அவரும் ராமகிருஷ்ணரும் இதயம் திறந்து இனிக்க உரையாடிக் கொண்டிருக்கையில் அவர் பாரிஸால் என்ற இடத்தில் அசலாநந்த தீர்த்த அவதூதர் என்ற மஹானைத் தாம் சந்தித்தது பற்றிச் சொன்னார்.

"அவரை உனக்குப் பிடிச்சுதோ?" என்று குழந்தை போல் கேட்டார் டாகுர்.

"ரொம்பப் பிடிச்சுது."

"சரி, எங்க ரெண்டு பேரிலே உனக்கு யாரை ஜாஸ்தி பிடிச்சிருக்கு? அவரையா, என்னையா?"—பச்சைப் பசும் குழந்தைபோலப் பரமஹம்ஸம் கேட்டது.

ஸ்வாதீனத் தமாஷாகப் பரமஹம்ஸத்தை "இறக்கும்" பாவனையில் அச்வினிகுமார் பதில் சொன்னார். "உங்கள் இரண்டு பேரையும் எப்படி ஒப்பிடுவது? அவர் பெரிய வித்வான், பண்டிதர். நீங்கள் அப்படியா என்ன?"

இந்த பதிலைக் கேட்டதும் ஹம்ஸம் அதிர்ந்து சுணங்கி விட்டது. பேசாமலே உட்கார்ந்திருந்தது.

'பாவம் குழந்தை! அதைச் சுணங்க வைத்துவிட்டோமே' என்று பரிதாபப்பட்டதுபோல அச்வினிகுமார் இதயத்தை நன்றாகத் திறந்து மிச்சத்தைக் கொட்டினார். "அசலா நந்தர் பண்டிதராயிருக்கலாம். ஆனால் நீங்கள் ஹாஸ்யம் நிறைந்து வழிபவராக இருக்கிறீர்களே! உங்களுடைய ஸங்கத்தில் வேடிக்கையின்பம் கொழிக்கிறதே!" என்றார்.

ஹம்ஸத்துக்கு ஸந்தோஷம் பிடிபடவில்லை. சற்று முன் வாடிப்போன அது 'பொல்'லென்று மலர்ந்து பெரிசாய்ச் சிரித்தது. "நன்னா சொன்னே! நன்னா சொன்னே! ரொம்ப

Koviloor Digital Library

சரியாச் சொல்லிட்டே!" என்று அச்விளிகுமாரரை மெச்சிற்று.

ஆம், நன்ருகத்தான் சொன்ஞர் அச்விளிகுமாரர். எத்தனையோ மஹான்கள் பாண்டித்தியம் முதலானவற்றில் பெரியவராயிருக்கலாம். ஆனுல் எங்கள் ஐயன் ராம கிருஷ்ணனைப் போலப் பெரும்பாலும் சிரித்துக் கொண்டு, பெரும்பாலாரைச் சிரிக்க வைத்துக்கொண்டு, இருந்த தெய்வ புருஷர் எவருண்டு?

ஸத் - சித் - ஆனந்தம் என்று முடிக்கிருர்களே, அந்த ஆத்மாநந்தத்தை, அந்த ப்ரம்மாநந்தத்தை, திவ்யா நந்தத்தை அப்படியே அசலாக ஒரு குருவானவர் சிஷ்யருக்கு ஊட்டுவது அபூர்வமாகவே நடைபெறும்—சிஷ்யர்களது பலமான பிராரப்த வினை காரணமாக. இந்த அபூர்வத்தையும் நமது குருமஹராஜர் சில சீடர் விஷயத்தில் சாதிக்காமலில்லை. எந்த மஹாகுருவும் இந்த அபூர்வத்தை ஓரிருவருக்கேனும் சாதித்துத்தான் இருப்பார். ஆனுல் எந்த குருவாவது நம் குருமஹராஜருடைய அளவுக்கு இன்னேர் ஆனந்தத்தைச் சீடர், பக்தர், காணவருபவர் அனைவருக்குமே அலைமோதி வீசியிருப்பாரா என்பது ஐயமே. அது என்ன ஆனந்தம் என்ருல் ஆத்மாநந்தம், பிரம்மாநந்தம், திவ்யா நந்தம் என்ற பெத்தப் பெயர்கள் படைத்திராத இனிய, எளிய ஹாஸ்யாநந்தம்தான். தாபத்திரயங்களில் வறுபட்டு வந்தோருக்கு இச் சிரிப்பின்பத்தை வாரி வழங்கி அந்த இன்புனலில் தாபங்கள் தணியச் செய்ததில் நம் ராமக்கண்ணர் தனிப்பட்டவர்தான். ஹாஸ்ய நிபுணத்வம் என்று ஒன்று பெரிசாக உறுத்திக் கொண்டு தெரியாமலே தன் பாட்டில் அன்பாம் தென்றலின் லளிதத்தோடு சிரிப்புச் சந்தன மணத்தை ஸதாவும் பரப்பிக் கொண்டிருந்தார். அதிலேயே அவரது ஆத்மானந்த, பிரம்மானந்த, திவ்யானந்த உட்சாரமும் தன் மணத்தைக் கூட்டியிருந்த தால், அடியார்களுக்கு அவரது ஹாஸ்யங்கள் ஏனைய மானுடரிடம் காணும் வெளிமட்டச் சிரிப்பாக மட்டும்

Koviloor Digital Library

முடியாமல், அலாதியான பாவனத்துடன் அவர்கள் அறியாமலே அவர்களது உள்மட்டத்தில் இறங்கி மன அழுக்குகளைச் சலவை செய்தன. ஸதாவும் கனத்துக் கிடக்கும் அம் மனத்தை லேசாக்கி உயர்த்தின.

மஹான் என்றால் வரட்சியாக விலகி நிற்பவரில்லை என்பதை உண்மையான மஹாத்மாக்கள் யாவருமே உலகினரோடு அன்பில் ஒட்டி நின்று காட்டியிருப்பதில், மேலும் அழுத்தமாக ஒட்டும் பிசினாக ஹாஸ்யம் உதவியிருக்கிறது. எனவே மக்களோடு மிக மிக மிக ஒட்டி வாழ்ந்த நம் பரம ஹம்ஸரிடம் இந்த ஹாஸ்யத் திறனை அபரிமிதமாகவே அம்பாள் குழைத்திருந்தாள்.

"Eat, drink and be merry"—"சாப்பிடுவது, குடிப்பது, களித்து மகிழ்வது" என்ற வாசத்தைக் கடைந்தெடுத்த உலகாயதனின் லக்ஷ்யமாகத்தான் உலகம் அறிந்திருக்கிறது. மஹான் என்பவரின் வாயில் இவ்வாசகத்தை எதிர்பார்க்கவே முடியாது. ஆனால் இந்த மூல ஆங்கில வாசகத்தை ஒரு நாளும் அறியாத எளியனான நம் மஹானே வங்காளியில் இதே வார்த்தைகளைத் தம் லக்ஷ்ய வாசகமாகச் சொல்லியிருக்கிறார்! லுசியப்பம் சாப்பிடுவது, ஐஸ் வாட்டர் குடிப்பது, ஹாஸ்யம் செய்து களித்து மகிழ்வது என்றிப்படி இன்பமாய், இனிதாய், இலேசாய் வாழ்ந்தார். இவ்வின்பங்களைத் தம்முடன் கூடியிருந்த மற்றோருக்கும் பகிர்ந்து தந்து அவர்களை ஈனக்கவலை மறக்கச் செய்து இறையன்பிலே இழைத்தார். லுசியப்பம் அப்பனின் உப்பிய அருளிலும், ஐஸ் வாட்டர் அம்மையின் ஞானப்பாலிலும் கொண்டு சேர்க்க ஊக்கிகள் ஆயின. ஹாஸ்யம் நித்யானந்தத்தின் நுழைவாயிலாயிற்று.

இடித்துப் புடைத்துக் கொள்ளாமலே பக்தர் பலரும் ஒன்றுகூடி இப்படி ஞான ஸாம்ராஜ்யத்தின் அகண்டமான வாயிலில் புகுந்ததே முக்கியமான அம்சம்.

Koviloor Digital Library

பரமஹம்ஸர் மூலமாக அன்னை பராசக்தி விளைத்த இந்த அருள் விளையாட்டை பாரதியின் பாக் கொண்டே வர்ணிக்க வேண்டும் :

தின்றிடப் பண்டங்களும்—செவி
தெவிட்டறக் கேட்கநற் பாட்டுகளும்
(ஏன், நல் ஹாஸ்யங்களும்தான்!)
ஒன்றுறப் பழகுதற்கே —அறி
வுடையமெய்த் தோழரும் அவள் கொடுத்தாள்!

கவி பாரதி மேலும் பாடினுன்—அவன் ஸத்குருவைத் தேடித் தேடி அலைந்தானும். அப்போது யமுனைக் கரையில் அவன் கண்ட ஒரு பெரியார், 'மதுராபுரிக் கண்ணனிடம் போ. அவனே மெய் நெறி காட்டுவான்" என்றுராம். அப்படியே கவி போனுல், அங்கே அந்த மதுரையில் அவன் கண்ட கண்ணன் விரக்தி-வரட்சி ஞானியாகவா தோன்றினுன்? அல்ல. உல்லாஸ விநோதனுய், கேளிக்கைப் பிரியனுய்க் கூத்தடித்துக் கொண்டிருந்தான். கவி அடைந்த ஏமாற்றமும் கோபமும் சொல்லி முடியாது.

அப்போது மெய்யாலுமே அக் கண்ணன் ஸத்குருவாக மெய் நெறி சொன்னுனும். பாடுகிறுன் பாரதி பரந்தாமன் பகர்ந்த அப் பரஞான உபதேசத்தை :

"...................................பர
ஞானம் உரைத்திடக் கேட்பை நீ;—நெஞ்சில்
ஒன்றும் கவலையில் லாமலே—சிந்தை
ஊன்ற நிறுத்திக் களிப்புற்றே—தன்னை
வென்று மறந்திடும் போழ்தினில்—அங்கு
விண்ணை யளக்கும் அறிவுதான்"

அந்தப் பிரேம கிருஷ்ணனின் மற்றொரு வடிவுபோலவே வாழ்ந்தவர் நம் ராமகிருஷ்ணர். கூட்டத்தினரோடு ஹாஸ்யக் கூத்தடிக்கும் இவரா பரமஹம்ஸர் என்று கடுநெறியாளர் முகம் கடுத்திருக்கலாம். ஆனுல் அவரோ,

Koviloor Digital Library

நெஞ்சில்
ஒன்றும் கவலையில் லாமலே—சிந்தை
ஊன்ற நிறுத்திக் களிப்புற்று

வேடிக்கை விநோதப் பேச்சுப் பேசி, அடியார்கள் தங்கள் சிறுமையுணர்வை "வென்று மறந்திட"ச் செய்தார். "விண்ணையளக்கும் அறிவின்" ஆனந்தத்தை அவர்கள் அதன் மூலமே தொடவைத்தார்.

காந்தி மஹாத்மாவைப் பற்றி ஒரு கவி பாடினார், "பூதலத்தின் புன்னகைபோல் பூத்த மலர்க் கூட்டமவர்" என்று. அதைவிடவும் அழுத்தமான உண்மை, ஸர்வலோக அம்மாவின் ஸதானந்தப் புன்னகையே ஸ்ரீ ராமகிருஷ்ண ரென்ற புஷ்பச் செண்டாகப் பிறந்தது. திரிபுரமெரிக்கும் நெருப்புப் புன்னகையாக இருக்குமா திரிபுரசுந்தரியின் நகை? அகம் புறம் யாவும் குளிர்விக்கும் அமுதப் புழலே அவளது அழகு நகை. நூற்றைம்பதாண்டுகளுக்கு முன் அந்த நகைப் புழல் பூதலத்தில் அரும்பு கட்டிற்று. நூறாண்டு களுக்கு முன் பூதலத்தின் கண் பார்வையிலிருந்து மறைந்தது. ஆனாலும் அதன் நறுமணம் காலகாலமும் கருத்தில் கமழ்ந்து கொண்டேதானிருக்கும். அதை நினைந்து மோந்து களிப்பில் நனைந்து நமஸ்கரிப்போம்!

Koviloor Digital Library

ஈறில்லா இறையன்பே,
நூறில்லை நீ மறைந்தே!

மறைநூலு மறியாத மாநாட கக்காரி
மலர்நகையா யுதிர்மதலாய்! மதுரகுரு மகராஜ்!
மறைந்துநீ நூறுண்டாம், மாந்தரிவர் பகர்வார்;
மலங்குமொழி அதுவெனவே மனத்துள்முறு வலித்தேன்!

யாக்கைம றைந்தாலும் யாக்கையால் நீயாத்த
வாழ்க்கைஇதி ஹாசமென்றும் வாழாதோ
வானமிழ்தாய்?
வாக்காநீ வருஷித்த வானதியாம் மாநிதியும்
வாழ்விக்கா தோவையம், வாருலகம் உள்ளளவும்?

★

ஈறில்இறை யன்பெழிலின் ஈடில்அவ தாரா!
நூறிலைம றைந்து நீ, நித்யநவ தாரா!
மா றிலதுன் மாட்சிமை மாகருணை வேளே!
பேறிலைஉ னைப்பேசு பெருசுகத்து மேலே!

★

காலதே சாதீத காளிபத தூளீ!
காலகா லன்காம நாசன்வி பூதீ!
கா லுஷம் அறுராமன் கார்முகன் சோதீ!
காளியன் முடியாடு கார்மேகன் காந்தீ!

★

கோரகாளியினுள் தீரஊறியும்
கோமளக்கொழுந் தாயினும்!
ஆரக்கற்றவரும் சாருமறிவினன்
அவலருக்கரு காயினும்!
பாரமானஅநு பூதிகண்டவன்
பாமரத்துவம் காட்டினும்!
சாரசர்வசம அன்பினுக்குநீ
சாறுளன்பதன் சான்றிதே!

Koviloor Digital Library

★

எளியமா னுடவேட எழில்வண்ண மலராயும்
வலியதெய் விகமகிமை வான்மேரு மலையாயும்;
உலகினர்தம் கவடு, சதுர் உணர்ந்துரைசெய் படுவாயும்
உளப்பாங்கில் சுவடுமவை உறைக்காத சிசுவாயும்;
மனைவியொடு வாழ்ந்தாலும் மனத்துறவி மணியாயும்,
அனைலீலை ஆழ்ந்தாலும் அத்துவித அரசாயும்
இருதுருவம் இணைத்திட்ட புதியபுதிர் அவதாரா!
இறுதியற இருதயத்து இருந்தினிய அருள்தாராய்!

சுபம்

Koviloor Digital Library

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
14	9	காளிக்	காண
30	9	போகமதே!	போதமதே!
57	22	அலையொழாத	அலையெழாத
68	29	சைன்யரே	சைதன்யரே
77	18	கூர்ந்தூர்	கூர்ந்தார்
79	31	ஸீக்தம்	ஸூக்தம்
82	6	"நங்ந்தா"	"நங்க்தா"
105	28-ம் வரி முடிவிலுள்ள நகவளைவு 30-ம் வரி முடிவில் வரவேண்டும்.		
108	28	Gamfhirananda	Gambhirananda
132	4	பனுல்தான்	பஞூல்தான்
134	8	பறிதெடுத்துக்	பறித்தெடுத்துக்
137	26	பரிவாரத்துக்கு	பரிவாரத்துக்கும்
138	26	சேர்ந்திருந்	சேர்த்திருந்
141	9	பகவான	சிகுவான
144	8	சங்கர, பகவத்பாதர்	சங்கர பகவத்பாதர்
154	20	சட்டுப்படுத்தி	கட்டுப்படுத்தி
154	32	ஒட்டிக்கெள்ளுா	ஒட்டிக்கொள்ளு
155	8	என்ற	என்றே
198	7	பட்வர்	பட்டவர்
204	5	ஸுருண்டுவே	ஸுருண்டுடுவே
211	11	பத்தி	பக்தி
220	5	சற்றுது	சற்றும்
,,	6	செய்ம்	செய்து
231	8	யானவர்	யானவா
243	23	கருக் கொண்டிருந் திருந்தது	கருக் கொண்டிருந்தது
288	19	வைந்து	வைத்து

Koviloor Digital Library

Wrapper Printed at
Eskay Art Printers, Madras-5